வெளியீடு : 23-2-2017 Issued : 23-2-2017

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, ஆகஸ்ட் 10, 2016—தொகுதி 9—எண் 2

Wednesday, the 10th August 2016—Volume 9—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை -600 009.

Legislative Assembly Secretariat, Chennai - 600 009.

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

10–8–2016

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்–விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்

2. தகவல் கோரல்—

துறைமுகம் தொகுதி, அன்னை சத்தியா நகரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் — *781-814*

*திரு. பி.கே. சேகர்பாபு

*மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் — *815-818*

3. பேரவையில் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் குறித்து 9–8–2016 அன்று பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் தெரிவித்த கருத்திற்கு மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கம் — *815, 816* *816-818*

4. கவன ஈர்ப்பு—

நெய்வேலி சட்டமன்றத் தொகுதியிலுள்ள நீர்நிலைகளைத் தூர் வாருதல் — *818-820*

திரு. சபா. ராசேந்திரன்

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — *820-825*

820-823,825

821-825

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 45—சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
(ஆ) கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ... *825-991*

*மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா ... *826,837, 846, 849-850, 855-861, 864, 866-868, 875, 898, 901, 920-921, 923-924, 954-989*

*திருமதி பி. கீதா ஜீவன் ... *844, 847-849, 851, 857-858, 860-869, 875-880, 896*

திரு. மு.க. ஸ்டாலின் ... *850-855, 873-874, 883, 885,890-895, 897-898*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் ... *851,853,855,894*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி ... *852-854, 863-865, 871-872, 899-901, 922-923,925, 931-932, 948-950*

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2016 –2017, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திரு. கரி. இராமசாமி 856

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 858,885-886, 888-889

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 859, 871, 875, 883-885, 888-889, 891, 898-899, 925-926

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ 869-871

*மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் 872-873

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ் 874,932-933, 952

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 876-877, 880-883, 890-893, 933-934

திரு. இ. பெரியசாமி 886-887

திரு. கே.பி.பி. சாமி 894-895

திரு. ஆர். கனகராஜ் 902-911

*திரு. பி.வி. பாரதி 911-919

திருமதி எஸ். விஜயதரணி 832-833,842, 919-931

*திரு. அர. சக்கரபாணி 831, 840,925, 951-952

திருமதி ப. மனோன்மணி 934-941

திருமதி பெ. சீத்தாபதி 942-948

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 991-992

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 26, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 10, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து."

நோய் இல்லாமல் இருத்தல், சிறந்த செல்வம், விளைபொருள் வளம், இன்பமயமான வாழ்க்கை, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அணிகலன்களாக விளங்குவன.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

இழப்பீடு

***693—திரு. ஆர். தங்கதுரை:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிர் இழப்புகளுக்கு உடனடி இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி என்னுடைய பதிலைச் சமர்ப்பிக்கின்றேன். வன உயிரினத் தாக்குதலால் ஏற்படும் மனித உயிரிழப்பிற்கு ரூ.3.00 இலட்சம் இழப்பீடாக வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்படும் நிவாரணத் தொகையான ரூ.3.00 இலட்சத்தில் உடனடி நிவாரணத் தொகையாக ரூ.25,000/- இதுவரை வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்தத் தொகையை ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கவும், மீதமுள்ள தொகையான ரூ.2.50 இலட்சத்தினை தேவையான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உடனடியாக வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கதுரை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வன விலங்குகளின் தாக்குதலால் ஏற்படும் உயிரிழப்பு, பயிர்ச் சேதம், உடைமைகளுக்கு ஏற்படும் சேதம் போன்றவற்றிற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை மாநிலப் பேரிடர் நிவாரண நிதி விதிமுறைகளுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும் என நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.*

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதிக்குட்பட்ட சிறுமலை அடிவாரப் பகுதிகளான அம்மையநாயக்கனூர், கொடைரோடு, கரும்புலி, சிங்கிலிகரடு, தென்மலை, சடையாண்டிகோயில் மற்றும் மாவூர் டேம் ஆகிய பகுதிகளிலும், கொடைக்கானல் மலையின் அடிவாரத்தில் உள்ள வத்தலகுண்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும்

2016 ஆகஸ்ட் 10]

யானைகள் மற்றும் இதர வன விலங்குகளால் ஏற்படும் சேதத்தினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிலக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமல்லாமல், திண்டுக்கல் மாவட்டம் முழுவதுமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 159 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.522 இலட்சம் செலவில் யானை புகா அகழிகள் மற்றும் மின் வேலிகளை அமைத்துள்ளது. இதுதவிர, வன விலங்குகளின் உணவு மற்றும் குடிநீர்த் தேவைக்காக 7 இடங்களில் ரூ.17 இலட்சம் செலவில் தீவனப் பயிர்த் தோட்டங்களை ஏற்படுத்தியும், 334 இடங்களில் ரூ.539 இலட்சம் செலவில் தடுப்பணைகள் மற்றும் 144 இடங்களில் ரூ.626 இலட்சம் செலவில் கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.*

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால் மனித உயிர்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வனங்களில் பழ மரங்கள் இல்லாத காரணத்தால், அவையெல்லாம் ஊருக்குள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வனங்களிலே மூங்கில், யானைகள் விரும்பிச் சாப்பிடுகின்ற பலா மரம்*

போன்றவற்றையெல்லாம் வளர்த்தால், வன விலங்குகள் ஊர்ப் பகுதிகளுக்குள் வராமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதுபோல, இந்த ஆண்டு வன விலங்குகளால் இழப்பு ஏற்பட்டவர்கள் எத்தனை பேருக்கு இழப்பீடு வழங்கப்பட்டது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இழப்பீடு பற்றிய விவரங்கள் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, வனப் பகுதிகளுக்கு உள்ளே விளையும் வன விலங்குகள் விரும்பிச் சாப்பிடக்கூடிய பயிர்கள், பழங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வனப் பகுதியில் உள்ள வன அலுவலர்கள் அதைப் பயிரிடுவதற்கான அத்தனை வேலைகளையும் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறார்கள். மரங்களைக் காரணமின்றி வெட்டுவதைத் தடுத்து, காடுகள் அழியாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு குடிமகனின் கடமை. மலைப் பகுதி சட்டத்தின் நோக்கமும் அதுதான். அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நல்ல பழ வகை மரங்களை வளர்த்து, வன விலங்குகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன வளத்தை அதிகரிக்கவும், வன விலங்குகளைப் பாதுகாக்கவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான இந்த அரசு எடுத்துவரும் நடவடிக்கையின் காரணமாகத்தான் வனங்களின் பரப்பளவு தேசிய சராசரி அளவைவிட தமிழகத்தில்*

அதிகமாக இருக்கிறது என்பதையும், அதைப்போல வன விலங்குகளில் ஒன்றான புலிகளின் எண்ணிக்கை தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதிகரித்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின் பதிலிலே எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, தேசிய அளவில் வன உயிரினங்களுடைய எண்ணிக்கை குறைந்து வருவதாகத்தான் ஆய்வுகள் சொல்கின்றன. அந்த வகையில் வன உயிரினங்களில் இரண்டு வகை இருக்கின்றன. ஒன்று Carnivorous, அதாவது, மாமிசங்களை உட்கொள்ளும் பிராணிகள். இன்னொன்று Herbivorous, தாவர உணவுகளை உட்கொள்ளும் விலங்குகள். ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, தாவர உணவுகளை உட்கொள்ளும் யானை போன்ற வன விலங்குகள் வாழும் பகுதிகளில் தீவனப் பயிர்களை வளர்ப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது. ஆனால், Carnivorous, மாமிசங்களை உட்கொள்ளும் விலங்குகளுக்கு, அந்த காடுகளில் வளர்கிற Herbivorous animals தான் உணவு. ஆனால், தாவரங்களை உட்கொள்ளும் அவ்வகை விலங்குகளின் எண்ணிக்கை காடுகளில் குறைந்து வருவதால், கொடிய மிருகங்கள் அதாவது, Wild animals காட்டைவிட்டு வெளியேறி நாட்டுக்குள் வந்து மனிதர்களைத் தாக்குகிற அல்லது மனிதர்கள் வளர்க்கிற ஆடுகள், மாடுகளைத் தாக்குகிற நிலைமை உண்டாகிறது. எனவே, இந்த தாவரங்களை உட்கொள்ளும் Herbivorous animals-க்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, காடுகளில் தீவனங்களை வளர்ப்பதைப்போல, அந்த Carnivorous, அதாவது, Wild animals-களுக்கான உணவை காடுகளிலேயே அவை தேடிக்கொள்ளுகிற அளவுக்கு வனத் துறையின் மூலமாக, ஏதாவது செயல் திட்டங்கள் அல்லது ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கேள்வியிலேயே பதிலைக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை எப்படி உணவு உண்கின்றன என்பதை எல்லாம் Discovery Channel-ல் நமக்குக் காட்டுகிறார்கள்; கடைசி மீன் குஞ்சு வரைக்கும் காட்டுகிறார்கள்.

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய ஆலோசனையை வைத்து, வேறு விதமாக எப்படி அதைச் செய்ய முடியும் என்பதை அவரிடமும் கலந்தாலோசித்து பெற்று, வனத் துறை மூலமாக நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யானையினுடைய சராசரி வயது என்பது 75-லிருந்து 100 ஆகும். இன்றைக்கு யானைகளுடைய எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆனால், யானைகள் வசிக்கின்ற அந்த வனப் பகுதியின் பரப்பளவு அதிகரிக்கப்படவில்லை. அதைப்போல,* Elephant Corridor *என்று சொல்லப்படுகிற யானைகளுடைய நடமாட்டப் பகுதியும் அதிகரிக்கப்படவில்லை. அதனால்தான் இப்போது யானைகள் காடுகளை விட்டு வெளியே வரவேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, யானைகள் வசிக்கின்ற அந்த வனப் பகுதியின் பரப்பளவை அதிகரிக்கவும்,* Elephant Corridor *என்று சொல்லப்படுகிற யானைகள் நடமாட்டப் பகுதியினை அதிகரிக்கவும் அரசு முன்வருமா?*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யானைகளைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் சொல்லியிருக்கிறார்கள். யானைகள் அழிவில்லாமல் இருப்பதும், அதிகமான எண்ணிக்கையில் இருப்பதும் அவருடைய பதிலில் இருந்தே தெரிய வருகின்றது. அவர் சொல்வதைப்போல, நாம் வாழும் இடங்களில் மனிதர்களுக்கு யானைகள் தொந்தரவு கொடுக்கிறது என்பதைத்தான் பல உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, வனத் துறை மானியக் கோரிக்கையில் பேசிய உறுப்பினர்களும் யானைகளால் மனிதர்களுக்கு ஏற்படும் தொந்தரவு பற்றி சொன்னார்கள். காட்டு யானைகள் வனப் பகுதியை விட்டு வெளியே வரும் நிகழ்வுகளில், யானைகளால்*

மக்களுக்குத் தொந்தரவு வராத அளவுக்கு சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பட்டாசுகள் வெடித்தும், சப்தம் எழுப்பியும் யானைகளை வனப் பகுதிகளுக்குள் திருப்பியனுப்பும் பணிகளை வனத் துறையினர் செய்கின்றனர். அடங்காத யானைகள் கும்கி யானைகளைக் கொண்டு அப்புறப்படுத்தப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு எல்லையிலிருந்து கேரள எல்லைக்கு யானைகளை அனுப்பும் பணிகளையும் செய்து கொண்டிருக்கின்றோம். மேலும், மக்களிடமிருந்து யானைகளைக் காப்பாற்றுவதற்கும், யானைகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கும் அகழிகளை வெட்டுதல், மின்வேலிகளை அமைத்தல் போன்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த யோசனை குறித்து கலந்துபேசி, வனப் பகுதியின் பரப்பளவையும், யானைகளின் நடமாட்டப் பகுதியையும் விரிவுபடுத்த முடியுமா என்பது நிதிநிலைமைக்கேற்ப ஆராய்ந்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

சாலையை அகலப்படுத்துதல்

***758—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கோட்டம், சாலவாக்கம்-மெய்யூர் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

செங்கல்பட்டு கோட்டம், சாலவாக்கம்-மெய்யூர் சாலையை அகலப்படுத்தும் அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தங்கள்

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலவாக்கம்-மெய்யூர் சாலையானது, 50 கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் செல்லக்கூடிய மற்றும் கரும்பு, சரக்குகள் போன்றவற்றை ஏற்றிச் செல்கின்ற அனைத்து வாகனங்களும் செல்லக்கூடிய, செங்கல்பட்டு வழியாக, தாம்பரம், சென்னை செல்வதற்கான சுருக்கப் பாதையாகும். எனவே, நூற்றுக்கணக்கான வாகனங்கள் இந்தச் சாலையைப் பயன்படுத்துகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் அந்தச் சாலையைப் பயன்படுத்துகின்றார்கள். ஆக, 3¾ மீட்டர் அகலம் உள்ள இந்தச் சாலையை அதனுடைய அவசியம் கருதி 5½ மீட்டர் அகலம் உள்ள சாலையாக அகலப்படுத்துவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலவாக்கம்-மெய்யூர் சாலை, ஆலம்பாக்கம்-அன்னாதூர்-சாலவாக்கம் சாலை கிலோ மீட்டர் 0/0-லிருந்து 5/6 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலை தற்போது ஒருவழித்தட சாலையாக இருப்பதால் அதற்கேற்ற அகலத்துடன் உள்ளது. மெய்யூர், பினாயூர் சாலை கரும்பு அபிவிருத்தித் திட்டச் சாலையாகும். இச்சாலை, கிலோ மீட்டர் 2/6-ல் பிரிந்து, மாமண்டூர், உத்திரமேரூர் சாலையிலிருந்து திருமுக்கூடல் சாலை வழியாக சாலவாக்கம் மாவட்ட இதரச் சாலையின் கிலோ மீட்டர் 5/6-ல் இணைகிறது. இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு 1,258 PCU ஆகும். தற்போதைய ஒருவழித்தட அகலச் சாலையானது 2,000 PCU வரையிலான போக்குவரத்துச் செறிவினைத் தாங்கக்கூடியதாகும். எனவே, இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு, 2,000 PCU-க்கு அதிகமாகும்பட்சத்தில் மட்டுமே இச்சாலையை இடைவழித் தடமாக அகலப்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்

2016 ஆகஸ்ட் 10]

என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி ஒருவழித்தட சாலையிலே 6 அரசுப் பேருந்துகள் இயங்குகின்றன. அதுமட்டுமல்ல, மழைக் காலங்களில் நேரெதிராக இரண்டு வாகனங்கள் 50 நடைகள் சென்று வருகின்றன. மேலும், கரும்பை ஏற்றிக்கொண்டு டிராக்டர் அல்லது லாரி போன்ற வாகனங்கள் எதிரெதிரே வருகின்றபோது, அவை ஒதுங்குவதற்குக்கூட இடம் இல்லாத பிரச்சினை ஏற்படுகின்றது. அதனால், மழைக் காலங்களில் விபத்துகள் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கின்றது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல, அந்தச் சாலையினுடைய நீளம் 5.6 கிலோ மீட்டராகும். எனவே, பொதுமக்களின் பயன்பாட்டு அவசியத்தைக் கருதி, அந்தச் சாலையை அகலப்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கின்றோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பயன்பாடு அதிகமிருப்பின் அச்சாலையை அகலப்படுத்தும் பணியை உடனே எடுத்துச் செய்வார்களா என்பதை இந்த நேரத்திலே தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஒருவழிப் பாதையை இடைவழித் தடமாக அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அந்தச் சாலையினுடைய போக்குவரத்துச் செறிவைக் கணக்கிட்டுத்தான் அகலப்படுத்தப்படுகிறது. தற்போது அந்தச் சாலையினுடைய போக்குவரத்துச் செறிவு 1,258* PCU *ஆகும். போக்குவரத்துச் செறிவு 2,000* PCU-*க்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அந்தச் சாலையை தற்போது அகலப்படுத்த முடியவில்லை. எதிர்காலத்தில் போக்குவரத்துச் செறிவு 2,000* PCU *ஆக உயருகின்றபோது, அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு அரசு*

ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை பொது வாழ்வில் வளர்த்து ஆளாக்கி, 1986-ல் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989-லும், 1991-லும் ஆக இருமுறை கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினராகவும், நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளராகவும் ஆக்கி, மூன்றாவது முறையாக பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கொடுத்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் தமிழினத்தின் தலைவர், கழகத் தலைவர், செம்மொழிக் காவலர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், நமக்கு நாமே நாயகன், எங்களின் வருங்காலம், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஈன்றெடுத்த தாய்க்கும், தந்தைக்கும்; எனது வெற்றிக்காகப் பாடுபட்ட எனது ஆருயிர் நண்பர் கபிலர்மலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கே.பி.கே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும்; எனது தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக நிருவாகிகள், காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிருவாகிகள் அனைவருக்கும்; எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும், எனக்காக உழைத்திட்ட நல்ல உள்ளங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட ஒத்தனூர் சிவா தியேட்டரிலிருந்து இருக்கூர் செல்லும் சாலையின் அகலம் குறைவாக உள்ளது. இந்தச் சாலையிலே போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ள காரணத்தினால், இந்தச் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், பரமத்திவேலூரிலிருந்து திருச்செங்கோடு வரையுள்ள சாலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு* TNRSP *திட்டத்தின்கீழ் விரிவுபடுத்துவதற்காக எடுத்து, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையில் போக்குவரத்துச் செறிவு கணக்கிடப்பட வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், ஒருவழிச் சாலை 3.75 மீட்டர், இதற்கு 2,000 PCU *இருக்க வேண்டும்; இடைவழித்தடமாக அதை அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், 5.50 மீட்டர் இருக்க வேண்டும், அதற்கு 6,000* PCU *இருக்க வேண்டும்; இருவழிச் சாலையாக அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்றால் 15,000* PCU *இருக்க வேண்டும்; நான்கு வழிச் சாலையாக, பல்வழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு 40,000* PCU *இருக்க வேண்டும்.* PCU *என்றால்,* Passenger Car Unit-*பயணியர் வாகனச் செறிவு. அந்தச் சாலையில் செல்கின்ற வாகனங்களுடைய செறிவைக் கணக்கிட்டு, அதற்குப் புள்ளிகள் கொடுத்து, எத்தனை வாகனங்கள் செல்கின்றனவோ, அவற்றுக்கேற்றவாறு புள்ளிகளைக் கணக்கிட்டு, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு அந்தப் புள்ளிகள் இருக்கின்ற பட்சத்தில், சாலை விரிவுபடுத்தப்படும்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையிலும் வாகனச் செறிவு கணக்கிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல வாகனச் செறிவு இருக்குமானால், அதன் அடிப்படையில் அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான் மக்களுக்காக நான் என்றும், மக்கள் பணியே மகேசன் பணி என்றும் நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம்*

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை பட்டவர்த்தி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அந்தச் சாலையில் செல்கின்ற வாகனங்களின் செறிவின் அடிப்படையில்தான் அகலப்படுத்த முடியும் என்று நான் ஏற்கெனவே அவையில் குறிப்பிட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சாலையிலும் போக்குவரத்துச் செறிவு கணக்கிடப்பட்டு, அதில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கும் பட்சத்தில், அதற்கேற்றவாறு சாலையை அகலப்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட நல்லூர் பஞ்சாயத்திலுள்ள, நல்லூர் விலக்கிலிருந்து ஆலங்குளம் காய்கறி மார்க்கெட் வரை சுமார் 3 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை ஒன்று உள்ளது. அந்த நல்லூர் விலக்குப் பகுதியில் 10 பள்ளிக்கூடங்களும், ஒரு கலைக் கல்லூரியும் உள்ளன. அதிக பயன்பாட்டுக்குரிய அந்தச் சாலை, தற்போது செப்பனிடப்படாமல் குண்டும், குழியுமாக இருக்கின்றது. அதனால், அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. முக்கியமாக, மாணவ, மாணவியர்கள் சைக்கிள்களில் செல்லும்போது கீழே விழுந்துவிடுகிறார்கள். ஆகவே, தயவுசெய்து அந்தச் சாலையை அகலப்படுத்தி, புதிய சாலை அமைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக இவ்வரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள சாலைகளில் அதிக போக்குவரத்து நெரிசல் இருப்பதால், சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.*

2011-2012 ஆம் ஆண்டு 1,708.88 கிலோ மீட்டரும், 2012-2013 ஆம் ஆண்டு 1,659.37 கிலோ மீட்டரும், 2013-2014 ஆம் ஆண்டு 2,386.98 கிலோ மீட்டரும், 2014-2015 ஆம் ஆண்டு 1,478.63 கிலோ மீட்டரும், 2015-2016 ஆம் ஆண்டு 975.20 கிலோ மீட்டரும், ஆக மொத்தம், ஐந்து ஆண்டுகளிலே 8,209.06 கிலோ மீட்டர் சாலைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அகலப்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகளை மேம்படுத்துவது, புதுப்பிக்கப்படுவது போன்ற பணிகளைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 48,371.84 கிலோ மீட்டர் சாலைகள் ஐந்து ஆண்டுக் காலத்திலே சீரமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சாலை சீரமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகியிருந்தால், நிதி நிலைமைக்கேற்ப அந்தச் சாலை சீரமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

சட்டக் கல்லூரி

***2722—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சீர்காழியில் சட்டக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பது அரிதான ஒன்றாகிவிட்ட காரணத்தாலும், பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை குறைந்துவிட்ட காரணத்தாலும், எங்களுடைய சீர்காழி பகுதியிலே சட்டக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுகிறேன். அதோடு, பொது அறிவையும், சமுதாயத்தில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்வண்ணம், மேல்நிலைக் கல்வியில் அடிப்படை பொதுச் சட்டத்தினை ஒரு பாடமாகக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஏழு இடங்களில் அரசு

2016 ஆகஸ்ட் 10]

சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றோடு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்திலே, அப்பல்கலைக்கழகத்தின்கீழ், தரமணியில், சீர்மிகு சட்டப் பள்ளியில் ஐந்து ஆண்டுகள் சட்டப் படிப்பு தற்போது பயிற்றுவிக்கப்படுகின்றது. மேலும், அப்பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் L.L.B. சீர்மிகு சட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகாவில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி நிறுவப்பட்டு, அப்பள்ளி 2013-2014 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழகத்தில் போதிய எண்ணிக்கையிலான அரசு சட்டக் கல்லூரிகளைக் கொண்டு சட்டக் கல்வி வழங்கப்படுவதாலும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மற்றும் தேசிய சட்டப் பள்ளியின் அருகிலே சீர்காழி உள்ளதாலும், சீர்காழியில் தற்போது அரசு சட்டக் கல்லூரி தொடங்க அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சட்டத் துறை குறித்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 12 ஆம் வகுப்பிலே பொது சட்டக் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு அதை ஆராயும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது அறிவை, சட்ட விழிப்புணர்வை மாணவ சமுதாயத்தில் ஏற்படுத்துகின்றவிதத்திலே, மேல்நிலைக் கல்வியில் பொது சட்டக் கல்வியை ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களிடம் வேண்டுகோள் வைக்கப்படும் என்று மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

முற்பகல் 10-25

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர், பந்தலூர் வட்டங்களில் இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும், ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றமும், ஒரு கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றமும் இருக்கின்றன. மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றால், உதகைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 90 கிலோ மீட்டர் பயணம் செய்து மேல்முறையீடு செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் முழுவதையும் நிறைவு செய்யும்வகையில் அங்கே* Court filing *இருக்கின்ற காரணத்தினாலும், மேல்முறையீடு செய்ய வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடலூரில் ஒரு* Sub Court *ஏற்படுத்த முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகின்றேன். மேலும், மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொண்டதைப்போல, வழக்கறிஞர்களுடைய போராட்டம் கிட்டத்தட்ட 45 நாட்களாக நீண்டுகொண்டே போகிறது. இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருவதால், இதில் அரசு முழுக் கவனம் செலுத்தி, அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில்* Sub Court *வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். உயர் நீதிமன்றத்தால் உரிய முறையில் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டால், அதனைத் தகுந்த முறையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதேபோன்று, வழக்கறிஞர்களின் போராட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். வழக்கறிஞர்களுடைய போராட்டத்தை நல்ல முறையில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். சென்னையில் போராடுகின்ற வழக்கறிஞர்கள் சங்கமும், Tamil Nadu Bar Council

மற்றும் Bar Council of India-ம் இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இன்றைக்கு டில்லியில் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இனிமேல் கேள்வி கேட்கும்போது மூலக் கேள்வியை ஒட்டியே கேளுங்கள். உங்களுடைய தொகுதியையொட்டி துணைக் கேள்வியைக் கேளுங்கள். செங்கல்பட்டு சம்பந்தமாக கேள்வி கேட்கும்போது, நீங்கள் திடீரென்று கன்னியாகுமரி தொடர்பான கேள்வி கேட்டால், அதற்கு அமைச்சர் எப்படி பதில் வைத்திருப்பார்? நான் எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும் என்றுதான் விரும்புகின்றேன். ஆகவே நீங்கள் மூலக் கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாகக் கேளுங்கள். சம்பந்தா சம்பந்தமில்லாமல் நீங்கள் கேள்வியைக் கேட்டீர்களென்றால், அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது. இதனால் அவையின் நேரம் வீணாகின்றது. ஆகவே, இனிமேல் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்வியைக் கேட்கின்றபோது, மூலக் கேள்வியையொட்டி கேள்வி கேட்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

மேம்படுத்துதல்

***1777—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, மறமடக்கியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மறமடக்கி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நாகுடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருவதால், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கக்கூடிய மறமடக்கியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி சட்டமன்றத்திற்குட்பட்ட அறந்தாங்கி ஒன்றியம், மறமடக்கி ஆரம்ப சுகாதார நிலையம் அதிகமான புற நோயாளிகள் மற்றும் கிராமப்புறப் பெண்கள் மகப்பேறு மருத்துவ வசதி பெறக்கூடிய ஒன்றாகும். மறமடக்கியைச் சுற்றியுள்ள வன்னியன்விடுதி, திருநாளூர், பரவக்கோட்டை, சிட்டாங்காடு, சிலட்டூர், தாந்தாணி, ஆவனத்தாங்கோட்டை, இராஜேந்திரபுரம், பெரியாளூர் உள்ளிட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறக்கூடிய இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய உயரிய நோக்கின்படி, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தக்கூடிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இப்போது அந்த இலக்கு முடிவடையக்கூடிய நிலையில் இருக்கின்றது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் பணி இன்றைக்கு மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக இப்போது*

2016 ஆகஸ்ட் 10]

சட்டமன்ற உறுப்பினர்கள் இதை ஆர்வமாகக் கேட்பதற்குக் காரணம், ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 மருத்துவர்கள் இருப்பார்கள்; ஆனால், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக மூன்று மருத்துவர்கள், ஆக மொத்தம் 5 மருத்துவர்கள் 24 மணி நேரமும் பணியில் இருப்பார்கள். எக்ஸ்ரே வசதி, அறுவை சிகிச்சை வசதி, ஸ்கேன் வசதி, கூடுதல் பணியாளர்கள், கூடுதலாக ஒரு செவிலியர், 1 கோடியே 85 இலட்சம் ரூபாய்க்குக் கட்டடங்கள் என அனைத்து வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கிராமப்புறத்தில் செய்கின்ற காரணத்தினால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இதுபோன்ற வசதிகள் வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 2011-ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிகச் சிறப்பாக முடித்து ஒரு வரலாற்று சாதனையைப் படைத்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கைக்கேற்ப, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 129 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக 142 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டமைப்பை இன்றைக்கு உறுதிபடுத்தக்கூடிய அரசாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த மருத்துவமனைக்கு, அங்கு வரக்கூடிய உள் நோயாளிகள், புற நோயாளிகள் எண்ணிக்கை, அந்த ஒன்றியத்தின் மக்கள் தொகை, அதன் அமைவிடம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, வருங்காலத்தில் அதுகுறித்து துறைரீதியாக ஆய்வு செய்து, முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், 52 ஊராட்சிகளைக் கொண்ட மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாகும். அவற்றில், 20 ஊராட்சிகள் அறந்தாங்கி தொகுதியிலும், 32 ஊராட்சிகள்*

ஆலங்குடி தொகுதியிலும் வருகின்றன. நாகுடி ஆரம்ப சுகாதார நிலையம் அறந்தாங்கி தொகுதியில் வருகின்றது. ஆலங்குடி தொகுதியிலிருக்கின்ற 32 ஊராட்சியைச் சேர்ந்த மக்கள் நாகுடி ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை உள்ளது. அவர்கள் சிகிச்சைக்காக 35 கி.மீ. தூரத்திலுள்ள புதுக்கோட்டை தலைமை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அப்படிச் செல்லும்போது விபத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு உயிரிழப்பு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. இவற்றைக் கருத்திற்கொண்டு, மறமடக்கி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதேபோல் திருவரங்குளம் ஒன்றியம், கொத்தமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தரம் உயர்த்தித் தர வேண்டும். ஏனென்றால், கொத்தமங்கலம் ஊராட்சியில் மக்கள் தொகை 15,000-க்கு மேற்பட்டு உள்ளது. எனவே, கொத்தமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆலங்குடி அரசு மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்களை நியமிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைமீது வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப துறைரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, R.S. மங்கலம் ஒன்றியம், மணலூர் கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது.

பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மக்களைக் கொண்ட இக்கிராமப்பகுதியில், மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த, தரமான மருத்துவ வசதியைப் பெறுவதற்கு இந்தத் துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது அவசியமாக இருக்கிறது. எனவே, இந்தத் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீன வசதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை என் சார்பாகவும், திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் நடைமுறை இல்லை. அது துணை ஆரம்ப சுகாதார நிலையமாகவே செயல்படும். மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ள அந்தப் பகுதியில் 30,000 மக்கள் தொகையோ அல்லது அங்கு ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தோற்றுவிக்கக்கூடிய அளவில் அந்தக் கிராமம் விதிமுறைகளை பூர்த்தி செய்தபின், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கு ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதியில் கன்னிசேரிபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய தரம் உயர்த்தப்பட்ட 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால், இரவு நேரங்களில் மருத்துவர்கள் அங்கு பணிக்கு வருவதில்லை. எனவே, இரவு நேரங்களில் மருத்துவர்கள் பணி புரிய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

[2016 ஆகஸ்ட் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 மருத்துவப் பணியிடங்கள் இருக்கின்றன. 24X7 சேவை என்ற அளவில், குறிப்பாக இரவு நேரங்களில் மருத்துவர்கள் பணிபுரிய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் மருத்துவர்கள் பணிபுரியவில்லையென்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஒப்பற்ற நாவன்மையாலும், ஓய்வறியாப் பேனா முனையினாலும் இந்த உலகையே திரும்பிப் பார்க்க வைக்கின்ற ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓய்வறியா உதய சூரியனாகத் திகழ்கின்ற எங்களின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கழக ஒற்றுமையையும் காத்து, உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்ற உயர்ந்த நோக்கில் கடைகோடி குக்கிராமத்திலும் தன் கால் தடம் பதிக்காத இடமே இல்லை என்று கூறும் வகையில், காலத்தால் அழியாத அரிய பல சாதனைகள் நிகழ்த்திட்ட நமக்கு நாமே நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) விடியல் மீட்பு நாயகன், கென்டகி கர்னல் அன்புத் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். அறிவார்ந்தவர்களும், ஆன்றோர்களும் அமர்ந்த இந்த அவையிலே, நான் அமர்வதற்குக் காரணமாக விளங்கிய எனது அன்பு நெஞ்சங்களுக்கும், செய்யூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மைக்கிலிருந்து சற்று விலகி நின்று பேசுங்கள்.*

2016 ஆகஸ்ட் 10]

டாக்டர் ஆர்.டி. அரசு: *செய்யூர் தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் ஒன்றியம், சூனாம்பேடு ஊராட்சியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தரமாக செவிலியர் பணியிடம் காலியாக இருக்கின்றது. அங்கே இரவு நேரங்களில் மருத்துவர் இல்லாத சூழ்நிலையும் இருக்கிறது. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தரமாக ஒரு செவிலியரையும், இரவு நேரத்தில் அவசர சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக ஒரு மருத்துவரையும் நியமனம் செய்ய இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூனாம்பேடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் பணியிடம் காலியாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். காலியாகக்கூடிய செவிலியர் பணியிடங்கள் தொடர்ந்து கலந்தாய்வு மூலமாக நிரப்பப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதுவரை இத்தகைய சாதனை நிகழ்ந்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு வரலாற்றுச் சாதனையாக கடந்த ஆண்டு ஒரே நேரத்திலே 7,243 செவிலியர்களை நியமித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து இந்த ஆண்டும் 1,900 புதிய செவிலியர்களை நியமனம் செய்வதற்காக சான்றிதழ் சரிபார்க்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. செவிலியர் பற்றாக்குறை, காலியிடம் இல்லையென்ற நிலையை உறுதிப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சூனாம்பேடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் நியமிக்கப்படுவார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

கொப்பரை உலர் களங்கள்

***458—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் பகுதியில் கொப்பரை உலர் களங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எண்ணம், சொல், செயல்' இவற்றை ஒருங்கிணைத்து, 'திட்டம், நிருவாகம், செயல்பாடு' ஆகியவற்றைச் செம்மைப்படுத்தி, 'வளம், வாய்ப்பு, தகவல் பரிமாற்றம்' ஆகியவற்றை மேம்படுத்தி, 'உற்பத்தி, சந்தைப்படுத்துதல், வருமானம்' உள்ளிட்ட விவசாயிகளின் வாழ்வாதார உயர்விற்கு நித்தம், நித்தம் பாடுபடும் எங்கள் தலைவி, தங்கத் தலைவி, உன்னதத் தலைவி, ஒப்புயர்வற்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) காவியத் தலைவி, சரித்திரத் தலைவி, பார் போற்றும் தலைவி எங்கள் அம்மா, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கடையநல்லூர் பகுதியில் கொப்பரை உலர் களங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் பகுதியில் கொப்பரை உலர் களங்கள் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியிலே, 2,100-க்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலங்களிலே தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. அங்கே 75 இலட்சம் தென்னை மரங்கள்*

உள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக மூன்றரை இலட்சம் தேங்காய்கள் பறிக்கப்படுகின்றன. இவ்வளவு வளமான பூமியாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே, கொப்பரைத் தேங்காய் உலர் களங்களை அமைத்தால்தான் விவசாயிகள் முழுமையான பயனைப் பெற முடியும். பசுமைப் புரட்சியின் மூலமாக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று நமது அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இன்று பேரவையில் நடைபெறக்கூடிய மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பச்சை பசேல் என்ற எங்கள் நிறத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, கன்னியாகுமரி மற்றும் கோவை மாவட்டங்களில் உலர் களங்கள் அமைக்கப்படுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதிக விளைச்சல் இருக்கக்கூடிய எங்கள் பகுதியில் கொப்பரைத் தேங்காய் உலர் களங்கள் அமைப்பதனால் விவசாயிகள் அதிக அளவு பயன்பெற முடியும். உலர் களங்கள் இல்லாத காரணத்தால், விவசாயிகள் தங்களுடைய வீட்டில் கொப்பரைத் தேங்காய்களை உலர வைப்பதால் முழுமையான பயனை அவர்களால் பெற முடியவில்லை. எனவே, தயவுகூர்ந்து தென்னை விளைச்சலை கருத்தில்கொண்டு, பசுமை நிறைந்த கடையநல்லூர் பகுதியிலே தென்னை உலர் களங்கள் அமைத்தால் விவசாயிகள் பயன்பெற முடியும் என்ற எனது கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு செல்ல வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், விவசாயத்தையும் வளர்த்து இன்று தமிழகத்தை முன்னோடி மாநிலமாக்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கடந்த 2011 முதல் 2014 வரை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மொத்தமாக 343 உலர் களங்கள், 11 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 30 உலர் களங்கள் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன.*

முற்பகல் 10-40

மேலும், கடையநல்லூர் மற்றும் தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ள உலர் களங்களில் கொப்பரைகளை உலர்த்த விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், கடையநல்லூர் மற்றும் தென்காசி பகுதியில் உள்ள பொய்கை, காசிதர்மம், கம்பநேரி மற்றும் நெடுவயல் ஆகிய கிராமங்களில் உலர் களங்கள் அமைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த உலர் களங்களையும் கொப்பரை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கங்களுக்கும், உறுதிமொழிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

வீட்டுமனைப் பட்டா

***1380—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி, பஜார் தெருவில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி பஜார் தெருவில் வசிப்பவர்கள் வணிக வளாகங்கள் போன்ற வணிக நோக்கமான தொழில் செய்து வருவதாலும் மற்றும் இவர்கள் 0.03 சென்ட்டிற்கு மேல் அனுபவத்தில் வைத்திருப்பதாலும், அரசு விதிகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு, 3.5 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லரசால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நல்ல திட்டம் அனைவராலும் வரவேற்கக்படக்கூடிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 'செய்ய முடிந்தவர் சாதிக்கிறார்; செய்ய முடியாதவர் போதிக்கிறார்' இது பெர்னாட்ஷா அவர்களின் பொன்மொழி. தமிழ்நாட்டு மக்களுக்கு செய்ய முடிந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனையாளராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு பேரூராட்சி, அங்காடி வீதியில் வீடுகளைக் கட்டிக்கொண்டு பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் ஏழ்மை, வீடுகளைக் கட்டிக்கொண்டு அனுபவிக்கிற ஆண்டுகள் இவற்றினைக் கருத்தில்கொண்டு, மறுபரிசீலனை செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு ஒரு இடம் வழங்குவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கெல்லாம் வீட்டுமனைகளை தகுதியான நபர்களுக்கு அரசு ஒப்படை செய்து வருகிறது. அந்தவகையிலே, வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் உள்ள வரையரைக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையிலே குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.30 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையிலே குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

அதைப்போல, மகளிருக்கு பொறுப்பளிக்கும் விதத்தில் குடும்பத் தலைவரின் மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினரின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது வளமையான திட்டத்தின்கீழ் அதாவது regular scheme-ன்கீழ் கிராமங்களில் 3 சென்ட்டும், நகராட்சி எல்லைக்குள் ½ சென்ட்டும், மாநகராட்சி எல்லைக்குள் 1 சென்ட்டும் என்ற அளவில் வீட்டுமனைகளுக்கான நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. அந்தவகையிலே, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி பஜார் தெருவில் வசிப்பவர்கள், வணிக வளாகங்கள் போன்ற வணிக நோக்கத்தில் தொழில் செய்து வருவதாலும், இப்பகுதியில் வசிக்கும் மக்கள் அவர்களது அனுபவத்தில் 3 சென்ட் நிலத்திற்கும் மேலாக அனுபவித்து வருவதாலும், அரசின் விதிப்படி ½ சென்ட்டுக்கு மட்டுமே பட்டா வழங்க முடியும் என்பதாலும், ஆண்டு வருமானம் 50,000/- ரூபாய்க்குள்ளாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் இப்பகுதியில் வசிப்பவர்களுக்கு பொருந்தாது என்பதாலும், இவர்கள் அனைவரும் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களாக இருப்பதாலும், அரசு விதிகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க இயலவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

முற்பகல் 10-45

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற திருத்தணி நகரில் ஏழைகளில் ஏழையாக இருக்கக்கூடியவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற சாதாரண மக்கள், அடித்தட்டு மக்கள், திருத்தணி நகரில் உள்ள பெரியார் நகர், நேரு நகர், அக்கையா நாயுடு தெரு போன்ற இடங்களில் வாழ்கிற சாதாரண மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதுகூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட 3.50 இலட்சம் அதாவது 3½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிற அறிவிப்பு, இன்றைக்கு தமிழக மக்களால் மிகவும் மகிழ்ச்சிகரமான வகையில் வரவேற்கக்கூடியது என்று சொன்னார். மேலும், விலை அதிகமாக இருக்கின்ற பகுதியிலும், நிலம் குறைவாக இருக்கின்ற பகுதியிலும், இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையில் புதிய அணுகுமுறையாக, கூட்டுப் பட்டா வழங்கப்படும் என்கிற ஒரு புதிய அணுகுமுறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த ஐந்து ஆண்டுகளில் 59,381 நபர்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகள் வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு வருமானால், அவர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்டா வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்*

[2016 ஆகஸ்ட் 10

சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

பேருந்து வசதி

***62—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். ஏற்கெனவே காட்டுமன்னார்கோவில் அருகில் உள்ள சிதம்பரத்திலிருந்து திருப்பதிக்கு இரண்டு அரசுப் பேருந்துகள் இயங்கி கொண்டிருக்கின்றன என்பதையும், மேலும் அவர் வைத்துள்ள கோரிக்கை தமிழ்நாடு மற்றும் ஆந்திர அரசுகளுக்கிடையிலான கோரிக்கை என்பதால், இரண்டு மாநில அரசுகளுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் மட்டுமே பேருந்துகளை இயக்க இயலும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவுகோலே இல்லாத அன்பாய்! சுயநலமே இல்லாத இதயமாய்! வெறுப்பே இல்லாத ஒளிமுகமாய்! வார்த்தைகளே இல்லாத வடிவமாய்! வரிக்கு வரி, வரியே இல்லாத நிதிநிலை அறிக்கை தந்த வள்ளலாய் விளங்கும் மாட்சிமைகள் நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர் பாதங்களை முதற்கண் பணிவோடு பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் கி.பி. 823-ல் சதுர்வேதமங்கலம், திருமாளிகையில் பிறந்தவர் நாதமுனிகள். 12 ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்யபிரபந்தம் மறைந்த நிலையில், நாலாயிர திவ்யபிரபந்தம் எனும் தமிழ் வேதத்தைக் கண்டறிந்து, பண் அமைத்து பாருக்கு வழங்கியவர். அரையர்சேவை என்னும் இறைவழிபாட்டினை அருளியவர். இது இன்றும் ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீமேல்கோட்டை திருக்கோயில்களில் நடைபெற்று வருகின்றது. இவரது பேரன் ஸ்ரீஆளவந்தார் அவர்கள் பிறந்த இடமும் காட்டுமன்னார்கோவில் தான். காட்டுமன்னார் என்னும் ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் அருள் பாலிக்கிற வைணவ அவதாரத் திருத்தலங்களில் முதன்மையாக விளங்குவது காட்டுமன்னார்கோவில். காட்டுமன்னார்கோவிலிலிருந்து சிதம்பரம் 25 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில போக்குவரத்துத் துறைகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதனடிப்படையில் காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய*

கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

முற்பகல் 10-50

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'வாடிய பயிரை கண்டபொழுதெல்லாம் வாடி நின்ற' வள்ளல் பெருமகனார் மறைந்தும், மறையாமல் நிலைத்து நிற்கின்ற கடலூர் மாவட்டத்தில், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தாலான பாதிப்புகளை நினைவிற்கொண்டு, நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.140 கோடியை வாரி வழங்கிய ஒன்பதாவது வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுடைய ஒப்பற்ற தனிப்பெரும் தலைவர், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், மாவட்ட மக்கள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காட்டுமன்னார்கோவில் தொகுதிவாழ் தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பகுதி மக்களுடைய நலன் கருதி, காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருப்பூருக்கு ஒரு புதிய அரசுப் பேருந்தினை இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருப்பூருக்கு பேருந்து இயக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அந்த வழித்தடத்தில் பயணிக்கின்ற பயணிகளின் அடர்வுக்கேற்ப ஆய்வு*

2016 ஆகஸ்ட் 10]

செய்து, பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர், கழகத் தலைவர், கலைஞர் அவர்களை வணங்கி, என்னை திருவள்ளூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கிய என்னுடைய அரசியல் ஆசான், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய வெற்றிக்கு பாடுபட்ட தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி நிருவாகிகளுக்கும், அனைத்து நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

*திருவள்ளூர் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய திருவள்ளூர்-திருத்தணி செல்லும் 93, 97*H, *72*A, *94* cut service, T2 *ஆகிய எண் கொண்ட பேருந்துகள் கடந்த 6 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வழித்தடங்களில் மாணவர்கள், மக்கள் பயணம் செய்யும் வகையில், அந்தப் பேருந்துகளை மறுபடியும் இயக்குவதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட வழித்தடங்களில் கடந்த 6 ஆண்டுகளாக பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். அவர் ஆதாரத்துடன் புகாரைக் கொடுத்தால், அதை ஆய்வு செய்து, அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். போக்குவரத்துத் துறை மேலாண்மை இயக்குநர் அவர்களை நான் நேரில் சந்தித்து, 23 வழித்தடங்களில் பேருந்துகள் சரியாக இயக்கப்படவில்லை, சில இடங்களில் 1 கி.மீ.-லிருந்து 1½ கி.மீ. தூரம் பேருந்து வழித்தடத்தை நீட்டிப்பு செய்து கொடுத்தால் இரண்டு கிராமங்களிலுள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்று கோரி மனு கொடுத்திருக்கின்றேன். இது தொடர்பாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், திருநெல்வேலியிலுள்ள அதிகாரிகளை அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், களக்காட்டிலிருந்து சென்னைக்கும், மூலக்கரைப்பட்டியிலிருந்து சென்னைக்கும் புதிய வழித்தடங்களை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-வது முறையாக தமிழகத்தில் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகளை நீட்டிப்பு செய்ய இயலுமோ, அந்தந்த வழித்தடங்களில் எல்லாம் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுடைய வசதிகளைக் கருத்திற்கொண்டு, நீட்டிப்பு செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

முற்பகல் 10-55

2. தகவல் கோரல்

துறைமுகம் தொகுதி, அன்னை சத்தியா நகரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

***திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 60-வது வட்டத்தில், ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 60 குடிசைகள் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன. அந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள் 40 ஆண்டு காலமாக துறைமுக பொறுப்புக் கழகத்திற்குட்பட்ட இடத்திலே வசித்து வருகிறார்கள். தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்களுக்கு ஆளாகின்ற அவர்களுக்கு அந்தப் பகுதியிலே நிரந்தர வீடு கட்டித் தருவதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நிதிநிலை அறிக்கையிலே 10 இலட்சம் வீடுகள் கட்டித் தருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. துறைமுகம் தொகுதியில் 8,000-க்கும் அதிகமான மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை வழங்கும் வகையில், 10 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே இவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், இதுபோன்ற குடிசைப் பகுதிகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற தீ விபத்துகளைக் கருத்திலேகொண்டு, தீ பிடிக்காத கல்நார் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. இதுபோன்ற இடங்களில் நிரந்தரக் குடியிருப்புகள் கட்ட முடியவில்லை என்றாலும்கூட, தீ பிடிக்காத கல்நார் வீடுகள் திட்டத்தை மீண்டும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சேகர்பாபு, நான் உங்களை அமைச்சரின் கவனத்தை ஈர்க்கத்தான் சொன்னேன். அமைச்சரிடம் பதில் மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) அமைச்சரிடம் பதில் கேட்பது மாதிரி கேட்டால் நல்லது. நீங்கள் விளக்கமாக மானியக் கோரிக்கையிலே பேசுவது போன்று பேசினால் எப்படி? மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் வைத்திருக்கிறீர்களா? (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, நீங்கள்*

தகவல் கோரல் என்ற முறையில்தான் கேட்டீர்கள். அமைச்சரிடம் பதில் இருக்கிறதென்று சொல்கிறார்கள். பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி.பி. சாமி, நான் திரு. சேகர்பாபுவை பேச அனுமதித்து அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? திரு. சேகர்பாபு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், அன்னை சத்தியா நகர், பி.பிளாக் குடிசைப் பகுதியிலுள்ள, கதவு எண் 90-ல் வசிக்கும் திருமதி அமுல், கணவர் பெயர் முரளி என்பவருடைய வீட்டில், சமையல் செய்யும்போது திடீரென்று தீ விபத்து ஏற்பட்டு, அது மேலும் பரவி, அருகிலுள்ள 13 வீடுகள் முழுமையாகவும், 7 வீடுகள் பகுதியாகவும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டுவிட்டன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உடனடி உத்தரவின் பேரில், பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடத்திலே தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குக் காலை, மதியம், இரவு என்று மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டு, பாதிக்கப்பட்ட முழுமையாகச் சேதமடைந்த 13 குடிசைகளிலே வசித்த குடும்பத்தினருக்கு, தலா ரூபாய் 5,000, 10 கிலோ அரிசி, வேஷ்டி மற்றும் புடவையும்; பகுதியாக சேதமடைந்த 7 குடிசைகளிலே வசித்த குடும்பங்களுக்கு, தலா ரூபாய் 4,100/-, 10 கிலோ அரிசி, ஒரு வேஷ்டி, ஒரு புடவையும் நிவாரணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க வழங்கப்பட்டது. மேலும், 20 குடும்பங்களின் வீடுகளுக்கு, தீ விபத்தால் பாதிக்கப்பட்டவை என்ற சான்றினை உடனடியாக மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும்,*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஆகஸ்ட் 10] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

நானும், அதைப்போல Commissioner of Revenue Administration *அவர்களும், மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) அவர்களும் நேரடியாகச் சென்று வழங்கினோம்.*

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார், இத்தனை இலட்சம் வீடுகள் கட்ட அறிவிப்பு இருக்கிறதே, அதனை இங்கே கட்டுவீர்களா என்று. வருவாய்த் துறை வரலாற்றிலேயே 12 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை ஏழையெளியவர்களுக்கு வழங்கிய தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தற்போதைய அவருடைய தலைவர் கல்நார் வீடு கட்டியதாகச் சொன்னார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எங்கேயும் கல்நார் குடிசைகள் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சபையிலே பதிலைக் கவனிக்கின்றாரா என்று தெரியவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் விலை மதிப்புள்ள சென்னை போன்ற நகரங்கள், அதுபோல நிலம் குறைவாக இருக்கின்ற இடங்களிலே, இந்தியாவுக்கே வழிகாட்டுகின்ற வகையிலே கூட்டுப் பட்டா முறையிலே அடுக்குமாடி வீடுகளை வழங்குவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிவாரணம் கேட்டதாகத் தெரியவில்லை. தீ விபத்தில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் இரண்டாயிரம்தான் நிவாரணமாக இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், பேரிடர் நிவாரண நிதியின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.2,000/-ஐ ரூ.5,000/-ஆக உயர்த்திக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மனித உயிர் இழப்பிற்கு ரூபாய் ஒன்றரை இலட்சமாக இருந்த தொகையை இன்றைக்கு ரூபாய் நான்கு இலட்சமாக உயர்த்திக் கொடுத்த தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர் தற்போதைய தலைவரைத் திருப்திபடுத்துவதற்காக எதை வேண்டுமானாலும் இங்கே பேச வேண்டாம் என்பதை

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஆகஸ்ட் 10

மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். திரு. சேகர்பாபு, நீங்கள் தகவல் கோரலில் கேட்டீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.*

3. பேரவையில் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் குறித்து 9-8-2016 அன்று உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் தெரிவித்த கருத்திற்கு மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மானியக் கோரிக்கை விவாதங்கள் எல்லாம் முடிந்த பின்பு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், கழிப்பறைகளினுடைய எண்ணிக்கை குறித்து அவருடைய சந்தேகத்தை இங்கே எடுத்துச் சொன்னார். அதற்கு ஒரு சின்ன விளக்கத்தைக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30-7-2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிக்கையில், "அனைத்துப் பள்ளிகளிலும் 100 விழுக்காடு கழிப்பறை வசதி மற்றும் குடிநீர் வசதி இருக்க வேண்டும் என்பதற்காகக் கணக்கெடுப்புப் பணி எனது தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்டு, கழிவறை வசதிகள் இல்லாத 2,057 பள்ளிகளுக்குக் கழிப்பறை வசதிகள் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆரம்ப கட்டத்தில் அரசுப் பள்ளிகளில் கழிப்பிடங்கள் பொது கழிப்பறையாகக் கட்டப்பட்டு, மாணவ மற்றும் மாணவியர் பயன்படுத்தும் வகையில் நடுச்சுவருடன் தனித் தனியாக நுழைவாயில்களுடன் அமைக்கப்பட்டது. மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் பொதுக் கழிப்பறைகளுக்குப் பதிலாக மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு தனித் தனியாகக் கழிப்பறைகள் கட்டுவது என முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் கழிப்பறை வசதி இருந்தும், 5,720 பள்ளிகளில் மட்டும் மாணவ/மாணவிகளுக்கென பொதுவான கழிப்பறைகள் மட்டுமே அமைந்து, தனித் தனியான கழிப்பறை வசதி இல்லாதிருந்தவை என்பது கண்டறியப்பட்டது. அவ்வாறாகக் கண்டறியப்பட்ட 5,720 பள்ளிகளுக்குக் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும், கூடுதலாக 5,112 கழிப்பறைகளும் கட்டப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் நடத்திய ஆய்வில் குறிப்பிட்டுள்ளதுபோல, மாணவ/மாணவியர்களுக்கென தனித் தனியாக கழிப்பறைகள் இல்லாதவை 5,720 பள்ளிகள் மட்டுமே என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

இதன்தொடர்ச்சியாகத்தான், 2016-2017 ஆம் ஆண்டும், பள்ளிகளில் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைக்கேற்ப அனைத்துக் கழிப்பறைகளும் 100 சதவீதம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் கூடுதல் கழிப்பறை வசதிகளை செய்து தருவதற்காகத்தான் 59.25 கோடி ரூபாயில் 4,339 கழிப்பறைகள் அமைத்துத் தரப்படும் என்று இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுமட்டுமல்லாது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டு கால நல்லாட்சியில், பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாத கழிப்பறைகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. கடந்த ஐந்தாண்டுகளில் அரசுப் பள்ளிகளில் உள்ள 10,776 கழிப்பறைகள் பழுதுபார்க்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், புள்ளிவிவரத்தில் எந்தக் குழப்பமும் இல்லை. முதற்கட்டமாக கழிப்பறையே இல்லாத 2,057 பள்ளிகளுக்குக் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இதன்விளைவாக அனைத்துப் பள்ளிகளிலும்

100 சதவிகித கழிப்பறை வசதிகள் அளிப்பது உறுதி செய்யப்பட்டது. பின்பு, இரண்டாம் கட்டமாக மாணவ/மாணவியருக்கென தனித் தனியாக கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தும் நோக்குடன் 5,720 பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், நடப்பாண்டில், 4,339 பள்ளிகளுக்குத் தேவைக்கேற்ப மாணவ/மாணவியர்களுக்குத் தனித்தனி கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

நெய்வேலி சட்டமன்றத் தொகுதியிலுள்ள நீர்நிலைகளைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். அதெல்லாம் இல்லை. (குறுக்கீடு) போதும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

முற்பகல் 11-05

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கு. பிச்சாண்டி, அதுகுறித்தெல்லாம் நான் பார்க்கிறேன், நீங்கள் உட்காருங்கள். அதையெல்லாம் தனியாக வந்து என்னிடம் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதென்ன சபையிலே? நீங்கள் எழுந்து வந்து என்னிடம் சொல்லுங்கள். திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களையும், மரியாதைக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களையும்*

வணங்குகிறேன். கடந்த வருடம் பெய்த கன மழையில் முதலில் பாதிக்கப்பட்டது கடலூர் மாவட்டம்தான். கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்திலே அதிகம் பாதித்தது எனது நெய்வேலி தொகுதி ஆகும். வெள்ளத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சபா. ராசேந்திரன், அவையின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.* Agenda-*வில் இருப்பதை மட்டும் நீங்கள் படியுங்கள். (குறுக்கீடு) 'நெய்வேலி சட்டமன்றத் தொகுதியிலுள்ள நீர்நிலைகளைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து' என்பதை மட்டும் நீங்கள் படியுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: Agenda-*வில் இருப்பதைத்தான் படிக்கிறேன். காரணத்தைச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காரணமெல்லாம் இப்போது சொல்ல வேண்டாம். பிறகு கேள்வி கேட்க அனுமதிப்பேன். அப்போது சொல்லுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி சட்டமன்றத் தொகுதியிலுள்ள நீர்நிலைகளைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

அறிக்கை

நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவாமூர், எலந்தம்பட்டு, சிறுவத்தூர், செம்மேடு மற்றும் விசூர் ஆகிய 5 ஏரிகளின் வரத்து வாய்க்கால்கள் மற்றும் மலட்டாறு-திருவாமூர் அணைக்கட்டுகள் ஆகியவை கடந்த 2012-2013 ஆம் ஆண்டில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட நீர்வள நிலவளத்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஆகஸ்ட் 10

திட்டம் பகுதி-I-ன்கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன. தற்போது, நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விசூர், பெரியக்காட்டுப்பாளையம், மேலிருப்பு மற்றும் கீழிருப்பு ஓடைகள், மேலிருப்பு மற்றும் கீழிருப்பு தடுப்பணைகள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஓடைகளைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தித் தேவையான இடங்களில் தடுப்புச்சுவர் (Gobian Wall) மற்றும் வடிகால் மதகுகள் அமைத்து புனரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கீழூர் சோழன் ஏரி மற்றும் கோரணாம்பட்டு பிள்ளையார் ஏரி ஆகியவற்றைப் புனரமைத்திட உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள நீர்வள நிலவளத் திட்டம் பகுதி-II-ன்கீழ் ரூ.54.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், சொல்லுங்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். அறிக்கையிலே தெரிவித்திருக்கின்ற விசூர், பெரியக்காட்டுப்பாளையம், மேலிருப்பு மற்றும் கீழிருப்பு ஓடைகள், மேலிருப்பு மற்றும் கீழிருப்பு தடுப்பணைகள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஓடைகளைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி தேவையான இடங்களில் தடுப்புச்சுவர் மற்றும் வடிகால் மதகுகளை அமைத்துத் தருகின்ற முயற்சியில் ஈடுபடுவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். மக்கள் பாதிப்படையாத வகையில் வருகின்ற மழைக்காலத்திற்கு முன்பாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன். அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற திருவாமூர், எலந்தம்பட்டு, சிறுவத்தூர், செம்மேடு மற்றும் விசூர் ஆகிய 5 ஏரிகளின் நீர்வரத்து வாய்க்கால்கள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன. அந்த ஏரிகளையும் தூர்வாரினால்தான் அந்தப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பும், வெள்ள அபாயம் நீங்குகின்ற வாய்ப்பும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கீழூர் சோழன் ஏரி, கோரணாம்பட்டு பிள்ளையார் ஏரி,

2016 ஆகஸ்ட் 10] [திரு. சபா. ராசேந்திரன்]

வெங்கடாம்பட்டு ஐயன் ஏரி, அமர்த்தல் ஏரி, கருக்கை கணக்கன் ஏரி, பேர்பெரியான்குப்பம் கோயில் ஏரி, மேல்கங்கையன்குப்பம் காசாம்பு ஏரி, வல்லம் கோயில் ஏரி, காட்டுக்கூடலூர் ஊராட்சி பெரிய ஏரி போன்ற ஏரிகளையும் தூர்வார வேண்டும். நிதிநிலை அறிக்கையிலே ரூ.140 கோடியை கடலூர் மாவட்டத்திற்கு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அறிவித்திருக்கிறீர்கள். அதிலே குறைந்தது ரூ.50 கோடியாவது நெய்வேலி தொகுதிக்கு ஒதுக்கி, மேற்கண்ட பணிகளை நிறைவேற்றித் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவாமூர், எலந்தம்பட்டு, சிறுவத்தூர், செம்மேடு மற்றும் விசூர் ஆகிய 5 ஏரிகளின் வரத்துக் கால்வாய்கள் கடந்த 2012-2013 ஆம் ஆண்டில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட நீர்வள நிலவளத் திட்டம் பகுதி-I-ன்கீழ் தூர்வாரப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. திருவாமூர் ஏரியில் 0.75 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏரியின் கரை பலப்படுத்தப்பட்டுள்ளது. வரத்துக் கால்வாய் 2 கிலோ மீட்டர் தூரம் தூர்வாரப்பட்டு, வாய்க்கால் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும், மதகுகள், உபரி நீர்ப்போக்கி, கலுங்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ரூ.18.04 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எலந்தம்பட்டு ஏரியில் 1.20 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தூர்வாரப்பட்டு, வாய்க்கால் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும், மதகுகள், உபரி நீர்ப்போக்கி, கலுங்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ரூ.8.62 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவத்தூர் ஏரியில் 2.80 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏரிக்கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வரத்துக் கால்வாய் 4.50 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளது. வாய்க்கால் சீரமைக்கப்பட்டுள்ளது; மதகுகள், உபரி நீர்ப்போக்கி, கலுங்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ரூ.56.41 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செம்மேடு ஏரியில் 0.60 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏரியின் கரை பலப்படுத்தப்பட்டுள்ளது. மதகுகள்,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஆகஸ்ட் 10

உபரி நீர்ப்போக்கி, கலுங்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ரூ.6.82 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முற்பகல் 11-10

விசூர் ஏரியில் 1.05 கி.மீ. தூரத்திற்கு ஏரியின் கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மதகுகள், உபரி நீர்ப் போக்கி, கலங்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் 17.86 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணிகள் மேற்கொள்ளப்பட்ட 5 ஏரிகளும் தற்போது நல்ல நிலையில் உள்ளன. ஏரிகளிலிருந்து மண் எடுத்துவரப்பட்டு, மலட்டாற்றின் இரு கரைகளும் 25 கி.மீ. நீளத்திற்கு பலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தேவையான இடங்களில் தடுப்புச் சுவர் மற்றும் வடிகால் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மலட்டாற்றின் குறுக்கேயுள்ள திருவாமூர் அணைக்கட்டில் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 6.54 கோடி ரூபாய் செலவில் சேதமடைந்த பகுதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தற்போது நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சென்ற ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விசூர், பெரியக்காட்டுப்பாளையம், மேலிருப்பு மற்றும் கீழிருப்பு ஓடைகள், மேலிருப்பு மற்றும் கீழிருப்பு தடுப்பணைகள் ஆகியவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஓடைகளைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி, தேவையான இடங்களில் தடுப்புச் சுவர் மற்றும் வடிகால் மதகுகள் அமைத்து புனரமைத்திட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கீழூர் சோழன் ஏரி மற்றும் கோரணாம்பட்டு பிள்ளையார் ஏரி ஆகியவற்றைத் தூர்வாரி, கட்டமைப்புகளைச் சீர்செய்து, வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரி புனரமைத்திட உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள நீர்வள நிலவளத் திட்டம் பகுதி-II-ன்கீழ் ரூ.54.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 10]

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்தத் திட்டங்கள் இந்த நிதியாண்டிலேயே, வருகின்ற மழைக்காலத்திற்கு முன்பாக நிறைவேற்றித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நபார்டு வங்கிக்கு இத்திட்டம் அனுப்பப்பட்டிருக்கிறது. நபார்டு வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவுடன் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.* Clarification *எல்லாம் ஒன்றும் கிடையாது. அவருக்கு விளக்கம் சொல்லித்தான் உட்கார்ந்துவிட்டார். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் வாய்ப்பில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார், அவ்வளவுதான். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதில், நீங்கள்*

மேற்கொண்டு clarification எல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) நேற்று நீங்கள் பேசியதற்குத்தான் அவர் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசாவின் மறு வடிவாய், (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளலாரின் அருள் வடிவாய், (மேசையைத் தட்டும் ஒலி), ஜான்சி ராணியின் மறு பதிப்பாய், (மேசையைத் தட்டும் ஒலி) வேலு நாச்சியாரின் வீரத் திருவுருவாய், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வழிநடத்தும் எங்கள் தங்கத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, எனது மானியக் கோரிக்கையை முன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 440, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2181, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1897, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களை, முழு நேர ஊழியர்களாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, செங்கமாரி துவக்கப் பள்ளியில் உள்ள அங்கன்வாடிக்குப் புதிய சமையலறை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 312, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறைமுகம் தொகுதியிலுள்ள மாநகராட்சி அரசுப் பள்ளிகளில் உள்ள சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 317, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியிலுள்ள சத்துணவுக் கூடங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 352, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சுயநிதிப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சத்துணவு மையங்களை சுகாதாரமாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 484, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதியிலுள்ள அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு உணவுக் கூடம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 507, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதி, இரணியம் ஊராட்சி, மூப்பனார் பகுதியில் சமுதாய நலக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 537, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் உள்ள பழுதடைந்த சத்துணவுக்கூட கட்டடங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 560, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விவசாயிகள் உற்பத்தி செய்யும் பாலை சத்துணவுத் திட்டத்தில் சேர்த்து குழந்தைகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 686, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியின் மையமான தாண்டிக்குடியில் அரசு ஆரம்ப சுகாதார மையம் அமைத்து உதவித் தொகை வழங்குவதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 811, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கூடங்களுக்குப் புதிதாக கான்கிரீட் கூரையுடன் கூடிய சமையலறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 851, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 910, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டத்திலுள்ள மங்களூர் ஒன்றியம், நல்லூர் ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் முதியோர் உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1217, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, இடைக்கோடு பேரூராட்சி, அம்பேற்றின்காலை ஊரில் உள்ள சத்துணவு மையத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1420, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், 0-6 மாதக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1439, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, ஒக்கக்குடி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1591, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி தொகுதியிலுள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் பொறுப்பாளர்களை நியமிக்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1681, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.*

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள திருநங்கைகளை வீடுகள்தோறும் சென்று அடையாளம் கண்டு கணக்கெடுத்து அவர்களுக்கு உரிய அடையாள அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1723, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.*

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களில் கான்கிரீட் மேற்கூரைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1790, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1830, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா, பேரூர், வெட்டுவானம் மற்றும் அம்பேத்கர் நகரில் உள்ள பால்வாடி (அங்கன்வாடி) பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1851, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமத்தில் பழுதடைந்த பால்வாடி கட்டடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1902, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் சத்துணவு மற்றும்

அங்கன்வாடி மையங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2218, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூடலூர், பந்தலூர் பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி, சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும், சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2650, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் காலியாக உள்ள சத்துணவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.11,77,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.*

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 418, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 441, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2182, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1879, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் ஓய்வூதியம் (OAP) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 318, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “அரசுப் பணி நியமனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணி இடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 389, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகள் நலத் துறையினை கணினிமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/-ல் மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/- ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 499, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு 40 சதவிகித பாதிப்பு இருந்தால் மின் மோட்டார் பொருத்திய ஸ்கூட்டர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 558, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "40 சதவிகித உடல் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 688, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி தொகுதியில், மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத்

2016 ஆகஸ்ட் 10] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

திறனாளிகளுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனி காப்பகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 801, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் கிராமங்களில் வசித்து வரும் மாற்றுத் திறனாளிகள் உதகை வந்து செல்ல சிரமமாக இருப்பதால் அவர்களுக்கு எளிதில் சலுகைகள் மற்றும் பயன்கள் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1001, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2016-2017 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற ஆயிரம் பெட்ரோல் ஸ்கூட்டர்களில், 50 ஸ்கூட்டர்கள் ஆற்காடு தொகுதியிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1227, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தனியார் நடத்தும் மன வளர்ச்சி குன்றிய இல்லங்களில் தகுதி அடிப்படையில் அனைத்து குழந்தைகளுக்கும் உணவு, உறைவிடம், கல்வி, உடை மற்றும் மருத்துவ வசதியை இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1398, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “காது கேளாதோர், கண் பார்வையற்ற, மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளின் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1440, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சை மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர், திருவையாறு வட்டங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1571, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1710, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாதவரம் தொகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1722, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.*

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய*

மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் உதவித்தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1762, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கான சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை, தகுதியுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1816, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதியில் மாற்றுத் திறனாளிகளின் உடல் விகிதாச்சாரம் அடிப்படையில் மாதாந்திர உதவித்தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1901, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2217, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், மந்தவெளிப் பகுதியில் வசிக்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2237, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதியில், புதுக்கோட்டை நகரில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2658, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளில் அரசு வழங்குகின்ற பொருட்களை மாற்றுத் திறனாளிகள் வீடுகளுக்குச் சென்று அரசு விநியோகிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,77,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 993 முதல் 1156 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

***திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் என்னும் சொல்லை உச்சரித்தவுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக சட்டமன்றப் பேரவை உறுப்பினர், திரைப்படக் கதை வசனம் தீட்டிய எழுத்தோவியர், சிறந்த பேச்சாளர், கவிச் சக்கரவர்த்தி, இலக்கியவாதி, 'முரசொலி' மூலம் உடன்பிறப்புக்களின் இதயங்களுள் என்றும் நடமாடுபவர், நாடகங்கள் படைத்தவர், நாட்டின் நடப்புகளை அன்றாட அறிக்கைகளாக விவரிப்பவர், புதினங்கள் புனைந்தவர் இப்படி அடுக்கடுக்காக அச்சொல்லுக்கு விளக்கம் பெருகும். எங்களின் குடும்பத் தலைவர், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சபையில் எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லும் இளைஞர்களின் எழுச்சி நாயகர், தந்தையின் சொல்படி நடப்பவர், கட்சியின் விதிப்படி நடப்பவர், தமிழகம் முழுவதும் நடந்தவர், மக்களின் இதயத்தில் அமர்ந்தவர், ஏழைகளின் வீடுகளுக்கே சென்ற அரசியல் வரலாறு, (மேசையைத் தட்டும் ஒலி) படித்தவர் முதல் பாமரர் வரை, தொழிலாளி முதல் முதலாளி வரை அனைவரின் நிறை, குறைகளை அறிந்தவர், நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர், இச்சபையின் எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-20

இந்தச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து, 21,000 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு தளபதியார்

அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளரும் எனது தந்தையுமான திரு. என். பெரியசாமி அவர்களுக்கும், தூத்துக்குடி மாநகர திராவிட முன்னேற்றக் கழக செயல் வீரர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களுக்கும், தூத்துக்குடி தொகுதி மக்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996 முதல் 2001 வரை தூத்துக்குடி மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், 2001 முதல் 2006 வரை மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், 2006 முதல் 2011 வரை தமிழக அமைச்சராகவும், இந்த முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிட வாய்ப்பு தந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகப் பொருளாளர் தளபதியார் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சமூக நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்க விரும்புகிறேன். சமூக நலத் துறை என்பது ஏழை, எளிய பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், ஆதரவற்றோர், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட திருநங்கைகள் ஆகியோரின் வாழ்வாதாரத்திற்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிவரும் துறையாகும். பெண்கள் வளர்ச்சியில் அக்கறை கொண்ட எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அரசின் பல்வேறு துறைகளில், வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு வழங்கி, பெண்களுக்கு சமுதாயத்தில் பொருளாதார அந்தஸ்து கிடைக்கச் செய்தார்.

அடுத்ததாக, பெண்களுக்கு தகப்பனாரின் சொத்தில் சம உரிமை உண்டு என்று சொத்துரிமை தந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலில் தமிழகக் காவல் துறையில் பெண் காவலர்களைப் பணியமர்த்தியவரும் கலைஞரே ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்தது கலைஞரே ஆவார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகளிருக்கு அதிகமான சலுகைகளையும், இட ஒதுக்கீட்டையும் அவர்களுடைய ஆட்சியில் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருவறை முதல் கல்லறை வரை (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வயதினருக்கும், அனைத்துப் பிரிவினருக்கும் நலத் திட்ட உதவிகளைக் கொடுத்து, தமிழகத்தில் 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று புனித ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்காக ஒவ்வொரு திட்டத்தின் வாயிலாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகமான சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் வேறு ஒன்றும் சொல்லவில்லை. பதில் சொல்கிறேன் என்றுதானே சொன்னார்கள்?

திருமதி பி. கீதா ஜீவன்: தலைவர் கலைஞர் அவர்கள் செயல்படுத்திய திட்டங்களைத்தான் நான் சொல்கிறேன். அதை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மைக்கை விட்டு சற்றுத் தள்ளி நின்று பேசுங்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொட்டில் குழந்தைத் திட்டம், அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற,

நாடாளுமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வித்திட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் திட்டங்களையும் கொடுத்தவர். (குறுக்கீடுகள்) மேலும், உள்ளாட்சித் துறைகளில் 50 சதவீத இட ஒதுக்கீட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 11-25

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத் தலைவர்களுக்கே எடுத்துக்காட்டாக, மகளிருக்கு கழகத்தில் 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை ஒதுக்கித் தந்தவர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி அமைப்புகளிலும் மகளிருக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களே பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது செய்திருக்கக்கூடிய அந்தப் பணிகளை, அந்தச் சாதனைகளைத்தான் வரிசைப்படி எடுத்துச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதில் ஏதாவது தவறு இருந்தால், ஏதாவது உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்கிறார் என்று சொன்னால், அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும். நான் வேண்டாம் என்று மறுக்கவில்லை. எனவே, அவரே சொல்லியிருக்கிறார். இங்கேகூட, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கோரிக்கை வைக்கிறபோது அமைச்சர் பதில் சொல்ல வேண்டியதில்லை. உறுப்பினர் கேள்வி கேட்டால், பதில் சொல்ல வேண்டும்

என்று ஒரு விளக்கத்தை இங்கே தந்திருக்கிறார்கள். அது பதிவாகியிருக்கிறது. எனவே, அதனை உணர்ந்து, ஏதாவது கேள்வி கேட்டால், பிரச்சினைகளை சொன்னால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும், நாங்கள் வேண்டாம் என்று மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மத்திய அரசு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை நிறைவேற்றியபோதும், அது தமிழகத்தில் செயல்படுத்தப்படாமல் இருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1996 ஆம் ஆண்டு முதன்முதலில் பெண்களுக்கு 33 சதவிகிதம் (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீடு வழங்கி உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்தியதன்மூலம்தான், என்னைப் போன்ற பெண்களுக்கு அரசியல்மூலம் மக்கள் பணி ஆற்ற வாய்ப்பு கிடைத்தது. சமூக நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், தலைவர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு... (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் தவறான கருத்தை தயவுசெய்து பதிவு செய்ய வேண்டாம். உள்ளாட்சித் தேர்தலில் 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பது பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையிலே முதன்முதலில் cabinet-ல் கொண்டு வந்து approval கொடுத்தவரே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலேதான் subsequent-ஆக நீங்கள் ஆட்சிக்கு வந்து அமல்படுத்தினீர்கள். (குறுக்கீடுகள்) எனவே, விதை போட்டது நாங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டு வந்திருக்கலாம். ஆனால், உள்ளாட்சித் தேர்தலை உங்களுடைய ஆட்சியில் நடத்தவில்லை. முதன்முதலில்*

1996-ல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்து, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் உள்ளாட்சித் தேர்தலில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்து உள்ளாட்சித் தேர்தலை நடத்திக் காட்டியது. அந்தப் பெருமை தி.மு.க. ஆட்சிக்குத்தான் உண்டு, கலைஞருக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகளிருக்கான இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த காரணத்தினால்தான் நீங்கள் பின்னர் அதனடிப்படையில் தேர்தலை நடத்தினீர்கள். சட்டத்தைக் கொண்டு வந்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 33 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கடுத்தபடியாக, 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டையும் கொண்டு வந்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த தேர்தலிலே, 50 சதவிகித பெண்களுக்கு அம்மா வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நடந்து முடிந்த 2011 தேர்தலிலே 50 சதவிகிதத்திற்கும் மேலாக, அதாவது 12 மேயர்களில், 7 மேயரை மகளிருக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆக 7 மேயர் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆகவே, மகளிரைப் பொறுத்த மட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், கூடுதலாக இன்றைக்கு மகளிருக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-ல் கொண்டு வந்தது நீங்கள்தான். ஆனால்,*

1996 வரை ஏன் நடத்தாமல் இருந்தீர்கள்? அதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு பலமுறை நடத்திட வேண்டும் என்று நினைவுபடுத்திக் கொண்டிருந்த நிலையில், ஏன் நடத்த முன் வரவில்லை? அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன்.* Cabinet-ல் *அந்த 33 சதவிகித இட ஒதுக்கீடு... (குறுக்கீடுகள்) அந்த* minutes-ஐ *தேவை ஏற்பட்டால் நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து மறைத்திட வேண்டாம். (குறுக்கீடுகள்) அதை மறைக்க வேண்டாம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *நாங்கள் நன்றாக சமைத்து வைத்தோம். நீங்கள் என்ன செய்தீர்கள்? அதை சாப்பிட்டீர்கள். அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இருந்தபோதுதான் பஞ்சாயத்துகளுக்கான சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்டன. 1994-ல் தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது ஆட்சியில் இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்தச் சட்டங்களை எல்லாம்* pass *செய்தார்கள். 1996-ல் ஆட்சி மாற்றம் வந்ததற்கு பிறகு...(குறுக்கீடு) அது* routine process *தான். ஆனால் திட்டத்தைக் கொண்டு வந்தது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி),*

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ராஜ் சட்டம் என்பது உங்களால் கொண்டு வரப்பட்டது அல்ல. நாங்களும் கொண்டு வரவில்லை. மத்தியிலே, ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது கொண்டு வந்த திட்டம். அதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். அதற்கு* Cabinet approval *கொடுத்திருக்கலாம். ஆனால், அதை நிறைவேற்றியது தி.மு.க. ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த விவாதம் போதும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இந்த விவாதம் போதும். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விளக்கமாகச் சொன்னேன். பஞ்சாயத்து ராஜ் சட்டம் மத்தியில் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது கொண்டு வந்ததுதான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதற்குப் பின்னால் பெண்களுக்காக 33 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு எல்லா முயற்சிகளும் எடுத்து, எல்லாவற்றையும்* Cabinet-ல் pass *செய்து, நடைமுறைக்குக் கொண்டு வந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதற்குப் பிறகு ஆட்சி மாறியது. அதை வைத்துத்தான் நீங்கள் தேர்தலை நடத்தினீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஆட்சி செய்யும்போது, நீங்கள்தான் நடத்த முடியும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், இந்த விவாதம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்)*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் அமைச்சர் அவர்கள் தவறான தகவலைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். 33 சதவிகித இட ஒதுக்கீடு வந்ததற்குப் பிறகு, நீங்கள் அதை நிறைவேற்ற முன்வரவில்லை. நீங்கள் அமைச்சரவையில் அதை*

pass செய்திருக்கலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அதை நிறைவேற்றித் தந்தது தி.மு.க. ஆட்சிதான். 33 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீட்டைத் தந்து, முதலில் தேர்தலை நடத்தியது தி.மு.க. ஆட்சிதான். மறுபடியும், மறுபடியும் தவறான தகவலைப் பதிவு செய்து கொண்டிருந்தால், நானும் மறுபடியும், மறுபடியும் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் தவறான கருத்தை தயவுசெய்து பதிவு செய்திட வேண்டாம். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: 1991-1996 ஆம் ஆண்டு அப்போது மாண்புமிகு அம்மாவினுடைய தலைமையின்கீழ் நான் அமைச்சராக இருந்து பணியாற்றினேன். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அந்த minutes-ஐ நான் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் காண்பிக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்கான 33 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, அதை cabinet-ல் approval-க்குக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில் நடவடிக்கை எடுத்தது அம்மா அவர்கள்தான். அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். அறுசுவை உணவை நன்றாக சமைத்து வைத்தோம். நீங்கள் சாப்பிட்டீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராமசாமி, உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான், உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய பிறகு, நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். திரு. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதரப்பிலும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று இருக்கிறது. பஞ்சாயத்து ராஜ் சட்டம், ராஜீவ் காந்தி அவர்களால்தான் கொண்டு வரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஆளுங்கட்சித் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். யாரும் செய்யவில்லை; இதைச் செய்தது ராஜீவ் காந்தி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராகப் பதவியேற்று, ஆட்சிசெய்தபோது, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தரக்கூடிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று 1994 ஆம் ஆண்டு மத்திய அரசு கூறியது. இதே அவையில் அது விவாதிக்கப்பட்டு, அந்த விவாதத்தின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்று இட்ட வித்துதான் இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் சபை வரை பரவியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கான 33 சதவிகித இட ஒதுக்கீட்டை பற்றி உலக நாடுகளுக்கே உணர்த்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றும், இன்று நாடாளுமன்றத்தில் மகளிருக்கான 33 சதவிகித இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறும் நிலையில் உள்ளதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்ட வித்துதான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது என்பதைச் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, நீங்கள் உட்காருங்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காகவும், ஏழைப் பெண்களின் திருமண உதவிக்காகவும் தொடங்கப்பட்ட திட்டம்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம். இத்திட்டம் பெண் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட திட்டம் என்றால் அதை யாரும் மறுக்க இயலாது.**

முற்பகல் 11-35

திருமண நாளன்று முக்கிய சேவிகா, அதாவது விரிவாக்க அலுவலர் நேரடியாகச் சென்று திருமணத்தைப் பார்வையிடுவதில்லை. ஆகையால், தகுதியுள்ள ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையும், தாலிக்குத் தங்கமும் ** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இதன்மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அங்கே மனுக்கள் வரப்பெற்று, முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, தகுதியுள்ளவர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் அதிகப்படியான மனுக்கள் வரப்பெற்றதால், இதர திருமண உதவித் திட்டங்களில் எந்தவகையிலாவது பயனாளிகளைச் சேர்த்து அவர்களைப் பயனடைய வைக்க வேண்டுமென்று அதிகாரிகள் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்துவருகிறார்கள். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் மட்டுமல்ல, அனைத்துத் திருமண உதவித் திட்டங்களின்கீழும் சரியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்காவது தவறு நடைபெற்றிருப்பதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்களேயானால், தக்க நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது. அது முறையாகப் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. ** மாண்புமிகு உறுப்பினர் அதை விளக்க வேண்டும். இல்லாவிட்டால் அதற்கான ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசினால் பரவாயில்லை. அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு திட்டத்திற்கு குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலே அரசு செலவு செய்கின்றது. அதில் ஏதாவது தவறு இருந்தால், சுட்டிக்காட்டினால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சேரவில்லை என்று மாற்றிக்கொள்ளலாம். ஒன்றும் பிரச்சினையில்லை. இது உண்மையான தகவல். என்னுடைய தொகுதியில் கலைஞர் கொண்டு வந்த திட்டம் இப்படி இருக்கிறதே என்ற ஆதங்கத்தில்தான் பேசுகிறேன். அமைச்சர் ஆய்வு செய்தால் போதும், சரியாகிவிடும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கூற்றின்படி, ஆதாரம் இருந்தால் அதை அவைக் குறிப்பில் ஏற்றலாம். ஆதாரம் இல்லையென்றால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது ஆதாரம் இல்லாதததுதான். உறுப்பினர் அதை என்னிடம் கொண்டு வந்து கொடுக்கவில்லை. எனவே, திருமதி கீதா ஜீவன் அவர்கள் பேசிய அந்தப் பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், 9,734 பட்டயப் படிப்பு படித்த மற்றும் பட்டதாரிப் பெண்களும், 12,731 பட்டதாரி அல்லாத மகளிரும், ஆக மொத்தம் 22,464 பயனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்ய தங்க நாணயமும் திருமண நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசு நிதி ஒதுக்கீடு செய்தது 80 கோடியே 50 இலட்சம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் 2,116 பட்டயம் மற்றும் பட்டதாரிப் பெண்களுக்கும், 2,342 பட்டதாரி அல்லாதவர்களுக்கும் ஆக மொத்தம் 4,458 பயனாளிகள் திருமாங்கல்யத் திட்டத்தின்கீழ் பயனடைந்திருக்கிறார்கள். தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு மட்டும் ரூ.16 கோடியே 44 இலட்சம் நிதியினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது எதிர்க்கட்சியின் கடமை. ஆகவே, நான் தெரிவித்த கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினாலும் பரவாயில்லை. தயவுசெய்து அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தலைவர் கலைஞர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அதுகுறித்து நீங்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இ-சேவை மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்கிற விதிமுறையை, நேரடியாக சமூக நலத் துறை அலுவலகத்தில் விண்ணப்பம் செய்யலாம் என்று மாற்றி, ஏழையெளிய மக்களின் நலனுக்காக நடைமுறையை எளிதாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ்...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எந்த விதியின்படி இதுபோன்று எழுந்துநின்று பேச முற்படுகிறீர்கள் என்றே தெரியவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு திருமண நிதி உதவித் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீட்டை மட்டும்தான் செய்தது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசு, திருமண உதவித் திட்டத்தோடு பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கமும், ரூ.50,000/- திருமண உதவித் தொகையையும், (மேசையைத் தட்டும் ஒலி) பட்டப் படிப்பு படிக்காத பெண்களுக்கு 4 கிராம் தங்கமும், ரூ.25,000/- திருமண உதவித் தொகையையும் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மகளிர் நலனில் அக்கறை கொண்டிருக்கிறது. 23-5-2016 அன்று

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இரண்டாவது முறையாகத் தொடர்ந்து முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அத்தனைத் திட்டங்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும், 4 கிராம் தங்கம் என்று இருந்தது 8 கிராம் தங்கமாக உயர்த்தித் தரப்படும் என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 6-வது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் இட்ட முதல் கையெழுத்து 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம் என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, சமூக நலத் துறையின்கீழ் குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 26-10-2006 அன்று கலைஞர் அவர்கள் ஆட்சியில் நடைமுறைக்கு வந்தது. அதுமட்டுமல்லாமல், பாதுகாப்பு அலுவலர் என்ற பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, பெண்கள் குடும்ப வன்முறைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் அந்தப் பணியிடமும் காலிப் பணியிடமாக இருப்பதனால், குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய தாயார் சிவகாமி அம்மையாரின் பெயரைச் சூட்டி, பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் பெருமைப்படுத்தினார். சிவகாமி அம்மையாரின் பெயரை கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் தேடினேன், கிடைக்கவில்லை. அவருடைய பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே, சிவகாமி அம்மையாரின் பெயரை மீண்டும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் பயனடைய தற்போது இ-சேவை மையத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிலையிருப்பதால், ஆண்டுக்கு சுமார் 2,000 விண்ணப்பங்கள் பெறப்பட்ட வேலூர் மாவட்டத்தில், இந்த ஆண்டு 200 விண்ணப்பங்கள் மட்டுமே வந்துள்ளதாகத் தெரிய வருகிறது. அதிலும் உரிய ஆவணங்கள் இல்லாததால் பல விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஆகவே, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் அதிகமானோர் பயனடைய, ஏற்கெனவே இருந்ததுபோல் பொதுமக்கள் நேரிடையாக ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பிக்க இந்த அரசு அனுமதி வழங்க வேண்டும்.

தமிழகத்தில் சமீபகாலமாக குழந்தைகள் கடத்தப்படுவதும், பெண்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையும் காணப்படுவது பெண்களின் கல்வி வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படக்கூடிய நிலைக்கு வித்திட்டுவிடும். ஆகவே, பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையில் 13 அம்சத் திட்டத்தை வெளியிட்டது இந்த அரசு. அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது? அந்த 13 அம்சத் திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்த அரசு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் சமையலறை, வைப்பறைகள் கட்டிக் கொடுக்க வேண்டும். குக்கர், எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு சமையலறைகளைக் கட்ட இந்த அரசு அனுமதிக்க வேண்டும்.

முற்பகல் 11-45

பெண்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கவும், அவர்களைக் கந்து வட்டிக்காரர்களிடமிருந்து மீட்டெடுக்கவும் தலைவர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கினார்கள். 2006-2011 ஆம் ஆண்டுவரை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, சுய உதவிக் குழுக்கள் தமிழகத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் வித்திட்டார்கள். ஆனால், தற்போதைய ஆட்சியில், சுய உதவிக்

குழுக்கள் கடன் பெறுவதற்காக, மீண்டும், Microfinance Corporation என்கின்ற தனியார் நிதி நிறுவனத்திடம், அதாவது வட்டி நிறுவனத்தின் பிடியில் மாட்டிக் கொண்டிருக்கின்றன. அதுவே நிதர்சனமான உண்மையாகும். ஆகவே, பெண்களின் வாழ்வில் வளர்ச்சி ஏற்படவில்லை, பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை. அரசு சுய உதவிக் குழுக்களை ஊக்குவித்து, சுழல் நிதி மானியம், சுழல் நிதி, தொழிற்கடனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மகளிர் சுய உதவிக் குழுக்களை 1991 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் துவக்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதைப்பற்றி நான் பலமுறை சொல்லிவிட்டேன். அதாவது, 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களை துவக்கினார்கள். அதன் பின்னர், அந்த சுய உதவிக் குழுக்கள் விரிவாக்கப்பட்டன.

அதேபோல், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, கடந்த ஐந்து வருடங்களில் 26 ஆயிரத்து 460 கோடி ரூபாய் வங்கிக் கடனை சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மொத்தம் 6 இலட்சத்து 14 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதில் 92 இலட்சத்து 84 ஆயிரம் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இந்த சுய உதவிக் குழுக்களுக்கு 26 ஆயிரத்து 460 கோடி ரூபாயை வங்கிக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய ஐந்தாண்டுக் கால ஆட்சியில்,

சுய உதவிக் குழுக்களுக்கு நீங்கள் கொடுத்த வங்கிக் கடன், ரூபாய் 9 ஆயிரத்து 838 கோடிதான். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு முழுமையாக வங்கிக் கடனை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் பேசுங்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்குப் பதில்... (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் பெண் குழந்தைகளின் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசால் ரூ.5 கோடியே 67 இலட்சத்து 35 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2 இலட்சத்து 78 ஆயிரத்து 911 பெண் குழந்தைகள் பயனடைந்தார்கள். ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 3 கோடியே 74 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2 இலட்சத்து 47 ஆயிரத்து 339 பயனாளிகள் மட்டுமே பயன்பெற்றிருக்கிறார்கள். 2016-2017 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், பெண் குழந்தைகளின் பாதுகாப்புத் திட்டத்திற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூ.140.50 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இதயத்தில் உதித்த திட்டமாகும். பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதிலும், அதிக நிதி ஒதுக்கீடு செய்வதிலும் எங்களுடைய தலைவிக்கு நிகர் எங்கள் அம்மாதான் என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடனைப் பெறுவதற்காக, தனியார் நிதி நிறுவனத்திடம், வட்டியின் பிடியில் மாட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சுய உதவிக் குழுக்களில் இருக்கின்றவர்களுக்கே பயிற்சிகளைக் கொடுத்து, 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை வங்கியில் முகவர்களாக நியமித்திருக்கிறார்கள். அந்த வங்கியின்* transaction *முழுவதையும் அவர்களே பார்க்கின்றார்கள். உறுப்பினர் சொன்னது மாதிரியான சூழ்நிலையெல்லாம் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தைகளின் பாதுகாப்புத் திட்டத்திற்காக இந்த ஆட்சியில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதனால், நிதி ஒதுக்கீடு அதிகமாகத்தான் தெரியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

13-8-2007 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில், அரசு இல்லங்களில் உள்ள ஆதரவற்ற பெண்கள் உயர் கல்வி பெறுவதற்காக, இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் 40 பெண் குழந்தைகள் ஆண்டுக்குப் பயனடைகிறார்கள். அந்த எண்ணிக்கையை நூறாக உயர்த்த இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, அரசு கலைக் கல்லூரி மற்றும் இளநிலை பட்டதாரி கல்வியியல் கல்லூரியையும் ஆதரவற்ற பெண்களின் நலனுக்காகத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, அங்கன்வாடி மையங்கள். எதிர்கால சந்ததியரான குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு, 2006 முதல் 2011 ஆம் ஆண்டுவரை கலைஞர் ஆட்சியில் சுமார் 11,762 புதிய அங்கன்வாடி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஏழை எளிய குழந்தைகளின் நலன் பாதுகாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, இதுவரை, இப்போதைய அரசால் புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்கப்படவில்லை. தேவையுள்ள இடங்களில் புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்க இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சத்துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களாகப் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்கள் ஆக்க வேண்டும்.

அதைப்போல, காலியாகவுள்ள அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களை நிரப்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவரான திருநங்கைகளின் நலனுக்காகவும், சமூகப் பாதுகாப்பிற்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் 2008 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்களில் பணிபுரிகின்ற அலுவலர்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அங்கன்வாடிப் பணியாளர்களுடைய சங்கங்கள் வழக்குகள் தொடுத்திருக்கின்றன. அவ்வழக்குகள் முடிவுறுகின்ற தருவாயில் இருக்கின்றன.* Argument over, judgement reserved.

வழக்குகள்மீது தீர்ப்பு வரும்பட்சத்தில், மிக விரைவில் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவரான திருநங்கைகளின் நலனுக்காகவும், சமூகப் பாதுகாப்பிற்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் 2008 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முறையாக கலைஞர் ஆட்சியில் திருநங்கைகள் நல வாரியம் அமைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகளுக்கு தொழிற் பயிற்சி, உயர் கல்வி பயில வழிவகை, தொழில் தொடங்க மானியம், கல்வி உதவித் தொகை, வீட்டுமனைப் பட்டா, குடும்ப அட்டை, குடியிருக்க வீடுகள், தையல் இயந்திரம், சுய உதவிக் குழுக்கள் என பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, அவர்களுக்கு சமுதாயத்தில் மரியாதை கிடைக்கச் செய்தவர் எம் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, திருநங்கைகள் நல வாரியம் செயல்படாமல் உள்ளது. அவ்வாரியத்தைச் செயல்பட வைத்து, திருநங்கைகளின் வாழ்வில் ஒளியேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூக நலத் துறையால் வழங்கப்பட்டுள்ள செயல்முறைத் திட்டத்தில்-Performance Budget-ல் 2013-2014 முதல் மூன்று வருடங்களாக ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படவில்லை, எந்தவொரு இலக்கையும் அடையவில்லை என்பதை இங்கே பதிவு செய்து, திருநங்கைகள் வாழ்வில் ஒளியேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையைப் பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக தனியாக ஒரு துறையை உருவாக்கி, அந்தத் துறையை முதலமைச்சரே தனது நேரடிப் பார்வையில் வைத்து, அத்துறையின் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறு திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டன. ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், 2010 ஆம் ஆண்டு தனித் துறை உருவாக்கப்பட்டது குறித்து எங்கும் காணவில்லை. ஆகவே, வரலாற்றை மறைப்பதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. தயவுகூர்ந்து அதை நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் சேர்த்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் பாலினத்தவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மகத்தான திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மூன்றாம் பாலினத்தவர் தொடர்ந்து விடுத்த வேண்டுகோளை ஏற்றும், திருநங்கைகள் மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற உச்ச நீதிமன்ற ஆணையைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்கள் 6-11-2015 அன்று தனி அரசாணை வெளியிட்டு, திருநங்கைகள் மற்றும் திருநம்பியர்கள் மூன்றாம் பாலினர் என்று அறிவித்து ஆணையிட்டார்கள்.*

சமீபத்தில் நடத்திய சிறப்புக் கணக்கெடுப்பின்படி, 2016 ஆம் ஆண்டுவரை 4,987 நபர்கள் மூன்றாம் பாலினத்தவர் என்று கண்டறியப்பட்டு, இவர்களில் 4,518 நபர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, 1,659 குடும்ப அட்டைகளும், 1,115 வீட்டுமனைப் பட்டாக்களும், (மேசையைத் தட்டும் ஒலி) 750 காப்பீட்டு அட்டைகளும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் பாலினத்தவர் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளவும், பொருளாதார ரீதியாக தங்களை உயர்த்திக் கொள்ளவும் 442 மூன்றாம் பாலினத்தவருக்கு 51 சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவீதம் அரசு மானியமாக மொத்தம் ரூ.55,45,000 நிதி ஒதுக்கீட்டில் வங்கிக் கடனாக ஒரு கோடியே 61 இலட்சம் ரூபாய் என மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மூன்றாம் பாலினத்தவர்களுடைய பொருளாதார உயர்விற்காக 2 கோடியே 16 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு எங்களுக்கு வழங்கப்பட்ட செயல்முறைத் திட்டத்தில் பக்கம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் பதிலுக்குக் கூடுதல் தகவல்தான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) கூடுதல் தகவல்கூட சொல்ல விடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், முதன்முதலாக மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியே இல்லாத கடனைக் கொடுத்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரச் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அளவிலும், அகில உலகத்திலும் இந்தத் திட்டம் இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதன்முதலில் மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் வழங்குகின்ற ஒரு திட்டத்தை 2001-ல் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 2011-ல் அதற்கு வட்டியே வேண்டாமென்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) எந்த வட்டியும் வேண்டாமென்று, குறிப்பிட்ட காலத்தில் கட்டிக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள்.*

அடுத்து, மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் வாங்கும் தகுதியை அதிகப்படுத்துவது குறித்து. இதற்கு முன்னர், இவர்களின் ஆட்சியில் மாற்றுத் திறனாளிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கடன் வாங்க வேண்டுமென்றால் ரூபாய் 250 பங்கு முதலீடு கட்ட வேண்டும்; அதைக் கடனாகக் கொடுத்தார்கள். மேலும் 2,500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரைதான் மாற்றுத் திறனாளிகள் கடன் வாங்க முடியும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்

இன்றைக்கு அந்த மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் வாங்கும் தகுதியை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள் கடன் வாங்க வேண்டுமென்றால் அவர்கள் எதுவும் கொண்டுவர வேண்டாம். அவர்கள் கடன் வாங்க செலுத்தப்பட வேண்டிய பங்கு முதலீட்டுக் கட்டணமான 2,500 ரூபாயையும் அம்மாவே மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வாங்க மானியமும் கொடுத்து, 50,000 ரூபாய் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் வாங்கும் சக்தியை அதிகரித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அதற்கடுத்து, அகில இந்தியாவிலேயே… (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள், 29 மாநிலங்களிலேயும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக என்ன செய்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்) 29 மாநிலங்களைவிட, தமிழ்நாட்டிலேதான் அதிகமான மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் கொடுத்தார்கள் என்று சொல்லி, ஜனாதிபதி அவர்கள் சென்ற ஆண்டு தமிழ்நாட்டை கௌரவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களும் பரிசு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று மாற்றுத் திறனாளிகளுக்கு இவ்வளவு கடன் எங்கேயும் கொடுக்கப்படவில்லை. 116.57 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 117 கோடி ரூபாய் வட்டியே இல்லாமல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.*

மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் வாங்கும் சக்தியைக் கொடுத்து, 2,500 ரூபாய் மானியத்தையும் கொடுத்து, ஒன்றுமே அவர்கள் கொண்டுவராவிட்டாலும், அவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் கடன் கொடுத்தார்கள். எனவே, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒளியேற்றிய தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும்

ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மாற்றுத் திறனாளிகளுக்கு என்று தனி துறையை அவர்கள் ஆட்சியில் ஏற்படுத்தினார்கள் என்றும், அதை Policy Note-ல், அதாவது கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பதியவில்லை என்ற தவறான தகவலை இங்கே அவையில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறார். 1993-ல்தான் மாற்றுத் திறனாளிகளுக்கு என்று தனி இயக்குநரகத்தை, Directorate-ஐ உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து 1994-ல், எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி, மாற்றுத் திறனாளிகளுக்கு என்று தனி கொள்கையை உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகமான உதவிகள் அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உள்ளாட்சித் துறையிலே, தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள் கடந்த தி.மு.க. ஆட்சியில் 2006-2007 ஆம் ஆண்டு முதல் 2010-2011 வரை, ஐந்து ஆண்டுகளில், 6,459 மாற்றுத் திறனாளிகளுக்கு 32 இலட்சம்

ரூபாய்தான் வழங்கப்பட்டது. 14,081 மாற்றுத் திறனாளிகளுக்கு 4.87 கோடி ரூபாய் செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியில், 2011-2012 முதல் 2015-2016 வரையிலான 5 ஆண்டுகளில் 13,442 மாற்றுத் திறனாளிகளுக்கு 1.33 கோடி ரூபாய் பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 21,623 மாற்றுத் திறனாளிகளுக்கு 8.34 கோடி ரூபாயில் உபகரணங்கள், கருவிகள் வழங்கப்பட்டன. நீங்கள் வழங்கியது 4.87 கோடி, மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியது இரண்டு மடங்கு, 8.34 கோடி ரூபாய். ஆகவே, மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரையில் அதிகமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் வழங்கப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிக்கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர், கொள்கை விளக்கக் குறிப்பினைத் தொட்டுக்கூடப் பார்க்காமல், படித்துப் பார்க்காமல் இங்கே பேசிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடுகள்) கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் மூன்றாம் பாலினத்தவருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு வழங்கி இருக்கிற திட்டங்களை, கொடுத்திருக்கிற சட்டப் பாதுகாப்பை, ஒதுக்கீடு செய்த நிதியைப் பற்றி 50, 51, 52 மற்றும் 53 ஆம் பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) இருங்கள், அமைதியாக இருங்கள். இந்தியாவிலேயே முதன்முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான், 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை வழங்குகிற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலமாக 954 மூன்றாம் பாலினத்தவர்கள் நிதிப் பயனை அடைந்து வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்திற்காக. . . (குறுக்கீடுகள்) இருங்கள். 2016-2017 ஆம் நிதியாண்டில் 220 இலட்சம் ரூபாயை மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியது அவர்கள்தான் என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 1,083 மோட்டார் பொருத்திய ஸ்கூட்டர்களைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் பாலினத்தவர்களை பொது மனிதர்களைப்போல ஓட வைத்தவர், இயங்க வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல, மாற்றுத் திறனாளிகள். . . (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். நீங்கள்தான் சாதித்தேன் என்று சொல்லாதீர்கள், உட்காருங்கள். 60 சதவிகிதம் ஊனமுற்றவர்களாக இருந்தால்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. (குறுக்கீடுகள்) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊனத்தினுடைய அளவை 40 சதவிகிதமாக குறைத்திருக்கின்றார்கள். எனவே, 40 சதவிகிதம் ஊனம் இருக்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கும், அரசு வழங்கக்கூடிய உதவிகள் அனைத்தும் கிடைக்கும் என்கிற ஆணையைப் பிறப்பித்திருக்கின்றவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். இப்படியெல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கின்றார்கள். எல்லா அமைச்சர்களும் ஏன் பேசுகின்றார்கள் என்று கேட்க முடியாது. அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பு வாய்ந்தவர்கள். ஆகவே, அமைச்சர்கள் விளக்கம் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே, நீங்கள் அதையெல்லாம் கேட்க முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 12-05

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை 1993-ல் உருவாக்கப்பட்டது என்பது கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொன்னார். என் கையில் இருப்பது கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. அதன் முதல் பக்கத்தில் முன்னுரையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது; தலைமைச் செயலகத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என்ற தனியொரு நிருவாகத் துறை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது என்று அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, சமூக நலத் துறையின்கீழ் தனி இயக்குநர்தான் கடந்த காலங்களில் இருந்து வந்தார்கள். ஆனால், 2010 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு தனிச் செயலாளரை நியமித்தது, தி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, உடல் ஊனமுற்றோர் என்ற பிரிவில்தான் அது செயல்பட்டு வந்தது. ஆனால், அந்தப் பெயரை மாற்றுத் திறனாளி என்று மாற்றிய பெருமையும் தி.மு.க.வின் தலைவர் கலைஞர் ஆட்சிக்குத்தான் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன். (குறுக்கீடுகள்) இல்லை, அவையெல்லாம் அவைக் குறிப்பில் வராது. நீங்கள் அதனைப் பதிவு செய்யாதீர்கள், உட்காருங்கள். அது அவைக் குறிப்பில் வராது. கவனியுங்கள், மாண்புமிகு அமைச்சர்களாக இருந்தாலும் அல்லது இரண்டு பக்கத்திலுமுள்ள உறுப்பினர்களாக இருந்தாலும் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் உங்களுக்குள்ளேயே பேசிக்கொண்டால் இங்கு எதற்கு சபாநாயகர்? என்னைப் பார்த்துப் பேசுங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் அனைத்துவகையான சமூக நலன்களையும் பெற வேண்டும் என்பதற்காக 2011-2016 ஆம் ஆண்டு வரை திருநங்கைகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,135 குடும்ப அட்டைகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் சீக்கிரமாக உரையை முடியுங்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 20 நிமிடங்களுக்கு உரையை தயார் செய்து வந்துள்ளேன். ஆகவே, முழுவதையும் பேசி முடித்து விடுகிறேன். இத்துறையின்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்காக தனியாக மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு, அவர்கள் சந்திக்கும் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் அந்த நல வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அறியப்பட்டு, அதற்கேற்றாற்போல் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஆனால்,* Performance Budget-ல் *நான் தேடித் தேடிப் பார்த்தேன். மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தைப் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் என்ற தலைப்பில் இருக்கிறது. அதுகூட செயல்முறைத் திட்டத்தில் இல்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதேபோல் ** மாற்றுத் திறனாளிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களை நீங்கள் அழைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாத ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறுகிறார். (குறுக்கீடுகள்) அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆதாரம் இல்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், திருமதி கீதா ஜீவன், நீங்கள் வேறு* subject-ல் *பேசுங்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான பணியிடங்களில் 3 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்துகிறதா என்பதைக் கண்காணிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த செயலாளர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று தி.மு.க. ஆட்சியில் தலைவர் அவர்களால்தான் அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் முறையாக அமல்படுத்தப்பட்டதா? அரசின் பல்வேறு துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவுப் பணியிடங்களாகக் கண்டறியப்பட்ட பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட்டுள்ளதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். வங்கிகளுக்கு நேரடியாகச் செல்ல முடியாத முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை, உரிய பயனாளிகளின் கையில் கிடைப்பதில்லை. அவற்றை அவர்களின் உறவினர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே, வங்கிகளுக்குச் செல்ல முடியாத முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக வங்கி ஊழியர் மூலமாகவோ அல்லது தபால்காரர்மூலமாகவோ மாதாந்திர உதவித் தொகையினை நேரடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்களுக்குக் கூடுதல். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு திரு ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையிலே வழங்கப்படுகிற உதவித் தொகை உரியவர்களுக்குச் செல்லவில்லை, அதை அவர்களின் உறவினர்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், திருமணமாகாத முதிர்கன்னிகள், மாற்றுத் திறனாளிகள், விவசாயத் தொழிலாளர்கள் போன்ற ஆதரவற்றவர்களுக்கு உதவித் தொகைகளை வழங்குகிறார்கள். முதலிலே தபால் மூலமாக உதவித் தொகையை

நேரடியாகக் கொண்டு சென்று, பயனாளிகளுக்குக் கொடுக்கின்ற முறை இருந்தது. அதிலே சில முறைகேடுகள் நடைபெற்றதன் அடிப்படையிலே, வங்கிகள் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உதவித் தொகையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதன்மூலம் முறைகேடுகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டு, உரியவர்கள் சென்றால் மட்டுமே அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கக்கூடிய நிலையிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே, வங்கிகள் மூலமாக முதியோர் உதவித் தொகையை வழங்குகின்ற திட்டத்தை நிருவகிக்கின்ற முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 85 சதவிகித உதவித் தொகை இப்போது வங்கிகள் மூலமாக வழங்கப்படுகிறது. மீதியுள்ள 15 சதவிகிதமும் முழுமையாக வங்கிகள் மூலமாக வழங்கப்படும். அதில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை, உறவினர்கள் உதவித் தொகையை பெறவில்லை. உதவித் தொகையை உரிய பயனாளிகளிடத்தில் கொடுக்கக்கூடிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்காணித்து செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் பேச ஆரம்பித்து 50 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: நான் பேசுவதற்கு முன் பேசிப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். 20 நிமிடங்களுக்கு உரையை தயார் செய்திருக்கிறேன். முடித்து விடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். குறுக்கீடு என்பது நீங்கள் கேள்வி கேட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் தருகிறார்கள். அதேமாதிரி, எதிர்க்கட்சித் தலைவர் சில நேரங்களில் வாய்ப்புக் கேட்கிறார்கள். இந்த விவாதத்தில் பேச அவருக்கும் நான் அனுமதி தந்திருக்கிறேன். ஆகவே, இரண்டு பக்கமும் விவாதம் நடந்திருக்கிறது. (குறுக்கீடு) இரண்டு பக்கமும் நடந்திருக்கிறது. நீங்கள் 50 நிமிடங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி உரையை முடியுங்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: *சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் கூர்நோக்கு இல்லங்களின்மீது அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். அந்த மாணவர்கள் நம்முடைய எதிர்கால தமிழ்ச் சமுதாயம் ஆவர். ஆகவே,* "Empty mind is devil's workshop" *என்று கூறுவர். அதாவது, சும்மா இருக்கக்கூடிய மனம் வேண்டாத செயல்களைச் சிந்திக்கும் என்று கூறுவர். ஆகவே, அந்த மாணவர்களுக்கு ஏற்கெனவே இருக்கிற பயிற்சிகளை கல்வியோடு சேர்த்து,* Fitter, Mechanic, *கட்டடக் கலை, மரவேலைப்பாடுகள் செய்தல், இசை பயிற்சியளித்தல் போன்ற தொழில்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு சில கூர்நோக்கு இல்லங்களில் இத்தகைய பயிற்சிகள் இல்லாமல் இருக்கின்றன. மேலும், இத்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். மாணவர்களுக்கு வாரந்தோறும்* counselling-*ஆற்றுப்படுத்துதல் கொடுக்க வேண்டும். கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களில் உள்ள இளைஞர்களின் நலனில் இந்த அரசு கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

இறுதியாக, என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு சில திட்டங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். தூத்துக்குடியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு 2006 ஆம் ஆண்டு துணை முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, தூத்துக்குடி மாநகராட்சியில் பணி நடைபெற்று வந்தது. 2011 ஆம் ஆண்டு வரை நடைபெற்று வந்த அந்தத் திட்டப் பணிகள், கடந்த ஐந்தாண்டு காலமாக அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளன. இந்த ஆண்டிலாவது, தூத்துக்குடி மாவட்டத்தில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைப் பூர்த்தி செய்தால், பொதுமக்கள் பயனடைவார்கள்.

தூத்துக்குடி மாநகராட்சியில் புதிதாக உருவாக்கப்பட்ட 3, 17, 18, 34, 48 முதல் 60 வரையிலான வார்டுகளில் குடிநீர், தார்ச் சாலை, கழிவுநீர்க் கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மாநகராட்சியில் 8 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். 3 நாட்களுக்கு ஒருமுறையாவது குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பு அவசியமாக, உடனடியாகச் செய்ய வேண்டிய வெள்ளத் தடுப்புப் பணிகளை இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டும்.

தமிழ்நாடு அனல் மின் நிலையத்தில் பணிபுரிந்து வரும் ஒப்பந்தப் பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்களுக்குக் கடந்த மூன்றாண்டுகளாக ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படாமல் உள்ளன. ஓய்வூதியப் பயன்களை விரைந்து வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தூத்துக்குடியில் உப்பளத் தொழிலாளர்களுக்குத் தனியாக நல வாரியம் அமைக்கப்பட வேண்டும். மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதுபோல், உப்பளத் தொழிலாளர்களுக்கும் மழைக் கால நிவாரணம் வழங்கப்பட வேண்டும். தூத்துக்குடி மாநகராட்சியில் நிரந்தரமாகப் பணிபுரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும்.

என் தொகுதியில் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த பல்வேறு சிறுபான்மைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு, இந்த அரசு கடுமையாக, அழுத்தமாக தனது எதிர்ப்பைத் தெரிவித்து, சிறுபான்மையினரின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

தூத்துக்குடி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஓய்வு பெற்றவர்களின் பணியிடத்தை நிரப்புவதற்கு அனுமதி வழங்க, கல்வித் துறை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இழுத்தடிக்கிறது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. மாணவர்களின் கல்வியைக் கருத்தில்கொண்டு, புதிய ஆசிரியர்களை நியமித்திட கல்வித் துறை உடனுக்குடன் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி தொகுதியில் நிரந்தர வீடுகள் இல்லாத மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திருமதி பி. கீதா ஜீவன், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12-15

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு கோரிக்கைதான் இருக்கிறது. உரையை முடித்து விடுகிறேன். மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர நிரந்தர

நடவடிக்கை எடுக்க வேண்டும். திரேஸ்புரத்தில் தூண்டில் வளைவை சீர்படுத்தித் தர வேண்டும். தூத்துக்குடி மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட, பழைய ஊராட்சியில் பணிபுரிந்து இப்போது மாநகராட்சியில் பணிபுரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் Valve Operators ஆகியோர் மாத ஊதியமாக தலா ரூ.1,200/- ரூ.2,500/-, மட்டுமே பெற்று வருகிறார்கள். அவர்களின் பணியை வரன்முறைப்படுத்தி, மாத ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். கடந்த கால கலைஞர் அவர்களின் ஆட்சியில் நத்தம் புறம்போக்கு இடத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்த மக்களுக்கு குடியுரிமைப் பட்டா வழங்கப்பட்டது. அதில், விடுபட்ட மக்களுக்கு குடியுரிமைப் பட்டா வழங்கிட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தூத்துக்குடி புறநகர்ப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண தாமிரபரணி தண்ணீரை கோரப்பள்ளம் குளத்திற்கு திறந்து விட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கோரிக்கை வைத்தால் பரவாயில்லை. அவர்களுடைய அரசு வீட்டுமனைப் பட்டா வழங்கியது குறித்து பேசுகையில் 10 ஆண்டுகள் என்று தவறான கருத்தை இங்கே சொல்கிறார்கள். அவர்களுடைய தலைவர், 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் குடியிருந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியதாகச் சொல்கிறார்கள். பொதுவாக விதிமுறை அப்படியல்ல. வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. ஒன்று regularisation மற்றொன்று regular scheme. அவர்கள் சொல்வது regularisation. அந்த regularisation-ஐ எதற்காகக் கொண்டு வந்தார்கள் என்று சொல்கிறேன். அவர்கள் சொன்னார்கள் 10 ஆண்டுகள் என்று. 10 ஆண்டுகள் அல்ல; அதற்குப் பிறகு 10 முறை அந்த G.O.-வை திருத்தம் செய்தார்கள். முன்பு மாண்புமிகு அமைச்சராக இருந்தவரும் இங்கே இருக்கிறார். One Time Special Scheme என்று அதற்குப் பெயர். ஆனால் அதை 10 முறை, 10 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 3 ஆண்டுகள் என்று குறைத்தார்கள். அதை யாருக்காகக் குறைத்தார்கள், எப்படிக் குறைத்தார்கள் என்பது தெரியாது. (குறுக்கீடுகள்) ஆனால் அதைக் குறைத்தார்கள். உடனே, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள்.

2016 ஆகஸ்ட் 10] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

வெள்ளத் தடுப்பு செய்ய வேண்டும் என்று இங்கு சொல்கிறார்கள். Regularisation scheme-ல் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், அவர்களுடைய ஆட்சியிலே regularisation scheme-ல் செய்த குளறுபடி பற்றி நான் இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட பட்டியலிட்டுச் சொன்னேன்; water course—நீர்நிலைப் புறம்போக்கு குறித்துச் சொன்னேன். நீர்நிலைப் புறம்போக்கையெல்லாம் பட்டா போட்டு அவர்கள் வழங்கியதன் காரணமாகத்தான் வெள்ளத்தினால் இவ்வளவு பாதிப்புகள் வந்தன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீர்நிலைப் புறம்போக்கில் பட்டா கொடுக்கவே முடியாது. ஆனால், அவர்கள் இதற்கு ஒரு அரசாணையே கொண்டுவந்து One Time Special Scheme என்று கொண்டுவந்து அதை. . . (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: விவரம் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் உட்காருங்கள். திரு. சக்கரபாணி உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் நிற்கிறேன். ஒரு விதியையும் மதிக்க மாட்டேன் என்கிறீர்கள். ஒரு நாளும், ஒரு விதியையும் மதிக்க மாட்டேன் என்கிறீர்கள். இது என்ன முறை? உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. நான் இதையெல்லாம் அனுமதிக்க முடியாது. சொன்னால் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்கிறார். விளக்கத்தில் ஏதாவது குறை இருக்குமென்று சொன்னால், எதிர்க்கட்சித் தலைவர் முதல் வரிசையில் அமர்ந்திருக்கிறார். வாய்ப்பு கேட்டால் நான் தருகிறேன். இருங்கள், மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு அமைச்சர் பேசி விட்டீர்களா? (குறிக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த ஏழையெளியோர்களுக்காக, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக வருவாய்த் துறை நிலை ஆணை எண் 21-ல் வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. ஏற்கெனவே நான் காலையிலே சொன்னதுபோல, அதற்கு வருமான உச்சவரம்பு இருக்கிறது. கிராமப்புறங்களிலே ரூ.30,000/-, நகர்ப்புறங்களிலே ரூ.40,000/-. அதேபோல், நகர்ப் பகுதியில் எவ்வளவு தரலாம், கிராமப்பகுதியிலே எவ்வளவு தரலாம் என்பதையெல்லாம் காலையிலேகூட இந்த அவையிலே எடுத்து வைத்தேன். ஆனால், One Time Special Scheme-ல் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், வருமான உச்சவரம்பு தேவையில்லை, எத்தனை ஆண்டுகள் என்ற உச்சவரம்பு தேவையில்லை, அவர்கள் ஏழைகளாக இருக்க வேண்டுமென்பது தேவையில்லை, அவர்கள் யாராக இருந்தாலும் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதிலே உள்நோக்கம் இருக்கிறது என்ற அடிப்படையிலேதான் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அவர்கள் அதிலே குற்றம் செய்திருந்தால் அதற்கு நான் பொறுப்பாக முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தளவிலே, வருவாய் நிலை ஆணை எண் 21 என்கிற ஒரு நிலை ஆணை. அவர்கள் ஆட்சியிலே இருந்தாலும், வேறு யார் ஆட்சியிலே இருந்தாலும் அதைத்தான் வழிமுறைகளாகக் கொண்டு வர வேண்டும்.

பிற்பகல் 12-20

One time special scheme-ஐ நீங்கள் போட்டீர்கள். பரவாயில்லை, அதை ஏன், நீங்கள் பத்து முறை திருத்தியுள்ளீர்கள். அதிலுள்ள உள்நோக்கம் என்ன? (குறுக்கீடுகள்) அவர் இன்றைக்குச் சொல்கிறார், பத்து ஆண்டுகள் இருந்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார். எந்தெந்த தேதிகளில் அவர்கள் திருத்தியிருக்கிறார்கள் என்பதை வேண்டுமானால், அவர்கள் விரும்பினால் நான் ஆதாரத்தோடு கொடுப்பதற்குத் தயராக இருக்கிறேன். பத்து முறைகள் அந்த அரசாணையை திருத்தியிருக்கிறார்கள். ஆகவே, வருவாய் நிலை ஆணை எண் 21-க்குட்பட்ட, அந்த வரையறைக்குட்பட்ட, தகுதிக்குட்பட்ட, எத்தனை பேர் தகுதியுள்ளவர்களாக இருந்தாலும், அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்திய

அரசியல் வரலாற்றில், வருவாய்த் துறையில் இதுவரை இல்லாத வகையில், 12½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை தகுதியானவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். நீர்நிலைப் புறம்போக்கில் பட்டா கொடுக்கலாம் என்ற விதி இருந்த காலத்தில், பத்து ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு அதுவும் மக்களுக்காக பட்டா வழங்கப்பட்டது. அதுவும் அதனை அமைச்சரவையில் முடிவு செய்து, அதற்குப் பிறகுதான் பட்டா வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, உச்ச நீதிமன்றம் தடையாணை வழங்கிய காரணத்தினால், பட்டா வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. இருந்தாலும், அவர் இங்கே பேசுகின்றபோது, முன்னாள் அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள்கூட இங்கே அமர்ந்திருக்கிறார், அவருக்கும் இது தெரியும் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார். முன்னாள் அமைச்சர் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிய காரணத்தினால், அது சம்பந்தமாக, அவர் உரிய விளக்கத்தினை அவையில் அளிப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், தனது நீண்ட விளக்கத்தைச் சொல்லிவிட்டார். அதிலுள்ள உண்மைத் தன்மையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொல்லிவிட்டார். அதாவது, மக்களுக்காக, அரசாணையில் திருத்தங்கள் செய்து, பத்து ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகள், ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகள்

எனக் குறைத்தோம் என்று சொல்லியிருக்கிறார். ஆக, நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தியது யார்? (மேசையைத் தட்டும் ஒலி) யார்? (குறுக்கீடு) அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்னென்ன என்பதை எல்லாம் இந்த நாடு நன்றாக அறியும். குறிப்பாக பொதுமக்கள் என்று சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பொதுமக்களுக்குள், உள்ளே யார் நுழைந்திருக்கிறார்கள்? இவர் சொன்னார், அந்த உள்ளார்ந்த அர்த்தம் என்ன? குறைத்ததற்கு உள்ளார்ந்த அர்த்தம் என்ன, என்று. உங்களுக்கு சாதகமானவர்களைக் கொண்டு வந்து, அங்கே குடியேறச் செய்து, அதை ஐந்து ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் என குறைத்ததுதான் உண்மையான வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) நானும் வருவாய்த் துறையைப் பார்த்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அரசாணைகளை எல்லாம் எடுத்துப் பார்த்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய பிறகு, உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. என் தொகுதியில் இருந்தது. என் தொகுதியான பெரியகுளம் சட்டமன்ற தொகுதியிலேயே. . . (குறுக்கீடுகள்) என் தொகுதியிலேயே, அந்த வரன்முறையை மீறி குளத்திற்குள் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு. . . (குறுக்கீடுகள்) ஏழைகளுக்கா? (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, அவர்களுக்கு வீடு இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே வீடு இருக்கும்போது, இங்கே வந்து குடிசைகளைப் போட்டு, பட்டா வாங்கியுள்ளார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வாய்ப்பு கேட்டிருக்கிறார். மாண்புமிகு அவை முன்னவர் பேசி முடித்தவுடன், நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் காண்பித்து, மற்றவர்களும் பட்டா கேட்கக்கூடிய பதட்டமான சூழ்நிலை அந்த நேரத்தில் ஏற்பட்டது.

ஏரியை ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு மட்டும் பட்டா கொடுத்திருக்கிறார்கள், நீங்கள் கொடுத்தால் என்ன என்று கேட்டார்கள். அது One time. *(குறுக்கீடுகள்)* அந்த One time என்பது உங்களுக்காக, நீங்கள் வேண்டிய, விரும்பியவர்களுக்குக் கொடுப்பதற்காக அது உருவாக்கப்பட்டது என்பதுதான் உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவைக்கு அதிகாரம் உண்டு. விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும், மக்களுக்காகத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். அதைத்தான் உச்ச நீதிமன்றம் தடுத்து நிறுத்தி, நீர்நிலைப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகள் செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெளிவாகக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12-25

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நீர்நிலைப் புறம்போக்குகளில், அவர்களுடைய ஆட்சியில் பட்டா கொடுக்கப்பட்ட விவரத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் ஏரி, பூந்தமல்லி வட்டம், திருநின்றவூர் கிராமத்தில் கடந்த 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் அரசாணை எண் 703 வருவாய்த் துறை நாள் 1-8-1996 மூலம் 15.11 ஹெக்டேர் மற்றும்*

அரசாணை எண் 678, வருவாய்த் துறை நாள் 21-7-1997 இதன்மூலம் 5.02 ஹெக்டேர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் நில மாற்றம் செய்யப்பட்டு, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏரியின் எதிர்வாயிலில் வீட்டுமனைகளுக்கு மொத்தம் 20.13 ஹெக்டேர், பரப்பளவிற்கு அரசின் ஒப்புதலோடு, கீழ்க்கண்டவாறு 1,781 வீட்டுமனைகளுக்கு உங்களுடைய ஆட்சிக் காலத்தில், நீர்நிலைகளில் அனுமதி வழங்கப்பட்டது. அங்கெல்லாம் வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட வீட்டுமனைகளின் அடிப்படையில், அங்கெல்லாம் வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. அந்த ஏரியில் விவசாயத்திற்குத் தேவையான நீரும் தேக்கி வைக்கப்படுகிறது. இதனால், அண்மையில் பெய்த மழையின் காரணமாக, மிகப்பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டன. ஆக, விவசாயிகள் நீரைத் திறக்கக் கூடாது என்கின்றார்கள். ஆனால், வீடு கட்டியவர்கள், கிட்டத்தட்ட 4 அடி ஆழத்தில்தான் வீட்டிற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, தவறான முறையில், நீங்கள் நீர்நிலைகளில் பட்டா கொடுத்ததன் விளைவு, அங்கே வீடு கட்டியவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் நீர்நிலைகளெல்லாம் எப்படி ஆக்கிரமிக்கப்பட்டு, பட்டா வழங்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டதால். . . (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். ஏன் இப்படி எல்லோரும் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) இப்படியெல்லாம் செய்வது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்களின் பெயரைக் குறிப்பிட்டதால், உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். ஒரு நிமிடத்தில் பேசி, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படித்தான் தருவோம். (குறுக்கீடு) அவ்வளவு நேரம்தான் தர முடியும். (குறுக்கீடு) நீங்கள்*

இதற்கு மேல் ஏதாவது பேசினால், பிறகு நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) தவறாகப் பேச வேண்டாம். (குறுக்கீடு)

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) இப்படியெல்லாம் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன், பேசுங்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இங்கே பேசியபோது கலைஞர் ஆட்சிக் காலத்தில், 10 ஆண்டுகளாக ஒரே இடத்தில் குடியிருப்பவர்களுக்கு, விதிமுறைகளுக்குட்டு, அதாவது தடை செய்யப்பட்ட புறம்போக்குகளைத் தவிர, நத்தம் புறம்போக்குகள் மற்றும் சில புறம்போக்குகள் என அனைத்துப் புறம்போக்குகளிலும் குடியிருந்த, வீடில்லாத ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இதே அவையில் கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள், அதை 5 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள்; தலைவர் கலைஞர் அவர்கள், 5 ஆண்டுகளாகக் குறைத்தார்கள். 3 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று அவையிலிருந்த உறுப்பினர்களெல்லாம் கேட்டார்கள்; 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. நீர்நிலைப் புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டும் என்று அரசாணை வெளியிடப்படவில்லை. அதை நீங்கள் நன்றாகப் படித்துப் பார்க்க வேண்டும் என்பது ஒன்று.

மற்றொன்று, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுகிறார். எப்படியென்றால், சென்னையில், தாம்பரத்தில் வெள்ளம் வந்ததற்குக் காரணம், ஏரிப் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா கொடுத்ததனால் அல்ல, செம்பரம்பாக்கம் ஏரியை திறந்துவிட்டதனால்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், வரவில்லை. இந்த ஒரே காரணம்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், திருநின்றவூர் ஏரி பற்றி கூறினார். என் தொகுதியிலே கெங்காருபட்டி டவுன் பஞ்சாயத்தில் செங்குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. அந்த செங்குளத்தின், நடு குளத்தில் பட்டா போட்டு வீடு கட்டியிருப்பதால், அங்கே தண்ணீரைத் தேக்க முடியவில்லை. ஏன்? 1997 ஆம் ஆண்டு நீங்கள் வரன்முறைப்படுத்தினோம் என்று சொன்னீர்களே? குளத்தின் நடுவிற்குள்ளா வரன்முறைப்படுத்தி, பட்டா கொடுப்பார்கள்? 1997 ஆம் ஆண்டு இந்த அரசாணையைப் பயன்படுத்தி, பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவாதத்தைத் திசை திருப்புகின்றார். நான் ஆதாரத்தோடு இங்கே சொல்கின்றேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட அரசாணை, அதை யாரும் மாற்ற முடியாது. ஏற்கெனவே பட்டாக்கள் கொடுக்கப்பட்டு, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் ஒதுக்கப்பட்டு, வீடு கட்டி குடியிருக்கின்றார்கள்; தற்போது குடியிருந்து கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) நீர்நிலைகளில் பட்டா கொடுக்கக் கூடாது என்பதுதானே சட்டம். திருநின்றவூர் ஏரியில் பட்டா கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, நீர்நிலைகளில் பட்டா கொடுப்பதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. நீங்கள் வேண்டுமென்றே, உங்களுக்குத் தகுந்தவர்களுக்கு, வேண்டப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்ததன் விளைவு இன்றைக்குக் கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளெல்லாம் குளத்திற்குள்தான் கட்டப்பட்டுள்ளன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கோயம்புத்தூரில் அம்மன்குளத்தில், குளத்திற்கு நடுவில் குடிசை மாற்று வாரிய வீடுகளைக் கட்டி, எல்லா வீடுகளும் பூமிக்குள் புதைந்துபோனதே! (மேசையைத் தட்டும் ஒலி) யார் கேட்டார்கள்? அந்த இடத்தை நீங்கள் தேர்ந்தெடுத்து, குளத்திற்குள் அடுக்குமாடி குடியிருப்பு கட்டியதால், என்னவாயிற்று? அம்மன்குளத்தில் கட்டிய வீடுகள் பூமிக்குள் புதைந்தன என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பரம்பாக்கம் ஏரியைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கமாக இதே அவையிலே தெரிவித்திருக்கிறார்கள்; விளக்கமாக, தெளிவாக தெரிவித்திருக்கிறார்கள். ஒரே நாளில் 50 சென்டி மீட்டர் மழை சென்னையிலே பொழிந்திருக்கிறது. அது அனைவருக்கும் தெரியும். அண்மையிலேகூட பெங்களூருவிலே வெறும் 14 சென்டி மீட்டர் மழைதான் பெய்தது. அதற்கே அந்த நகரம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், சென்னையிலே ஒரே நாளில் 50 சென்டி மீட்டர் மழை, வரலாறு காணாத அளவில் 100 ஆண்டுகளுக்குப் பிறகு பெய்த மழை; இயற்கையாக எல்லா இடங்களிலும் மழை பெய்தது. எல்லாவற்றையுமே செய்தியில் பார்த்தோம், தொலைக்காட்சியில் பார்த்தோம். வேண்டுமென்றே அரசியல் காரணமாக பேசலாமேயொழிய, உண்மையிலேயே மனசாட்சிப்படி, அதிக அளவிலே மழை பெய்த காரணத்தினாலேதான் இடர்ப்பாடு ஏற்பட்டதேயொழிய அரசினால் அல்ல என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், இந்த அவையிலே 10 ஆண்டுகளை 5 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும், 5 ஆண்டுகளை 3 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என உறுப்பினர்கள் கேட்டார்கள் என்று. இவர்கள் முன்கூட்டியே 5 ஆண்டுகளாக ஆக்குகிறோம், நீங்கள் எல்லோரும் ஆக்கிரமிப்பு செய்துகொள்ளுங்கள் என்று சொல்லி. . . (குறுக்கீடுகள்) அவர்கள் நீர்நிலைகளிலே. . . (குறுக்கீடுகள்) அவர் சொல்கிறார், G.O.-ல் இல்லை என்று. G.O.-ல் இருக்கிறது. அதிலே விதிவிலக்கெல்லாம் கொடுக்கவில்லை. நீர்நிலைகள் உட்பட அனைத்து ஆக்கிரமிப்புகளையும் வரன்முறை செய்ய வேண்டுமென்று 10 முறை அரசாணை போடப்பட்டது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார், மக்கள் பயன்பெற்றார்கள் என்று. நான் புள்ளிவிவரங்களோடு சொல்கிறேன், எந்த மக்களும் பயன்பெறவில்லை. அவர்கள் *ஆக்கிரமிப்பாளர்கள்தான் பயன்பெற்றார்கள், இந்த நாட்டு மக்கள் பயன்பெறவில்லை என்பதை இங்கே நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன ஆதாரம்? ** என்று சொன்னதற்கு ஆதாரம் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் இப்போது பேசுங்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பயன்பெற்றார்கள் என்று அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். நான் ஏற்றுக்கொள்கிறேன். என்ன ஆதாரம்? யாருடைய ** சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் பொறுப்பேற்றுதான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்களைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதற்குத்தான் அவர் பேசுகிறார்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஏற்கெனவே விதிமுறைகள் இருக்கின்றன. வருவாய்த் துறை தொடங்கிய காலம்தொட்டே வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன் கீழ்தான் வீட்டுமனைப் பட்டாக்களை அரசு வழங்க வேண்டும். இதற்கு முன்பாக அவர்களுடைய தலைவர் 5 முறை இருந்தபோதுகூட, அந்த வழிமுறையைத்தான் பின்பற்றியிருக்கிறார். ஆனால், கடந்த 5 ஆண்டுகளிலே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 2006-லிருந்து 2011 வரை, அவர்கள் பல்வேறு நிலைகளிலே பட்டா வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் Regular Scheme-ல் வழங்கியிருந்தால் இந்தக் கேள்வியே இல்லை. அவர்கள் வளமையான திட்டத்திலே வழங்கியிருந்தால் இந்தக் கேள்வி எழாது. அவர்கள் திட்டமிட்டே Regularisation என்கின்ற. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடுகள்) அப்படியானால் ஏரிகளிலும், குளங்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அவர்கள் ஆதரிக்கிறார்களா என்பதை நான் இங்கே கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) 2006-ல் அவர்கள் ஆட்சி வந்தது. 2007-2008-ல்தான் Regularisation Scheme *கொண்டு வருகிறார்கள். அந்த அரசாணையைக் கொண்டுவந்து ஒரே ஆண்டிலே மாத்திரம். . . (குறுக்கீடுகள்) நான் புள்ளிவிவரம் தருகிறேன். அந்த 4 இலட்சம் பட்டாக்களையும். . . (குறுக்கீடுகள்) இன்றைக்கு நாட்டிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்று சொன்னால் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட. . .*

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் ஒரு நிமிடம் இருங்கள். நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார். (குறுக்கீடுகள்) அதிலே ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரும்பவும் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால் நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். நீங்கள் இப்படி பேசிக் கொண்டிருந்தால் நான் எப்படி வாய்ப்புத் தரமுடியும்? எப்படி இந்த விவாதத்தை நடத்துவது?*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவர் ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். நம்முடைய அவை முன்னவர் அவர்கள்கூட எழுந்து இத்துடன் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு மானியக் கோரிக்கைமீது நடைபெறக்கூடிய விவாதத்திற்குச் செல்லலாம் என்று சொன்னார். நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால், பிரச்சினை இல்லை. எனவே, தயவுகூர்ந்து அதை நீக்குவதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ** என்று சொன்னதை நீங்கள் எடுக்க வேண்டும். ஏனென்றால், எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லிவிட்டு, ** என்று சொல்கிறபோது அதை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: அந்த ஆண்டு அவர்கள் Regularisation மூலமாக. . . .(குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொல்கிறேன். Regularisation மூலமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ** என்பதற்குப் பதிலாக ஆக்கிரமிப்பாளர்கள் என்று மாற்றிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்பாளர்கள், ஏரி, குளங்கள், குட்டை என்று நீர்நிலைகளை ஆக்கிரமிக்க ஆதரவு தெரிவித்தார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வாறே மாற்றப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: இது அதைவிடக் கொடுமையாக இருக்கின்றது. நான் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களுக்கு என்று சொல்லட்டும், நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: அதாவது ஆக்கிரமிப்பு செய்தவர்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்றுதான் சொல்ல முடியும். அவர்கள்தான் அரசாணையிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அரசாணையிலே சொன்ன வார்த்தையைத்தான் நான் சொல்கிறேன். ஏற்கெனவே விதிமுறையில் இருக்கிற வருமான உச்ச வரம்பு தளர்த்தப்படுகிறது, ஏற்கெனவே இருக்கிற அனைத்து நிலைகளும் தளர்த்தப்படுகின்றன, யார் யார் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களோ, எங்கெங்கெல்லாம் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களோ அதற்கு ஆக்கிரமிப்பாளர்கள் அனைவருக்குமே நீர், குளங்கள், குட்டை எல்லாவற்றுக்குமே பட்டா தருவோம் என்று அரசாணையிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். அரசாணையில் உள்ள வார்த்தையைத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, நம்முடைய மன்றத்திலே அப்போது அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்மீது ஒரு பிரச்சினை வந்தது. அதாவது சுடுகாட்டு நிலத்தை அவருடைய அத்தை மகளுக்கு சுடுகாட்டு நிலம் கொடுக்கப்பட்டது. அதைத்தான் ** என்று குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே என்ன தவறு இருக்கின்றது? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். தோண்டத் தோண்டப் பார்த்தால் நிறைய வரும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதற்கு இப்போது எழுந்தீர்கள்? (குறுக்கீடு) இல்லை, எதற்கு இப்போது எழுந்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அதற்கு அவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் எழுந்துகொண்டு இப்படிச் செய்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இப்போது நீங்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய உறுப்பினருடைய பெயரை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். எனவே, அவர் விளக்கம் சொல்வதற்கு நீங்கள் அனுமதியளிக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, என்ன சொல்லுங்கள்?*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய அத்தை மகளுக்கு சுடுகாட்டு இடத்தை பட்டா போட்டு, தி.மு.க. ஆட்சியிலே வழங்கியதாகச் சொல்கிறார்கள். எப்பொழுது சொன்னார்கள்? யாருக்கு நான் கொடுத்தேன் என்பதனை அவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவையிலே ஆதாரத்தோடு தெரிவிக்க வேண்டும். இல்லாத ஒரு சம்பவத்தை, நடைபெறாத ஒரு குற்றச்சாட்டை, இப்படி பகிரங்கமாக இந்த அவையிலே சொல்வது எந்த*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வகையிலே அது நியாயமாகும் என்பதனை தங்களிடம் நான் கேட்க விரும்புகிறேன். எதை எடுத்தாலும் ஆதாரத்தோடு பேச வேண்டும் என்று நீங்கள்தான் சொல்கிறீர்கள். அவர் எந்த ஆதாரத்தோடு பேசினார் என்பதை நீங்கள் இப்போது சொல்ல வேண்டும். *(குறுக்கீடு)*

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பேசுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டுதான் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) இப்படி குறுக்கீடு செய்தால், எப்படி நான் சபையை நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) இன்றைக்கு நீங்கள் ஏதாவது முடிவோடு வந்திருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைப்பு தரப்போகிறீர்களா அல்லது வேறு என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு குற்றச்சாட்டுக்கு எங்களுடைய உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் ஒரு விளக்கம் கேட்டிருக்கிறார்கள். எனவே, அதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, ஆதாரம் இருந்தால் சொல்லட்டும், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்; ஆதாரமில்லை என்று சொன்னால், அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அதுதான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்கிறார் என்று சொன்னால், அவர்கள், பொறுப்பேற்றுக் கொண்டுதான் அதைச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கெல்லாம் பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள்.*

(குறுக்கீடுகள்) அதை நான் அனுமதிக்க மாட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்த அவைக் குறிப்பில் இருக்கும், அதற்கு விளக்கம் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அந்த விளக்கமும் இருக்கும். இன்றைக்கு நடைபெறுவது சமூக நலத் துறையினுடைய மானியக் கோரிக்கை ஆகும். வருவாய்த் துறை மானியம், வருகின்ற செப்டம்பர் 1 ஆம் தேதியன்று வருகிறது. அன்றைக்கு நீங்கள் மீதியுள்ள விஷயங்களைப் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: *உரையை முடித்துவிடுகிறேன். சமூக நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகளில் இந்த அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும், தூத்துக்குடி தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டங்களையும் எடுத்துக் கூறியுள்ளேன். தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி, தளபதியாருக்கு மீண்டும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கொஞ்சம் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். நான் உங்களுக்கு உரையாற்ற பல வாய்ப்புகள் கொடுக்கிறேன்.*

நீங்கள் விளக்கம் சொல்லலாம். விளக்கம் சொல்வதிலே, சரியாக இருப்பதையெல்லாம் நான் அனுமதிக்கிறேன். சரியில்லாதவற்றுக்கெல்லாம் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். இந்த அவையில் நான் தெளிவாக முன்னரே சொல்லிவிட்டேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று சொல்லியிருக்கிறார்கள்கள். அதற்கு விளக்கம் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் சொன்னார். இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கும் என்று சொல்லி விட்டேன். அதற்குப் பின்னரும் எதிர்க்கட்சி வரிசையில் உள்ள பல உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு, தேவையில்லாமல் என்னை விமர்சிப்பது போன்று பேசுகிறார்கள். இது தொடர்ந்து நடைபெறுகிறது. (குறுக்கீடுகள்) இது தொடர்ந்து நடைபெறுகிறது. இதை என்னால் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதை அனுமதிக்க முடியாது. இந்தச் செயலை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களுக்கு தெளிவாகக் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன அந்தத் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லி, ஏற்கெனவே மீன் வளத் துறை அமைச்சராக இருந்த திரு. கே.பி.பி. சாமி அவர்கள் அதற்குத் தெளிவான மறுப்பை, வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்கள். நீங்களும் அவர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார் என்ற நிலையிலே இதோடு இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறீர்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் நான் கேட்க விரும்புவது, பொறுப்பேற்று அது நிரூபிக்கப்படுகிறவரையில், அது அவைக்குறிப்பிலே இடம்பெறுவது முறையாக இருக்குமா? ஏனென்றால், மாலையிலே செய்திகள் எல்லாம் வெளியிலே வந்துவிடும்.*

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இரண்டு செய்திகளும்தானே இருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, அது சரியான மரபாக இருக்காது என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் இருக்கட்டும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் சொன்னதும் இருக்கட்டுமென்று சொல்லியிருக்கின்றேன். இரண்டும்தான் பத்திரிகையில் வரும். அதனால் அதைப்பற்றி எல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) அதற்குமேல் அதில் விளக்கம் ஏதுமில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் பேசும்போது, மாற்றுத் திறனாளிகளுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கோரி இருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரைகளின்படி, 1,928 backlog vacancies கண்டறியப்பட்டு, 1,183 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அதில் குறிப்பாக ‘B’ பிரிவில் 781 பணியிடங்களிலும், ‘C’ பிரிவில் 367 பணியிடங்களிலும், ‘D’ பிரிவில் 18 பணியிடங்களிலும், ‘இதர’ என்ற பிரிவில் 17 பணியிடங்களிலும் மாற்றுத் திறனாளிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 745 பணியிடங்களையும் விரைவில் நிரப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும், 20-7-2016 அன்று Chief Secretary அவர்களின் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு ஆய்வு செய்து, மீதமுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் பேசுகிறபோது, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்கள் கூடிக்கொண்டே போகின்றன என்ற ஒரு கருத்து இங்கே தொனிக்கும்படி சொன்னார்கள். கடந்த ஐந்தாண்டு காலமாக,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள்மீது அதிக கவனம் செலுத்தி, பெறப்படும் அனைத்துப் புகார்களின்மீதும் எந்தவித சுணக்கமும் காட்டாமல் வழக்குகள் பதிவு செய்து, எதிரிகளைக் கைது செய்து, காவல் துறையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இதன்காரணமாக, மாநிலத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள், குறிப்பாக வரதட்சணை சம்பந்தமான கொலைகள், பாலியல் கொடுமைகள், மானபங்கம் தொடர்பான குற்றங்கள் குறைந்து வருகின்றன. அதாவது, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் இந்த வழக்குகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகின்றன. குற்றவாளிகளைக் கைது செய்து, அவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தருவதும் அதிகரித்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், குற்றங்கள் தொடர்பாக காவல் துறையினரால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவை கட்டுப்படுத்தப்பட்டு, குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அவர்களுடைய தலைவர் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பாதாளச் சாக்கடைத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 2005 ஆம் ஆண்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, கொண்டுவரப்பட்ட திட்டமாகும். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, இத்திட்டத்தினை கிடப்பில்போட்டு, 20 சதவிகிதப் பணிகளை மட்டுமே முடித்தார்கள். அதற்குப் பின்னால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இத்திட்டப் பணியினை முடுக்கிவிட்டு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக சிப்பம்-1-ல்

97 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சிப்பம்-2 மற்றும் 3-ல் 95 சதவிகிதப் பணிகள் முடிந்த நிலையில், ஒப்பந்ததாரர் பணிகளைச் சரியாக செய்யாததால், அவ்வொப்பந்தம் இரத்து செய்யப்பட்டு, 1-8-2014 அன்று மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அதேபோல, விடுபட்ட பகுதிகளிலும் சர்வே செய்யப்பட்டு, ரூபாய் 417 கோடியே 91 இலட்சம் நிதி ஆதாரத்துடன் விடுபட்ட அப்பணிகளை எடுத்துக்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, பாதாளச் சாக்கடைத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்தான் கொண்டு வரப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசினார்கள். தூத்துக்குடி மாநகராட்சியிலே எல்லை விரிவாக்கத்திற்கு முன் 51 வார்டுகள் இருந்தன. அதில் 20 கிராமப்புறப் பகுதிகள் இணைக்கப்பட்டு, 60 வார்டுகளாக மாற்றப்பட்டன. விரிவாக்கப்பட்ட பகுதிகளிலே நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. அதன்பிறகு இன்றைக்கு அந்தப் பகுதிகளுக்கு கிட்டத்தட்ட 12 லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதேபோல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 282 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு மருதூர் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து புதிய குடிநீர்த் திட்டம் தாயுள்ளத்தோடு அறிவிக்கப்பட்டு, 6 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிவுற்று இருக்கின்றன. இந்தத் திட்டமும் 30-9-2016-க்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, சீரான குடிநீர் அங்கே வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல அங்கன்வாடிக் கட்டடங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 358.83 கோடி ரூபாயில் 7,514 அங்கன்வாடி மையக்

2016 ஆகஸ்ட் 10] [திரு. எஸ்.பி. வேலுமணி]

கட்டடங்கள் 2011-2012 முதல் 2015-2016-வரை கட்ட உத்தேசிக்கப்பட்டு, 6,924 கட்டடங்கள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

அடுத்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 3,000 அங்கன்வாடி மையங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதுவும் கடந்த ஐந்தாண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கு மேல் கட்டடங்கள் மட்டும் கட்டப்பட்டன. தி.மு.க. ஆட்சியில் கட்டடங்கள் கட்டுவதாக அறிவித்தாலும், வாடகை கொடுக்கக்கூடிய சூழ்நிலைதான் இருந்தது. தி.மு.க. ஆட்சியில் அறிவித்ததைவிட கூடுதலாக கட்டடம் கட்டிக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த வருடத்திற்கும்கூட 1,000 கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005-ன்படி, தமிழகத்தில் 32 மாவட்டங்களில், 33 மாவட்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் சொந்தக் காரணங்களுக்காக அவர் விடுப்பில் இருக்கிறார். ராஜினாமா கடிதத்தையும் கொடுத்திருக்கிறார். ராஜினாமா ஏற்கப்பட்டால், அப்பணியிடம் நிரப்ப ஆவன செய்யப்படும். விரைவில் அந்த புகார் மனுக்கள் விசாரிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

2016 மே மாதம் வரை தமிழகத்தில் 28,394 மனுக்கள் பெறப்பட்டு, 17,018 மனுக்கள் பாதுகாப்பு அலுவலர்களால் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. 9,338 மனுக்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு இருக்கின்றன. 2,338 மனுக்கள்மீது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கனகராஜ் அவர்கள்.*

திரு. ஆர். கனகராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிக்கும் கடவுளைப் போல, கடைகோடி தொண்டனுக்கும் கருணை மழை பொழியும் கற்பக விருட்சமே! (மேசையைத் தட்டும் ஒலி) பூக்களுக்கு புன்னகையைக் கற்றுத் தந்த புரட்சித் தலைவியே, புதிய வரலாறு படைத்த புறநானூறே, பாரதி கண்ட புதுமைப் பெண்ணே, பாரதம் போற்றும் புதுயுக சிற்பியே, வாழும் காலத்தில் வரலாறு படைக்கும் கழக நிரந்தரப் பொதுச் செயலாளரே, (மேசையைத் தட்டும் ஒலி) 6-வது முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் எங்கள் குல தெய்வமே, ஏழைகளின் ஏந்தலே, அறிவுலக மேதையே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி எனது உரையை துவங்குகிறேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலம், கோவை மாவட்டம், சுல்தான்பேட்டை ஒன்றியம், வடுகபாளையம் என்ற குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, விவசாயக் குடும்பத்தில் பிறந்தது மட்டுமல்ல, நான் ஒரு விவசாயி. கவலை ஓட்டத் தெரியும், ஏர்ப் பிடிக்கவும் தெரியும், உழவு ஓட்டவும் தெரியும், வயக்காட்டிலே விளைச்சலைப் பெருக்கவும் தெரியும். அப்படிப்பட்ட விவசாயியாகிய என்னை, கிளை கழகச் செயலாளராகவும், ஒன்றிய கழக துணைச் செயலாளராகவும், ஒன்றிய கழக அவைத் தலைவராகவும், சுல்தான்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளராகவும், கழகத்தில் பணியாற்ற வாய்ப்பு வழங்கியமைக்கும், உள்ளாட்சித் தேர்தலில் இரு முறை சுல்தான்பேட்டை ஒன்றிய பெருந்தலைவராகவும், ஒன்றியக் குழு உறுப்பினராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், அதற்கெல்லாம் மேலாக மாவட்ட ஊராட்சிக் குழு தலைவராகவும் பதவி வகிக்கும் வாய்ப்பினை வழங்கி புகழ் விளக்கிலே என்னை ஏற்றி வைத்த பெருமைக்குரிய மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசத் தொண்டனாகிய எனக்கு கோவை மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராகப்

போட்டியிட வாய்ப்பு கொடுத்து, 36,631 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த, நான் நித்தம், நித்தம் வணங்கும் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத மலர்களில் எனது சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் கோடானு கோடி நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை வெற்றிபெறச் செய்த சூலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காக உழைத்த கழக முன்னோடிகளுக்கும், தொண்டர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன், அம்மா.

பிற்பகல் 12-55

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பினைத் தந்த, 'யாருடைய இதயம் ஏழை மக்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறதோ அவரே மகாத்மா' என்ற சுவாமி விவேகானந்தர் அவர்களின் வைர வரிகளுக்கு வடிவம் கொடுக்கும் விதத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வாழும் வரலாறு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத மலர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் ஏழைப் பெற்றோர்கள் வறுமையின் காரணமாக, பெண்களின் திருமணத்தின்போது மஞ்சள் கொம்பை மஞ்சள் கயிற்றுடன் சேர்த்து தாலிக் கயிறாகப் பயன்படுத்தி வந்தார்கள். தற்போது, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின்கீழ், தாலிக்கு 1 பவுன் தங்கம் மற்றும் 25,000 ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) பட்டப் படிப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின்கீழ், தாலிக்கு 1 பவுன் தங்கம் மற்றும் 50,000 ரூபாய் வழங்கும் ஒரே முதல்வர், ஒப்பற்ற முதல்வர் இந்தியாவிலேயே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒய்வூதியத் திட்டம். ‘மக்களால் நான், மக்களுக்காக நான்’ என்ற தாரக மந்திரத்திற்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் திருமணமாகாத உழைக்கும் திறனற்ற, 50 வயதிற்கு மேற்பட்ட ஏழைப் பெண்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஓய்வூதியமாக மாதம் ரூ.1,000/- வழங்கி வருகிறது. மேலும், இந்தியாவிலேயே முதன் முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உதவிடும் வகையில் மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கி வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா!

தொட்டில் குழந்தைகள் திட்டம். மிகுந்த ஈகையும், தாய்மை குணமும் நிறைந்த, மாண்புமிகு அம்மா அவர்கள் இதயத்திலிருந்து உதித்த அற்புதத் திட்டம்தான் தொட்டில் குழந்தைகள் திட்டம். இத்திட்டம் உலகத்திலேயே ஒரு முதன்மையான திட்டமாகும். பெண் சிசுக் கொலை என்னும் கொடுமையான பழக்கத்தை அறவே ஒழித்து, பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக 1992 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம். குழந்தைப் பருவத்தில் கொடியது பசி என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

அங்கன்வாடிப் பள்ளிகளில் உள்ள குழந்தைகள், தொடக்கப் பள்ளிகள் மற்றும் உயர் துவக்கப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் இலவசமாக மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்தி மென்மேலும் சிறப்புச் செய்யும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வெஜிடபிள் பிரியாணி, கொண்டைக்கடலை புலவு, தக்காளி சாதம்,

2016 ஆகஸ்ட் 10] [திரு. ஆர். கனகராஜ்]

சாம்பார் சாதம், கறிவேப்பிலை சாதம், கீரை சாதம் மற்றும் மிளகு முட்டை, மசால் முட்டை, வேகவைத்த முட்டை (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற சத்தான உணவு வகைகளை மதிய உணவு சாப்பிடும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் வழங்க ஆணையிட்டதன் காரணமாக அத்திட்டம் மிகவும் சிறப்பான திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படும் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்', பொது விநியோகத் திட்டம் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள், மிதிவண்டிகள், இலவச சீருடைகள், கல்வி ஊக்கத் தொகை மற்றும் 82 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு காலணிகள் வழங்கி, தமிழக மக்களுக்கு ஏற்றமிகு திட்டங்களைத் தருவதில் இந்தியாவிலேயே முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக, வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கும் ஒரே தலைவர், ஒப்பற்ற முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாற்றுத் திறனாளிகள் நலத் திட்டம். மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தில் ஒரு முக்கியமான அங்கம் என்பதனை உணர்ந்து, அவர்களின் வளர்ச்சிக்கு சிறப்பான அணுகுமுறை அவசியம் என்ற சீரிய நோக்கத்தோடு மாற்றுத் திறனாளிகள் நலத்தைப் பேணுவதற்கென்று 1993 ஆம் ஆண்டு தனித் துறை ஒன்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

பிற்பகல் 1-00

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக ஒவ்வோர் ஆண்டும் அதிக அளவிலான நிதியை ஒதுக்கீடு செய்து, திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினருடன் ஒருங்கிணைந்து சமமாக வாழும் நிலையை அடையச் செய்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டும் விதமாக, மாற்றுத் திறனாளிகளைப் பாதுகாத்து அவர்களின் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தும் அரசு, தமிழக அரசுதான் என்ற விருதினை 2013 ஆம் ஆண்டு மத்திய அரசு வழங்கி இருக்கிறது.

சூலூர் ஒன்றியம், சூலூர் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 60,000 விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. இதன்மூலம் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. இதில் குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள ஏழை மற்றும் நடுத்தர ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த தொழிலாளர்கள் பயன்பட்டு வருகின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்கும் விதமாக பலமுறை மின் கட்டணச் சலுகைகளை வழங்கியும், விசைத்தறித் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு தனி டேரிப் அமைத்துக் கொடுத்தது மட்டுமல்லாமல், 6-வது முறையாக தமிழக முதலமைச்சராக அம்மா அவர்கள் பொறுப்பேற்ற அன்றே விசைத்தறிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) 500 யூனிட் இலவச மின்சாரம் என்று இருந்ததை 750 யூனிட் இலவச மின்சாரம் என்று உயர்த்தி வழங்கிய வள்ளல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா!

சூலூர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை தனியார் கல்லூரிகள் மட்டும்தான் இயங்கி வருகின்றன. நடுத்தர மற்றும் கீழ்தட்டு மக்களின் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காங்கேயம்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியைத் அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்குமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கின்றேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காங்கேயம்பாளையத்தில் இருந்து சுமார் 7 கி.மீ. தூரத்திலுள்ள இருகூர் L&T By-pass சாலை வரை, சுமார் போக்குவரத்திற்கு நருக்கடியான பகுதியாக

இருப்பதால், அடிக்கடி சாலை விபத்துகள் காரணமாக உயிர் பலி ஏற்பட்டு வருகிறது. எனவே, காங்கேயம்பாளையத்தில் இருந்து இருகூர் L&T By-pass வரை நான்கு வழிச் சாலையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலூர் அரசு மருத்துவமனையை சூலூர் தாலுகா அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறும், மருத்துவமனைக்குச் சொந்தமாக அவசர கால ஊர்தி ஒன்றினை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். சூலூர் மற்றும் சுல்தான்பேட்டை ஒன்றியங்களுக்குட்பட்ட 100-க்கும் மேற்பட்ட குக்கிராம மக்களில், சாலை விபத்துகளால் அகால மரணம் அடைபவர்களின் பிரேதப் பரிசோதனைகளை, சுமார் 30 கி.மீ. தூரம் உள்ள கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, பிரேதப் பரிசோதனைகள் செய்ய வேண்டி உள்ளதால், அதிக பொருட்செலவு, கால விரயம் ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, சூலூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நூற்பாலைகள் மற்றும் விசைத்தறிக் கூடங்கள் அதிகம் உள்ளன. இப்பகுதியில் தீ விபத்துகள் ஏற்பட்டால் சுமார் 20 கி.மீ. தூரம் உள்ள பல்லடம் அல்லது கோவை நகரில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்குத் தகவல் கூறி தீயணைப்பு வண்டிகள் வர தாமதம் ஆவதால் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே, சூலூரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதியின் மையப் பகுதியில் சூலூர் அமைந்துள்ளது. சூலூர் நகரில் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைப் புதிதாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலூர் பேரூராட்சி பெரிய குளம், சின்ன குளம், பள்ளபாளையம் பேரூராட்சி, ஒட்டர்பாளையம் குளம், இருகூர் பேரூராட்சி செங்குளம், கண்ணம்பாளையம் பேரூராட்சி குளம், சாமளபுரம் பேரூராட்சி குளம், முத்துகவுண்டன்புதூர், நீலம்பூர் ஊராட்சிகளுக்குட்பட்ட ஆச்சாங்குளம் மற்றும் காங்கேயம்பாளையம் ஊராட்சி இராமச்சந்திரா குளம் ஆகிய குளங்களைத் தூர்வாரினால் நிலத்தடி நீர்மட்டம் பெருகி, கிணறுகளில் நீர்வரத்து அதிகமாக வாய்ப்புள்ளது. இதன்மூலம் சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலங்களில், விவசாயம் செய்ய ஏதுவாக இருக்கும். மேலும், விவசாயப் பெருமக்களும் பயன்பெறுவார்கள். ஆகவே, மேற்கண்ட குளங்களைத் தூர்வாருவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சாமளாபுரம் பேரூராட்சி, தற்போது திருப்பூர் வருவாய் மாவட்டத்தில் உள்ளது. சாமளாபுரம் பேரூராட்சி பொதுமக்களின் வாக்களிக்கும் உரிமை கோவை மாவட்டத்தில் உள்ளது. எனவே, சாமளாபுரம் பேரூராட்சியை கோவை வருவாய் மாவட்டத்தில் இணைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்) தலைமை)

சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் உள்ள 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள மக்கள் காவல் நிலையம் செல்ல வேண்டுமென்றால் 30 கி.மீ. தூரம் உள்ள சூலூர் காவல் நிலையம் அல்லது 30 கி.மீ. தூரம் உள்ள நெகமம் காவல் நிலையத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் தொழிற்சாலைகள் மிகக் குறைவாக உள்ளதால், புதிய விசைத்தறி பூங்கா அமைத்துத் தருமாறும் மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, கொப்பரைத் தேங்காய் கொள்முதல் விலையை குறைந்தபட்சம் கிலோவுக்கு ரூ.75 ஆக உயர்த்திக் கொடுத்து உதவிட வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் வசிக்கும் ஏழையெளிய, நடுத்தரக் குடும்பங்களின் நலன் கருதி, செஞ்சேரிமலைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சூலூர் சட்டமன்றத் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், அப்பநாய்க்கன்பட்டியில் வசிக்கும் விவசாயக் குடும்பங்கள் அதிக அளவில் வளர்த்துவரும் கால்நடைகளுக்கு சிகிச்சை பெறும்விதத்தில் சுல்தான்பேட்டை ஒன்றியம், அப்பநாய்க்கன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவருக்கு ஒரு வேண்டுகோள். நான் கன்னிப் பேச்சாளர். எனக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் உண்டான ஒரு பிரச்சினை. அவர் அவைக்குள் வந்த பின்பு பேசிக்கொள்ளலாம் என நினைக்கின்றேன். அவர் வந்த பின்பு, எனக்கு பேச வாய்ப்புக் கிடைக்குமா? (குறுக்கீடு) அவர் வந்து பேசினால்தான் சரியாக இருக்கும். அவர் இருக்கும்போது, பேசினால்தான் சரியாக இருக்கும். அவர் இல்லாமல் பேசினால் சரியாக இருக்காது. நானும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்தான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் இந்த சபையில் இல்லாமல் நான் பேசினால் அது நல்ல கருத்தாக இருக்காது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கனகராஜ், நீங்கள் கன்னிப் பேச்சு பேசுகின்றீர்கள். தாராளமாகப் பேசுங்கள்.

திரு. ஆர். கனகராஜ்: *அவர் இல்லாமல் நான் எப்படிப் பேசுவது? (குறுக்கீடுகள்) அவர் சபையில் இருக்கும்போது பேசினால்தான் சரியாக இருக்கும்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *அதைப்பற்றி நீங்கள் பேச வேண்டாம்.*

திரு. ஆர். கனகராஜ்: *கன்னிப் பேச்சு என்று சொல்கிறீர்கள். அவர் இல்லாமல் பொத்தாம் பொதுவாகப் பேசிவிட்டால் அது சரியாக இருக்காது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரும், நானும் பேசக்கூடிய விஷயம். இவர்களால் பதில் சொல்ல முடியுமா?*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *நீங்கள் அதைப்பற்றிப் பேச வேண்டாம். நீங்கள்* subject *குறித்து பேசுங்கள்.*

திரு. ஆர். கனகராஜ்: *கடைசி* point-*க்கு வந்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் இன்னும் பேச்சை முடிக்கவில்லை. நான் இன்னும் முடிக்கவில்லை. அவர் வந்தபிறகுதான் அந்தப் பிரச்சினையைப் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *நீங்கள் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கனகராஜ், இந்த* subject *விஷயமாக பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. ஆர். கனகராஜ்: *நான் பேசினால், நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடிய ஒரே ஆற்றல் படைத்தவர் எதிர்க்கட்சித் தலைவர்தான். இவர்களால் பதில் சொல்ல முடியாது.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கனகராஜ், இந்த மானியத்தின்மீது பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) இந்த மானியத்தின்மீது பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், இந்த மானியத்தின்மீது பேசி உரையை முடியுங்கள்.*

திரு. ஆர். கனகராஜ்: *சரி. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எனது தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியம்,*

அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் தட்டான் குட்டை என்ற சுமார் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் சமத்துவபுரம் கட்டினார்கள். அதில் மழைக் காலங்களில் சுமார் 10 அடிக்கு மேல் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதனால், கட்டப்பட்ட கட்டடங்களில் பாதி கட்டடங்கள் பாழாகிவிட்டன. ஆரம்பத்திலேயே இதை நாங்கள் எதிர்த்தோம், போராடினோம். அதற்கு எந்தப் பலனும் இல்லை. முடிவு, செவிடன் காதில் ஊதிய சங்காகப் போனது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குட்டையில் கட்டிய சுமார் 100 வீடுகள் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் அலங்கோல நினைவுச் சின்னமாக தற்போது உள்ளன என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் பணிந்து வணங்கி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மலருக்கு மணம் அழகு; கடலுக்கு அலை அழகு; தேனுக்கு சுவை அழகு; வானுக்கு நிலவு அழகு; நிலவுக்கு ஒளி அழகு; மொழிக்கு தமிழ் அழகு; தமிழ்நாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சித் திறன் அழகு (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாத மலர்களைப் பணிந்து வணங்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன், அம்மா!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

***திரு. பி.வி. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

சித்திரைப் பௌர்ணமியாய், வைகாசி விசாகமாய், ஆனித் திருமஞ்சனமாய், ஆடித் திருவிழாவாய், ஆவணி அவிட்டமாய், புரட்டாசி காரி கிழமையாய், ஐப்பசி தீபாவளியாய், கார்த்திகை தீபமாய், மார்கழிப் பாவையாய், தையின் பொங்கலாய், மாசியின் மகமாய், பங்குனியின் உத்திரமாய் தமிழகத்தில் சிறந்திருக்கும் எங்கள் தங்கத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

அதியமானின் தூதுக்கு ஔவையார், அறநெறியின் ஆணைக்கு கண்ணகி, இராசராச சோழனின் அரசியல் நுணுக்கத்திற்கு

அக்கையார் குந்தவை நாச்சி, (மேசையைத் தட்டும் ஒலி) எவரெஸ்ட்டின் சாதனைக்கு பச்சேந்திரி பால், ஏழைகளின் இதயத்திற்கு அன்னை தெரசா, தென்னாப்பிரிக்காவில் காந்தியின் காவலுக்கு வள்ளியம்மை, பெண்ணுரிமைப் போருக்கு மணியம்மை, நீதிவழுவா ஆட்சிக்கு ராணி மங்கம்மாள், புக்கர் பரிசுக்கு அருந்ததி ராய் போல், தமிழக மக்களுக்கு மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் இங்கு உண்மை அம்மா!

அம்மா, நீங்கள் பொதிகை மலையைவிட்டு எழுந்து வந்த புதுத் தென்றல்! குறிஞ்சி நிலம் ஆராதிக்கும் சந்தன விருட்சம். ஏழைகளின் தாயே! உங்கள் ஆற்றலை ஆகாயமே அண்ணாந்துப் பார்க்கிறது. அம்மா, எதிரியைத் தூக்கி எறிந்தவர் நீங்கள்! ஏழை மக்களைப் புரிந்தவர் நீங்கள்! எங்களின் முதல்வராய் என்றுமே நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, தங்களின் நலத் திட்டங்களால்தான் இருண்ட பகுதிகளில் எல்லாம் இங்கு புதிய வெளிச்சங்கள் புறப்பட்டு வருகிறது.

நல் சாதனைகளின் முடிப்பே! நல் சரித்திரத்தின் குவிப்பே! இல்லார்க்கு இரங்குகின்ற துடிப்பே! எப்போதும் எல்லோர்க்கும் வியப்பே! எதிரிக்கு வல்லினமாய், மக்கட்கு மெல்லினமாய், தொண்டர்க்கு இடையினமாய் இருக்கும் எங்கள் இயக்கத் தலைவியே! 26 வயதிலேயே, அதாவது 1986-ல் திருவெண்காடு ஊராட்சி மன்றத் தலைவராக, 1988 முதல் 1998 வரை தஞ்சை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளராக, 1995 முதல் 2005 வரை நாகப்பட்டினம் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராக, 2007-ல் சீர்காழி தொகுதி கழகச் செயலாளராக, 2007 முதல் 2011 வரை சீர்காழி ஒன்றியக் குழு உறுப்பினராக, 2011 முதல் 2016 வரை சீர்காழி ஒன்றியக் குழுத் தலைவராக, தற்போது நவக்கிரகங்களிலே புதன் தலமாக, வைத்தியநாத சுவாமியின் திருத்தலமாக, ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கிய இடமாக, தெற்கே காவிரியும், வடக்கே கொள்ளிடமும், கிழக்கே வங்கக் கடலும் எல்லைகளாய் விளங்கும் பெருமைமிகு சீர்காழியின் சட்டமன்ற உறுப்பினராக, என்னை வளர்த்து ஆளாக்கி, அழகு பார்க்கும் தாயே! எங்கள் பகுதியில் வந்த சுனாமியை வடு இல்லாமல் ஆக்கிய அன்னையே! தங்களையும், என் பெற்றோர்கள் திரு. வேலாயுதம், திருமதி குஞ்சிதம்மாள் ஆகியோரையும், தங்களின் எழுச்சிமிகு பிரச்சாரத்தால் என்னை வெற்றிபெறச் செய்த சீர்காழி தொகுதி வாக்காளப்

பெருமக்களையும் கண்மலர்களால் பூஜித்து காலமெல்லாம் நன்றி சொல்லி வணங்குகிறேன்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மீதான மானியத்தில் கலந்துகொண்டு எனது கன்னிப் பேச்சை கனிவோடு தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைரம் பாய்ந்த மன உறுதியும், தங்கமான இதயமும் சேர்ந்து உருவாகிய தலைமையில் பெண்கள், குழந்தைகள், ஆதரவற்ற பெண்கள், தாய், தந்தையற்ற குழந்தைகள், உற்றார், உறவினர், உதவியற்ற மூத்த குடிமக்கள், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவர் என எல்லாத் தரப்பும் நிம்மதியாய் வாழ்கிறார்கள். அவர்களின் கவலைகளை எங்கள் கருணைத் தாய் போக்குகிறார். பெண் சிசுக் கொலையிலிருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாக்க அன்னை தெரசாவே போற்ற, 1992 ஆம் ஆண்டு தொட்டில் குழந்தைத் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) மழலைப் பருவம் முதல் மங்கையர் பருவம் வரை பெண் குழந்தைகளின் நலனை உறுதி செய்ய பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைத் திருமணங்களிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு அவர்கள் 18 வயது அடையும் வரை தொடர்ந்து கல்வி பயிலவும், பயிற்சிக்காகவும் மாதம் ரூ.1,000/-, உழைக்கும் திறனற்ற 50 வயதுக்கு மேற்பட்ட ஏழைப் பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியமாக மாதம் ரூ.1,000/-, 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவருக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ.1,000/- வழங்கும் திட்டம். இது இந்தியாவிலேயே முதன்முறையான ஒரு முன்னோடித் திட்டம். ஏழைப் பெண்களின் திருமண உதவித் தொகையாக ரூ.25,000/-, அவர்களின் திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 4 கிராம் தங்க நாணயம், பட்டப் படிப்பு அல்லது பட்டயப் படிப்பு பயின்ற பெண்களின் திருமண உதவித் தொகையாக ரூ.50,000/-. அவர்களின் திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 4 கிராம் தங்க நாணயம்; இத்திட்டத்தினால் ஒரு சமுதாய மாற்றமாக பெண்கள் கல்வி பயிலும் சதவிகிதம் உயர்கின்றது. 4 கிராம் தங்க நாணயம் என்பதை 23-5-2016 முதல் 8 கிராம் தங்க நாணயமாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களின் ஆண்டு வருமானத்தை ரூ.24,000/-லிருந்து ரூ.72,000/- ஆக உயர்த்தி, இச்சீரிய திட்டத்தை

17-5-2011-ல் தொடங்கிவைத்து, இந்தியாவின் ஒரு முன்னோடி விளக்காய், எல்லோர் வீடுகளிலும் ஒளியாய் விளங்குகிறார் எங்கள் அம்மா.

பிற்பகல் 1-15

மூன்றாம் பாலினத்தவரின் சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.15 இலட்சம் வங்கிக் கடன் வழங்கல்; பெண்களுக்கு எதிரான கொடுமைகள் தீர 1993-லேயே தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் துவக்கம்; மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்; டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்; ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்; அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித் திட்டம்; டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என எண்ணிறைந்த திருமண உதவித் திட்டங்கள் எங்கள் புனிதத் தாய் ஆட்சியில் பொழுதெல்லாம் தொடர்கிறது.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கத்தோடு தொண்டாற்றும் பெண் ஒருவருக்கு அவ்வையார் விருது என்ற பெயரில் 8 கிராமில் ஒரு தங்கப் பதக்கம், ரூ.1 இலட்சம் காசோலை, சால்வை, சான்றிதழ்; சிறந்த சமூக சேவகிக்கு சுதந்திர தின விருதாக 10 கிராமில் ஒரு தங்கப் பதக்கம், ரூ.50,000/- ரொக்கப் பரிசு, சால்வை, சான்றிதழ்; 1-8-2011 அன்றோ அதற்குப் பிறகோ பிறந்து, குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அக்குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக ரூ.50,000/-; 5-9-2012 அன்று அனைத்து மாவட்டங்களிலும், முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் துவக்கம் என்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாய் மாண்புமிகு அம்மா அவர்களின் மகளிர் நலத் திட்டங்கள் மின்னுகின்றன, மிளிர்கின்றன. அந்த வகையில், உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிய ஒப்பற்ற ஒரே முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனைப் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே வழிகாட்டியாக ஆடிக் காற்றுக்கும் அசைந்து கொடுக்காத அரண்மனையாய், தங்கத்தில் முகமெடுத்து, சந்தனத்தில் உடலெடுத்த சரித்திரத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மாணவர்கள் நலன் காக்கும் மகத்தான திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம். இத்திட்டத்தை விரிவுபடுத்தி, 12-9-2001-ல் பயறு வகைகள், கொண்டைக் கடலை, பச்சைப் பயறு மற்றும் வேகவைத்த உருளைக் கிழங்கு, 15-8-2014 அன்று புதிய வகை கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான மசாலா முட்டைகளும் வழங்கி மாணவர்கள் நலன் காத்தவர் மகத்தான முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை அன்போடு தெரிவிக்க விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

20-3-2013 முதல் அங்கன்வாடி, சத்துணவு மையங்களில் அனைத்து குழந்தைகளுக்கும் கலவை சாதம் போட்டு சமூக நலத் துறையிலே சரித்திரம் படைத்தவர் எங்கள் அம்மா.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 1993 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்வுக்கான இயக்குநரகம் ஒன்று உருவாக்கப்பட்டது. மாநில அளவில் அவர்களுக்கான கொள்கைத் திட்டம் ஒன்றையும் 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் உருவாக்கினார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாற்றுத் திறனாளிகளுக்கு வங்கிக் கடன், வேலைவாய்ப்பற்றவர்களுக்கு நிவாரணத் தொகை, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், மூன்று சக்கர மோட்டார் வாகனங்கள் என எல்லா உதவிகளும் மாண்புமிகு பொன்மனத் தாயின் ஆட்சியில் நிறைவாக வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடவுள் மனிதர்களை இப்பூமிக்கு அனுப்பும்போது, அவர்களிடம் ஒன்றே ஒன்றுதான் சொல்லி அனுப்பினார். 'நீங்கள் திரும்பவும் மனிதர்களாக வராதீர், தெய்வமாக வாருங்கள்' என்பதே அது.

எங்கள் அம்மாவிடமும் இந்தப் பூமிக்கு வரும்போது அதையேதான் சொல்லி அனுப்பினார். 'நீங்கள் திரும்பவும் மனிதராக வராதீர், தெய்வமாக வாருங்கள்' என்றார்.

அதைக்கேட்டு இதுவரை மக்களைக் காப்பாற்றி, இனியும் மக்களைக் காப்பாற்ற இருக்கிற எங்கள் தாயை இங்கே உள்ளவர்கள் இப்போதே தெய்வமாகப் போற்றுகிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வமாகவே வணங்குகிறார்கள். இப்பூவுலகில் எப்போதுமே அவர் தெய்வம்தான். இப்படிப்பட்ட ஒரு சாதனைத் தலைவியை, முக்காடு போட்டு முனகுகிறவர்கள் எப்படிப் பாராட்டுவார்கள்?

'மன்னனின் கௌரவம் சதுரங்க நடுவிலே,
மறிக்கின்ற சேனையோ பிள்ளையின் வடிவிலே,
ஆகட்டும் பார்க்கலாம் ஆட்டத்தின் முடிவிலே'

என்று இருப்பவர்களால், எப்படிப் பாராட்ட முடியும்?

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னிப் பேச்சின் நிறைவாக, என் தொகுதி குறித்த கனிவான சில கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் திருப்பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். அம்மாவால் வெற்றி பெற்ற என் தொகுதிக்கு கீழ்குறிப்பிடும் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

சீர்காழி தொகுதிக்கு அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி அல்லது பெண்கள் கல்லூரி ஒன்றைத் துவக்கிட வேண்டுமாய் பணிவோடு வேண்டுகிறேன்.

சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி அருகே வெள்ளப்பள்ளம்-உப்பனாற்றில் நிலத்தடி நீர், உவர் நீராக மாறாமல் இருப்பதற்கும், கடல் நீர் விவசாய நிலத்தில் உட்புகாமல் இருப்பதற்கும் ஏதுவாக ஒரு கதவணை அமைக்க வேண்டுகிறேன்.

கொள்ளிடம் ஆற்றில் ஆச்சாள்புரம் ஊராட்சி அருகில் கடல் நீர் விவசாய நிலத்தில் உட்புகாமல் இருப்பதற்கு ஏதுவாக ஒரு தடுப்பணை அமைக்கக் கோருகிறேன்.

சீர்காழி நகரில் பாதாளச் சாக்கடை வசதி இல்லை. அந்த வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். அத்திட்டம் வந்தால், நகரம் தூய்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புகழ்பெற்ற வைத்தீஸ்வரன் கோயிலுக்குத் தினமும் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்வதால்,

பேரூராட்சிக்கு பாதாள சாக்கடை வசதியை செய்து தர பணிவோடு வேண்டுகிறேன்.

கொள்ளிடத்தைத் தனி தாலுகாவாக உருவாக்கித் தர பணிவோடு வேண்டுகிறேன். திருமுல்லைவாசல் ஊராட்சியில் மீனவர்கள் பயன்படுத்துகின்றவிதத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற தூண்டில் வளைவுத் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டுகிறேன்.

சீர்காழி நகரில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று துவக்கிட வேண்டுமாய் பணிவோடு வேண்டிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது ஓர் அரசு மேல்நிலைப் பள்ளிகூட அங்கு இல்லையென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன் வளத் துறையின்மூலம் மீன் மற்றும் இறால் பதப்படுத்தும் கிடங்கை அமைக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். திட்டை ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க பணிவோடு வேண்டுகிறேன்.

சீர்காழி ஒன்றியம், புதுத்துறை ஊராட்சி, வெள்ளப்பள்ளம் தீவு கிராமத்தில், குறிப்பாக, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த 250-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். அந்தத் தீவு கிராமத்திற்குச் செல்வதற்காக, வெள்ளப்பள்ளத்திற்கும் புதுத்துறைக்கும் இடையே உள்ள உப்பனாற்றில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டுமாய் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி மற்றும் வைத்தீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை முழுவதுமாக நியமனம் செய்ய வேண்டும். சீர்காழி அரசு மருத்துவமனையில், ஒரு தீப்புண் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட வேண்டும். மேலும், அடிப்படை சுகாதார வசதிகள், கழிவுநீர்த் தொட்டிகள், கழிவறைகள் போன்றவற்றை அமைத்துத் தர வேண்டுமாய் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

சீர்காழி நகராட்சிக்குச் சொந்தமான காந்தி பூங்காவை பொதுமக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே சீரமைத்து, மேம்படுத்தித்

தர வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியங்களில் குறிப்பாக, கடற்கரைக் கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்தி, பொதுமக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமாய் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி தாலுகா வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய வட்டாட்சியர் அலுவலகமும், புதிய பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடமும், புதிய கருவூல அலுவலகக் கட்டடமும் கட்டித் தர வேண்டுகிறேன்.

அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடத்திற்கு காவல் நிலையக் கட்டடம் இல்லாமல் இருக்கின்றது. அதற்குப் புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி, கொள்ளிடத்திற்கு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, கொள்ளிடத்தில் புறவழிச் சாலை அமைத்திடவும், கொள்ளிடம் முதல் நாகப்பட்டினம்வரை NH-45A தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள திருவாலி ஏரி 295 ஏக்கர் பரப்பளவு கொண்டது. 2,044 ஹெக்டேர் பாசன வசதி பெறக்கூடிய திருவாலி ஏரியை முழுமையாக வெட்டி, சீர்படுத்தி, கரையைப் பலப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.

அடுத்து, பெருந்தோட்டம் ஏரி 80 ஏக்கர் பரப்பளவு கொண்டது. 911 ஹெக்டேர் பாசன வசதி பெறக்கூடிய அந்த ஏரியை முழுவதுமாக வெட்டி, கரையைப் பலப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உலக நூலகத் தந்தை S.R. ரெங்கநாதன் பிறந்த ஊரான சீர்காழியில் அவரது பெயரால் ஒரு நூலகம் கட்டித் தர வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சீர்காழியில் ஒரு சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சீர்காழியில் உள்ள Marketing Committee-க்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி, மற்ற தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. பி.வி. பாரதி: சீர்காழி முதல் கும்பகோணம் வரையுள்ள State Highways-ஐ தேசிய நெடுஞ்சாலையாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்பார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் திருப்பார்வையால் இந்தப் புதன் தலத்திற்கு எல்லாம் கிடைக்கும் என்று எங்கள் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். பொன்மனத் தலைவி அவர்களால் புதன் தலம் நிச்சயம் சிறப்புப் பெறும், சிறப்புப் பெறும் என்ற சிறப்பான எதிர்பார்ப்போடு அமைய விரும்புகிறேன். அதற்கு முன்னால் ஒரு வார்த்தையைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களே, நான் உங்கள் நிஜத்தை நேசிக்கிறேன், உங்கள் நிழலை பூஜிக்கிறேன். அதனால்தான் உங்கள் நிழல் விழுந்த நிலத்தின் மண்ணைக்கூட திருநீறாய் இட்டுக்கொள்கிறேன் என்று சொல்லி, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், நேரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேச வாய்ப்பு வழங்கியமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய கல்விக் கொள்கை முன்மொழிவுகளின் அடிப்படையில், அங்கன்வாடிகள், சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்கள் வலுவிழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. தமிழகம் போன்ற மாநிலங்களில் அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவுத் திட்டங்கள் சிறந்தோங்கும் திட்டங்களாக, தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக, யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறப்பாக இயங்குகின்ற திட்டங்களாக நடைபெற்று வந்திருக்கின்றன. மத்திய அரசின் நிதியும் இதுவரை அதிகமாக இதற்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. புதிய தேசிய கல்விக் கொள்கையின் முன்மொழிவுகளை ஆய்வு செய்து பார்க்கும்போது, இந்தத் திட்டங்களுக்கு மூடுவிழா காணக்கூடிய ஒரு ஏற்பாடு இருப்பதுபோன்ற ஒரு தோற்றம் தென்படுகிறது. அதை, தமிழகம் போன்ற மாநிலங்கள் எதிர்க்க வேண்டும். குறிப்பாக, நம்முடைய மாநிலத்தில் இந்தத் திட்டங்கள் தொடர வேண்டும். நாம் நிறைய அங்கன்வாடி மையங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். நிறைய அங்கன்வாடி மையங்கள் செயல்பாட்டில் இருக்கின்றன, சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. சத்துணவும் விரிவுபடுத்தப்பட்ட சத்துணவாக மாறிக் கொண்டிருக்கிறது. அதுபோல, உணவிலும் விரிவாக்கம் செய்கிறோம். இணை உணவு தருவது, இளம் பெண்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை, இதுவரை 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு பல்வேறு நிதியாதாரங்களில் படிப்படியாக கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, இதுவரையில் 6,908 மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அம்மா அவர்களுடைய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி

ரூ.359.96 கோடி. மேலும், 1,649 புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தீவிர ஏற்பாடுகளைச் செய்வதோடு, 2016-2017 ஆம் ஆண்டில் 5,000 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. குறிப்பாக, தேசிய கல்விக் கொள்கை முன்மொழிவுகளில் ஓர் ஆபத்து இருப்பதை நான் சுட்டிக் காண்பித்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, மத்திய அரசுக்கு வலியுறுத்தும் வகையில், இந்தச் சட்டமன்றப் பேரவையில் இதுபோன்ற தேசிய கல்விக் கொள்கையிலுள்ள திருத்தங்கள், நமக்கு ஆபத்தாக அமைந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தங்களை நாம் ஒருபோதும் ஏற்கக்கூடாது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நம்முடைய அவையில் விவாதங்கள் நடைபெற்று, ஒருமித்த தீர்மானம் நிறைவேற்றி, நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, அழுத்தம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய கல்விக் கொள்கை தற்போது இதுபோன்ற நல்ல திட்டங்களுக்கு மூடுவிழா காண்பது மட்டுமல்ல, இன்றைக்கு பல்வேறு தவறான நடைமுறைகளை இந்தியாவில் உருவாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. ஆகையால், இதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கென்று மூன்று சக்கர Motor bike வழங்கக்கூடிய அனுமதியை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது இலவச பைக் வழங்கும் திட்டம் அரசின் திட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் பயனாளிகள் அதிகமாகப் பயன்பெற முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, படிக்கக்கூடிய சில மாணவர்களுக்கும், வேலை பார்க்கக்கூடிய சிலருக்கும்

இலவச பைக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், எங்கள் மாவட்டத்தில் நிறைய பேர் இதற்காக கோரிக்கைகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பணியாற்றக்கூடியவர்கள், பணியில் இல்லாதவர்கள் என்ற பாரபட்சமின்றி அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும், குறிப்பாக, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டாயமாக மூன்று சக்கர மோட்டார் பைக் வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை, அரசின் திட்டமாக விரிவாக்கம் செய்ய வேண்டும், பயனாளிகளின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்தும், எங்களை நேரடியாக அனுமதிக்கக்கூடிய அளவிற்கு, அந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் ஒருவருக்குக்கூட நாங்கள் ஒதுக்கிய நிதியிலிருந்து பைக் கொடுக்கப்படவில்லை. ஒவ்வோர் ஆண்டும் எங்களுடைய நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயை பிடித்தம் செய்திருக்கிறீர்கள். ஆனால், நான் கொடுத்த லிஸ்ட்டிலிருந்து ஒருவருக்குக்கூட பைக் கொடுக்கவில்லை. எனவே, அதை சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து Scooter வழங்குவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். ஒவ்வொருவருக்கும் Scooter வழங்க வேண்டும் என்றால், முழுமையாக இரண்டு கால்களும் செயல்படாமல் இருக்க வேண்டும் என்று விதிகள்-norms இருக்கின்றன. தொகுதியில் எங்கு சென்றாலும், எல்லா பக்கத்திலிருந்தும் ஸ்கூட்டர் கேட்கிறார்கள். விதிமுறைகளுக்கு உட்படாதவர்கள்கூட கேட்கிறார்கள்; அந்தமாதிரியான ஒரு சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில், உறுப்பினரின் தொகுதியில் உள்ளவர்களுக்குத்தான் கொடுத்திருப்பார்கள். (குறுக்கீடு) நீங்கள் அந்த நிகழ்ச்சிக்குப் போய் இருக்க மாட்டீர்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து,

உங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, உங்கள் தொகுதிக்குட்பட்டவர்களுக்குத்தான் கொடுத்திருப்பார்கள். அதனால், சரியான முறையில்தான் நிதியொதுக்கீடு செய்து ஸ்கூட்டர் வழங்கப்படுகிறது. விதிமுறைகளுக்குட்பட்ட அத்துணைபேருக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் ஸ்கூட்டர் வழங்கப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, தனியாக சமூக நலத் துறையின் மூலமாகவும் ஸ்கூட்டர் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நிதியில். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் வேலையில் இருப்பவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து ஸ்கூட்டர்கள் வழங்கப்படுகின்றன.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று சக்கர ஸ்கூட்டர்கள் வழங்குவது குறித்து மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.* Medically, I want to say something. *அதாவது, இரு கால்கள் பாதிக்கப்பட்டவர்களும், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுமாக இருக்க வேண்டும். ஸ்கூட்டர் கொடுக்கும்போது, அவர்கள் அதைப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு, அவர்களுடைய இதர உறுப்புகள் சரியாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஸ்கூட்டர் கொடுப்பது என்பது வேறு.*

அவர்களுக்கு ஸ்கூட்டரைக் கொடுத்த பிறகு, அந்த மாற்றுத் திறனாளி, அந்தப் பலனை அடைந்து, பயன்படுத்தக்கூடிய அளவில் இருக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளினுடைய ஒரு குறிப்பிட்ட எலும்போ அல்லது சதையோ-associated Brain development-அதாவது neurological deficit இருக்கும்போது, அவர்களுக்கு Scooter-ஐக் கொடுத்தாலும், அது பயனுள்ளதாக இருக்காது. மருத்துவர்கள் குழு ஆய்வு செய்து, அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

2006-2011 ஆம் ஆண்டு வரை, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,335 பயனாளிகள் மட்டுமே பயன் பெற்றார்கள். (குறுக்கீடுகள்) அதையும் நான் சொல்கிறேன். 3 கோடியே 13 இலட்சம் ரூபாய் மட்டும்தான் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கிய நிதி ரூபாய் 21 கோடியே 46 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 3,707 பயனாளிகளுக்கு ஒதுக்கிய நிதியொதுக்கீடு ரூபாய் 21 கோடியே 46 இலட்சம் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிக அக்கறை செலுத்தி, அதிகமான பயனாளிகளைப் பயன்பெற வைக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

பிற்பகல் 1-35

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் வழங்க அனுமதி கோருகிறேன். அதைப் பரிந்துரை செய்யக்கூடிய அந்த அதிகாரத்தையும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச ஸ்கூட்டர் வழங்கப்படுகிறது. தகுதி உடையவர்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால், அவர்களுக்கும் அது வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 2011-2012 ஆம் ஆண்டு 1 கோடியே 75 இலட்சம் ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாக உயர்த்தினீர்கள். 5 ஆண்டுகளாக அது இரண்டு கோடி ரூபாயாகத்தான் இருக்கின்றது. ஆண்டுக்காண்டு பொதுப் பணித் துறையில் schedule of rates கூடிக்கொண்டே போகிறது; வருடாவருடம் கூடுகிறது. அதனால் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களோடு கலந்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை இன்னும் கூடுதலாக உயர்த்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நியமன எம்.எல்.ஏ-வையும் சேர்த்து 235 உறுப்பினர்களுக்கும் சேர்த்து நான் இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேசுங்கள். உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் உரையை ஆரம்பித்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன, இப்போது 11 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், 235 உறுப்பினர்களுக்கும் சேர்த்து

கோரிக்கையை வைப்பதாகச் சொன்னார்கள். உங்கள் கட்சிக்குத்தான் நீங்கள் கொறடா, எங்கள் கட்சிக்கும் சேர்த்து நீங்கள் கொறடா இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் பேசி முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை என்பது உயர்த்தப்பட வேண்டும். 2,500 ரூபாயாக அவர்களுடைய உதவித் தொகையை மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கண் பார்வையற்றவர்களில் அதிகம் பேர் கல்வியில் நாட்டம் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களுக்கு, மாவட்டந்தோறும் இருக்கக்கூடிய நூலகங்களில் பிரெய்லி மொழியில் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கலாம். கண் பார்வையற்றவர்களும் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நூலகங்களை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாநகராட்சி மேயர் பதவிகளில், 50 சதவிகிதத்தை பெண்களுக்கு உறுதி செய்யும் விதத்தில் இன்னும் ஒரு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். இப்போது* indirect election *வந்துவிட்டால், மெஜாரிட்டி, மைனாரிட்டி வந்துவிடும் அல்லவா?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உங்கள் குறிப்பு முடிந்துவிட்டதா? வேறு ஏதோ சப்ஜெக்ட்டுக்கு போய்க் கொண்டிருக்கின்றீர்கள். உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலில் போட்டியிட மட்டுமல்ல; பெண்களுக்கு எல்லா வகையிலும் ஏன், சட்டமன்றம், பாராளுமன்றம் எல்லாவற்றிலும் 50 சதவிகித இட ஒதுக்கீடு வருவதற்கு இங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்றி பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இன்று அதைச் சொல்லியே ஆக வேண்டும். 33 சதவிகிதமே வரவில்லை, 50 சதவிகிதம் எப்போது வரப் போகிறது என்ற கேட்காதீர்கள். நேரடியாக 33 சதவிகிதத்தைத் தாண்டி, 50 சதவிகிதம் கேட்டுவிடலாம். ராஜீவ் காந்தி வளர் இளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாடு திட்டத்தில், இணை*

2016 ஆகஸ்ட் 10] [திருமதி எஸ். விஜயதரணி]

உணவு உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திரா காந்தி மகப்பேறு நல உதவித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், மகப்பேறு திட்டம், இளம் பெண்கள் திட்டம் என பல சிறந்த திட்டங்கள் எங்களுடைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டன. தமிழ்நாட்டிலும் முறையாக இவை செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்களை மேலும் செம்மைப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், இந்தத் திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மத்திய அரசு முயற்சி செய்து வருகிறது. அதைத் தடுக்கும் விதத்தில் இந்த அவையில் ஓர் ஒருமித்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, வருவாய்த் துறை மூலமாக செயல்படுத்தப்படும் இந்திரா காந்தி மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இடம்பெறும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் 2 ஆயிரம் ரூபாயாக ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசியதைப் பார்த்தீர்கள் அல்லவா? எல்லோரும் 10 நிமிடங்களில் பேசி முடித்து விட்டார்கள். (குறுக்கீடு) 5 நிமிடங்கள் எல்லாம் கிடையாது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ப. மனோன்மணி அவர்கள். (குறுக்கீடு)

அப்படியென்றால் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1-40

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பேசவே விடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் அவ்வாறெல்லாம் சொல்லக் கூடாது. எவ்வளவு நேரம் ஆகிவிட்டது என்பதைப் பாருங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கு வரிகள்கூட முடிக்கவில்லை. அதற்குள் நீங்கள் இவ்வாறு செய்கிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் நன்றி கூறி உரையை முடிக்கலாம்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கிய பாயின்ட்டுகளை மட்டும் சொல்லி உரையை முடித்து விடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி கூறி, உரையை முடிக்கலாம்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இதற்காவது அனுமதி அளியுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை கெல்லிஸிலுள்ள அரசு கூர்நோக்கு இல்லங்களிலிருந்து சிறுவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தடுக்கும் விதத்தில், ஆற்றுப்படுத்துவதற்கு உரிய பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த இல்லங்களில் கண்காணிப்புடன்கூடிய சமூக சிந்தனையுள்ள பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் அந்தப் பயிற்சியில் சிறந்தவர்களாக இருப்பார்களேயானால், இந்தக் கூர்நோக்குப் பள்ளிகளில் பிரச்சினைகள் ஏற்படாது. ஆகையால், அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இத்துடன் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு* point-*ஐ மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். வறிய நிலையிலுள்ள ஆதரவற்ற குழந்தைகளை அரசு மானிய உதவிமூலம் செயல்படும் இல்லங்களில் சேர்க்க பாதுகாவலர்களின் ஆண்டு வருமான உச்சவரம்பை ஒரு இலட்சம் ரூபாய் என உயர்த்த வேண்டும். அரசு பெண் பணியாளர்களுக்கான பேறுகால விடுப்பினை கடந்த ஐந்தாண்டு காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 3 மாதங்களாக இருந்ததை 6 மாதங்களாக உயர்த்தினார்கள். பேறுகால விடுப்பினை இனி 9 மாதங்களாக உயர்த்தி வழங்க வேண்டும். குறிப்பாக இந்தப் பேறுகால விடுப்பு, தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கு, முழுமையாக*

வழங்கப்படாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க அரசுத் துறை Inspectors-கண்காணிப்பாளர்கள் மூலம் அவற்றைக் கவனித்து, அந்தப் பேறுகால விடுப்பு மட்டுமல்ல, தனியார் துறைகளில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்வகையில், கண்காணிப்பாளர்கள்மூலம் அடிக்கடி ஆவணங்களை ஆய்வு செய்வது மட்டுமல்ல, தனியார் துறைகளில் இரவு நேரங்களில் பணியாற்றக்கூடிய பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் விதத்தில் frequent-ஆக Inspectors கண்காணிப்புப் பணியை செய்வார்களேயானால், பெண்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள் தவிர்க்கப்படும். அதேபோல், Domestic Violence Act-ல் சில திருத்தங்களைக் கொண்டு வந்து, அந்தச் சட்டத்தில் இன்னும் பெண்களுக்கு நியாயம் கிடைக்கும்விதத்தில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்,

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன், இன்னும் ஒரே ஒரு பாயின்ட்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நன்றி சொல்லி உரையை முடிக்கிறீர்களா அல்லது நான் வேறு ஒரு உறுப்பினரை அழைக்கட்டுமா?

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, last point. குறிப்பாக, விவாகரத்து முடிந்தவுடன் பெண்களுக்கு maintenance தொகையை அரசுத் துறையில் பணிபுரியும் கணவர்களாக இருந்தால், பிடித்தம் செய்து கொடுத்து விடுகிறார்கள். ஆனால், தனியார் துறைகளிலோ அல்லது வேறு தொழிலாளிகளாகவோ இருப்பவர்களுக்கு maintenance தொகையை பிடித்தம் செய்து கொடுக்கக்கூடிய அளவிற்கு செயல்பாடுகள் இன்றைக்கும் வழக்காடு மன்றங்களில் உறுதி செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு ஓர் ஆலோசனைக் குழுவைப் போட்டு, அரசு சமூக நலத் துறையிலிருந்து முக்கியமான நபர்களை ஆலோசனைக் குழுவில் நியமித்து, அந்தச் சட்டத்தை இன்னும் வலுப்படுத்தும் விதத்தில், வழக்காடு மன்றங்களில் நேரடியாக அந்த maintenance தொகையை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக ஏழைப் பெண்களுக்கு மிகவும் குறைவாக, அதாவது ரூ.750/-தான் இன்றும் வழங்கப்படுகிறது. ரூ.750/-ஐ

வைத்துக்கொண்டு ஏழைப் பெண்கள் இன்று வாழ முடியாத சூழ்நிலை உள்ளது. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: ஒரே ஒரு பாயின்ட். கடைசியாக, ஒரே ஒரு பிரச்சினைதான். ரூ.1,000 நிதி உதவி கொடுத்தாலும்கூட, விவாகரத்து முடிந்த பெண்களுக்கு அந்த post divorce certificate—ஆதரவற்ற பெண் என்கின்ற சான்று கிடைப்பதில்லை. எனவே, வழக்காடு மன்றங்களில் ஏழைப் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகையானது, கணவனிடமிருந்து கிடைப்பதை உறுதி செய்யும் விதத்தில் நம் தமிழக அரசின் சட்டங்கள் அமையப் பெற வேண்டும் என்று கேட்டு, எனது தொகுதிக் கோரிக்கைகளை பதிவு செய்துகொள்ளுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் மன வளர்ச்சி குன்றியோர் பள்ளிகளில் முட நீக்கியியல் ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும். அரசு மற்றும் அரசு சார்பு இல்லங்களிலும் முட நீக்கியியல் வல்லுனர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். சமூக நலத் துறைமூலம் வழங்கப்படும் திருமண உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவக் கால அளவைத் தளர்வு செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி அரசு மருத்துவமனை வளாகத்தில் புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்க வேண்டும். அங்கன்வாடி மையங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், mineral water வழங்க வேண்டும். குமரி மாவட்டத்தில் அங்கன்வாடி மையங்களில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். விளவங்கோடு தொகுதியில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கி பணி வரன்முறை செய்ய வேண்டும். சத்துணவு மாணவர்களுக்கு மார்த்தாண்டம் தேனும், ஆவின் பாலும் வழங்க வேண்டும். நடமாடும் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விளவங்கோடு அங்கன்வாடி மையக் கட்டடத்தை இடித்துவிட்டு, சட்டமன்ற உறுப்பினர் நிதியில் கட்டடம் கட்ட ஆவன செய்ய வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ வசதி; மாற்றுதிறனாளிகளுக்கும் உடன் வருபவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகையை உயர்த்த வேண்டும். பொது இடங்களில் சாய்தளத்துடன்கூடிய பிரத்யேக கழிப்பறை வசதி செய்து தர வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்யேக முறையில் பேருந்துகள் வடிவமைக்கப்பட வேண்டும். தகுதியுள்ள 40% ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்க வேண்டும். பார்வையற்ற TET தேர்ச்சி பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசிரியர் பணியிடம் வழங்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் ஒரு முறை கலந்தாய்வு நடத்தி தொழிற்பயிற்சி வழங்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட தலைநகரங்கள் மற்றும் தாலுகா அளவில் தொழிற்பேட்டை துவங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநகராட்சிகளில் மேயர் பதவிகளை 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து, அதற்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றைக்கும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மட்டுமல்ல, பெண்களுக்கான அனைத்து சட்டங்களையும் கொண்டு வந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கான 50 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். மாநகராட்சி மேயர் பதவிகளைப் பொறுத்தவரையில், 2011 ஆம் ஆண்டு தேர்தலிலேயே 50 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியதால்தான் தற்பொழுது இருக்கின்ற 12 மேயர் பதவிகளில் 7 மேயர் பதவிகளை பெண்கள் வகித்து வருகிறார்கள். சட்டம் கொண்டு வருவதற்கு முன்பே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 மேயர் பதவிகளில் பெண்களைப் பணியமர்த்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வருகின்ற உள்ளாட்சித் தேர்தலிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 12 மேயர்களில் பாதி பேருக்குமேல் பெண்கள் வர இருக்கிறார்கள். மேயர் பதவிகளுக்கு மட்டுமல்ல,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2016 ஆகஸ்ட் 10

124 நகராட்சிகளிலும் பாதி பேர் பெண்கள்; இன்றைக்கு 12,524 ஊராட்சித் தலைவர்களில் பாதி பேர் பெண்கள்; 528 பேரூராட்சிகளிலும் பாதி பேர் பெண்கள்; 388 யூனியன்களில், வருகின்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பாதி பேர் பெண்கள். ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களுக்கான சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், தமிழகத்தில் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை அமல்படுத்துவதால் கிராமப்புற மக்களில் 75 சதவிகிதமும், நகர்ப்புறங்களில் வாழ்கிறவர்களில் 50 சதவிகிதம் பேர் மட்டுமே பயன்பெறும் வகையில் அமைந்துள்ள மத்திய அரசின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில திருத்தங்களைச் செய்து, அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டதற்குப் பின் அதை அமல்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்துள்ளார்கள். அதன்படி, மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வரும் B.P.L. மற்றும் A.P.L. குடும்ப அட்டைகளுக்கான அரிசி ஒதுக்கீட்டினை அதே விலையில் தொடர்ந்து வழங்கிட வேண்டுமென்கிற கோரிக்கையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வைத்திருக்கிறார்கள்.*

அதுமட்டுமல்லாமல், உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மானிய விலையில் உணவுப் பொருட்கள் 3 ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை, 10 வருட காலத்திற்கு மானிய விலையில் உணவுப் பொருட்களை

வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதேபோல, நடைமுறையிலுள்ள அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில் அதே நடைமுறையைப் பின்பற்றிட மேற்கண்ட ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், திட்டப் பயனாளிகளை அடையாளம் கண்டறிய தரப்பட்டுள்ள காலக்கெடு போதுமானதாக இல்லை. தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்ட நடைமுறைகள் அனைத்தையும் கணினிமயமாக்கி, தேசிய மக்கள்தொகை பதிவேட்டின்படி குடும்ப அட்டை விவரங்களை ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணி முடிவுற்ற பின்னரே, உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி பயனாளிகளை அடையாளம் காண முடியும்; எனவே, தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைகளை நிலைநாட்டிடவும், தமிழ்நாட்டின் பெருமை எனப்படும் 'அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை' சீர்குலைக்கும் வகையிலுள்ள நடைமுறை சாத்தியமற்ற காலவரையறையை நிர்ணயிப்பது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மாதந்தோறும் ஓய்வூதியத் தொகை கிடைத்திட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு முன்பாகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வருவாய்த் துறைமூலம் செயல்படுத்தப்படுகிற மாதாந்திர ஓய்வூதியத் திட்டத்தில் 22-3-2016 அன்று சில விதிமுறைகளைத் தளர்த்தி அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அரசாணையின் அடிப்படையிலே, மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் 'ஆதரவற்றோர்' என்கின்ற அந்த விதிமுறை தளர்த்தப்பட்டு, 60 சதவிகிதம்*

மற்றும் அதற்கு மேல் ஊனத்தால் பாதிக்கப்பட்டவராக இருக்க வேண்டுமென்பதை, 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் ஊனத்தால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் போதும் என்று விதிமுறையைத் தளர்த்தியுள்ளார்கள். இதனடிப்படையிலே 2015-2016 ஆம் நிதியாண்டில் 2,65,777 மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகள்மீது கருணை கொண்டு இத்திட்டத்திற்காக 324.15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் வாழும் ஒன்பது கோடி தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் மாதரசியே, (மேசையைத் தட்டும் ஒலி) உலகின் கடைக்கோடி மூலையில் ஒரு தமிழன் பாதிக்கப்பட்டாலும், இங்கிருந்து அவனையும் காத்திடும் ஆதிபராசக்தியாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை மலர்களாகத் தூவி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தில்லையம்பதி வாழும் இறைவனைத் துதிப்பதில் சைவருக்கு மகிழ்ச்சி; ஸ்ரீரங்கம் ரெங்கநாதரைத் துதிப்பதில் வைணவருக்கு மகிழ்ச்சி; மாதர்குல மாணிக்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழினைச் சொல்வதில் எங்களுக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

உண்மை வாளேந்தி, உயர் கொள்கை தேர் ஏறி, பவனிவர புறப்பட்ட பகல் நிலவே! வாள் சுழற்றும் களம்யாவும், வெற்றி வாகை சூடிடும், புறநானூற்றுத் தாயே! வானில் மின்னிடும் நட்சத்திரங்கள் ஆயிரம், ஆயிரம் ஆயினும், மனிதன் நேசிப்பது நிலவை மட்டும்தான். வையத்தில் எத்தனை மாதர் இருந்தாலும்,

நம்மை நேசிப்பது, நம்மைக் காப்பது நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

1974 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் தேதி சேலம் மாவட்டம், பூலாவாரியில் என்னுடைய தந்தையார் பழனியப்பன் அவர்களையும், எங்கள் குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசான, என்னுடைய அண்ணன் பூலாவாரி சுகுமாறன் அவர்களையும் ரத்த வெறிகொண்ட அரசியல் எதிரிகள் சுட்டுக் கொலை செய்தனர். தந்தையையும், அண்ணனையும் இழந்த நாங்கள் திகைத்து நின்ற நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் காக்கும் கடவுளாக நின்று, எங்களை இராமாவரம் தோட்டத்திற்கு அழைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) என்னை தனது மடியில் அமரவைத்து ஆறுதல் கூறி, "கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு தந்தையாகவும், தமையனாகவும் இருந்து உங்கள் குடும்பத்தையும் காப்பேன்" என்று ஆறுதல் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்குப்பின் புரட்சித் தலைவரின் வழியில் வந்த எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கள் குல தெய்வமாக நின்று, எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் வழிகாட்டினார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறளை இங்கு குறிப்பிட்டு, மீண்டும் ஒருமுறை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது கோடானு கோடி நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பூலாவாரி சுகுமாறனின் தங்கையான, கடந்த 13 ஆண்டுகளாக பனமரத்துப்பட்டி ஒன்றிய கழக இணைச் செயலாளராக கழகப் பணியாற்றிய என்னை, வீரபாண்டி தொகுதி கழக வேட்பாளராக அறிவித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற கழக செயல் வீரர்களுக்கு ஆணையிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, வெற்றிக்குப் பாடுபட்ட கழக நிருவாகிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், எனக்கு வாக்களித்த வீரபாண்டி

சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியினை இம்மாமன்றத்தின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி"

பள்ளிகொண்டு அருள் பாலிக்கும் ஸ்ரீரங்கநாதரும், ஸ்ரீரங்கநாயகி தாயாரும் ஆட்சி செய்யும் பொன்னி நதி பாயும், புண்ணிய பூமியாம் ஸ்ரீரங்கத்தில் உதித்திட்ட எங்கள் குலதெய்வமே! அந்த ஸ்ரீரங்கம் தந்த எங்கள் சீதனமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! உங்கள் கருணைக்கு நன்றி சொல்ல எனக்குக் காலம் போதாது. நானும், எங்கள் வம்சமும் எங்கள் உயிர் உள்ளவரை உங்களுக்கு நன்றியுள்ளவர்களாகத் திகழ்வோம் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழகும், அறிவும், ஆற்றலும் ஒருசேர அமையப் பெற்ற எங்கள் வரலாற்றுப் பெட்டகம், (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முன்பு எனது கன்னிப் பேச்சினைப் பேச வாய்ப்பளித்த, எங்கள் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சினை ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே, பூமியில் பிறந்திட்ட குழந்தைக்கு பரிசுப் பெட்டகம், நடக்கின்ற வயதில் விலையில்லா காலணி, படிக்கின்ற வயதில் பாடப் புத்தகம், தூக்கிச்செல்ல புத்தகப் பை, உடுத்திக்கொள்ள சீருடை, கணித்துக்கொள்ள கணிதப்பெட்டி, மிதித்து ஓட்டிட மிதிவண்டி, அறிவை வளர்த்துக்கொள்ள மடிக்கணினி, படித்து முடித்தவுடன் பள்ளியிலேயே வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்யும் வசதி, இவை அனைத்தையும் அள்ளித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை, எளிய பெண்களின் திருமணத்திற்காக தாலிக்கு வழங்கப்படும் தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, திருமண நிதி உதவி, இப்படி எண்ணற்ற திட்டங்கள் தந்து, தமிழகத்தைக் காத்து நிற்கும் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு, 37 இடங்களில் பெரும் வெற்றியைத் தந்து, இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் மூன்றாவது மிகப் பெரிய கட்சி என்ற பெருமையினை மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பெருமையுடன் வழங்கி, தமிழக மக்கள் தங்கள் நன்றிக் கடனை வெளிப்படுத்தினர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்கள் நலத் திட்டங்கள் தொடர வேண்டும் என 32 ஆண்டுகளுக்குப் பின்னர், தமிழகத்தைத் தொடர்ந்து இரண்டாம் முறையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே தமிழகத்தின் முதலமைச்சராக ஆள வேண்டும் என்று வெற்றிக் கனியை பரிசாகத் தந்து மகிழ்ந்தனர் தமிழக மக்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி கழக உறுப்பினர்களின் உன்னதத் தலைவியாகவும், எங்களுக்கெல்லாம் அரசியல் ஆசானாகவும் விளங்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் எங்களுக்கு அரசியலில் குரு. "குரு பார்வை பட்டால் கோடி புண்ணியம்" என்பார்கள். ஆம், குருவான மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வை படுவதால் எனக்கும் கோடி புண்ணியம் கிடைத்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் அரசியல்வாதி. அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பவரே நாட்டுக்கு நல்ல தலைவர் என்று கூறுவர். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களின் எதிர்கால நலனில் அக்கறைகொண்டு தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையையும், சமூக நலத் துறை செயல்படுத்தி வரும் அனைத்துத் திட்டங்களையும் மனதாரப் பாராட்டி பெருமையடைகிறேன்.

இன்றைய காலகட்டத்தில் பிறக்கின்ற பிள்ளை பெண்ணாக இருந்தால், அவளை வளர்த்து ஆளாக்கி, திருமணம் செய்து வைப்பது பெரும் கஷ்டம் எனக் கருதி, கருவிலேயே அழிக்கும் பழக்கத்தைத் தடுத்து, பிஞ்சுக் குழந்தைகளுக்குக் காவல் தெய்வமாக, "காஞ்சி காமாட்சியாய்" காத்து நின்று, 'தொட்டில் குழந்தைத் திட்டம்' தந்து, உலக நாடுகள் வியந்து போற்றும் எங்கள் அன்னையின் கருணையே, கருணை! (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னை தெரசா அவர்களால் அகம் மகிழ்ந்து பாராட்டப்பட்ட எங்கள் அன்னையே! சமூக நீதி காத்த வீராங்கனையாக, ஏழையெளிய மக்களின் வயிற்றுப் பசி போக்கிட அம்மா உணவகம் தந்து, வரலாற்றுச் சாதனை படைத்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்! தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினைகளான காவேரி நீர்ப் பிரச்சினையாகட்டும், தொல்லை தந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையாகட்டும், கச்சத் தீவுப் பிரச்சினையாகட்டும், உச்ச நீதிமன்றம் சென்று உரிமையை நிலைநாட்ட ஓயாது உழைக்கின்ற உத்தமத் தலைவி எங்கள் அம்மா அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) திக்கெட்டும் புகழ் மணக்கும் மக்கள் நலத் திட்டங்கள் தந்த அன்னை திரிபுரசுந்தரி எங்கள் அம்மா அவர்கள்! மகளிர் நலம் காத்து, மகத்தான வெற்றி கண்ட மதுரை மீனாட்சி எங்கள் அம்மா அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு 44 வகையான சுய வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு, கூட்டுறவு வங்கிகள்மூலம் மிகக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. அகில இந்திய அளவில் தமிழகத்தில் மட்டும்தான் அதிக மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், நமது பொருளாதாரத்தில் அவர்களது பங்கை அதிகரிக்கவும் செய்திட்டவர் ஏழைகளின் காவலர், எங்கள் அம்மா!

2011-2012 ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகள் தாங்கள் பெறும் கடன்களை குறித்த காலத்தில் வங்கிக்குத் திருப்பி செலுத்தும்பட்சத்தில், அவர்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வட்டி முழுவதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசே ஏற்றுக்கொள்கிறது. இச்சலுகை வாயிலாக ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இச்சலுகை அளிக்கும் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் சமூக நலத் துறை மூலமாக மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை ரூ.500/- முதல் ரூ.3,500/- ஆக இருந்ததை இருமடங்காக உயர்த்தி, ரூ.1,000/- முதல் ரூ.7,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகளுக்கான வங்கிக் கடனுக்கான மானியம் ரூ.3,000/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. முதன்முறையாக மன வளர்ச்சி குன்றிய, செவித்திறன் பாதிப்புடைய மற்றும் பார்வை குறைபாடுடைய ஆறு வயதிற்குட்பட்ட இளம் சிறுவர்களுக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் அமைக்கப்பட்டு, சத்துணவுடன்கூடிய இணை உணவு வழங்கப்பட்டு வருவது பெருமைக்குரியதாகும்.

நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனம்மூலம் கிராமங்களுக்குச் சென்று பயிற்சி வழங்குவதுடன், பாதிக்கப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் சென்றும் பயிற்சி வழங்கப்படுகிறது.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, நீங்கள் பேசுங்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மூளை முடக்குவாதம், முதுகுத் தண்டுவடப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு வருவது வரவேற்புக்குரியது. திருமாங்கல்யத் திட்டத்தின்கீழ் 8 கிராம் தங்கம் வழங்கப்படும் என அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிப்படி, ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, அரசாணை வெளியிட்டு, வரலாற்றுச் சாதனை படைத்தவர்கள் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் திருமண திட்டங்களுக்கும் நடப்பாண்டில் 703 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்துள்ளவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் தனி அறை கொடுத்த தங்கத் தாரகை எங்கள் அம்மா மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளுக்காக, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் போதிய நிதி ஒதுக்கியுள்ளவர்தான் எங்கள் மாசற்ற அன்னை. இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 1,000 விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கிடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமான, சத்துணவுத் திட்டத்தை சீரும், சிறப்புடன் மேம்படுத்தி, கலவை சாதம் மற்றும் முட்டைகள் வழங்கி, உணவளிக்கும் அன்னபூரணியாக மேற்படி வரலாற்றுச் சாதனையைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி வளர்ச்சிக்குத் தேவையான, பின்வரும் திட்டங்களை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கீழ்க்கண்ட எனது தொகுதியைச் சேர்ந்த கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்:

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வீரபாண்டி தொகுதி, எளம்பிள்ளையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெருமளவு துணி உற்பத்தி நடைபெற்று வருகிறது. எளம்பிள்ளையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஜவுளிப் பூங்கா அமைத்துத் தந்தால், துணி உற்பத்தித் தொழில் வளர்ச்சி அடைந்து, நெசவாளப் பெருமக்கள் முன்னேற்றம் அடைவார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, எளம்பிள்ளையில் ஒரு ஜவுளிப் பூங்கா அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தொன்மையான சித்தர் கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இக்கோயிலைப் புதுப்பித்துத் தருவதுடன், சித்தர் கோயிலை சுற்றுலாத் தலமாக்கித் தரும்படியும், சித்தர் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மூலிகைச் செடிகளைப் பராமரித்து, மக்களுக்குப்

பயன்படும் வகையில் ஒரு மூலிகைப் பண்ணை அமைத்துத் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். கொண்டலாம்பட்டி மற்றும் மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, இரண்டு புதிய மேம்பாலங்களைப் பள்ளிக்கூடத்திற்கு முன்பாக அமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன். பனமரத்துப்பட்டி பகுதியில் பெருமளவு மல்லிகைப் பூக்கள், ரோஜாப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மல்லிகை, ரோஜாப் பூக்களைக் கொண்டு சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அரசின் சார்பில் அமைத்துத் தர வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஜல்லூத்துப்பட்டியிலிருந்து மலைவாழ் மக்கள் வசிக்கும் ஜருகு மலைக்கு 7 கி.மீ. தொலைவிற்கு சாலை அமைத்து, மலைவாழ் மக்களின் நலன் காத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எஸ். பாப்பாரப்பட்டி ஏரியினைத் தூர்வாரித் தந்து, அதிக அளவில் தண்ணீர் தேக்கி வைத்திட வகை செய்து தரும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உத்தமசோழபுரத்தில் உள்ள அருள்மிகு கரபுரநாதர் கோயிலுக்கு சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், தமிழ் மூதாட்டி ஔவையார் வேண்டுகோளை ஏற்று வருகை தந்து, இறைவனை வழிபட்டுச் சென்றதாக வரலாற்றில் கூறப்படுகிறது. இத்திருக்கோயிலைப் புனரமைத்து, தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு தனியே ஒரு கோயில் அமைத்துத் தரும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி தொடர்பான கோரிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்திட வேண்டுமெனவும், இதனை இப்பேரவையில் பதிவு செய்திடவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொண்டு, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் சிறப்புமிக்க இந்த அவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக விளங்கி, அருள்பாலிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, நன்றியினைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

பிற்பகல் 2-05

***திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தமிழுக்கோ முதல் வணக்கம். பொங்கும் தமிழ்நாட்டிற்கோ மறு வணக்கம். கருவறையில் எனைத்தாங்கி, புவியறையில் மிதக்கவிட்ட காலச் சுமைதாங்கி என் தாய்க்கும், சான்றோனாக்கலாம் என்று பள்ளிவரை கொண்டு சேர்த்த என் தந்தைக்கும் அன்பு வணக்கம். குக்கிராமத்தில் பிறந்த என்னையும் அடையாளம் கண்டு, சட்டமன்ற உறுப்பினராக்கிய சமத்துவப் பெரியார் சரித்திர நாயகர், அன்புத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், விடியல் மீட்புப் பயணத்தின் விடிவெள்ளி, இளைஞர்களின் எழுச்சி நாயகர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் பாசத் தளபதியார் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணிக் கட்சி நிருவாகிகளுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் கூறி என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் என்பது சராசரி மனிதனின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகியவற்றைப் பூர்த்திசெய்யும்பொருட்டு செயல்படுத்தக்கூடியதுதான். அதன்பொருட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்றும், பிறகு ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் என்றும் 20 கிலோ அரிசியை வழங்கி, அடித்தட்டு ஏழையெளிய மக்களின் பசிப்பிணியைப் போக்கி பட்டினிச் சாவே இல்லாத தமிழகத்தை உருவாக்கினார்.

தமிழர் திருநாளையும், தமிழ்ப் புத்தாண்டையும் இணைத்தே கொண்டாடும் வகையில் இலவச வேட்டி சேலை வழங்கியவரும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்தான். மேலும், 3 ஆண்டுகளுக்கு மேல் புறம்போக்கு இடங்களில் குடியிருந்த

ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கியும், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முதன்முதலாக தமிழகத்தில் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்த பெருமைக்குரியவரும் தலைவர் கலைஞர் அவர்களே. மேலும், குடிசை மாற்று வாரியத்தை அமைத்துத் தந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கல்விக்குக் குரல் கொடுத்தவர்கள், பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தவர்கள், பாரதியார், பாரதிதாசன், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா.

'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு

மண்ணடிமை தீர்த்து வருதல் முயற்கொம்பே' என்றான் பாவேந்தன் பாரதிதாசன். அந்த வைர வரிகளைக் கருத்தில்கொண்டு பெண் கல்விக்கு வித்திட்டவர் தலைவர் கலைஞர் அவர்களே.

பெண்கள்தான் இந்த நாட்டின் கண்கள், பெண்களால்தான் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற காரணத்தால், பெண்கள் அடிப்படைக் கல்வியைப் பெற வேண்டுமென்று நினைத்து, அவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில், 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு கைம்பெண் மறுமணத் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்றோர் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வே.ரா. மணியம்மையார் விதவை மகள் திருமணத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் 8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு என்று படிப்படியாக கல்வித் தகுதிக்கேற்றவாறு நிதியுதவியையும் உயர்த்தி, இன்றைக்கு ஆண்களுக்கு இணையாக அனைத்துத் துறைகளிலும் பெண்களை மிளிரச் செய்தவரும் தலைவர் கலைஞர் அவர்களே.

அதுமட்டுமல்ல, பெண் கல்வியின்மூலம் பெண்களின் திருமண வயது நிர்ணயிக்கப்பட்டது. ஏழைப் பெண்களின் திருமணம் ஒரு கனவாகிவிடாமல் தடுத்த சாதனைப் பெட்டகமும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்கள் என்றால் சகமனிதர்களை கேலி பேசும் ஒரு வார்த்தை என்று நினைத்து, மாற்றுத் திறனாளிகள் என அறிவித்ததோடு, ஒரு துறையையே உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவரும் எங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே.

பிற்பகல் 2-10

மகளிர் சுய உதவிக் குழுக்கள் 1989-ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் முதன்முதலில் தருமபுரியில் தொடங்கப்பட்டு, அதன்பிறகு உள்ளாட்சித் துறை அமைச்சராக எங்களின் தளபதியார் பொறுப்பேற்றபின், தமிழகம் முழுவதும் 50,000 சுய உதவிக் குழுக்களை நிறுவி, பெண் சமுதாயத்திற்கு தன்னம்பிக்கையை உண்டாக்கிய அரசும், தலைவர் கலைஞர் அரசுதான் என்றால் அது மிகையாகாது. கல்விக் கண் திறந்த கர்மவீரர் காமராஜர் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதைத்தொடர்ந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமாக அது மாறியது. ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில்தான் சத்தான உணவாக மாற்றப்பட்டது. வாரம் 1 முட்டை, 2 முட்டைகள் என்று வழங்கப்பட்டு இப்போது 5 முட்டைகளுடன்கூடிய உணவாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையும் தலைவர் கலைஞர் அவர்களுக்கே உரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளின் நோக்கமே உலக அறிவை கிராமப்புறங்களில் கொண்டு சேர்ப்பதுதான் என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அந்த அடிப்படையில், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, அண்ணா நூலகம், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்து, தமிழக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்களே. கலைஞர் காப்பீட்டுத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பேறுகால உதவித் திட்டம் மற்றும் பேறுகாலங்கள் மற்றும் விஷக்கடி விபத்து போன்ற அவசரத் தேவைகளுக்கு இலவச 108 ஆம்புலன்ஸ் திட்டம் கொண்டு வந்தது தலைவர் கலைஞர் அவர்களும், அண்ணன் தளபதியார் அவர்களும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தமிழகத்தில், ஏன் இந்தியாவிலேயே முதன்முதலாக மகப்பேறு நிதியுதவித் திட்டம் ரூ.6,000/- வழங்கியதும், (மேசையைத் தட்டும் ஒலி) விதவைகள் என்ற சொல்லை மாற்றி, கைம்பெண் என்று பெயரிட்டு, கைம்பெண்கள் மறுவாழ்வுத் திட்டம், கைம்பெண் மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்ததும், மூன்றாம் பாலினமாக அறிவிக்கப்பட்ட அரவாணிகளின் பெயரை மாற்றி, திருநங்கையர் என்று பெருமைப்படுத்தியவரும் தலைவர் கலைஞர் அவர்களே! அவர்களுக்காக வாழ்வாதாரத் திட்டம் கொண்டுவந்து, வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றியவரும் தலைவர் கலைஞர் அவர்களும், அண்ணன் தளபதியார் அவர்களும்தான் என்பதை இந்த அவையில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, மனிதனை மனிதனே கை ரிக்ஷாவில் உட்கார வைத்து இழுக்கும் நிலையை மாற்றி, சைக்கிள் ரிக்ஷா வழங்கிய திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) சாதி, மதம் இனப் பாகுபாடின்றி, அனைத்து சாதியினரும் ஓரிடத்தில் வாழும் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமநோக்குத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம் இப்படி எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்தவர் அன்புத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அண்ணன் தளபதியார் அவர்களும்தான் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான இலக்கிய வளமும், பண்பாட்டுப் பெருமையும் கொண்ட தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்தவரும் தலைவர் கலைஞர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பொருட்டு, கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு 2010 ஜூன் 23 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை நடத்தப்பட்டு, தமிழில் படித்தவர்களுக்கு 20 சதவீதம் அரசுப் பணியில் வேலைவாய்ப்பு என்ற அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதைக் கூறி, என் தொகுதி மேம்பாட்டிற்கான கோரிக்கைகளைத் தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரத்தில், ஒருங்கிணைந்த பேருந்து

நிலையப் பணி நீண்ட காலமாக ஆரம்பிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான நிதியும் நகராட்சிக்குச் செலுத்தப்பட்டுள்ள நிலையில் உள்ளதால், அந்தப் பேருந்து நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனத்தில் ஆங்காங்கு சாக்கடை நீர் தேங்குவதால் சுகாதாரக்கேடு உள்ளது. எனவே, திண்டிவனம் நகர்ப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தருவதோடு, திண்டிவனம் அரசு பொது மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தருமாறு தங்கள்மூலம் கோரிக்கை வைக்கிறேன்.

திண்டிவனத்திலிருந்து செஞ்சி வழியாக கிருஷ்ணகிரி செல்லும் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட திண்டிவனம் நகர்ப் பகுதியில் நீண்ட காலமாக குடிநீர்ப் பிரச்சினை தொடர் கதையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் வட்டம், மீனவர்கள் நிறைந்த பகுதி மட்டுமல்ல; பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியாக உள்ளதால், பெண்களின் கல்வித் தரம் உயர மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் வட்டம், பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளில் 1989-ல் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்து இடிந்துவிழும் தருவாயில் உள்ளன. அவற்றைப் பழுதுபார்க்க இயலாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, அந்தத் தொகுப்பு வீடுகளை இடித்து, புதிய வீடுகள் கட்டித் தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட தமிழக எல்லையான புத்துப்பட்டு முதல் தாழங்காடு குப்பம் வரையிலான கடற்கரைப் பகுதிகளில் தூண்டில் வளைவுகளை ஏற்படுத்தி, அப்பகுதிகளில் வாழ்கின்ற

மீனவப் பெருமக்களை இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட சாரம் கிராமத்தில் 35 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் இலங்கை அகதிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் அலைக்கழிக்கப்படுகின்றனர். குடிநீர் விநியோகம், மின்னிணைப்பு முதலியன முறையாகக் கிடைக்கும் அந்தப் பகுதிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்காததற்கு என்ன காரணம் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதைப்போல், திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியில் போதிய தீயணைப்பு நிலையங்கள் இல்லாததாலும், போதிய ஊழியர்கள் இல்லாததாலும் பேரிடர் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஆவணிப்பூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்தால், அதனைச் சுற்றியுள்ள சுமார் 60 கிராமங்கள் பயன்பெறும். மேற்கண்ட கிராமங்களில் சுமார் 75 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். ஆகவே, ஆவணிப்பூர் பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றேன். மேலும், திண்டிவனம் தீயணைப்பு நிலையக் கட்டடம் மற்றும் தீயணைப்பு காவலர் குடியிருப்பு மிகவும் பழமையானது; இடிந்துவிழும் நிலையில் உள்ளது. எனவே, இவற்றை இடித்துவிட்டு, புதிய தீயணைப்பு நிலையம் மற்றும் தீயணைப்புக் காவலர் குடியிருப்பைக் கட்டித் தருமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியத்தில் 29 புதிய அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்கள் இல்லாத நிலை உள்ளது. அதேபோல திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்திலும், 31 புதிய அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம் இல்லை. எனவே, மேற்கண்ட மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மையங்கள் மரத்தடியிலும், இரவல் கட்டடங்களிலும், பிற அரசுக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அவற்றைத் தவிர்க்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டிவனம் நகரில் இயங்கிவரும் வேளாண்மை மற்றும் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி மையத்தில் வேளாண்மை சார்ந்த பாடப் பிரிவில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பு

கல்லூரி புதியதாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இதுவரை எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் அண்ணன் பாசத் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிட்டார். உறுப்பினரது உரையின் இடையில் குறுக்கீடு செய்யவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உள்ளாட்சித் துறை தொடர்பான பல கோரிக்கைகளையும், அவர்களுடைய ஆட்சியில் செய்ததாக சிலவற்றைப் பற்றியும் இங்கே சொன்னார்கள். பேருந்து நிலையத்தைப் பற்றிச் சொன்னார்கள். திண்டிவனம் நகராட்சியில் இரண்டு இடங்கள், வக்ஃபு போர்டு இடமும், இன்னொரு இடமும் தேர்வு செய்யப்பட்டு, அதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் எல்லாம் இருந்தன என்பது அனைவருக்கும் தெரியும். இன்றைக்கு, அதில் ஒரு இடம் முடிவாகியிருக்கிறது. அதைப்போல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,* ‘C’ Grade *பேருந்து நிலையமாக இருந்ததை,* ‘A’ Grade *பேருந்து நிலையமாக ரூ.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்காக ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில், கூடிய விரைவிலே, கண்டிப்பாக அந்தப் பேருந்து நிலையம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

குடிநீர்ப் பிரச்சினையை பற்றிச் சொன்னார்கள். குடிநீர்ப் பிரச்சினைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், திண்டிவனத்திற்குட்பட்ட, திண்டிவனம் நகராட்சி மற்றும் விரிவடைந்துள்ள பகுதிகளிலே குடிநீர்த் திட்ட செயலாக்கத்திற்காக ரூ.52.44 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு வேலைகள் நடைபெற்று

வருகின்றன. 2017 ஆம் ஆண்டிலே அந்தத் திட்டம் முடிவடைந்து ஒரு நபருக்கு 135 LPCD *அளவிற்குக் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, சுய உதவிக் குழு பற்றிச் சொன்னார்கள். சுய உதவிக் குழுவைப் பற்றி முதலிலேயே நான் பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் சுய உதவிக் குழு தருமபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நிறைய விளக்கங்கள் சொல்லிவிட்டேன். அதற்கான விளக்கத்தை முன்பே கேட்டிருப்பார்கள் என நினைக்கிறேன். ஆகவே, அதற்குள்ளே போக விரும்பவில்லை.

பிற்பகல் 2-20

அதைப்போல, செம்மொழி மாநாட்டைப் பற்றிச் சொன்னார்கள். செம்மொழி மாநாட்டைப் பற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறேன். செம்மொழி மாநாடு, கோயம்புத்தூரில் எப்படி நடைபெற்றது? அது எங்கள் மாவட்டம். அது எப்படி நடைபெற்றது என்பது குறித்து எல்லோருக்கும் தெரியும். அது அவர்களுடைய குடும்ப மாநாடாக நடைபெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) அதை விட்டுவிடுங்கள். அந்த சப்ஜெக்ட்டுக்குள்ளே நான் போகவில்லை. (குறுக்கீடுகள்) இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டி.வி. கொடுத்தது பற்றிப் பேசினார்கள். (குறுக்கீடுகள்) டி.வி.-யை எல்லோருக்குமா கொடுத்தார்கள்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *இல்லையில்லை, நானும் இதுபற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அவையெல்லாம் இங்கே பதிவாகியிருக்கின்றன. அதைத்தான் நான் சொல்கிறேன். இன்னும் நிறைய விளக்கங்கள் உள்ளன. அப்பொழுது என்ன நடந்தது என்பதைப் பற்றியெல்லாம் பேசவில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டி.வி. பற்றி பேசினார்கள். அவர்களது ஆட்சியில், எங்கள் தொகுதியில் உள்ள பல இடங்களில் டி.வி. கொடுக்கப்படவில்லை. நான் அப்போது பேரூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போது டி.வி. எல்லாப் பகுதிகளிலும் கொடுக்கப்படவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் எனது செல்வபுரம் வார்டு உள்ளிட்ட பல இடங்களில் கொடுக்கப்படவில்லை. அப்படி கொடுத்த சில இடங்களிலும் நிறைய டி.வி. வெடித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மயிலச்சம்பாளையம் பஞ்சாயத்தில், டி.வி. வெடித்த இடத்திற்கு நான் சென்று பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு வந்தேன். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 1.75 இலட்சம் குடும்பங்களுக்கு முழுமையாக விலையில்லா மின் விசிறி, மிக்ஸி, கிரைண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அற்புதமான திட்டம். (குறுக்கீடுகள்) நீங்கள் டி.வி.யை முழுமையாகக் கொடுக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *'2 ஏக்கர் நிலம் கொடுப்போம்' என்றீர்கள், அதையும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) '2 ஏக்கர் நிலம் இல்லையென்றாலும், கையளவு நிலம் கொடுப்போம்' என்றீர்கள், அதையும் கொடுக்கவில்லை. ஆனால், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், என்னென்ன திட்டங்களை விலையில்லாமல் தருவோம் என்று 2011 தேர்தல் அறிக்கையிலே சொன்னார்களோ. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களும், குடும்ப அட்டை வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முழுமையாக சென்றடைந்திருக்கின்றன என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். அதெல்லாம் இல்லை. உட்காருங்கள். சொல்வதைக் கேளுங்கள். சபையில் மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். காலையிலிருந்து நிறைய வாய்ப்பு கொடுத்துவிட்டேன். இந்த அவையிலே ஏற்கெனவே பேசி விவாதிக்கப்பட்ட பல விஷயங்களை நீங்கள் திரும்பத் திரும்பப் பேசுவது புதிதாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதுகுறித்தெல்லாம் பலமுறை இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. நிறைய பேசியிருக்கிறோம். புதிதாக ஒன்றும் அவர் பேசவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் நிற்கிறேன். திரு. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் யாரும் விதியை மதிக்கமாட்டேன் என்கிறீர்கள். நான் உங்களுக்கு நிறைய வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.பி.பி. சாமி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. இரவிச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். திரு. சேகர்பாபு, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பசி நேரமாகிவிட்டது, உட்காருங்கள். தேவையில்லாததைப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். திரு. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய பேச்சுக்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொன்னார்கள். செம்மொழி மாநாடு என்னும் அரசு நிகழ்ச்சியை கொச்சைப்படுத்துகின்ற வகையில் குடும்ப விழா என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. அர. சக்கரபாணி: *அது அரசாங்க நிகழ்ச்சியல்லவா? (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், உட்காருங்கள். நீங்கள் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இந்தப் பிரச்சினைகளெல்லாம் நீண்ட நாட்களாக, நீண்ட நேரம் இந்த அவையில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு பதிவாகியிருக்கின்றன. இதைப்போய் இப்போது* raise *பண்ணுகிறீர்களே? (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2-25

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, தங்களுடைய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏதாவது புதுப் பிரச்சினையாக இருந்தால். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் உட்காருங்கள் என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். நான்தான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்துவிட்டேன் அல்லவா? மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து, அவர் பதிவு செய்துவிட்டார் அல்லவா! அப்புறம் என்ன? (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் வாய்ப்புக் கொடுத்தேன், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை, பழைய விஷயம். ஏற்கெனவே இந்த அவையிலே பேசி, அது பதிவாகியிருக்கிறது. புதியதாக ஒன்றும்*

பேசவில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, நீங்கள் உங்கள் இடத்திற்குப் போய் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அனைவரும் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். நான்தான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)* உங்களுக்கு நான் வாய்ப்பு கொடுத்தேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)* ஏற்கெனவே வாய்ப்பு கொடுத்து, பதிவு செய்திருக்கிறேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)* அதிலே ஒன்றுமில்லை, தீர்ப்பு அதுதான். *(குறுக்கீடுகள்)* ஏற்கெனவே பலமுறை அந்தப் பொருள் குறித்து நிறைய பேசி, பதிவாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* ஆகையினால், புதியதாக ஒன்றுமில்லை. *(குறுக்கீடுகள்)* புது விஷயமாக இருந்தால், நீங்கள் raise செய்யுங்கள், நான் அனுமதி தருகிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* அதெல்லாம் எனக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, எனக்கு ஜனநாயகத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, எனக்கு ஜனநாயகத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லிக் கொடுக்க வேண்டாம். *(குறுக்கீடுகள்)* நீங்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குவார்கள். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்ன சொன்னாலும் சரி. . . *(குறுக்கீடுகள்)* ஒத்துழைப்புக் கொடுங்கள், அவ்வளவுதான். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணினத்தைக் கண்ணிமையாய் காத்திடும், மண்ணினத்துப் பெண்ணரசி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாதர்குல மாதரசி எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) வாய்மையின் திருவுருவாய், தளும்பாத நிறைகுடமாய், தூய்மையின் இருப்பிடமாய்த் திகழ்ந்திடும் அன்புப் பெட்டகமே எங்கள் அம்மா! வேங்குழல் நாதமென, விழைகின்ற நல்லிசையாய் மகளிர் துன்பமெல்லாம் துடைக்கின்ற தூயமணி திருவடிவே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) கண்ணிலிருக்கும் கருமணியாய், கதிருக்கு நெல் மணியாய், விண்ணுக்கு முழுமதியாய், வீரப் பெண்மணிக்கு இலக்கணமாய், தமிழ் மண்ணுக்கு பெருமையாம் தங்கத் தலைவியே எங்கள் அம்மா! (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, இன்று காலையில், இந்த அவைக்கு நீங்கள் வந்ததிலிருந்து நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இந்தச் சபையை அமைதியாக நடத்த ஒத்துழைப்பு தருகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் சொன்ன அந்த ஒத்துழைப்பு இதுவல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்பு கேட்டீர்கள், நான் வாய்ப்பு கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறீர்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)*

நீங்கள் உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறீர்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி, நீங்கள் சொல்கிறபடியெல்லாம் நான் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நான் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) இந்தச் சபைக்கு நீங்கள் ஒருவர் மட்டும் சொந்தக்காரர் அல்ல. (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களும் எனக்கு சமம்தான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, நீங்கள் நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்தை விட்டு இங்கு வந்து, இதுமாதிரி பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) என்னால் இதற்குமேல் tolerate *செய்ய முடியாது. (குறுக்கீடுகள்)*

2016 ஆகஸ்ட் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பதிலுரையைத் தொடருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

பிற்பகல் 2-30

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரூடம் சொன்னவர்களின் அடிப்படையைத் தகர்த்து, 32 ஆண்டு கால அரசியல் வரலாற்றைப் புரட்டிப் போட்டு, தொடர் வெற்றிச் சாதனை படைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் முறையும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, புதிய சரித்திரம் படைத்த புதுமைத் தாயே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான திட்டங்களால் மக்கள் மனதெல்லாம் நிறைந்து, முதலமைச்சர் என்றால் அது எங்கள் அம்மாதான் என்று மக்களின் ஒருமித்த உறுதியால் (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாம் முறையாய் தமிழகத்தின் முதலமைச்சராக அருள்பாலிக்கும் ஆற்றல் தலைவியே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்காக தங்கள் உயிரையும் தர சித்தமாய் இருக்கும் ஒன்றரை கோடி தொண்டர்களில், கடைக்கோடியிலும் கடைக்கோடியாய் நிற்கும் என்மீது பரிவு கொண்டு, கழகத்தில் எனக்குப் பல பொறுப்புகளைக் கொடுத்து, 1991-ல் என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, அரசில் பல பதவிகளைத் தந்து, 2016 சட்டமன்றத் தேர்தலில் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் என்னைப் போட்டியிடச் செய்து, ஒப்பற்ற தரத்தால், ஓயாத நல்லுழைப்பால் என்னை வெற்றி பெறச் செய்து, அமைச்சர் பொறுப்பையும் அளித்து, என்னையும், என் குடும்பத்தாரையும் பெறாத தாய், எங்களைப் பேணிக் காக்கும் நான் வணங்கும் தெய்வம், என் வழித்துணை தெய்வம், எங்களை வாழ வைக்கும் தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) என் இதயத்தில் பொங்கி எழும் நன்றியை வாச மலர்களாக்கி சமர்ப்பித்து, பணிந்து வணங்குகின்றேன் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)*

இரட்டை இலைச் சின்னத்திலே வாக்களித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றிபெறச் செய்யுங்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன ஒரே

ஒரு சொல்லை தங்கள் இதயத்தில் ஏந்தி, ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்து, 15-வது சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பியுள்ள ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழக முன்னோடிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்மீதான விவாதங்களுக்கான பதிலுரையை நான் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் அழியாத கல்வெட்டுகளாக, காலச் சுவடுகளில் நிலைத்து நிற்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புரட்சிகரமான திட்டங்களாம், அன்று, தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண் Commando படைகள், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரில் உள்ள 15 அம்ச தாய்-சேய் நலத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற, நாடாளுமன்றத்தில் மகளிருக்கான 33 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு அடித்தளம் அமைத்த திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் புதிய சகாப்தம் படைத்தது, மழை நீர் சேகரிப்பு என எண்ணற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர் எங்கள் தாய். இந்தத் திட்டங்களின் சிறப்புகளை உலகத் தலைவர்களே வியந்து பாராட்டுகிறார்கள்.

1994 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 15 அம்சத் திட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் விவாதித்து நடைமுறைப்படுத்தப்படும் என்று House of Commons செயலாளர்கள் உறுதியளித்தார்கள் என்பதை இந்தச் சட்டமன்றப் பதிவேடுகளில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். 1998 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடந்த உலக பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தாய்-சேய் நலத் திட்டம் முதற்கொண்டு அனைத்துத் திட்டங்களையும் உலக பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, அந்த மாபெரும் மாமன்றம் மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்தது என்பதை இந்த நேரத்தில் நான் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

2001-2002 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த உலக மகளிர் மாநாட்டில், அம்மாவின் அனைத்துத் திட்டங்களும் பாராட்டைப் பெற்றது. உலகத் தலைவர்களுக்கே வழிகாட்டியாக விளங்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அன்றைய திட்டங்கள், முந்தைய சாதனைகளை தானே முறியடித்து, தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ உருவாக்கி, வருங்கால சமுதாயத்தை, வலிமையான சமுதாயத்தை, தெளிவான சமுதாயத்தை, அறிவான சமுதாயத்தை உருவாக்கி, வருங்கால இந்தியாவை வல்லரசு நாடாக உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையும், தீர்க்க தரிசனமும் கொண்ட திட்டங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டங்களின் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாக, தொலைநோக்குத் திட்டம் 2023-ன்படி பெண்களுக்கு உள்ளாட்சியில் 50 சதவிகித இட ஒதுக்கீடு, தாலிக்குத் தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நலத் துறையின்கீழ் 9 வகையான ஓய்வூதியத் திட்டங்கள் என்று மாண்புமிகு அம்மாவினுடைய வெற்றிச் சாதனை தொடர்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணுக்கு மரம் அழகு, மரத்திற்கு கனி அழகு, கண்ணுக்குப் பார்வை அழகு, கருத்துக்கு சிந்தனை அழகு, நாட்டிற்கு பெண்கள் அழகு என்றால் வீட்டிற்கும் அழகு, பெண் குழந்தைகள் தான். பொன்னும், மணியும் ஈடான பொன்னார் மேனி கொண்ட பெண் குழந்தைகளை கள்ளிப்பால் கொடுத்தும், கருவிலே முடித்தும் கொலை புரியும் மாபாதகக் கொடுமைச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பச்சிளந்தளிர்களை, பன்னீர்ப் பூக்களை மரணப் பிடியில் இருந்து காப்பாற்ற தொட்டில் குழந்தைத் திட்டம்; பெண் குழந்தைகள் பாரம் அல்ல, வரமே என்று எடுத்துக்காட்ட. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற மாபெரும் இரண்டு திட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1992-லேயே அமல்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் உருவானதுதான் தொட்டில் குழந்தைத் திட்டம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)*

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *அவ்வாறு மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நல்ல குடும்பச் சூழ்நிலையை ஏற்படுத்தும்பொருட்டு தத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், 15 மாநில தத்து நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, 1992 ஆம் ஆண்டு முதல் ஜூன் 2016 வரை (மேசையைத் தட்டும் ஒலி) 915 ஆண் குழந்தைகளும், 4,008 பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் 4,923 குழந்தைகள் மீட்கப்பட்டு, 10 நிறுவனங்கள் மூலம் தத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைகளைக் கைவிடாமல் அரசு ஏற்றுக்கொள்ளும் வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2016 ஆம் ஆண்டில் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அனைத்து வசதிகளுடன் வரவேற்பு மையங்களை ஏற்படுத்தித் தந்தது. 2011 ஆம் ஆண்டில் கடலூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலும் வரவேற்பு மையங்களை அம்மாவின் அரசு உருவாக்கியது. இந்த சீரிய*

நடவடிக்கையின் காரணமாக, குழந்தை பாலின விகிதம் குறிப்பிட்ட முன்னேற்றம் அடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் 1000-க்கு 16 என்று இருந்த பெண் குழந்தைகள் பாலின விகிதம், 1000-க்கு 43 என்ற விகிதத்தில் உயர்ந்திருக்கிறது என்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலம் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு பெரும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதற்கு இதைவிட வேறொரு சான்று வேண்டுமோ!

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 1,485 குழந்தைகள் தொட்டில் குழந்தைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1,071 குழந்தைகள் சேர்க்கப்பட்டன. இவ்வாறு குறைந்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான திட்டங்களும், தொலைநோக்குப் பார்வையும், நிர்வாகத் திறமையுமே காரணம் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணத்தில் உதித்த ஒரு தனித் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ரூபாய் 1,117 கோடியே 79 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டு, 6 இலட்சத்து 40 ஆயிரத்து 459 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் நிரந்தர கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு முறையே ரூ.50 ஆயிரம், ரூ.20 ஆயிரம் நிரந்தர வைப்பீட்டில் முதலீடு செய்யப்படுகின்றது. வைப்புத் தொகை 18 வயது நிறைவடைந்தவுடன், ஒரு பெண் குழந்தையாக இருந்தால் 3 இலட்சத்து 232 ரூபாயும், இரண்டு பெண் குழந்தைகளாக இருந்தால், 1,50,117 ரூபாயும் முதிர்வு உதவித்தொகையாக வழங்கப்படும். இத்திட்டம் பெண் குழந்தைகளை வரவேற்று, அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு உரிய மன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

ஆட்சிக் காலத்தில், கடந்த 5 ஆண்டுகளில் இந்தத் திட்டத்திற்கென்று 5 கோடியே 67 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 2 இலட்சத்து 78 ஆயிரத்து 941 பெண் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இத்திட்டத்தின்கீழ் 3 கோடியே 74 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மட்டுமே நிதி வழங்கப்பட்டு, 2 இலட்சத்து 41 ஆயிரத்து 339 பயனாளிகள் மட்டுமே பயனடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக 140.13 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தாலிக்குத் தங்கம். ஏழைப் பெண்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் கடும் இடர்பாடான திருமணச் செலவுகளை ஈடு செய்து, அவர்களது திருமணக் கனவை நனவாக்கும் அதேநேரத்தில், அவர்களது கல்வி நிலையை உயர்த்திட வேண்டுமென்ற எண்ணத்தை பெண்ணைப் பெற்றவர்கள் மனதில் விதைத்திட தாலிக்குத் தங்கம் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டத்தின்படி, திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் வழங்கியதுடன், திருமணச் செலவிற்கு 10 ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேலும் படித்த பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். 2016 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில், அம்மா அவர்கள் அறிவித்த தேர்தல் அறிக்கையின்படி, தங்கத்தின் அளவை 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 23-5-2016 அன்று கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். சொன்னதை சொன்னபடி நிறைவேற்றும் வல்லமை, தனக்கே உரிய தனித்தன்மை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதல் கையெழுத்திலேயே தாலிக்குத் தங்கம் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்கத்தை 8 கிராமாக உயர்த்தினார்கள். தங்கமனத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மாதர் குலம் பாராட்டிப் போற்றுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் இதன்வாயிலாக 7 இலட்சத்து 72 ஆயிரத்து 643 பயனாளிகள் பயன் பெற்றுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில், 4 கிராம் தங்க நாணயத்துடன்

நிதி உதவியாக 3 ஆயிரத்து 324 கோடியே 38 இலட்சம் ரூபாயும், திருமாங்கல்யம் செய்வதற்காக மட்டும் 2,843.50 கிலோ கிராம் தங்கமும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகிழ்ச்சியோடு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

10 ஆம் வகுப்பு வரை படித்த 4 இலட்சத்து 64 ஆயிரத்து 541 மகளிரும், பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்கள் 2 இலட்சத்து 46 ஆயிரத்து 336 பேரும் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்கு மிகவும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருமணங்களுக்கான நிதி உதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் இல்லை என்பதையும், திருமணங்களுக்கான நிதி உதவியாக வெறும் ரூ.1,061.7 கோடியை மட்டுமே ஒதுக்கினார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருமணங்களுக்கான நிதி உதவியாக மட்டுமே 2,537.74 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இத்திட்டத்தின்கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.24,000/-லிருந்து ரூ.72,000/- ஆக அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்ததன் மூலம், 2 இலட்சத்து 96 ஆயிரத்து 332 பயனாளிகள் கூடுதலாகப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-45

2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 703.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசால் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, 8 கிராம் தங்க நாணயம் கொள்முதல் செய்யப்படுவதோடு, சமூக நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் 5 வகையான திருமண உதவித் திட்டங்களின்கீழ், அதாவது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித்

திட்டம், ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழும் தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தங்க நாணயமும் நிதியுதவியும் அளிக்கப்படுவதால் அதிகமான பெண்கள் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலச் சட்டங்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுப்பதற்காக சமூக நலச் சட்டங்களை சமூக நலத் துறை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

குடும்ப வன்முறை மற்றும் வரதட்சணை தொடர்பான கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து பெண்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் முதல் ஆட்சிக் காலத்தில் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகளிர் ஆணையத்தால் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களிலுள்ள பிரச்சினைகள் ஆகியவை தொடர்பான புகார்கள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்வு கண்டு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, நகர்ப்புறம் மற்றும் மாநகரங்களில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பிற்காக மாவட்டத் தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் மகளிருக்குக் குறைந்த செலவில் பாதுகாப்பாக தங்கும் இடங்கள் அமைக்கும் வகையில் 28 பணிபுரியும் மகளிர் விடுதிகளைச் செயல்படுத்தி வருகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதையே தலையாயக் கொள்கையாகக் கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அனைத்து இல்லங்கள், விடுதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் இல்லங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில்

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள், காப்பகங்கள் ஒழுங்குமுறைச் சட்டம், 2015-ஐ உருவாக்கி, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின்கீழ் மே மாதம் 2016 வரை 28,396 மனுக்கள் பெறப்பட்டதில் 17,018 மனுக்கள் பாதுகாப்பு அலுவலர்களால் விசாரிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள மனுக்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரதட்சணை தடுப்புச் சட்டம். வரதட்சணை தடுப்புச் சட்டத்தின்கீழ் மே மாதம் 2016 வரை 5,866 மனுக்கள் பெறப்பட்டன. இவற்றில் 395 வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை மாவட்ட சமூக நல அலுவலர்கள் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டன. 4,122 மனுக்கள் மீது மாவட்ட சமூக நல அலுவலர்களால் தம்பதியருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு, குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, பிரிந்த தம்பதியினரை ஒன்று சேர்த்து வைத்துள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 2-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் பாலினர் தொடர்ந்த வழக்குகளாலும், வேண்டுகோள்களாலும் திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்க வேண்டுமென்ற உச்ச நீதிமன்ற ஆணையினையும் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6-11-2015 அன்று தனி அரசாணையை வெளியிட்டு, திருநங்கைகள், திருநம்பியர்கள் ஆகியோரை மூன்றாம் பாலினர் என்று அறிவித்து ஆணையிட்டார்கள். மேலும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும்போது மூன்றாம் பாலினம் என்றே பதியலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழகத்தில் நடத்திய சிறப்புக் கணக்கெடுப்பின்படி, 2016 மார்ச் மாதம் வரை 4,987 நபர்கள் மூன்றாம் பாலினத்தவர்கள் என்று கண்டறியப்பட்டு, இவர்களில் 4,518 பேர்களுக்கு அடையாள அட்டைகளும், 1,659 குடும்ப அட்டைகளும், 1,115 வீட்டுமனைப் பட்டாக்களும், 720 காப்பீட்டு அட்டைகளும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பாலினத்தவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவும், பொருளாதார ரீதியாக தங்களை உயர்த்திக் கொள்ளவும் 442 மூன்றாம் பாலினத்தவர்களின் 51 சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவிகித அரசு மானியம் ரூ.55 இலட்சத்துடன், வங்கிக் கடனாக ரூ.1 கோடியே 65 இலட்சம்; ஆக மொத்தம் ரூ.2 கோடியே 20 இலட்சம் நிதி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 320 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.64 இலட்சம் மட்டுமே நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மூன்றாம் பாலினத்தவர்களுடைய பாதுகாவலர் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் கேட்க விரும்புவதெல்லாம், இதுதான் மூன்றாம் பாலினத்தவர்களை வாழ வைப்பதற்கு நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியா என்று கேட்கும் அதே வேளையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே மூன்றாம் பாலினத்தவர்களுக்காக தனியாக ஒரு சட்டத்தையும் கொண்டு வந்து, இன்னும் கேட்டால், மூன்றாம் பாலினத்தவரை அரசுப் பதவியில், ஒரு சப்-இன்ஸ்பெக்டராகவும், சமூக நலத் துறையின்கீழ் ஒரு சத்துணவு அமைப்பாளராகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பணி நியமனம் செய்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 133 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.75,000 மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், இந்தத் தொகையைக் கொண்டு தொகுப்பு வீடுகள் கட்ட இயலவில்லை என்ற காரணத்தால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பசுமை வீடு திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 29 வீடுகளும், (மேசையைத் தட்டும் ஒலி) கரூர் மாவட்டத்தில் 29 வீடுகளும், சேலம் மாவட்டத்தில் 72 வீடுகளும் கட்டப்பட்டு மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மிகவும் பெருமையோடு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் வசிக்கும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு 260 வீடுகள் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

26-12-2015 அன்று ஆணையிட்டார்கள். அதன்படி, வீடுகள் வழங்கப்பட்டு மூன்றாம் பாலினத்தவர்கள் அக்குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முறையாக 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உதவிடும் வகையில் மாதாந்திர ஊதியமாக ரூ.1,000/- வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் தற்போது 954 மூன்றாம் பாலினத்தவர்கள் மாத ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். மூன்றாம் பாலினத்தவர்களின் நன்மைக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 2016-2017 ஆம் நிதியாண்டில் 1,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.2 கோடியே 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளோ, ஓய்வூதியத் திட்டமோ அல்லது அரசுப் பணிகளில் நியமனமோ ஏதும் செயல்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் பாலினத்தவரின் நலனுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால அரசு, கடந்த 5 ஆண்டுகளில் ரூ.3 கோடியே 94 இலட்சம் நிதியை செலவிட்டது என்பதையும் அதே நேரத்தில், தி.மு.க. அரசால் ரூ.1 கோடியே 78 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2-55

2016-2017 ஆம் ஆண்டில், மூன்றாம் பாலினத்தவரின் நலத் திட்டங்களுக்காக ரூபாய் ஒரு கோடியும், ஓய்வூதியத் திட்டங்களுக்காக ரூ.1 கோடியே 20 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆக, மொத்தம் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மூன்றாம் பாலினத்தவருடைய ஒப்பற்ற தலைவியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. உணவளிப்பதன்மூலம், பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதி செய்திடவும், குழந்தைகளின் ஊட்டச் சத்தினை அதிகரிக்க வேண்டியும், பாரத ரத்னா, பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் 1982 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) பசியோடு உள்ள குழந்தையாலும், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தையாலும் படிப்பின்மீது கவனம் செலுத்த இயலாது என்ற காரணங்களின் அடிப்படையில், அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின்கீழ் செயல்படும் சிறப்பு மையங்கள், மதரஸாக்கள், மஸ்ஜித்கள் ஆகியவற்றில் பயிலும் குழந்தைகளுக்கும் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், அனைத்து வேலை நாட்களிலும் இலவச மதிய சத்துணவுத் திட்டம் வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சத்துணவுத் திட்டத்தின் உயர் மட்டக் குழு உறுப்பினராக இருந்தபோது, குழந்தைகளோடு சரிசமமாக அமர்ந்து உணவருந்தியவர். தனது சீரிய சிந்தனையின் காரணமாக அத்திட்டத்திற்கு வழிகாட்டியாக இருந்து செயல்படுத்தியதாலேயே இன்று சத்துணவில் மிகப்பெரிய மாறுதல்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குழந்தைகளின் பசியை மட்டும் போக்காமல், தாய் ஸ்தானத்திலிருந்து குழந்தைகளுக்கு சரிநிகர் ஊட்டச்சத்துமிக்க உணவுகளை சத்துணவுத் திட்டத்தின்மூலம் அறிமுகப்படுத்தியதுதான் இன்றைய வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் சத்துணவு உண்கின்ற குழந்தைகளோடு அமர்ந்து உண்டு, அந்தக் குழந்தைகளுடைய அன்பைப் பெற்றார்கள். சத்துணவுத் திட்டத்தில் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும்,

அந்தக் குழந்தைகளுடைய வளர்ச்சிக்கு, அறிவு வளர்ச்சிக்கு, மூளை வளர்ச்சிக்கு எதை எதைக் கொண்டு வந்தால் நாளைய சமுதாயம் நாட்டுக்குகந்த சமுதாயமாக வளரும் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைத்ததால் அன்று இதயத்தில் நின்றதுதான், கலவை சாதம் என்ற ஒரு மகத்தான திட்டம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் காலமாக ஒரே வகையான சமையல், ஒரே வகையான உணவு என்று இருந்ததை மாற்றி குழந்தைகளைக் கவரும் வகையில் விதவிதமான உணவுகளும், அதேநேரம் சத்தான உணவாக, சரிவிகித உணவாக குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுகின்ற உணவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நாளுக்கொரு உணவாக, 13 வகை கலவை சாதங்கள், அத்துடன் மிளகு மசாலா முட்டை, தக்காளி மசாலா முட்டை, தக்காளி வெங்காயம் மசாலா முட்டை, முட்டை மசாலா ஆகிய நான்கு வகையான மசாலா முட்டைகளும் வழங்கப்படுகின்றன. இதுமட்டுமல்ல, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு, உருளைக்கிழங்கு ஆகியவையும் உணவுடன் சேர்த்து வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவருக்கெல்லாம் மருத்துவராக, எதைக் கொடுத்தால், எந்த வயதில் கொடுத்தால் அந்தக் குழந்தைகளுடைய ஒட்டுமொத்த வளர்ச்சி இருக்கும் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிந்துள்ளார்கள். ஓர் அரசியல் விஞ்ஞானி என்று சொல்வதைவிட, மருத்துவருக்கெல்லாம் மருத்துவரான மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதை மட்டுமா செய்தார்கள்? குழந்தைக்கு எது பிடிக்கும், எதைக் கொடுக்க வேண்டுமென்று அம்மாவுக்குத்தானே தெரியும். குழந்தைகள் எதை விரும்பி சாப்பிடுவார்கள், எதை மகிழ்ச்சியுடன் கேட்டு சாப்பிடுவார்கள் என்று அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கேற்ற வகையில், பலவகை கலவை சாதங்களுடன் சத்துணவுத் திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 43,047 சத்துணவு மையங்கள்மூலம் 55 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கிய நிதி வெறும் ரூ.3,235 கோடியே 38 இலட்சம்தான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ரூ.7,238 கோடியே 76 இலட்சம் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒதுக்கியதைவிட இந்த நிதி இரு மடங்காகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தோடு, இடையறாத ஒத்துழைப்பும் இருப்பதால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை 1,28,130 சத்துணவுப் பணியாளர்கள்மூலம் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். இந்தப் பணியாளர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் தன்னுடைய குடும்பமாகக் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு சிறப்பான சலுகைகளையும், உதவிகளையும் செய்து வருகிறார்கள். அவர்களின் கோரிக்கைகளை செவிமடுத்து, ஏற்று, அவற்றைப் பரிசீலித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது மட்டுமின்றி, அவர்களுக்கு எது தேவை என்பதைச் சிந்தித்து, அவர்கள் கேட்காமலேயே தருகின்ற அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம், மருத்துவப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படியுடன் வழங்கப்பட்டு வருகின்றது.

மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அண்டை மாநிலங்களில்கூட இல்லாத வகையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடிப் மையங்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அனைத்துப் பணியாளர்களுக்கும்

மாதம் ஒன்றுக்கு 1,500/- ரூபாய் சிறப்பூதியமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி, ஓய்வு பெறும் நாளில், ஒட்டுமொத்தத் தொகையாக சத்துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ரூ.60,000/- சமையலர், சமையல் உதவியாளர்கள், குறு அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ.25,000/- வழங்க ஆணையிட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இதைத்தவிர, மலைப்பிரதேசங்களில் பணிபுரியும் சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் மலைப் படியும், நான்கு மாத கால குளிர்காலப் படியும், பெண் சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு 180 நாட்கள் சம்பளத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பும், கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் போன்ற சலுகைகளையும் அளிப்பது, நாட்டிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சி மட்டுமே என்பதைப் பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்பிட, மாவட்ட ஆட்சியர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு, அங்ஙனமே காலிப் பணியிடங்களை நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் இங்கே இல்லை. கேள்வியைக் கேட்கிறார்கள், ஆனால் பதில் சொல்லும்போது அவர்கள் இருப்பதில்லை. அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வதெல்லாம், சத்துணவுப் பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. மேலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரிகின்ற அங்கன்வாடிப் பணியாளர்களின் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கன்வாடிப் பணியாளர்கள் பணி நியமனம் தொடர்பான வழக்குகள்மீது சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் விசாரணை முடிவுற்று, இறுதி ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. இறுதி ஆணை கிடைக்கப்பெற்றவுடன்,

காலிப் பணியிடங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரிதமாக, விரைவாக, விரைந்து நிரப்பும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கிய நிதி 1,644.52 கோடி ரூபாய் என்பதை இப்பேரவைக்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணிடை மின்னிடும் நட்சத்திரங்கள் என நம் கண்ணிடை கொஞ்சும் பிஞ்சுப் பிள்ளைகளின் தாயாகி நலம் போற்றும் தங்கத் தலைவி அம்மா அவர்கள், பிறந்தது முதல் ஐந்து வயது வரையிலான இளந்தளிர்கள்மீது தனிக் கவனம் செலுத்தி, அவர்கள் வளமுடன் வளர்ந்து, உரமுடன் செழிக்க எண்ணில்லா திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வளர் இளம் பெண்கள் ஆகியோர் நலன் காக்கும்வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆற்றும் பணிகள் வியக்கத்தக்க பணிகளாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் நேரடியாக 35.1 இலட்சம் பேரும், மறைமுகமாக 40.45 இலட்சம் பேரும் பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் செயலாக்கத்தில் 49,499 முதன்மை அங்கன்வாடி மையங்களும், அதனுடன் இணைந்த 4,940 குறு அங்கன்வாடி மையங்களும், ஆக 54,439 அங்கன்வாடி மையங்கள் ஈடுபட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மையங்கள் குழந்தைகள் வந்து உணவு உண்டு செல்கின்ற இடமாக மட்டுமல்லாமல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, முன்பருவக் கல்வி இவை அனைத்தும் ஒருங்கே சேர அளிக்கும் முதல்நிலை இருப்பிடமாக மாற்றிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, நடவடிக்கைகள் எடுத்து சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன்பயனாக, அங்கன்வாடி மையங்கள் அனைத்தும் எழுச்சிமிக்க குழந்தைகள் மையங்களாக, இனிமையான கற்றல் சூழ்நிலையைத் தரக்கூடிய குழந்தைகள் நல மையங்களாக மாற்றம் கண்டு

வருகின்றன. முதற்கட்டமாக 5,565 அங்கன்வாடி மையங்கள், 55.65 கோடி ரூபாயில் எழுச்சிமிக்க முன்பருவக் கல்வி மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை மிக்க பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். முன்பருவக் கல்விச் செயல்பாட்டினை மேம்படுத்த ஆண்டுதோறும் 15.59 கோடி ரூபாய் செலவில் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வாங்கி அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டிருக்கிறது. தேசிய முன்பருவக் கல்வித் திட்டக் கொள்கை 2013 அடிப்படையில், முன்பருவக் கல்விக்கான குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற பாடத் திட்டமாக "ஆடிப்பாடி விளையாடு பாப்பா" என்ற பாட முறை அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக மாற்றிட வேண்டுமென்ற உயரிய எண்ணத்துடன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள்மூலம் 6 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வளர் இளம் பெண்கள், மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் ஆகியோருக்கு இணை உணவு வருடத்தில் 300 நாட்களும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்தில் வகை வகையான கலவை சாதங்கள் மற்றும் விதவிதமான சத்துணவு வகைகளை வழங்க ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதேவகையான உணவுகளை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழும் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணையின்படி, இரண்டு முதல் ஐந்து வயதுடைய குழந்தைகளுக்கு அவர்களுடைய ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகளைக் கருத்திற்கொண்டு உணவுகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் செயல்படுத்தப்பட்டுவரும் இந்தத் திட்டம் ஐந்து வயது வரையிலான குழந்தைகளின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

புகையில்லா சமையல், மாசில்லா சமையல் அறை என்பதை நோக்கமாகக் கொண்டு குழந்தைகள் மற்றும் சுற்றுச்சூழல் நலனுக்கு உகந்த வகையில் சத்துணவுக்கூடங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்தும் செயல்திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சத்துணவுக் கூடம் மற்றும் அங்கன்வாடி மையத்திற்கும் சமையல் எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் சமைக்கத் தேவையான பிரஷர் குக்கர் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின்கீழ் 37,136 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்குவதற்காக, மையம் ஒன்றுக்கு 22,350 ரூபாய் என மொத்தம் ரூ.83 கோடி நிதியொதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இதுவரை 47,446 மையங்களில் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 6,993 அங்கன்வாடி மையங்களுக்கு, நடப்பாண்டில் எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்காக மையம் ஒன்றுக்கு தலா 8,600 ரூபாய் வீதம் 6 கோடியே 1 இலட்சம் ரூபாய் நிதியினை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்து முடிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும் எரிவாயு இணைப்பு வழங்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 3-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் தனியார் பள்ளிகளில் படிக்கும் தங்கள் வயதை ஒத்த குழந்தைகள் சீருடை அணிந்து செல்வதைப் பார்க்கும் ஏக்கத்தைப் போக்க, அவர்களது மனம் மகிழும் வகையிலும், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்பிட ஊக்கம் அளிக்கும் வகையிலும் இக்குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி ஒரு சீருடை 125 ரூபாய் வீதம் ஆண்டிற்கு 2 சீருடைகள் வழங்கப்படுகின்றன. சென்னை, வேலூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் முதல் கட்டமாக இந்தத் திட்டம்

2016 ஆகஸ்ட் 10] [டாக்டர் வி. சரோஜா]

செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் குழந்தைகளுக்கு வண்ணச் சீருடை, 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 3,74,243 குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்களிலும், அங்கன்வாடி மையங்களிலும் உள்ள சமையல் கூடங்களில், சமையலர்களின் பணிகளை எளிதாக்கி, அங்கு பயன்பெறும் குழந்தைகளுக்குத் தேவையான புதிய உணவு வகைகளை விரைந்து தயாரிக்க உதவிடும் வகையிலும், கலவைச் சாதங்கள் தயார் செய்வதற்குத் தேவையான மசாலாப் பொருட்களை அரைத்திட, சத்துணவு மையங்களுக்கும் அங்கன்வாடி மையங்களுக்கும் கலவை இயந்திரங்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, சத்துணவுத் திட்டத்தில் மொத்தம் 47,000 சத்துணவு மையங்களுக்கு 5 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கலவை இயந்திரம் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அங்கன்வாடி மையங்களைப் பொறுத்தமட்டில், 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் 9,094 கலவை இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 20,555 அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான கலவை இயந்திரங்களை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளைகாப்பு என்பது கருவுற்ற பெண்கள் தங்கள் வாழ்வில் எதிர்பார்க்கின்ற ஒரு இனிய விழாவாகும். சுற்றங்கள் சூழ்ந்து ஆசிகள் வழங்க, நண்பர்கள் வாழ்த்திட, வரவிருக்கும் பேறுகால துன்பத்தைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் தாய்மை பொறுப்பேற்பதிலும், சமுதாய அந்தஸ்தைப் பெறுவதிலும் மகிழ்ச்சி அடையும் இனிய விழா. வசதி படைத்தவர்கள் இல்லங்களில் கோலாகலமாகக் கொண்டாடப்படும் விழாவைப் பார்த்து ஏழைக் கர்ப்பிணிகள் ஏங்கிய காலம் அன்று. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயாக இருந்து 2012 ஆம் ஆண்டு சமுதாய வளைகாப்புத் திட்டத்தைத் துவக்கினார்கள். சமுதாய வளைகாப்பு நடத்துவதன் நோக்கமே கருவுற்ற பெண்களை மகிழ்ச்சியோடு இருக்கச் செய்து கர்ப்பகால பராமரிப்பு குறித்த தகவல்களையும், மருத்துவமனையில் பிரசவம் பார்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும், மகப்பேறு

உதவித் திட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். மாண்புமிகு அம்மா அவர்கள் 2012-ல் தொடங்கிய இந்தத் திட்டத்தில் இதுவரை 1,772 சமுதாய வளைகாப்பு விழாக்களை நடத்தி, 2,13,960 கர்ப்பிணிப் பெண்கள் மகிழ்வுடன் தங்கள் குடும்பங்களில் நிறைவாக இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துயருறும் நிலையில் உள்ள சிறார்களுக்கு வழிகாட்டி, வாழ்க்கையில் ஒளிகாட்டி, அவர்களை வாழ்வில் கரையேற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்று பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டுகின்றார்கள். சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் சிறார் நலன் காக்க குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் என தமிழகம் முழுவதும் 66 அரசு சிறப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லங்களில் தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு உணவு, உடை, தங்கும் வசதி, கல்வி, தொழிற்கல்வி, மருத்துவ வசதி, ஆற்றுப்படுத்தும் சேவை, விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் மனவளம் சார்ந்த சிறப்புப் பயிற்சிகளை வழங்கி சமூக நீரோட்டத்தில் இவர்கள் இணைந்து வாழ சிறப்பான வகையில் வழி செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2015-2016 ஆம் ஆண்டில் இல்லச் சிறார்களின் பாதுகாப்பு நலனுக்காக சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் 21 குழந்தைகள் மற்றும் மகளிர் இல்லங்களில் 32 இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 3-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், மாவட்டந்தோறும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டு, மேலும் மாநில குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், மாநில திட்ட செயலாக்க அலகு ஆகிய சேவைகளை

வழங்கும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாநில குழந்தைகள் பாதுகாப்புச் சங்கத்தின் புதுமைத் திட்ட செலவினத் தலைப்பின்கீழ், உளவியல் வாழ்வரங்கம்மூலம் இல்லச் சிறார்களை ஆக்கப்பூர்வமான குடிமக்களாக உருவாக்க 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில குழந்தைகள் பாதுகாப்புச் சங்கத்தின்மூலம், ஆண்டிற்கு ரூபாய் 20 இலட்சம் செலவினத்தில் 130 திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அதன்மூலம் காவலர்கள், நீதித் துறையினர், குழந்தைகள் நலக் குழு, இளைஞர் நீதிக் குழு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள், கல்வி, சுகாதாரம், குழந்தைகள் இல்ல நிருவாகிகள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் என மொத்தம் 7,180 பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

பாலியல் வன்கொடுமையிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2015-ஐ குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களிலும் விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்தப்படுகின்றன. அதேபோல் மாநில அளவிலான பயிற்சிகள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுப் பணியாளர்களுக்கும், குழந்தை நல உறுப்பினர்களுக்கும் இளஞ்சிறார் நீதிக் குழும உறுப்பினர்களுக்கும் மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இவ்விழிப்புணர்வு முகாம்களின் தாக்கமாக 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்து, 55 வழக்குகளும் 2016 ஆம் ஆண்டில் 2,268 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில், சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் 2 அரசினர் சிறப்பு இல்லங்களும், 2 அரசினர் கூர்நோக்கு இல்லங்களும் உள்ளன. இந்த இல்லங்களில் சட்டத்திற்கு முரணான வகையில் தவறிழைக்கும் சிறார்கள் தங்க வைக்கப்படுகின்றனர். இளைஞர் நீதிக் குழுமத்தால் தண்டனை வழங்கப்பட்ட சிறார்கள், சிறப்பு இல்லத்திற்கு மறுவாழ்விற்காக அனுமதிக்கப்படுகின்றனர். இந்த இல்லங்களில் உண்ண உணவு, உடுக்க உடை மற்றும்

இருக்க இடம் என அனைத்தும் கிடைத்தாலும், பெற்றோர்களின் அன்பிற்காக ஏங்கும் குழந்தைகள் சிலர் உடன் இருப்பவர்கள் பிணையினால் வீட்டிற்குச் சென்றுவிட்டால், அவர்கள் சென்றுவிட்டார்களே என்ற காரணத்தினால், சந்தர்ப்பம் கிடைக்கும் தருணங்களில் வீட்டிற்கு தப்பித்துச் சென்று விடுகிறார்கள். அவ்வாறு செல்வோரை உடனுக்குடன் தேடிப்பிடித்து, மீண்டும் இல்லங்களில் சேர்த்து, உரிய கால அளவிற்குப் பின் அனுப்புகிறார்கள். சமீபத்தில் சென்னையில், கெல்லிஸ் அரசு கூர்நோக்கு இல்லத்திலிருந்து சென்ற 33 சிறுவர்கள் போர்க்கால அடிப்படையில் மீட்கப்பட்டு, counselling-க்குப் பிறகு அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்வில்லச் சிறுவர்களில் மன உளைச்சல், போதைப் பழக்கம் மற்றும் குற்றச் செயலில் ஈடுபடும் சிறார்கள் அந்தத் தீயப் பழக்கங்களிலிருந்து விடுபட, தொழில் முறை உளவியலாளர்களைக் கொண்டு ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சிறார்களுக்குக் கூடுதலாக யோகா, பொழுதுபோக்கு, விளையாட்டு, தொழிற்பயிற்சி மற்றும் கல்வி ஆகியவற்றை வழங்குவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இளஞ்சிறார்களின் வழக்குகளை விரைந்து விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர் நீதிக் குழுமங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு, சமூகப் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்த மொத்த தொகை, 92 கோடியே 47 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மட்டுமே. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டு காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை, 227 கோடியே 3 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாற்றுத் திறனாளிகள் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணில்லார்க்கு விழியாக, காதிலார்க்கு செவியாக, உறுப்பு இல்லையே என வருந்துவோர்க்கு உறுதுணையாக மாற்றுத்

திறனாளிகள் நலம் பேணும் மாநிலத்தின் மனிதமாய், இப்பூவுலகின் புனிதமாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் போற்றுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-20

மாற்றுத் திறனாளிகளின் முன்னேற்றத்தில் தனி அக்கறை கொண்டு அளப்பரிய நலத் திட்டங்களை மனிதநேயத்தோடும், மனிதாபிமானத்தோடும் தந்து, சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். 1993 ஆம் ஆண்டிலேயே மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கென தனித் துறையை ஏற்படுத்தி, அதில் சிறப்புக் கவனம் செலுத்தி திட்டங்களைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 1994 ஆம் ஆண்டு முதன்முதலாக இந்தியத் திருநாட்டில் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக மாநிலக் கொள்கையை உருவாக்கி வெளியிட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான நிதி ஒதுக்கீடு, கடந்த ஐந்தாண்டுகளில் படிப்படியாக உயர்ந்துள்ளது. 2010-2011 ஆம் ஆண்டு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இத்துறைக்காக அவர்கள் செய்த நிதி ஒதுக்கீடு வெறும் 111 கோடியே 86 இலட்சம் ரூபாய். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 361 கோடியே 96 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்காக 396 கோடியே 74 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் வளம்பெற, நலம் செழிக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கிய அந்தப் பயணம் இன்று வரை தங்கு தடையின்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குத் தக்க சான்று, மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக சிறப்பான சேவை புரிந்தமைக்காக, இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்கிற தேசிய விருதை 2013 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பெற்றிருக்கிறது என்பதை மிகவும் பெருமையோடு இங்கே பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 11,79,963 மாற்றுத் திறனாளிகளில், 11,49,352 நபர்களுக்கு மருத்துவச் சான்றிதழுடன்கூடிய அடையாள அட்டை வழங்கி, இந்தியாவிலேயே 97.4 சதவிகித இலக்கினை எய்திட்ட முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்னும் பெருமையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளின் குழந்தைகளுக்காக ஆரம்பகால பயிற்சி மையங்களை நிறுவுவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில் செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காகவும், 15 மாவட்டங்களில் பார்வையற்ற குழந்தைகளுக்காகவும் ஆரம்பப் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காதுகேளாத குழந்தைகளுக்கு cochlear implant அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் வசதி சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் வருமான உச்சவரம்பின்றி பயன்பெறும் வகையில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே முதன்முறையாக, மாற்றுத் திறனாளி குழந்தைகளின் இருப்பிடத்திற்கே நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் சென்று, மறுவாழ்வு சேவை வழங்கிடும் ஒப்பில்லா திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2015 ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தத் திட்டத்தின்கீழ், 4 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி சிகிச்சைப் பிரிவு, பேச்சுப் பயிற்சிப் பிரிவு, உபகரணங்கள் தேவை குறித்து மதிப்பீடு செய்திடும் பிரிவு உள்ளிட்ட வசதிகளுடன் 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் இவ்வாகனங்கள்மூலம் கிராமப்புறங்களில் 624 முகாம்கள் நடத்தப்பட்டு, 3,456 மாற்றுத் திறனாளிகளின்

குழந்தைகளுக்குப் பயிற்சியளித்து, உதவி உபகரணங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் மாற்றுத் திறனைக் கண்டறிவதற்கு பெற்றோர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பிற்பகல் 3-25

மாற்றுத் திறனுடைய குழந்தைகளும், சாதாரண குழந்தைகளுக்கு நிகரான தரமான கல்வியைப் பெற்றிடும் வகையில், செவித்திறன் குறையுடையோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு 23 சிறப்புப் பள்ளிகளையும் மற்றும் 54 அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. அரசு நிதி உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களின் ஊதியம் மாதம் ரூ.5,000/- என்றிருந்ததை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.10,000/-ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனவளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர்களுக்கும் அரசுப் பேருந்துகளில் இலவச பேருந்து சலுகை வழங்குவதில் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகள் நலச்சட்டம் 1995-ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுத் துறையில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிடும் விதமாக, A,B பிரிவுகளில் 263 பணியிடங்கள் உகந்த பணியிடங்களாகக் கண்டறியப்பட்டு, 2-3-2016 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். அரசுத் துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் A,B,C,D, ஆகிய பிரிவுகளில் 1,928 பின்னடைவுப் பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 1,183 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் சுய வேலைவாய்ப்பினைத் தொடங்கிட, வங்கிகளின்மூலம் கடனுதவி வழங்கப்பட்டு, அதிகபட்ச மானியமாக 10,000 ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறது.

2015-2016 ஆம் ஆண்டில் ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, 1,200 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளுடைய, குறிப்பாக, மனவளர்ச்சி குறைபாடுடையவர்களைப் பராமரிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை, தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மனவளர்ச்சி குறைபாடு உடையோர், கடும் ஊனத்தினால் பாதிக்கப்பட்டோர், தசைச் சிதைவினால் பாதிக்கப்பட்டோர் என 1 இலட்சத்து 33 ஆயிரத்து 891 நபர்களுக்கு மாதம் 1,500/-ரூபாய் வீதம் பராமரிப்புத் தொகை வழங்கிட 237.1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்தில் ஒருங்கிணைத்திடும் வகையில், அனைத்துத் திருமண நிதி உதவி திட்டங்களில் அவர்களுக்கும் தாலிக்குத் தங்கம் வழங்கப்படும். 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி மட்டுமல்ல, தம்பதிகளில் ஒருவர் பட்டம் அல்லது பட்டயம் பெற்றவர்களாக இருப்பின் தாலிக்கு 4 கிராம் தங்கமும், 50 ஆயிரம் ரூபாயும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கை, கால் பாதிக்கப்பட்டோர், காது கேளாத மற்றும் பேச இயலாதோர் மற்றும் பார்வையற்றோரை திருமணம் செய்திடும் சாதாரண நபர்களை ஊக்குவிக்கும் வகையிலும், மாற்றுத் திறனுடையோரை திருமணம் செய்யும் மாற்றுத் திறனாளியை ஊக்குவிக்கும் வகையிலும் கடந்த 5 ஆண்டுகளில் 7,048 பயனாளிகள் பயன்பெறும் வகையில், 21 கோடியே 7 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

மாற்றுத் திறனாளிகள் சுயசார்புடன் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில், மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி முதலான உதவி உபகரணங்கள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ள ஸ்கூட்டர்கள், சிறப்பு நாற்காலிகள், காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள், நவீன செயற்கை அவயங்கள் மற்றும் பார்வைத் திறன் குறைபாடுடைய மாணவ/ மாணவியர்களின் கற்கும் திறனை அதிகரிக்க ஏதுவாக

2016 ஆகஸ்ட் 10] [டாக்டர் வி. சரோஜா]

Angel Pro Digital Daisy Player முதலான உதவி உபகரணங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் வருமான உச்சவரம்பின்றி மாற்றுத் திறனாளிகளுக்கு 21.46 கோடி ரூபாய் மதிப்பிலான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில், மாற்றுத் திறனாளிகளுக்காக மேலும் ஆயிரம் ஸ்கூட்டர்கள் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்காக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனைக்கும் மேலாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அரசுக் கட்டடங்களாக இருந்தாலும், எந்தப் பொதுக் கட்டடங்களாக இருந்தாலும் அதில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் செல்வதற்கு ஏதுவாக, சாய்வுப் பாதைகள், கைப்பிடிகள், தொடு உணர்வு தரைகள் அமைக்கப்பட வேண்டுமென உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடுவதற்காக நடவடிக்கைகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பார்வையற்றவர்கள் சாலையினை எளிதில் கடந்து செல்ல ஏதுவாக, சென்னை நகரில் 150 பிரதான சாலை சந்திப்புகளில், சிக்னல்கள், குரல் ஒலிப்பான் சமிக்ஞை விளக்குகள் பொருத்திட 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் 49 அரசு பொதுக் கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காக சாய்வுப் பாதைகள், தொடு உணர்வுத் தரைகள் மற்றும் கைப்பிடிகள் அமைப்பதற்காக, முதற்கட்டமாக 7 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளின் சிறப்புக் கல்வி, உதவி உபகரணங்கள், சமூகப் பாதுகாப்பிற்கான நிதி முதலான மறுவாழ்வுக்குத் தேவையானவற்றை உள்ளடக்கிய திட்டங்களை சிறப்புடன் செயலாக்கி, மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஒரு பொற்காலத்தை

உருவாக்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் முழுவதும் உன்னத விருதாம், தங்கத் தாரகை விருது பெற்ற உலகத் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் தலைவர் திரு. கோஃபி அன்னான், ரஷ்ய நாட்டு அதிபர் திரு. போரிஸ் எல்சன், ஐஸ்லேண்டு நாட்டின் திரு. டேவிட் ஆண்டர்சன் ஆகியோர் ஆவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களில் தங்கத் தாரகை விருது பெறுகின்ற உலகத் தலைவர்களுடைய பெண் உலகத் தலைவர் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உலக அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் ரோல் மாடல், உலக அரசியல் விஞ்ஞானி, மருத்துவர்களுக்கு எல்லாம் மருத்துவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சிந்தித்து ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

"சித்திரமும் கைப் பழக்கம்
செந்தமிழும் நா பழக்கம்
வைத்தோர் கல்வியும் மனப்பழக்கம்
நித்தம் நடையும் நடைபழக்கம்
நட்பும் தையும் கொடையும் பிறவி குணம்"

மாண்புமிகு அம்மா அவர்களுடன் பிறந்த அத்தனை உயர்வுகளையும் பெற்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அடிபணிந்து, அம்மா அவர்களுடைய ஆசியோடு, என்னுடைய நன்றி மலர்களை அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து, துறைகளிடைய புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஐந்து வயது குழந்தைகளுக்கு 20.00 இலட்சம் ரூபாய் செலவில் முன்பருவ கல்வி நிறைவு சான்றிதழ் வழங்குதல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமானது தமிழகத்தில் 54,439 அங்கன்வாடி மையங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மறு சீரமைக்கப்பட்ட வடிவத்தின்படி, அங்கன்வாடி மையங்களில் முன்பருவ கல்வி உபகரணங்கள் வழங்குதல், முன்பருவ கல்விக்கான பயிற்சியளித்தல், முன்பருவ கல்வி பாடத்திட்ட புத்தகங்கள், குழந்தைகளுக்கான வளர்ச்சிபடி நிலைகளை கண்காணிக்கும் ஆய்வு அட்டை போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மையத்தில் பயிலும் குழந்தைகள் ஆரம்ப கால கல்வி பயில்வதற்காக வேறு பள்ளிகளுக்குச் செல்லும்போது, பெற்றோர்கள் சான்றிதழ் வழங்குமாறு கோரி வருகின்றனர். எனவே, இந்நிதியாண்டு முதல் அங்கன்வாடி மையங்களில் பயின்று ஆரம்பகால கல்விக்காக வேறு பள்ளிகளுக்குச் செல்லும் சுமார் 2 இலட்சம் குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி முன்பருவ கல்வி நிறைவு சான்றிதழ் 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் செயல்படும் அனைத்து சத்துணவுத் திட்டப் பிரிவுகளுக்கும் புதிய கணினி, பிரிண்டர், ஸ்கேனர் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் 53.12 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், கூடுதல் கல்வி அலுவலரால் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், உதவிக் கணக்கு அலுவலர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், தகவல் தொகுப்பாளர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இத்திட்டத்தினைக் கண்காணித்திட வேண்டி மாவட்டங்களிலிருந்து, இயக்ககத்திற்கும், மத்திய அரசிற்கும் அவ்வப்போது திட்டம் தொடர்பான விவரங்கள் இணையதளத்தின்மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திலும் இப்பணிகளுக்காக கணினி, பிரிண்டர், ஸ்கேனர் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட செயலாக்கத்தினை மேலும் திறம்பட செயல்படுத்திட ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலுள்ள சத்துணவுத் திட்டப் பிரிவுகளுக்கும் புதிதாக கணினி, பிரிண்டர், ஸ்கேனர் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் 53.12 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-35

3. அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவை ரூ.16.20 இலட்சம் செலவில் வழங்கப்படும்

சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் இளஞ்சிறார்களில் இளைஞர் நீதிக்குழுமங்களில் விசாரணை எதிர்கொண்டு பிணை மறுக்கப்படும் சிறார்களின் வாழ்க்கை முறை மாறுதலுக்காக கூர்நோக்கு இல்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். தற்போது 7 கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் 2 சிறப்பு இல்லங்கள் நமது மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இளைஞர் நீதிக் குழுமங்களால் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை உறுதி செய்யப்படும் இளஞ்சிறார்கள் சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சிறுவருக்கான சிறப்பு இல்லம் செங்கல்பட்டு மற்றும்

சிறுமியருக்கான சிறப்பு இல்லம் சென்னை கெல்லீஸிலும் இயங்கி வருகின்றன. இச்சிறார்கள் எதிர்கொள்ளும் உளவியல் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சனைகளை ஆற்றுப்படுத்துதல் மூலம் களைந்து அவர்களை சமூகத்தில் மீண்டும் நல்ல குடிமகனாக ஒருங்கிணைக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி ரூ.16.20 இலட்சம் செலவில் அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவை வழங்கப்படும்.

உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற வல்லுநர்களைக் கொண்டு தேவையுள்ள சிறார்களுக்கு இருதினங்களுக்கு ஒருமுறை ஆண்டு முழுவதும் இச்சேவை தொடர்ந்து வழங்கப்படும்.

4. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (Juvenile Justice Act, 2015)–இன்கீழ் 16 முதல் 18 வயதிற்குட்பட்ட கொடுஞ்செயல் குற்ற வழக்குகளில் ஈடுபடும் சிறார்களுக்கென ஒரு பாதுகாப்பான இடம் ரூ.42.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்

தவறிழைத்ததாகக் கருதப்பட்ட 18 வயதிற்குட்பட்ட சிறார்களும், 18 வயது பூர்த்தியடைந்த நபர்களும், கொடுஞ்செயல் குற்ற வழக்குகளில் ஈடுபடும் 16-18 வயதுக்குட்பட்ட சட்டத்தின்படி முரண்பட்ட சிறார்களும், வழக்கு விசாரணைக்காக மாநில அரசால் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க இளைஞர் நீதிச் சட்டம், 2015-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவுகளின்படி 16 வயதிற்குட்பட்ட சிறார்கள் தங்கும் கூர்நோக்கு இல்லங்களில் 16 முதல் 18 வயதிற்குட்பட்ட கொடுஞ் செயல்களில் ஈடுபட்ட சட்டத்திற்கு முரண்பட்ட சிறார்களை தங்கவைத்தல் கூடாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி வேலூரில் செயல்பட்டுவரும் வரவேற்பு இல்ல வளாகத்தில் உரிய சீரமைப்புகள் செய்யப்பட்டு, ரூ.42.00 இலட்சம் செலவில் பாதுகாப்பு இடம் (Place of Safety) அமைக்கப்படும்.

5. தருமபுரி, கடலூர், நாமக்கல் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் நான்கு புதிய சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் ரூ.73.10 இலட்சம் செலவில் தொடங்கப்படும்

தத்தெடுத்தல் திட்டம் தற்போது 11 மாவட்டங்களில் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி, சிறப்பு தத்து நிறுவனங்கள் முறையே சென்னை (2), சேலம் (2), மதுரை (2), காஞ்சிபுரம் (2), கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் பெறப்படும் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தருமபுரி, கடலூர், நாமக்கல் மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் சிறப்புத் தத்தெடுப்பு நிறுவனங்கள் ரூ.73.10 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

6. இராயபுரத்தில் செயல்படும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகளுக்கான வரவேற்பு இல்லத்திற்கு (Reception Centre) ரூ.1.00 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை தங்க வைத்து, அவர்களுக்கான பராமரிப்பு, கல்வி, பயிற்சி, சிகிச்சை, வளர்ச்சி மற்றும் மறுவாழ்வு வழங்க மாநில அரசானது இராயபுரத்தில் ஒரு வரவேற்பு இல்லத்தினை சமூகப் பாதுகாப்புத் துறையின்மூலம் நடத்தி வருகின்றது. அவ்வரவேற்பு இல்லக் கட்டடம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு புதிய கட்டடம் ரூ.1.00 கோடி செலவில் கட்டப்படும்.

பிற்பகல் 3-40

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

1. மாவட்ட அளவில் சாலை நிகழ்வுகள் மற்றும் தெரு நாடகங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பெரும்பாலான மாற்றுத் திறனாளிகள் கிராமப் பகுதிகளில் வாழ்ந்து வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நகர்ப்புற மாற்றுத் திறனாளிகளைவிட, கிராமப்புறப் பகுதியில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் பலவிதமான உதவித் திட்டங்கள்மீதான விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. அதிகப்படியான மாற்றுத் திறனாளிகளுக்கு தங்களின் உரிமைகள் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்புகள் இல்லை. எனவே, மாவட்ட அளவில் தெருமுனை நாடக நிகழ்வுகள் மற்றும் சாலை விளக்கம் மூலமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடலாம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு விழிப்புணர்வு நிகழ்விற்கு ரூ.20,000/- வீதம் 32 மாவட்டங்களில் தெருமுனை நாடக நிகழ்வுகள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் நடத்திட ரூ.6,40,000/- மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2. வணிக நிறுவனங்களுக்கு உணர்வூட்டும் பயிற்சித் திட்டம்

அனைத்து தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பு மற்றும் உரிமைகள் வழங்கி பாகுபாடு களைவதை உறுதி செய்யும் விதமாக உணர்வூட்டும் பயிற்சித் திட்டம் ஏற்படுத்துதல். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஒரு மாவட்டத்திற்கு ரூ.35,000/- வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.11,20,000/- மதிப்பீட்டில் உணர்வூட்டும் பயிற்சி வழங்கப்படும்.

3. ஆரம்ப நிலை பயிற்சி மைய சிறப்புக் குழந்தைகளுக்கு வருடாந்திர சுற்றுலா திட்டம்

குழந்தைகளின் உடல், மன வளர்ச்சி ஆரம்ப காலத்தில் பெற்றிடும் கற்றல் மற்றும் அனுபவங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, மாற்றுத் திறனாளி

குழந்தைகளுக்கு தமிழ்நாட்டில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் 78 ஆரம்ப கால பயிற்சி மையங்கள் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு ஒரு நாள் சுற்றுலா திட்டம் ரூ.8,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

4. அரசு சிறப்புப் பள்ளிகளுக்கான சுற்றுலா திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் 1,500 மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். நீண்டகாலமாக, அம்மாணவர்கள் தங்களை சுற்றுலா அழைத்துச் செல்ல வேண்டி கோரிக்கை விடுத்துள்ளனர். அம்மாணவர்களுக்கு சுற்றுலா ஏற்பாடு செய்வதன்மூலம் கற்றல் திறனையும், தன்னம்பிக்கையையும் அதிகரித்திட இயலும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு சிறப்பு சுற்றுலா திட்டம் ரூ.12,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்க அகில இந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–I முதன்மைத் தேர்வு எழுத நிதியுதவி

அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-I முதலான தேர்வுகளில் முதன்மைத் தேர்வில் வெற்றி பெறும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஊக்கத் தொகையாக ரூ.50,000/- வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

6. இணையதள வழிமூலம் விண்ணப்பங்கள் பரிசீலித்தல்

மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குதல், கல்வி உதவித் தொகை, பராமரிப்பு உதவித் தொகை போன்ற திட்டங்கள் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2016-2017 ஆம் நிதியாண்டிலிருந்து மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், பொது இ-சேவை மையம் ஆரம்பிக்கப்படும். விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டு, பொது சேவை மையங்களின் இணையதள வழிமூலம் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான சேவை ரசீது எண், ஒப்புகைச் சீட்டு உதவி வழங்கப்படும் உத்தேச நாள் போன்ற விவரங்கள் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். மாவட்ட மின்னணு முறை திட்டத்தின்மூலம் பெறப்பட்ட விண்ணப்பமானது அந்தந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்/மருத்துவ அலுவலர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்கள்மூலம் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் விரைந்து வழங்கப்படும். இம்முறையின்மூலம் மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து நிலைகளிலும் வெளிப்படையாக துரிதமாக பணிகள் நடைபெறவும், கண்காணிப்பினை மேம்படச் செய்திடவும் வழிவகை செய்கிறது. இந்த முறையால், மாற்றுத் திறனாளிகள் மாவட்டத் தலைமையிடம் செல்வதைத் தவிர்த்து அவர்களது அருகில் உள்ள பொது இ-சேவை மையங்களில் விண்ணப்பிக்கவும், தங்களின் விண்ணப்பத்தின் தற்போதைய நிலையினை அறிந்திடவும் இயலும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையில் 70 வெட்டுத் தீர்மானங்களையும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் 54 வெட்டுத் தீர்மானங்களையும் ஆக மொத்தம் 124 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய பதில் திருப்திகரமாக இருக்கும் என நான் நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொண்டு, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,512,31,78,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.396,48,35,000/-, மூலதனக் கணக்கில் ரூ.13,75,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.11,77,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-8-2016) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

59. மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

60. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

[2016 ஆகஸ்ட் 10

61. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2016. (தமிழ், ஆங்கிலம்)

62. மானியக் கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

63. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

64. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

65. மானியக் கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (ஆங்கிலம்)

66. பள்ளிக் கல்வித் துறையின் "செயல்முறைத் திட்டம் மற்றும் புள்ளி விவரம், 2016-2017" என்கிற சிறுநூல். (தமிழ்)

67. பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

68. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

69. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

இணைப்பு I

(846 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண்45—சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

அத்தியாயம்—1

முன்னுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, ஏழை எளிய பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் நல்வாழ்வினை உறுதி செய்து அவர்களின் வாழ்க்கை முறையினை மேம்படுத்துவற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது தொடர்ச்சியான ஆட்சிக் காலங்களிலெல்லாம் பல சீர்மிகு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இதனால், தமிழ்நாட்டிற்கு அகில இந்திய அளவிலும் மற்றும் உலக அறிஞர் பெருமக்களிடையேயும் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுத் தந்துள்ளார்கள். மாநில அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு சிறப்பாக முனைப்புடனும், பன்முகத் தன்மையுடனும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி சமூகப் நலம், சமூகப் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய மூன்று துறைகள் மூலம் செயல்படுத்திவருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் தலைமையின்கீழ் பெண்கள், குழந்தைகள், மூன்றாம் பாலினர், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோரின் நலன்களுக்காக புதுமையான பல எழுச்சிமிகு திட்டங்களை சீரிய முறையில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையினை அடியொற்றி தொடர்ந்த விரிவான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மேலும், பாலினப் பாகுபாடுகளைக் களைய தனிகவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு சிந்தையில் உதித்த "தொட்டில் குழந்தைத் திட்டம்" பெண் சிசுக்கொலையை அறவே ஒழித்து, கைவிடப்பட்ட குழந்தைகளைத் தத்து கொடுக்கும் வரை பாதுகாத்து, பராமரிப்பதில் மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" மாநிலத்தில் உள்ள திட்டங்களிலேயே புதுமையான திட்டமாகும். இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 8 மாவட்டங்களில் பாலின விகித மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், பெண் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலம் குறித்த நம்பிக்கையை வலுவூட்டுவதாகவும், அவர்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிப்பதாகவும் விளங்குகிறது.

பெண் குழந்தைகளின் நல்வாழ்விற்குத் தொடர்புடைய தடைக் காரணிகளான திருமணச் செலவு மற்றும் பாலினப் பாகுபாடு போன்றவை சமுதாயத்தில் இருந்து அறவே ஒழிக்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து நடைமுறையிலுள்ள வழக்கங்களுடன் தங்கள் பெண் குழந்தைகளின் திருமணத்தை நடத்த சிரமப்படும் ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களுக்கு உதவிடும் வகையில் முன்னோடித் திட்டங்களான 10 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்க நாணயத்துடன் ₹25,000-ம், பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்க நாணயத்துடன் ₹50,000-ம் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 55 சதவீத பெண்கள் உயர் கல்வி கற்க ஊக்குவித்துள்ளது. மேலும், ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள், ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் புரிவோர், ஏழை விதவையரின் மகள் மற்றும் மறுமணம் புரியும் ஏழை விதவைகள் ஆகியோருக்காகவும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 23-5-2016 முதல் 8 கிராம் தங்க நாணயம் திருமாங்கல்யம் செய்வதற்கு வழங்கப்படுகிறது.

"மூன்றாம் பாலினரின்" வருமானத்தைப் பெருக்கும் வகையில், அரசு பல்வேறு நிதியுதவித் திட்டங்களை அறிவித்துள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

இந்நடவடிக்கையின்மூலம் சமூகத்தில் நலிவடைந்த நிலையில் உள்ள மூன்றாம் பாலினத்தவரின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலமாக நடத்தப்படும் சேவை இல்லங்கள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் பாதுகாப்புடன் தங்குவதற்கும், கல்வியுடன்கூடிய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கும் மையமாகவும் உள்ளது. "குறைந்த வருவாயை ஈட்டும் பணிபுரியும் பெண்களுக்கான மகளிர் அரசு விடுதிகள்" அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக உள்ளது.

பெண்கள் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில், தமிழக அரசு இலவச தையல் இயந்திரங்களை வழங்கி வருகிறது. 97 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்களிலுள்ள 77,000 பெண் உறுப்பினர்கள் நான்கு இணை பள்ளிச் சீருடைகள் தைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதன் மூலம் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தை சுயமாக வேலை செய்து பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

குழந்தைகளை கவரும் வண்ணமும், அவர்களின் தற்போதைய தேவையை திருப்திபடுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 4 வகையான மசாலா கலந்த முட்டையுடன்கூடிய 13 வகையான கலவை சாதத்தினை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், குழந்தைகளின் உரிமை தொடர்பான, பாதுகாப்பு, பங்கேற்பு மற்றும் மேம்பாட்டினை வழங்கும் முக்கிய வழிகாட்டித் திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டத்தின் நோக்கங்களான ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், குழந்தைகள் மற்றும் மகளிர் நலம் பேணுதல், வளரிளம் பெண்களின் திறன் மேம்பாடு மற்றும் சமச்சீரான வளர்ச்சியினை அடைய உரிய முயற்சிகளை மேற்கொள்கிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், பிறந்தது முதல் ஆறு வயது குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்குதல், சுகாதாரப் பணிகள் , முன்பருவ கல்வி வழங்குதல், வளரிளம் பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குதல் போன்ற நலப் பணிகளை வழங்குகிறது. மறுசீரமைக்கப்பட்ட, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்கள்,

"எழுச்சிமிகு முன்பருவக்கல்வி வளர்ச்சி மையங்களாக" செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் சுகாதாரம், ஊட்டச்சத்து வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கும் முதல்நிலை மையங்களாக செயல்பட ஏதுவான கூடுதல் மனித வளம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, குழந்தைகள், பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக பல்வேறு சமூக நலச் சட்டங்களை நடைமுறைப்படுத்தியும் கண்காணித்தும் வருகிறது. வரதட்சணைத் தடைச் சட்டம், 1961, குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, ஒழுக்கநெறி பிறழ்தல் தடுப்புச் சட்டம், 1956, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம், 2006, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம், 2007, பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலின வன்கொடுமை தடுப்புச் சட்டம், 2013 ஆகியன நடைமுறைப்படுத்தப்படும் முக்கியச் சட்டங்களாகும்.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 போன்ற முக்கியமான சட்டங்களை பெண்கள் மற்றும் குழந்தைகளை துயருறும் சூழல் மற்றும் ஒழுக்க அச்சுறுத்தல் போன்றவற்றிலிருந்து காப்பதற்காக சமூக பாதுகாப்புத் துறை இச்சட்டங்களைத் திறம்பட மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், சிறார்கள் மற்றும் மகளிருக்குத் தேவையான பிற்காப்பு நிறுவனங்கள் இத்துறையின் மூலம் அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

வருவாய் நிர்வாக ஆணையர் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் ஒருங்கிணைப்பு முகமையாக இத்துறை செயல்பட்டு வருகிறது.

தமிழகம் மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் வியக்கத்தக்க உயரிய நிலையினை அடைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பன்முகத் தன்மை கொண்ட சீரிய வழிகாட்டுதலின் பேரில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் பொற்கால வளர்ச்சி இலக்குகளை அடைந்துள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

அத்தியாயம்–2

குழந்தைகள் நலம்

2.1 குழந்தைகளே நாட்டின் செல்வம் என்பதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையிலான அரசு அதனை உறுதிப்படுத்த சமுதாயத்தில் அனைவராலும் பாராட்டி ஏற்றுக்கொள்ளும் வகையில் குழந்தைகளின் நலனுக்காக பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. குழந்தைகளின் முக்கிய தேவைகளான ஆரோக்கியம், ஊட்டச்சத்து, கல்வி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, குழந்தை நலன் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் ஆகியன பல்வேறு சிறப்பான நலத் திட்டங்கள் மூலம் செம்மையாக நிறைவேற்றப்படுகிறது.

பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் வாழ்வாதாரத் திறன் குறித்த முழுமையான முன்னேற்றத்தினை வலியுறுத்தி கொண்டுவரப்பட்ட பல்வேறு புதுமையான திட்டங்களால் பெண் குழந்தை குறித்த நேர்மறையான எண்ணங்களை குடும்பம் மற்றும் சமுதாயத்தில் ஆழப் பதிய வைத்துள்ளது.

2.2 தொட்டில் குழந்தைத் திட்டம்


பெண் சிசுக் கொலை நிகழ்வினை தமிழகத்தில் முற்றிலும் ஒழித்திடவும், குழந்தைகளை இறப்பின் பிடியிலிருந்து காப்பாற்றவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசால் முதன் முதலில் இம்மாநிலத்தில் 1992 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் தொடங்கப்பட்டது.

வறுமை, ஆண் குழந்தை வேண்டும் என்ற மனப்பான்மை, பெண் சிசுக்கொலை என்பது கொடூரமான செயல் என்ற உணர்வு இல்லாமை, புரிந்து கொள்ளாமை மற்றும் ஏற்றுக் கொள்ளாமை, பெண் குழந்தைகளுக்கு மரபு வழியாக செய்யப்படும் சடங்குகள் மற்றும் திருமணத்திற்காக ஏற்படும் செலவினம் குறித்து சமூகத்தின் எதிர்பார்ப்பு மற்றும் அங்கஹீனத்துடன் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இயலாமை போன்றவை பெண் சிசுக் கொலைக்கான முக்கிய காரணிகள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் குழந்தைகள், மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், குழந்தைகள் இல்லம் மற்றும் பாதுகாப்பு இல்லங்களால்

[2016 ஆகஸ்ட் 10

பெற்று பராமரிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2001 ஆம் ஆண்டு, பெண் சிசுக்கொலை நிகழ்வு அதிகமாக இருந்த மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் குழந்தை வரவேற்பு மையங்களை விரிவுப்படுத்திட உத்தரவிடப்பட்டது.

இந்த 5 மாவட்டங்களில் தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள் முழுமையான வசதிகளுடன் நிறுவப்பட்டன. தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறையிலுள்ள மேற்படி 5 மாவட்டங்களில் குழந்தைப் பாலின விகிதத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் கவனிக்க தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதை கீழ்க்கண்ட விளக்கப்படத்தில் காணலாம் :



2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் மிகக் குறைவான குழந்தைப் பாலின விகிதம் பதிவானதைத் தொடர்ந்து, மேற்படி மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

2016 ஆகஸ்ட் 10]

மத்திய அரசின் "பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவோம்! பெண் குழந்தைகளை வரவேற்போம்!" என்ற திட்டத்தைச் செயல்படுத்துதற்காக இந்தியாவிலுள்ள 100 மாவட்டங்களில் கடலூர் மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைப் பாலின விகிதத்தை மேம்படுத்துவதற்காக இதுபோன்ற திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பிற மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படும்.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பாலினப் பாகுபாட்டிற்கு முக்கிய குறியீடான குழந்தைப் பாலின விகிதம் 27 மாநிலங்கள் மற்றும் புதுதில்லி உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களில் குறைந்திருந்தபோது தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக 2001-ல் 942/1000ஆக இருந்த குழந்தைப் பாலின விகிதம் 2011-ல் 943/1000 ஆக அதிகரித்துள்ளது. மேற்கண்டவாறு உரிய நேரத்தில் சிந்தித்து செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட முன்னோடித் திட்டங்களினால், மாநிலத்தில் பாலின பாகுபாட்டில் சமநிலை அடைந்ததற்கு உரிய ஆதாரமாகத் திகழ்கிறது.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

குழந்தை ஒரு நாட்டின் மதிப்புமிக்க சொத்து ஆவர். நாட்டின் எதிர்காலம், குழந்தைகளின் பல்வகையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1992 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளின் நலனுக்கான முன்னோடி மற்றும் புதுமையான திட்டமாகும். இத்திட்டம்மூலம் பெண் சிசுவதை தடுப்பு மற்றும் பெண் கல்வியை மேம்படுத்துதல் ஆகிய இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது. இத்திட்டம் ஏழைக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கி அதன்மூலம், அவர்களின் குறுகிய கால வருமானத்திற்கு ஆதரவு வழங்கியும், அதே நேரத்தில் அவர்களது நடத்தையில் நீண்ட கால மாற்றத்தையும் ஏற்படுத்துகிறது. இத்திட்டம் குடும்பம் மற்றும் சமூகத்தில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, பெண் குழந்தைகளின் வாழ்க்கை மற்றும் எதிர்காலத்தில் ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

இத்திட்டத்தின்கீழ் வைப்புத் தொகை வழங்கப்படும் முறை

திட்டம்–1

இத்திட்டத்தின்கீழ் 1-8-2011 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்து குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக ₹50,000 தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

திட்டம்–2

இத்திட்டத்தின்கீழ் 1-8-2011 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்து, குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா ₹25,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு 18 வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன்கூடிய நிலை வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை, அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தைக்கு உயர் கல்வி பயில உதவுகிறது.

1-8-2011-க்கு முன்னர் திட்டம்-1-ல் வைப்புத் தொகை ₹22,200/- மற்றும் திட்டம் 2-ல் வைப்புத் தொகை ₹15,200/-க்கு முதிர்வுத் தொகை முறையே ₹1,33,306/- மற்றும் ₹91,273/- ஆக இருந்தது. 1-8-2011-க்கு பிறகு புதிய திட்டத்தில் முதிர்வுத் தொகை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது:

2016 ஆகஸ்ட் 10]

முதிர்வுத் தொகை விவரம்

புதிய திட்டம்

வ. எண்	திட்டங்கள்	ஆரம்ப வைப்பீட்டுத் தொகை (₹)	18 வயது நிறைவடையும் போது முதிர்வுத் தொகை ஆண்டு ஊக்கத் தொகை ₹1,800 சேர்த்து தோராயமாக
1	திட்டம்–1	50,000	3,00,232
2	திட்டம்–2	25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்)	1,50,117 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்)

வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத்தொகையாக ₹1,800 வழங்கப்பட்டு வருகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டு முதல் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பயன்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1992 முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்த பயனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் திட்டம்-1-ன்கீழ் ₹50,000/- ஆகவும், திட்டம்-2-ன்கீழ் ₹24,000/- ஆகவும் இருந்த ஆண்டு வருமான உச்ச வரம்பை 14-10-2014 முதல் இரண்டு திட்டங்களுக்கும் பொதுவாக ₹72,000/- என உயர்த்தி அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் சாதனைகள்

தமிழ்நாட்டில் பெண் கல்வியின் முன்னேற்றம் 2001 ஆம் ஆண்டில் 64.43 சதவிகிதத்தில் இருந்து 2011 ஆம் ஆண்டில் 73.86 சதவிகிதமாக உயர்ந்துள்ளதற்கும், பள்ளிக்குச் சென்ற பெண்

குழந்தைகளின் இடைநிறுத்தல் குறைந்ததற்கும் இத்திட்டம் முக்கிய காரணியாக உள்ளது. 31-12-2001 முதல் 31-3-2016 வரை 6,40,459 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ₹1,117.79 கோடி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹14,012.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.4 குழந்தைத் தத்தெடுத்தல் திட்டம்

தத்தெடுத்தல் என்பது ஆதரவற்ற குழந்தைகளுக்கும் மற்றும் பெற்றோர் கவனிப்பு மற்றும் ஆதரவும் இல்லாத ஒவ்வொரு குழந்தைக்கும் சிறந்த மாற்று இல்லமாக செயல்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பு, அன்பு மற்றும் ஒழுக்கம் சார்ந்த பொருளாதாரப் பாதுகாப்பிற்கான உரிமை உண்டு. இது ஒரு குழந்தை குடும்ப சூழ்நிலையில் வளர்ந்தால் மட்டுமே பெற இயலும். ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளைத் தத்து வழங்குவதன்மூலம் மறுவாழ்வு அளிப்பதே சிறந்த வழிமுறையாகக் கருதப்படுகிறது.

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்து வலியுறுத்தி இயற்றப்பட்ட இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு (ம) பாதுகாப்பு) சட்டம், 2015 இன்கீழ் ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு மற்றும் சமூக இணக்கத்துடன் வாழ்வளிப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மத்திய தத்துவள ஆதார மையம் வழிகாட்டுதல், 2015 இன்படி, மேற்கண்ட குழந்தைகள் தத்தெடுத்தல் குறித்த வழிமுறைகள் சட்டப்பிரிவு 56-ல், குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டத்தில் உள்ள வழிமுறைகளின்படி, குழந்தையின் நலன் கருதி, தேவையான பாதுகாப்புகளுடன் குழந்தைகளை தத்து

2016 ஆகஸ்ட் 10]

வழங்கும்போது முன்னுரிமையின் அடிப்படையில் உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கு தத்து வழங்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் குழந்தைகளை தத்தெடுப்பதற்கான குழந்தை நேயமிக்க அணுகுமுறைமூலம் குழந்தை தத்து வழங்குவது குறித்த நேர்வுகளில் தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய தத்துவள ஆதார மையம் (CARA) மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் தன்னாட்சி நிறுவனமாக செயல்படுகிறது. மேலும், இந்திய குழந்தைகளை தத்து வழங்குவதில் ஒருங்கிணைக்கும் நிறுவனமாகவும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தலை கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்தும் பணியை மத்திய தத்துவள ஆதார மையம் மேற்கொள்கிறது. மாநில அளவில் உள்நாட்டு தத்தெடுத்தலை மேம்படுத்தவும், வெளிநாட்டு தத்தெடுத்தலை நெறிமுறைப்படுத்திடவும் மத்திய தத்துவள ஆதார மையத்திற்கு உதவிடும் வகையில் சமூக நல ஆணையரகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாநில தத்துவள ஆதார மையம் நிறுவப்பட்டுள்ளது.

தத்தெடுப்பு திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 6 வயது வரை உள்ள குழந்தைகளை பாதுகாத்து உள்நாட்டில் தத்து வழங்கிட மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி, தத்து நிறுவனங்கள் முறையே சென்னை (2), சேலம் (2), மதுரை (2), காஞ்சிபுரம் (2) மற்றும் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன. இவற்றுள், 5 நிறுவனங்கள் மத்திய தத்துவள ஆதார மையத்தால் (Central Adoption Resource Authority) வெளிநாட்டு தத்தெடுத்தலுக்கு அங்கீகரிக்கப்பட்ட இந்திய தத்து அமர்த்தும் முகமையாக (Recognised Indian Placement) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

இத்திட்டம் துவங்கப்பட்ட காலம் முதல் மே 2016 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விபரம்

வ. எண்	தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள்	ஆண் குழந்தைகள்	பெண் குழந்தைகள்	மொத்தம்
1.	உள்நாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள்	1,117	3586	4,586
2.	வெளிநாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள்	80	330	410
	மெத்தம்	1,197	3,916	5,113

உள்நாடு மற்றும் வெளிநாட்டு தத்தெடுப்பை மேம்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில தத்தெடுப்பு ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் சட்டங்களின்படி, குழந்தைகள் சட்டப்பூர்வமாக உரிய நீதிமன்றங்களால் தத்து அளிக்கப்படுகின்றனர்:

1. *இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956* (HAMA)
2. *இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.*

தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் குழந்தை தத்துவள தகவல் மற்றும் வழிகாட்டி மையம் (Child Adoption Resource Information and Guidance System) *உருவாக்கப்பட்டுள்ளது. இது தத்தெடுக்கப்படும் குழந்தைகள், குழந்தை கோரும் பெற்றோர்கள் குறித்தான முழுமையான விவரங்கள் மற்றும் தத்தெடுப்பு மையங்கள் குறித்த தகவல் களஞ்சியமாக இணையதளத்தில் பதிவு செய்வதை உறுதி செய்கிறது.*

2016 ஆகஸ்ட் 10]

உடல் மற்றும் மருத்துவ ரீதியான பிரச்சினைகளைக் கொண்ட சிறப்புக் கவனம் தேவைப்படும் நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் இத்திட்டத்தின்கீழ் தத்துக் கொடுக்க இயலாத நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் மற்றும் பாதுகாப்பு அளிப்பதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரசு மானியத்துடன் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடத்தப்படும் நான்கு சிறப்பு இல்லங்களில் ஒப்படைக்கப்படுகின்றனர்.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

2.5 பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களுக்கு உதவிடும் பொருட்டு குழந்தை காப்பகங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெற்றோர்களின் 0-5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்கு இணை உணவுடன் கல்வியும் இக்காப்பகங்களில் வழங்கப்படுகிறது.

பணிபுரியும் தாய்மார்களுக்கு மட்டுமல்லாது, நோய்வாய்ப்பட்ட மற்றும் வறிய நிலையிலுள்ள குடும்பத்தில் உள்ள தாய்மார்கள் வீட்டிலும் வெளியிடங்களிலும் பல்வேறு பணிகளுக்கிடையில் குழந்தையைப் பராமரிப்பதில் சிரமப்படுவதால், அவர்களுக்கு உதவிடும் வகையில், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவது தடுக்கப்பட்டும், பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் இன்றி தொடர்தலும், மருத்துவ மற்றும் சுகாதார உதவிகள் பெறுவதற்கும், பெண் குழந்தைகளின் கல்வி போன்றவற்றிற்கும் பாதுகாப்பாக அமைகிறது. எனவே, அனைத்து அமைப்பு மற்றும் அமைப்புசாரா நிறுவனங்களில் சமூக பொருளாதார நிலைகளில், பின்தங்கியுள்ள மற்றும் வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களது குழந்தைகளுக்கு உதவிட பகல் நேர குழந்தைகள் காப்பகங்களின் தரத்தினை உயர்த்தி அவர்கள் எளிதில் அணுகிடும் வகையில் பகல் நேர சேவை மையங்கள் ஏற்படுத்துவது உடனடி தேவையாகிறது.

தற்போது, மாநில அரசு மானியத்துடன் 10 குழந்தைகள் காப்பகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. 25 குழந்தைகளுடன் இயங்கும் ஒரு காப்பகத்திற்கு, அரசு மானியமாக ஆண்டொன்டிற்கு ₹25,410/- வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹3.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6 குழந்தை திருமண தடைச் சட்டம், 2006

குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகள் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்டவிதிகளின் அடிப்படையில், பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டியவர்கள் மட்டுமின்றி அவர்களே நாட்டின் எதிர்காலமாக திகழ்வதால், அவர்களை நல்ல முறையில் பாதுகாத்து பேணப்பட வேண்டியவர்களாவர். உலகில் உள்ள பிற பகுதிகளிலும் குழந்தைத் திருமணத்தை ஒழிக்க அரசு மற்றும் குடிமுறைச் சமூகத்தால் தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் குழந்தைத் திருமணம் இன்னும் ஒரு பொதுவான நிகழ்வாகவே இருந்து வருகிறது. சமூகத்தில் நடைபெற்றுவரும் குழந்தைத் திருமணத்தை ஒழிப்பதற்காக, மத்திய அரசு 1929-ல் இயற்றிய குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு, குழந்தைத் திருமண தடைச்சட்டம் 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டுள்ளது. குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும் மற்றும் இச்சட்டத்தை மீறி அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள் மற்றும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்பவர்கள் மீது அதிகபட்ச தண்டனையை அளிப்பதற்கும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தை செயல்படுத்துதல்

குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில விதிகள் ஏற்படுத்தப்பட்டு 30-12-2009 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூக நல அலுவலர்கள் குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமண தடுப்பு அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அவர்கள் குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த ஏதேனும் தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும் புகாரினை ஏற்று அத்தகைய

2016 ஆகஸ்ட் 10]

குழந்தைத் திருமணத்தினை இரத்து செய்திட மாவட்ட நீதிமன்றத்தில் புகாரினைப் பதிவு செய்வதோடு மற்றும் குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பெற்று வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கிராமப்புறங்களில் நடைபெறும் குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அதுகுறித்து தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர் அவர்களின் தலைமையில், ஊராட்சி அளவிலான குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமணம் இரத்து மற்றும் செல்லாததாக்குதல்

குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தை 18 வயது எய்தி 2 ஆண்டிற்குள் அத்தகைய திருமணத்தை இரத்து செய்யலாம். குழந்தைத் திருமணத்தைச் செல்லாததாக்கவோ அல்லது இரத்து செய்யவோ பாதிக்கப்பட்ட அக்குழந்தை மட்டுமே அதற்கான புகாரினை தொடரலாம். சில நேர்வுகளில், குழந்தைத் திருமணத்தை நீதிமன்றத்தால் செல்லாததாக அறிவிக்க இயலும்.

அத்தியாயம்—3

மகளிர் நலம்

3.1 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெண்கள் 49.80% ஆவர். மாநிலத்தின் வளர்ச்சித் திட்டத்தில் பெண்களின் நலன் மற்றும் திறன் மேம்பாடு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ், பெண்களுக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் பாலின சமத்துவ முயற்சிகள், பெண்கள் மேம்பாட்டில் வெற்றி வாகை சூட்டியுள்ளது.

பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள், ஆதரவற்றவர்கள், ஏழைப் பெண்கள் மற்றும் ஏழைப் பெற்றோர்களின் சுமைகளைக் குறைத்து, அவர்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு திட்டமாக உள்ளது. இத்திட்டங்கள் நம் நாட்டில் பெண்கள் மேம்பாடு, பெண் கல்வி விகித முன்னேற்றம், பள்ளி செல்லா பெண்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருதல் ஆகியவற்றில் ஒரு நிரந்தரப் பதிவை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது.

[2016 ஆகஸ்ட் 10

பிரதான திட்டமான திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ், பட்டதாரி அல்லாதவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹25,000/-மும், பட்டதாரி மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹50,000/-மும் 17-5-2011 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 4 கிராம் தங்கமானது 23-5-2016 முதல் 8 கிராம் (22 காரட்) தங்கமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பத்தினருக்கு உதவும் வகையில், ஆண்டு வருமானமானது ₹24,000/-லிருந்து ₹72,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதரவற்ற பெண்கள் பாதுகாப்பான சூழலில் வசிப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், அரசால் ஒன்பது சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த சேவை இல்லங்களில் உணவு, கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி போன்றவை ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு, அவர்கள் நம்பிக்கையுடன், கண்ணியத்துடன் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக வாழ்க்கையை எதிர்நோக்க சேவை இல்லங்கள் உதவிகரமாக உள்ளன.

பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையிலுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து, வருவாயைப் பெருக்கும் வகையில், தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டு, உகந்த பயிற்சிகள் அளிப்பதன் மூலம், பள்ளி க்குழந்தைகளுக்கான நான்கு இணை சீருடைகள் தைக்கும் பணி வழங்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள மூன்றாம் பாலினத்தவரின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. இதன்மூலம் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காகவும், பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும், பல்வேறு சமூகச் சட்டங்கள் இத்துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 10]

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005, வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 பணி புரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2013 பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஒழுங்குமுறை சட்டம், 2014.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த புகார்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை கவனிப்பதற்கு பெண்களுக்கான மாநில மகளிர் ஆணையம் 1993 முதல் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.2 திருமண நிதி உதவித் திட்டங்கள்

தமிழகத்தில் பல்வேறு சமூகத்தினரால் மணப் பெண்ணிற்கு திருமணத்தின்போது தங்கத்தினால் திருமாங்கல்யம் அணிவது என்பது கலாச்சார பழக்க வழக்கமாகும். திருமணத்தில் ஏனைய செலவுகளுடன் தங்கத்தின் விலை பெற்றோர்களுக்கு ஒரு சுமையாகவே உள்ளது. எனவே, ஏழை பெற்றோர்களுக்கு உதவும் பொருட்டும், அவர்கள் தங்களது மகளுக்கு உரிய வயதில் கல்வியை அளிக்கும் பொருட்டும் திருமண நிதி உதவி திட்டங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏழைப் பெற்றோரின் பெண்கள், விதவையரின் மகள், ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர், மறுமணம் செய்துகொள்ளும் விதவையர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் தமிழக அரசால் ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2011-2012-ல் 28% ஆக இருந்த பட்டதாரி பயனாளிகளின் எண்ணிக்கை 2015-2016 ஆம் ஆண்டில் 49% ஆக அதிகரித்துள்ளது.

2015-2016 ஆம் நிதியாண்டில் திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 1,61,646 ஆகும்.

3.2.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

18 வயது பூர்த்தி அடைந்த ஏழைப் பெண்களுக்கு திருமணத்தின் போது திருமண நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில்

பயன்பெற பெண்கள் 10 ஆம் வகுப்பும், பழங்குடி இனத்தவராக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையும் படித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியும், திருமாங்கல்யம் செய்வதற்காக 23-5-2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பட்டம்/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு நிதியுதவியாக ₹50,000-த்துடன் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் இறந்து விட்ட நிலையில் மகளுக்கு இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் அடைவதற்கு குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹65,170.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

சமூகத்தில் சமுதாய மாற்றத்தையும் மறுமணம் செய்து கொள்ளும் இளம் விதவைகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த தமிழக அரசால் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சி இளம் விதவைகளுக்கு சமூகத்தில் சமூக ஏற்பு மற்றும் கௌரவத்தையும் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டம்/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியில் ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும் அத்துடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 23-5-2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹76.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்

விதவைகள் பெரும்பாலும் தங்கள் வாழ்வில் சமூக நிராகரிப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்கொள்வதால் அதிலிருந்து மீளும் பொருட்டு அவர்கள் பயனடையும் வகையில் அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழை விதவை தாய்மார்களின் மகள் திருமணத்திற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விதவையர் தம் மகளுக்கு திருமணம் செய்ய உதவிடும் வகையில் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000-மும், பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000-மும், அத்துடன் 23-5-2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹3771.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்

ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு பாதுகாப்பான வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கி அவர்களுக்கு நல்ல முறையில் திருமணம் செய்து கொடுக்கும் பொருட்டு தமிழக அரசு அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. பட்டதாரியல்லாத பெண்களுக்கு திருமண நிதி உதவியாக ₹25,000-மும், பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000-மும், அத்துடன் 23-5-2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹373.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

3.2.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

சமுதாயத்தின் சீர்கேடாகக் கருதப்படும் சாதிப் பாகுபாடு சமுதாய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெரும் தடையாக இருந்து வருகிறது. இதனை அகற்றும் பொருட்டு தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இது சமுதாயத்தில் சமத்துவம் ஏற்பட உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ் கலப்புத் திருமணம் செய்யும் தம்பதியரில் பட்டதாரியல்லாதோருக்கு வழங்கப்படும் ₹25,000 நிதி உதவித்தொகையில், ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதி உதவித் தொகையில், ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், அத்துடன் 23-5-2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெற கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

கலப்புத் திருமணத்தின் வகைகள்

1. *இத்திட்டத்தின்கீழ் பயன் பெற கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.*

2. *இத்திட்டத்தில் பயன் பெற கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட (அ) இதர வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.*

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1000.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.3 அரசு சேவை இல்லங்கள்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால்

கைவிடப்பபட்ட பெண்கள் ஆகியோருக்கு பராமரிப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசால் அரசு சேவை இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டத்திற்கு ஒன்று என தமிழகத்தில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சேவை இல்லங்கள், இல்ல உறைவாளர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அளிக்கின்றன. பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த உறைவாளர்கள் அவ்விடத்திலேயே தொடர்ந்து பயில இயலும். இந்த தன்னிகரற்ற சிறப்பான முயற்சியால் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் இச்சேவை இல்லங்களில் தங்களுடன் தங்களது குழந்தைகளையும் உடன் தங்க வைத்து பராமரித்துக் கொள்ள ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தாய் தன்னுடன் அதிகபட்சமாக மூன்று குழந்தைகளைத் தங்க வைத்துக் கொள்ளலாம். இவர்களில் பெண் குழந்தையாக இருந்தால் 12 ஆம் வகுப்பு வரையிலும், ஆண் குழந்தையாக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையிலும் சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம். நிலையான பொருளாதார நிலையை எய்திடும் வகையில் தொழிற்கல்வியும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. வாழ்க்கைத் திறன் முறையே கணினிப் பயிற்சி, ஆங்கிலம் பேசும் திறன், எதிர்காலத்தில் உயர் கல்வி படிப்பது மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன. 2015-2016 ஆம் நிதி ஆண்டில், புதிய முயற்சியாக அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள மகளிர் மற்றும் பெண் குழந்தைளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் ₹9.43 இலட்சம் செலவில் பொருத்தப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹631.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.4 பெண்களுக்கான உயர் கல்வித் திட்டம்

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ஊக்கப்படுத்துவதோடு தொழிற்சார் கல்வி பயின்றிட ₹50,000/- மற்றும்

பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு படித்திட ₹30,000/- என்று நிதியுதவி அரசால் வழங்கப்படுகின்றது.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹65.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.5 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் காப்பகத்தில் மேல்நிலைப் படிப்பு முடித்த மாணவிகள் தாம்பரத்தில் உள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கப்படுகின்றனர். இந்த இல்லத்தில் ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவிகள் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சி மாணவிகளை கல்வி, சுற்றுலா, அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படுவதால் வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், அருங்காட்சியகங்கள், அறிவியல் கண்காட்சிகள், உயிரியல் பூங்காக்கள், கேளிக்கைப் பூங்காக்கள் போன்ற இடங்களை பார்வையிட வாய்ப்பு ஏற்படுகிறது. இதன்மூலம் அவர்கள் பல்வேறு இடங்களைப் பார்த்து பல்வேறு தகவல்களை சேகரிக்கவும், அனுபவ பூர்வமான அறிவை பெறவும் உதவுகிறது. 2014-2015 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் 80 உள்ளுறைவோர்கள் தங்கிட புதிய துயிற் கூடம் ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதனால் அங்கு கல்வி பயிலும் பெண் குழந்தைகள் படிப்பதற்குக் கூடுதலாக இட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹9.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.6 பணிபுரியும் மகளிர் விடுதிகள்

தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல், நகரம் மற்றும் நகர்ப்புறங்களில் இளம் பெண்களின் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்கிறது. இதனால் அவர்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியில் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், அவர்களுக்கு இயன்ற வாடகையில் பாதுகாப்பாக தங்கும் விடுதியின் தேவை அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் வாடகை உயர்வு ஆகியவற்றால், வாழ்வதற்கான செலவு உயர்ந்துள்ளதால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் தங்களுக்குச் கிடைக்கும் குறைந்த வருமானத்தில் தாங்கள்

2016 ஆகஸ்ட் 10]

பணிபுரியும் புதிய இடங்களில் பொருளாதார ரீதியாக சமாளிக்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பணிபுரியும் பெண்களுக்கு உதவிடும் வகையில் 28 பணிபுரியும் மகளிர் விடுதிகள் 18 மாவட்டங்களில் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், 14 பணிபுரியும் மகளிர் விடுதிகள் 14 மாவட்டங்களில் துவங்கிட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிபுரியும் மகளிர் அரசு விடுதிகளில் சேர ₹25,000 வரையும், இதர இடங்களில் ₹15,000 வரையும் மாத வருமானம் ஈட்டும் பணிபுரியும் பெண்கள் பயன் பெற தகுதியுடையவராவர். இங்கு அனுமதிக்கப்படும் பெண்கள் மாத வாடகையாக சென்னையில் ₹300-ம் இதர இடங்களில் ₹200-ம் செலுத்த வேண்டும். உணவுக் கட்டணம், மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற செலவினங்கள் பகிர்ந்தளித்தல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹164.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.7 மகளிரின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்

தமிழ்நாடு அரசு மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பல்வேறு சமூக பொருளாதாரத் திட்டங்களை கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் செயல்படுத்தி வருகிறது. மகளிருக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பு என்பது அவர்களுடைய பொருளாதாரத் தேவையினைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்காக அவர்களது திறன் மற்றும் அறிவினை மேம்படுத்துவது மூலம் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாகும்.

பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 98 மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. இவற்றில் 80 மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ/மாணவியர்களுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில்

பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மற்றும் இதர பள்ளிக் குழந்தைகளுக்கும் 4 இணைச் சீருடைகள் தைத்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சீருடை தைத்தல் மற்றும் வழங்குதல் பணியானது அவர்களுக்கு நிலையான வருவாயை ஈட்டித் தர வழிவகுத்துள்ளது. 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இதர சங்கங்கள், அலுவலகத்திற்குத் தேவையான பதிவேடுகள், ஆவணங்கள், சாக்குகட்டிகள் மற்றும் கயிறு தயாரித்தல் போன்ற பணிகளோடு சீருடைகள் தயாரிக்கும் பணிகளையும் கூடுதலாக செய்து வருகின்றன.

தொழிற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக ஆவதற்கு சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினர், 18 வயதிற்கு மேற்பட்ட வறுமை கோட்டிற்குகீக்ழ் உள்ள பெண்கள், விதவை பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்கள், தையல் தொழில் தெரிந்தவர்கள் தகுதி உடையவர்களாவர். தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இருக்கும் பெண்களுக்கு ஆண்டு முழுவதற்கும் நிலையான வருவாயை ஈட்டித்தரும் வகையில் வேலைவாய்ப்பினை அளிக்கவும் இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.

நவீன ரக தையல் இயந்திரங்கள் ₹5.40 கோடி அரசு மானியத்தில் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. நவீன ரக தையல் இயந்திரங்களை வழங்குவதன் மூலம் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்து வருகிறது.

12 மாவட்டங்களில் 285 பெண்கள் பயன்பெறும் வகையில் 13 தையல் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. சேலம் மற்றும் திருவண்ணாமலையில் பழங்குடியின பெண்களுக்கென தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 35 பழங்குடியினப் பெண்கள் தையல் பயிற்சி பெற்று வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பொம்மை தயாரிக்கும் மையம் செயல்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 10]

தமிழ்நாடு அரசு 2012-2013 ஆம் கல்வி ஆண்டு முதல் 4 இணைச் சீருடைகள் வழங்க ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து, இந்த கல்வியாண்டில் 45.47 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் 4 இணைச் சீருடைகள் பெற்று பயன்அடைந்துள்ளார்கள். சீருடை தைப்பதற்கான தையல் கூலி 2011-2012 ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சீருடைகள் தைப்பதற்கு ₹90 கோடி பள்ளிக் கல்வித் துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் விவரம் மற்றும் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு

வ. எண்	கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்	கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்–களின் எண்ணிக்கை
1.	மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்	**80**	**73,047**
2.	மகளிர் எழுது பொருள் கூட்டுறவுச் சங்கங்கள்	**15**	**1,017**
3.	இணை உணவு தயாரிக்கும் பெண்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்	**25**	**1,450**
4.	இதர சங்கங்கள்	**3**	**1,743**
	மொத்தம்	**123**	**77,257**

இந்தச் சங்கங்கள் மகளிரின் சமூக நிலையை மேம்படுத்தும் மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ள மகளிரின் பொருளாதார நிலையை உயர்த்தும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறன்றன.

[2016 ஆகஸ்ட் 10

3.8 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், ஆண்/பெண் மாற்றுத் திறனாளிகள், சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவிடும் வகையில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலம் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹135.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.9 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் மாநில மகளிர் ஆணையத் தலைவி மற்றும் 9 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பெண்களுக்கு சமத்துவம் வழங்கவும், பெண்களுக்கெதிரான அனைத்து வகை இன்னல்களிலிருந்து பாதுகாப்பினை உறுதி செய்யவும் மற்றும் குடும்பத்திலும், சமுதாயத்திலும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்ற ஒரு சட்ட ரீதியான அமைப்பாகும். மேலும், மகளிர் ஆணையம் பெண்களின் தனிப்பட்ட பிரச்சினைகளைக் கண்டறிந்து அது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது. இவ்வாணையம் பெண்கள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆணையத்தின் குறிக்கோள்கள்

- மகளிரின் நலனை உறுதி செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்
- பாலினம் குறித்த விவகாரங்களைக் கவனித்தல்

2016 ஆகஸ்ட் 10]

- பெண்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆணையத்தின் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தல்

3.9.1 மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

1. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்டப் பிரிவுகள், பாதுகாப்புகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்கள் குறித்தான விவரங்களைக் கவனித்தல்.

2. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முறையாக செயல்படுத்தப்படாத போது அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.

3. பெண்களுக்கு நீதி கிடைக்க தவறும் பட்சத்தில் தேவையான நீதியைப் பெறுவதற்கு உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ள அரசுக்குப் பரிந்துரை செய்தல்.

4. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிகழ்வுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளவாறு பாதுகாப்பிற்கான உத்தரவாதம் வழங்கப்படாத நிலையிலும், பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மகளிர் ஆணையத்தை நேரிடையாக அணுகலாம்.

3.10 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாடு சமூக நல வாரியம் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில் 1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் முக்கிய நோக்கங்கள்

1. மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

2. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவைகளின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்.

3. மாநில மற்றும் மத்திய சமூகநல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதைக் கண்காணித்தல்.

தமிழ்நாடு சமூகநல வாரியம் ஒரு தலைவரையும் 30 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. கல்வி மற்றும் பயிற்சி மூலமாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், கூட்டு முயற்சி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்திற்கு வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை தனது சேவைகளின் மூலம் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஊக்கப்படுத்தி உதவி செய்கிறது.

3.10.1 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்மூலம் 2016–2017 ஆம் ஆண்டில் வழங்கப்படும் நிதியுதவி விவரம்:

நிதியுதவி	தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை	மொத்த அலகுகள் எண்ணிக்கை	மொத்த நிதி ஒதுக்கீடு (இலட்சம்)	பயனாளிகளின் எண்ணிக்கை
மாநில அரசு	206	206	14.8	5,018
மத்திய சமூக நல வாரியம்	382	1,234	147.55	65,607
மொத்தம்	**588**	**1,440**	**162.35**	**70,625**

3.10.2 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்

மகளிர் மற்றும் குழந்தைகள் முன்னேற்றப் பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள். சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் (அ) பொது அறக்கட்டளை சட்டத்தின்கீழ் பதிவு செய்து, குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் சிறப்பாக செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ்

2016 ஆகஸ்ட் 10]

பயன் பெறுகின்றன. பயிற்சி உபகரணங்கள் மற்றும் குழந்தைகளின் விளையாட்டு சாதனங்கள் போன்றவற்றை வாங்குவதற்கு ஒவ்வொரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கும் ₹5,000/- அரசு மானியமாக ஒரு முறை மட்டும் வழங்கப்படுகிறது. அத்தொகையுடன் அந்நிறுவனத்தின் பங்களிப்பாக ₹5000/- சேர்த்து (50:50) செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்கீழ் பயன்பெறுகின்றன. இத்திட்டத்திற்கென 2016-2017 ஆம் நிதியாண்டிற்கு ₹10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.11 குடும்ப ஆலோசனை மையம்

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணை கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்பப் பிரச்சனைகள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது. தற்போது 6 குடும்ப ஆலோசனை மையங்கள், சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டிற்கு ₹4.80 இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநில அரசு நிதியுதவி மூலம் நடத்தப்படும் 6 குடும்ப ஆலோசனை மையங்களின் சேவையை அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பயன்படுத்தி, அதன் மூலம் குடிப்பழக்கம், போதைப் பழக்கம், வரதட்சணைக் கொடுமை மற்றும் இதர குடும்பப் பிரச்சினைகள் முறையான ஆலோசனை மூலம் சுமூகமாக தீர்க்கப்படுவதோடு, பாதிக்கப்பட்ட பெண்கள் குடும்பத்தில் உரிய மதிப்போடு வாழ்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. இதற்காக குடும்ப ஆலோசகர்களுக்கு கூடுதல் மதிப்பூதியமாக ஆலோசகர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ₹3,500/- என்ற வகையில் ஆறு ஆலோசகர்களுக்கு செலவினம் மாநில அரசால் கூடுதலாக மேற்கொள்ளப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 10

3.12 தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்

மூன்றாம் பாலினத்தவர்கள் பெரும்பாலும் சமூகத்தால் மிகவும் ஒதுக்கப்பட்டும் அவர்களின் சொந்தக் குடும்பங்களை விட்டு துரத்தப்படுகிறார்கள். அவர்கள் தவறான வழியிலும், இழப்பு மற்றும் பல்வேறு பாரபட்சத்திலும் தள்ளப்படுகிறார்கள். மேலும், அவர்கள் பள்ளிகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுவதால், பெரும்பாலானோர் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எந்த வேலைக்கும் வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு கிடைக்காமலும், எல்லாப் பகுதிகளிலிருந்தும் பாகுபாட்டினை எதிர்கொள்கிறார்கள். எனவே, அவர்கள் நாடோடி வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டு பணத்திற்காக பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். குடும்பத்தை விட்டு வெளியேறும் மூன்றாம் பாலினத்தவர்கள் பெரும்பாலும் இன்றியமையா ஆவணங்கள் குறிப்பாக பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் பிறஅத்தியாவசிய ஆளறி அடையாள அட்டைகளான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை வைத்திருப்பதில்லை. உச்ச நீதிமன்றத்தின் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பின்படி திருநங்கைகள் மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மூன்றாம் பாலினத்தவர்களின் பிரச்சினைகளைப் பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் தீர்வு செய்வதற்காக அரசு, மூன்றாம் பாலினத்தவர்களுக்கான நல வாரியத்தை அமைத்துள்ளது. தமிழ்நாடு மூன்றாம் பாலின நலவாரியம் மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், 11 அலுவல் உறுப்பினர்கள் மற்றும் 9 அலுவல் சாரா உறுப்பினர்களைக் (மூன்றாம் பாலினத்தவர்கள்) கொண்டது.

மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்திற்காக ஒழுக்கமும் மதிப்புமிக்க வகையில் தொழில் ஒன்றை அமைத்துக் கொள்வதே அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் முதன்மையானதாகும். மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அவர்களின் சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ₹15.00 இலட்சம் வரை வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 10]

மளிகைக் கடை அமைத்தல், பசுமாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், சோப்பு உற்பத்தி செய்தல், அணை ஆடை உற்பத்தி செய்தல், பால் பொருட்களை உற்பத்தி செய்தல், பயணிகள் ஆட்டோ, சரக்கு ஆட்டோ ஓட்டுதல் மற்றும் துணி வியாபாரம், அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு பொருளாதார செயல்பாடுகளை மூன்றாம் பாலினத்தவர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செய்து வருகின்றனர். பல்வேறு திட்டங்களுக்காக, 442 உறுப்பினர்களைக் கொண்ட 51 சுய உதவிக் குழுக்களுக்கு ₹2.20 கோடி மொத்த உதவித் தொகையில் 25 சதவிகித மானியமாக ₹55.00 இலட்சமும், வங்கிக் கடனாக ₹1.65 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உதவிடும் வகையில், மாதாந்திர ஓய்வூதியம் ₹1,000/- வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் தற்போது 954 மூன்றாம் பாலினர் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2016-2017 ஆம் நிதியாண்டில் ₹220.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.13 பெண்களுக்கான நலச் சட்டங்கள்

கீழ்க்காணும் சமூக நலச் சட்டங்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையை முகமையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

2. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961.

3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2013.

4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015.

[2016 ஆகஸ்ட் 10

3.13.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

இச்சட்டம் சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்கள் உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது. மேலும் இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த 60 நாட்களுக்குள் தீர்வு பெற முடியும். இச்சட்டத்தின்கீழ் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள் மீதும் மற்றும் திருமணம் போன்ற உறவில் வாழும் ஆண் நபரை எதிர்மனுதாரராகச் சேர்த்து நிவாரணம் கோரி வழக்கு தொடருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

❖ *பிரிவு 17-ன்கீழ் பெண்கள் தனது புகுந்த வீட்டில் வசிப்பதற்கான உரிமையை உறுதி செய்தல்.*

❖ *பொருளாதார வன்முறைக்கு எதிராக நிவாரணம் பெறுவதை உறுதி செய்தல்.*

❖ *வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளை கண்டறிதல்.*

❖ *பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளைத் தற்காலிகமாக தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வழங்குதல்.*

❖ *வழக்கு பதிவு செய்த 60 நாட்களுக்குள் நீதிமன்றத் தீர்ப்பினை பெற்று வழங்குதல்.*

❖ *ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.*

❖ *பாதிக்கப்பட்ட நபர்களுக்கிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005-ன் கீழ் வழக்கு பதிவு செய்யலாம்.*

❖ *மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.*

2016 ஆகஸ்ட் 10]

3.13.2 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005–ன்கீழ் கிடைக்கும் நிவாரணங்கள் பின்வருமாறு :

பிரிவு 18 – பாதுகாப்பு ஆணை

பிரிவு 19 – கணவர் வீட்டில் தங்குவதற்கான வசிப்பிட ஆணை

பிரிவு 20 – பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர் தம் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொருள் உதவி ஆணை

பிரிவு 21 – குழந்தைகளைத் தற்காலிகமாக தங்களுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு ஆணை

பிரிவு 22 – வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டு ஆணை

3.13.3 பாதுகாப்பு அலுவலர்கள்

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது கணவர் அல்லது கணவர் போன்ற உறவுமுறையிலான ஆண்களுக்கு எதிராக நிவாரணம் கோரி அணுகும் பெண்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005-ன்கீழ் பாதுகாப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். பாதுகாப்பு அலுவலர்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இலவச சட்ட உதவி அளித்து, நீதிமன்றத்தின் மூலம் தக்க நிவாரணம் பெறுவதற்கு உதவியாக இருப்பர். மேலும். நீதிமன்றத்தினால் வழங்கப்படும் ஆணைகளை காவல் துறையின் உதவியோடு செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பர். பாதிக்கப்பட்ட பெண்கள் இச்சட்டத்தின்கீழ் நேரடியாக நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திலோ அல்லது சேவை அளிக்கும் நிறுவனத்திலோ அல்லது அருகிலுள்ள காவல் துறையிலோ புகார் மனு அளிக்கலாம்.

3.13.4 சேவை அளிப்பவர்கள்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை;ரீ பாதுகாக்கும் சட்டம் 2005-ன்கீழ் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த நபர்கள் சேவை அளிப்பவர்களாக நியமனம்

செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இச்சட்டத்துடன் தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதித் துறையின் மூலம் நிவாரணம் பெற்றுத்தர உதவி செய்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குடும்ப நிகழ்வு அறிக்கை பதிவு செய்வதில் உதவுதல், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளுடன் தங்குவதற்கு பாதுகாப்பான குறுகிய கால உறைவிடம் பெற்றுத் தருதல், ஆலோசனை மற்றும் தேவையெனில் மருத்துவ வசதி வழங்குதல் போன்ற உதவிகளை செய்கின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் சுயமாக சம்பாதித்து வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக தொழிற்பயிற்சி பெறவும் உதவி செய்கின்றனர். தமிழக அரசால் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் எனவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் 2 நபர்கள் என மொத்தம் 33 சேவை அளிப்பவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

3.13.5 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்

தமிழகத்தில் 98 பாதுகாப்பு இல்லங்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டவாறு செயல்படுகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிடும் வகையில் அரசு மருத்துவமனைகளுடன் சேர்த்து மொத்தம் 1,849 மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், தொழிலாளர் காப்பீட்டு நிறுவன மருந்தகங்கள் ஆகியன மருத்துவ வசதி மையங்களாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

3.14 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டு அதற்கான சட்ட விதிகள் 2004 ஆம் ஆண்டு தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது. வரதட்சணை தடுப்பு விதிகளின்படி மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் மூலம் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்த அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வரதட்சணை தொடர்பாக மாவட்ட சமூக நல அலுவலர்களால் நேரடியாக பெறப்படும் புகார் மனுக்கள் மற்றும் காவல் துறையின் மூலம்

2016 ஆகஸ்ட் 10]

பரிந்துரை செய்து பெறப்படும் வழக்குகள் வரதட்சணை தடுப்பு அலுவலரால் விசாரிக்கப்படுகிறது. புகாரின் உண்மைத் தன்மை அறியப்பட்டு, அதன்அடிப்படையில் வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961-ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாவட்ட சமூக நல அலுவலர்களால் காவல் துறைக்கு / நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் நவம்பர் 26 ஆம் நாள் வரதட்சணை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றைய தினம் மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து வரதட்சணை தடுப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

3.15 தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014

வீட்டை விட்டு வெளியில் தங்கியுள்ள குழந்தைகள், பெண்கள், பணிபுரியும் மகளிர் ஆகியோர்களின் பாதுகாப்பினை அதிகப்படுத்தவும், அவர்களுக்கு எதிரான வன்முறை செயல்களை தடுக்கவும், வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்காகவும் குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் பெண்கள் தங்கும் இடங்களான இல்லங்கள், விடுதிகள் மற்றும் ஏனைய பிற நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015 இயற்றப்பட்டதுடன், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையும் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற இல்லங்கள் மற்றும் விடுதிகளை பதிவு செய்யும் அதிகாரி மாவட்ட ஆட்சியரே ஆவார். தேவையின்றி குழந்தைகளை இல்லத்தில் வைத்திருப்பதை குறைப்பதும், விடுதிகளில் தங்கி பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

3.16 மாநில பெண்கள் வள மையம் (SRCW)

மாநிலங்களில் பெண்களின் ஒட்டுமொத்த திறன் மேம்பாட்டினை முதன்மை நோக்கமாகக் கொண்டு பெண்கள் மேம்பாட்டிற்கான மாநில பெண்கள் வள மையத்தை தேசிய அளவிலான அமைப்பு உருவாக்கியுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

மத்திய மற்றும் மாநில அரசுகளின் முன்னோடித் திட்டங்களை மறு ஆய்வு செய்து, கண்காணிக்கும் பொருட்டு ஏற்கெனவே மாநிலங்களில் செயல்பட்டு வரும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மாநில பெண்கள் வள மையம் செயல்பட்டு வருகின்றது. இந்திய அரசின் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை பெண்களுக்காக மாநில பெண்கள் வள மையம் நடைமுறைப்படுத்தி வருகிறது:

1. சகி – (ஒன் ஸ்டாப் கிரைசஸ் சென்டர்) Sakhi – (One Stop Crisis Centre)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒருங்கிணைந்த உதவிகளைப் பெற்றுத் தருவது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உடனடித் தேவைகளை கவனித்தல், மனநல மேம்பாடு, சட்ட, மருத்துவ சேவை ஆகியவை பொது மற்றும் தனியார் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

2. பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Women Help Line)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசர உதவி தேவைப்படும்போது உதவிக் கரம் நீட்டும் வகையில் 24 மணி நேரம் செயல்படும் பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Women Help Line) ஆரம்பிக்கப்பட உள்ளது. இவ்வுதவித் திட்டத்தில், அவர்களுக்கு தேவையான மீட்பு மற்றும் பரிந்துரையை உரிய நிறுவனங்களான காவல் துறை/ மருத்துவம்/ விரைவு ஊர்தி சேவை/ மாவட்ட சட்ட ஆணைக் குழு/பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் மூலம் உதவியும் தகவலும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தகுந்த தேவையான ஆதரவு தரக்கூடிய பணிகளை தேர்ந்தெடுக்கவும், அரசாங்கத் திட்டங்கள் மற்றும் பணிகளை, பாதிக்கப்பட்ட பெண்கள் அவர்கள் இருக்கும் இடம் மற்றும் பணிபுரியும் இடத்திலேயே பெற்றுக் கொள்வதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், சகி (ஒன் ஸ்டாப் கிரைசஸ் சென்டர்) உடன் இணைந்து செயல்பட உள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

3. கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டம் (VCFS)

மாநிலத்தில் அனைத்துத் துறைகளிலும் மகளிருக்கு முழுமையாக அதிகாரமளிப்பதற்கு பாடுபடுவது இதன் முக்கிய நோக்கமாகும். இது, மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை முனைப்புடன் ஒருங்கிணைப்பதன் வாயிலாக பாலின உணர்வு குறித்த திட்டங்கள், சட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு, மகளிருக்கு அதிகாரமளிக்கும் விவகாரங்களில் ஈடுபடும் அரசுக்கும், ஏனைய பொறுப்பாளர்களுக்கும் உதவுகிறது. தமிழ்நாட்டில் கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கடலூர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

4. பூர்ண சக்தி கேந்திரா (Poorna Sakthi Kendra)

அடித்தட்டு அளவில் உள்ள பெண்களுக்கு சேவைகளை வழங்குவதும், தரத்தினை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பெண்களின் மேம்பாட்டிற்கு தேசிய அமைப்பின்கீழ் சேலம் மாவட்டத்தில் 10 பஞ்சாயத்துகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

3.17 விருதுகள்

உலக மகளிர் தினமான மார்ச் 8 ஆம் தேதி அன்று, சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவ்வையார் விருது எனும் உயரிய விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், ₹1.00 இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

சிறந்த சமூக சேவகி மற்றும் சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. சிறந்த சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் சால்வை ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு மேற்கூறியவற்றுடன் ₹50,000 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 10

அத்தியாயம்–4

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

4.1 *சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. உணவளிப்பதன் மூலம் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதிசெய்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்தினை அதிகரிக்க வேண்டியும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1982-ல் தொடங்கப்பட்டது. பசியோடு உள்ள குழந்தையாலும், ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தையாலும் படிப்பின் மீது கவனம் செலுத்த இயலாது என்ற காரணியின் அடிப்படையில், அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சர்வ க்ஷா அபியான் திட்டத்தின்கீழ் செயல்படும் சிறப்புப் பயிற்சி மையங்கள், மதரசாக்கள் மற்றும் மக்தப்களில் பயிலும் துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கும், மற்றும் உயர் துவக்கப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது.*

4.2 இத்திட்டத்தின் அடிப்படை கோட்பாடுகள்

1. *அனைவருக்கும் ஆரம்பக் கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலைக் குறைத்தல்*

2. *கிராமப்புறங்களில் வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்தினை வழங்குதல்*

3. *ஏழ்மையில் வாடும் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை முறைப்படுத்தவும் மற்றும் முறையான கல்வி பெற்றிடவும்*

4. *வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்திடவும்*

2016 ஆகஸ்ட் 10]

4.3 சத்துணவுத் திட்டத்தின் கால முறை முன்னேற்றம்

1-7-1982 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டமானது ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப் பள்ளி பயிலும் குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டது.

15-9-1982 நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

15-9-1984 10 வயது முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது.

3-6-1989 பள்ளி செல்லும் அனைத்து குழந்தைகளுக்கும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு முட்டை வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டது

12-9-2001 பயறு வகைகள் – கொண்டைக் கடலை/பச்சைப் பயறு மற்றும் வேக வைத்த உருளைக் கிழங்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

20-3-2013 ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் புதிய வகை கலவை சாதம் மற்றும் நான்கு வகை மசாலா முட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

15-8-2014 புதிய வகை கலவை சாதம் மற்றும் நான்கு வகை மசாலா முட்டை வழங்கும் திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

4.4 நிருவாகக் கட்டுப்பாடு

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள பள்ளி சத்துணவு மையங்கள், சமூக நல இயக்குநரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்தும் மாவட்ட அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள். 2 முதல் 5+ வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பருவ கல்வி சத்துணவு

[2016 ஆகஸ்ட் 10

மையங்கள், இயக்குநர்/குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித திட்டப் பணிகள், அவர்களது நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றது.

4.5 அங்கன்வாடியில் பயன்பெறும் பயனாளிகள்

வ. எண்	பயனாளிகளின் வகைப்பாடு	மையங்களின் எண்ணிக்கை	பயனடைவோர் எண்ணிக்கை
1.	அங்கன்வாடி மையங்களில் 2 முதல் 5+ வயது வரையுள்ள குழந்தைகள் (25 முதல் 72 மாதங்கள் வரை)	54,439	13,97,465
2.	சத்துணவுப் பெறும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள்		127
	மொத்தம்	54,439	13,97,592

4.6 பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள்

வ. எண்	நிலை	மையங்களின் எண்ணிக்கை	பயனடைவோர் எண்ணிக்கை
1.	துவக்கப் பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை)	26,780	26,88,345
2.	உயர் துவக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு	15,993	21,10,620
	உயர்நிலைப் பள்ளி (9 மற்றும் 10 ஆம் வகுப்பு)		6,98,066
3.	தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்	274	8,816
	மொத்தம்	**43,047**	**55,05,847**

2016 ஆகஸ்ட் 10]

4.7 மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை

வ. எண்	பயனாளிகளின் வகை	பயனடைவோர் எண்ணிக்கை
1.	அங்கன்வாடி மையங்கள் (2 முதல் 5 + வயது வரை)	13,97,465
2.	பள்ளி சத்துணவு மையங்கள் (தேசிய குழந்தை தொழிலாளர் திட்டப் பயனாளிகள் உட்பட)	55,05,847
3.	சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள்	127
	மொத்தம்	69,03,439

4.8 பயனாளிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களால், ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும், ஒவ்வொரு மையத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை, பள்ளிக்கு வந்து மதிய உணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனுப்பும் அறிக்கைகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு 3 மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. இருப்பினும், கல்வி உரிமைச் சட்டம் 2009-ன் படி, பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளையும் முழுமையாக இத்திட்டத்தின்கீழ் கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

4.9 திட்டத்தின் உட்கூறுகள்

i. *5 முதல் 9 வயதிற்குட்பட்ட துவக்கப் பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும்,*

வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திற்குள்ளேயே சூடான, சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

ii. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

iii. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு, நாளொன்றுக்கு 100 கிராமும், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராமும் என்ற அளவில் சத்துணவு சமைப்பதற்காக அரிசி பயன்படுத்தப்படுகிறது.

iv. பதிவுபெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்துமிக்க கலவை சாதத்துடன் குறைந்தபட்சம் 46 கிராம் எடையுள்ள ஒரு முட்டை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு 46 கிராம் எடையுள்ள முட்டையில் 6.12 கிராம் புரதமும், 80 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. முட்டைக்கான செலவினம் முழுவதும் மாநில அரசே ஏற்கிறது.

v. முட்டை உண்ண விருப்பமில்லாத குழந்தைகளுக்கு மாற்றாக 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1.2 கிராம் புரதமும், 116 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது.

vi. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது வாரங்களில் வரும் செவ்வாய்க் கிழமைகளில் 20 கிராம் கருப்பு ₹கொண்டைக்கடலை, புலவுடன் சேர்த்து கொண்டைக்கடலை புலவாக வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும் 3.42 கிராம் புரதமும் கிடைக்கிறது.

2016 ஆகஸ்ட் 10]

vii. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வாரங்களில் வரும் வியாழக்கிழமைகளில் 20 கிராம் பச்சைப்பயறு 'சுண்டலாக' வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும் 4.80 கிராம் புரதமும் கிடைக்கிறது.

viii. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் குழந்தைகளுக்கு மாவு சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில் 20 கிராம் உருளைக்கிழங்கு மிளகாய்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும் கிடைக்கிறது. 20 கிராம் உருளைக்கிழங்கிற்கான கொள்முதல் தொகையினை 16 பைசாவிலிருந்து 40 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ix. சுகாதார தலையீட்டின் ஒரு பகுதியாக, அயோடின் மற்றும் இரும்புச்சத்துக் குறைபாட்டினை களையும் பொருட்டு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, சத்துணவில் பயன்படுத்தப்படுவதால் அயோடின் குறைபாடு நீக்கப்பட்டு முன்கழுத்து கழலை நோய் வருவது தடுக்கப்படுகிறது.

x முக்கியமான சிறப்பு நாட்களின்போது, வெல்லம் மற்றும் நெய் பயன்படுத்தி செய்யப்பட்ட இனிப்புப் பொங்கல் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

4.10 புதிய கலவை சாதம் திட்டம்

2013 ஆம் வருடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் 13 வகையான புதிய வகை கலவை சாதம் மற்றும் 4 வகையான மசாலா முட்டைகள் இத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் வெற்றிகரமான துவக்கத்தினைத் தொடர்ந்து அனைத்து சமையலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு, படிப்படியாக, விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டு திட்டத்தினை வலுப்பெறச் செய்யப்பட்டது. 15-8-2014 முதல் இத்திட்டம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பல்வகை கலவை சாத உணவு வகைகள் பின்வருமாறு:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நாட்கள்	வழங்கப்பட்டு வரும் உணவு வகை	
	முதல் மற்றும் மூன்றாம் வாரம்	இரண்டாவது மற்றும் நான்காவது வாரம்
திங்கட் கிழமை	வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை	சாம்பார் சாதம் (பிஸி பேளாபாத்) + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை
செவ்வாய்க் கிழமை	கருப்பு கொண்டைக்கடலை புலவு + தக்காளி மசாலா முட்டை	மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை
புதன்கிழமை	தக்காளி சாதம் + மிளகு முட்டை	புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை
வியாழக்கிழமை	சாதம், சாம்பார்+வேகவைத்த முட்டை	எலுமிச்சை சாதம் + சுண்டல் + தக்காளி முட்டை
வெள்ளி கிழமை	கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு	சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு

பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில், ஊட்டச்சத்து, சுகாதாரம், நகம் வெட்டுதல், சமைப்பதற்கு மற்றும் பரிமாறுவதற்கு முன் சோப்பால் கை கால் சுத்தம் செய்தல் போன்ற தன் சுத்தம் பேணுதல் தொடர்பாகவும், சமைக்கும் மற்றும் பரிமாறும் பாத்திரங்களை சுத்தம் செய்வது, உணவுப் பொருட்களைச் சேமிப்பது மற்றும் சுற்றுப்புறத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பது போன்றவற்றில் தகுந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து சத்துணவுப் பணியாளர்களுக்கும் சமையற்கலை வல்லுநர்களால் புதிய பலவகை கலவை சாதங்கள் தயாரிப்பது தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

4.11 உணவுப் பொருட்கள் மேலாண்மை

- *1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மைய அரசால் இலவச அரிசி ஒரு மெட்ரிக் டன் ₹5,650/- என்ற விலையில் வழங்கப்படுகிறது. மேலும் அருகாமையிலுள்ள இந்திய உணவு கழக கிடங்கிலிருந்து அரிசியை எடுத்து வருவதற்கு போக்குவரத்து செலவினத்திற்காக ₹750/- வழங்கப்படுகிறது. தரமான நல்ல அரிசியை வழங்க வேண்டியது இந்திய உணவுக் கழகத்தின் பொறுப்பாகும். குறைந்தபட்சம்,* Fair Average Quality (FAQ) *தரத்திலான அரிசி வழங்கப்படவேண்டும்.*

- *இத்திட்டம் மாநில அரசால் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகும் முழு செலவினமும் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு பயன்படுத்தப்படும் அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் ஒரு மெட்ரிக் டன் ₹10,318/- என்ற விலைக்கு மையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.*

- *சத்துணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை (பருப்பு, எண்ணெய், கருப்புக் கொண்டைக்கடலை மற்றும் பச்சைப்பயறு போன்றவற்றை) விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகிறது. மைய அரசால் ஒதுக்கப்பட்ட அரிசி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் இந்திய உணவு கழகத்திடமிருந்து எடுக்கப்பட்டு, பின்னர் மாவட்ட அலுவலரின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது.*

- *தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாடு உப்புக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்கிறது. இவ்வாறு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ள தொடரமைப்பின் காரணமாக சத்துணவு மையங்களுக்கு நிலையான உணவுப் பொருட்கள் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.*

- *சத்துணவு அமைப்பாளர்களது வங்கிக் கணக்கில் மின்னணு பரிமாற்றம்* (ECS) *மூலமாக வரவு வைக்கப்படும் முன்பணத்*

[2016 ஆகஸ்ட் 10

தொகையினை பயன்படுத்தி சத்துணவு தயாரிப்பதற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப்பொருட்களை உள்ளூரிலேயே வாங்கி செலவினம் மேற்கொள்ள சத்துணவு அமைப்பாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளை பின்பற்றி மாநில அளவில் அக்மார்க் 'A' குறியீட்டான நடுத்தர முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு முட்டையும் குறைந்த பட்சம் 46 கிராம் முதல் அதிகபட்சமாக 52 கிராம் வரை எடையுள்ள முட்டைகள் அனைத்து சத்துணவு மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது. திருட்டினைத் தடுக்கும் பொருட்டு, உணவு தரம் வாய்ந்த வண்ணங்களைக் கொண்டு முட்டைகளின் மேல் முத்திரை பதிக்கும் வழக்கம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது.
- வாழைப்பழம் சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூர் சந்தைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

4.12 தேசிய மதிய உணவுத் திட்டம்

- 1995 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளன்று மத்திய அரசால் ஆரம்பக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம் தொடங்கப்பட்டது. 1997-1998 ஆம் ஆண்டு, நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஆரம்பக்கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற பெயர், பள்ளிகளில் "தேசிய மதிய உணவுத் திட்டம்" என மாற்றம் செய்யப்பட்டது.
- இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் ஒட்டுமொத்த நிதியில் 60 சதவிகிதம் மைய அரசின் பங்காகவும், 40 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் வழங்கப்பட வேண்டும் என 2015-2016 ஆம் ஆண்டு முதல்

நிதி அமைப்பு மைய அரசால் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி உணவூட்டுச் செலவினம் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் மைய, மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரிசி அதற்கான போக்குவரத்துச் செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இனங்களுக்காக வழங்கப்படும் நிதி 100% மைய அரசால் வழங்கப்படுகிறது.

- குழந்தைகள் உட்கொள்ளும் மதிய உணவின் ஊட்டச்சத்து அளவினை, துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 450 கலோரியுடன் 12 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருக்க வேண்டும் எனவும், உயர்துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு 700 கலோரியுடன் 20 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருத்தல் வேண்டும் என மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்ட மாநில அரசால் கூடுதல் செலவினம் மேற்கொண்டு துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு 553.30 கிலோ கலோரிகளும், 18.12 கிராம் புரதமும், உயர்துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு 733.86 கிலோ கலோரிகளும், 21.64 கிராம் புரதமும் கொண்ட மதிய உணவினை இலவசமாக வழங்கி வருகிறது.

- 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அரிசி இலவசமாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு மெட்ரிக் டன் அரிசிக்கு போக்குவரத்து செலவினமாக ₹750 மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின்கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு பயனாளிக்கும் ஆகும் தினசரி உணவூட்டுச் செலவினம் ₹4.13 என நிர்ணயித்துள்ளது (மத்திய அரசு ₹2.48 மற்றும் மாநில அரசு ₹1.65). 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு, ₹6.18 என நிர்ணயித்துள்ளது. (மத்திய அரசு ₹3.71 மற்றும் மாநில அரசு ₹2.47). இருப்பினும் மாநில அரசு தனது பங்கீட்டான 40 சதவிகிதத்தைவிட கூடுதலாக துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு ₹2.65-ம், உயர் துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு கூடுதலாக ₹0.70-ம் செலவினம் மேற்கொள்கிறது.

4.13 வைப்பறையுடன்கூடிய சமையலறை

2006-2007 ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன்கூடிய சமையலறை கட்டுவதற்கு மையம் ஒன்றுக்கு ₹60,000/- என நிர்ணயம் செய்து, 100 சதவிகித பங்கினை மைய அரசே வழங்கி வந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன்கூடிய சமையலறை கட்டுவதற்கு மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பரப்பளவு மற்றும் கட்டுமான செலவினத்தினை அடிப்படையாக கொண்டு பகிர்வு அடிப்படையில் நிதி நிர்ணயம் செய்யப்பட்டது. 100 குழந்தைகள் வரை உள்ள பள்ளிகளில் 20 சதுர மீட்டரும், ஒவ்வொரு 100 கூடுதல் குழந்தைகளுக்கு, கூடுதலாக 4 சதுர மீட்டர் பரப்பளவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2006-2007 முதல் 2012-2013 வரை 28,856 சமையல் கூடங்கள் கட்டுவதற்கு ₹59,035.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30-6-2016 வரை 18,213 கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி கட்டடங்களை முடிப்பதற்கு உண்டான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு உதவி பெறும் பள்ளிகளில் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு திருத்திய நிதி பகிர்மான அடிப்படையில், கட்டடம் கட்டுவதற்கு தேவையான தொகையில், மத்திய அரசு 60 சதவிகித பங்கும் மற்றும் பள்ளி மேலாண்மை 40 சதவிகித பங்களிக்க முன்வரும் பட்சத்தில் கட்டடம் கட்ட மைய அரசு நிதி ஒதுக்கீடு வழங்கும்.

4.14 சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல்

உகந்த சூழல் மற்றும் வசதிகளை ஏற்படுத்த, சத்துணவு மையங்களில் எரிவாயு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மையம் ஒன்றுக்கு எரிவாயு இணைப்பிற்காக ₹22,350/- வீதம் மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. எரிவாயு அடுப்புகளை கையாள்வது குறித்த பயிற்சிகள் அந்தந்த எரிவாயு முகவர்கள் மூலம் சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

4.15 சமையல் உபகரணங்கள்

அனைத்து சத்துணவு மையங்களுக்கும் போதுமான சமையல் உபகரணங்களான மூடியுடன்கூடிய சமையல் பாத்திரம், கரண்டி

2016 ஆகஸ்ட் 10]

மற்றும் இன்டோலியம் கடாய் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. ஒரு சத்துணவு மையத்திற்கு சமையல் உபகரணங்கள் வாங்குவதற்கு மத்திய அரசால் ₹5000/- ஒரு முறை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சிறப்பு நிதியிலிருந்து அனைத்து சத்துணவு மையங்களுக்கும் கலவை இயந்திரம் (Mixie) வழங்கப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில அரசின் நிதியிலிருந்து எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் சத்துணவுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

4.16 சில்லரை செலவினம்

சத்துணவு மையங்களை சுத்தம் செய்யத் தேவையான சோப்பு, துடைப்பம், பினாயில் போன்ற பொருட்கள் வாங்குவதற்கென மையம் ஒன்றுக்கு ₹50/- வீதம் சில்லரை செலவினமாக வழங்கப்பட்டு வருகின்றன.

4.17 கண்காணிப்பு அமைப்பு

- அனைத்து சத்துணவு மையங்களிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு காட்டும் பொறுப்பினை உறுதி செய்யும் பொருட்டு தகவல் பலகை ஒவ்வொரு மையத்திலும் வைக்கப்பட்டுள்ளது. அத்தகவல் பலகையில் பின்வரும் தகவல்கள் அளிக்கப்படுகின்றன:

 i. பள்ளிக் குழந்தைகளின் வருகை.

 ii. சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை.

 iii. தினசரி வழங்கப்படும் உணவு.

 iv. துவக்கப்பள்ளி மற்றும் உயர்துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் பொருட்களின் அளவு.

- சத்துணவு மையங்களை திடீர் ஆய்வு மேற்கொள்ள, ஒவ்வொரு அலுவலர்களுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் சமைத்து வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவு, உண்ணும் மாணவர்களது எண்ணிக்கை, கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள், பதிவேடுகள் பராமரிப்பது போன்றவற்றையும் கண்காணிப்பு செய்திட வேண்டும்.

[2016 ஆகஸ்ட் 10

- *தலைமைச் செயலர் அவர்களின் தலைமையிலான, மாநில அளவிலான வழிப்படுத்தும் மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து தனித்தனியே கண்காணிக்கப்படுகிறது.*

- *சமுதாயப் பங்கேற்பினை ஊக்கப்படுத்த வேண்டி, சிறப்பு நேர்வாக 2013 ஆம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தில் சமுதாயத் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை, அதாவது, ஜனவரி 26 மற்றும் ஆகஸ்டு 15ஆம் நாளன்று கிராம சபையில் இத்திட்டம் குறித்த சமுதாயத் தணிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த உத்வேகத்துடன் கலந்து கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி விரிவாக கலந்துரையாடப்படுகிறது.*

- *குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறுவதற்கு முன்னர் அரைமணி நேரத்திற்கு முன்னதாக சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் உணவினை ருசிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள் "ருசி பதிவேடு" ஒன்றையும் இது தொடர்பாக பராமரித்து வருகின்றனர்.*

- *தேசிய மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் மதிய உணவு உண்ணும் பயனாளிகளின் விவரம், சத்துணவு மையங்களின் விவரம், வைப்பறையுடன்கூடிய சமையலறை, நவீன மயமாக்கப்பட்ட சத்துணவு மையங்கள், தண்ணீர் வசதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பொருட்கள், பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் நிவர்த்தி செய்தல், சமையல் உதவியாளர்களின் விவரம் போன்றவை வட்டாரம் மற்றும் மாவட்டம் வாரியாக பதிவேற்றப்படுகிறது.*

4.18 குறை தீர்க்கும் முறை

- *குறைகள் ஏதேனும் இருப்பின், அதனை சீராக்கும் பொருட்டு, 28 மாவட்டங்களில் கட்டணமில்லா இலவச தொலைபேசி செயல்பாட்டில் உள்ளது.*

- *திட்டத்தில் ஏதேனும் முன்னேற்றம் தேவைப்படின் அதன் பொருட்டு பள்ளிகளில், புகார் / பரிந்துரைப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.*

2016 ஆகஸ்ட் 10]

- குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை சரிசெய்யும் பொருட்டு மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (ச.உ.தி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குறை தீர்க்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

4.19 பள்ளி சுகாதாரத் திட்டத்துடன் இணைந்து செயல்படுதல்

குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை நோக்கமாக கொண்டு, அனைத்து பள்ளிகளிலும் சுகாதாரத் துறையின் மூலம், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. பள்ளி சுகாதாரத் திட்டத்தின் உட்கூறுகள் பின்வருமாறு:

i. இரத்தசோகை, பொது சுகாதாரம் மற்றும் இதர சுகாதார பிரச்சனைகளை திரையிடல் – சுகாதார கவனம் மற்றும் தொடர் சிகிச்சை

ii. நோய்த் தடுப்பு, கண் மற்றும் குறிப்பாக பல் பரிசோதனை

iii. நுண் ஊட்டச்சத்துக்களான இரும்பு சத்துடன்கூடிய போலிக் அமிலம் (IFA), மாத்திரைகள் மருந்துகள் வழங்குதல்

iv. குடற்புழு நீக்கம் செய்யும் மருந்துகள்

v. அனைத்து குழந்தைகளுக்கும் தனிப்பட்ட சுகாதார அட்டைகள் பராமரித்து அவர்களின் சுகாதார நிலையினை கண்காணித்தல்

4.20 சத்துணவுப் பணியாளர்கள்

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ள 55.05 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பயனடைவதற்காக 43,047 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் சத்துணவு அமைப்பாளர், சமையலர்/ சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள பள்ளி சத்துணவு மையத்தில் ஒரு சமையல் உதவியாளர் கூடுதலாக நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு குறித்துள்ள வழிமுறையின்படி 25 பயனாளிகளுக்கு ஒரு சமையல் உதவியாளர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு (60:40) பகிர்வின்

[2016 ஆகஸ்ட் 10

அடிப்படையில் மதிப்பூதியமாக ₹1,000/- வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு, குழந்தைகளுக்கு சுவையான, சத்தான, பாதுகாப்பான உணவுகளை வழங்கும் பொருட்டு மையம் ஒன்றுக்கு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 42,423 சத்துணவு அமைப்பாளர், 42,852 சமையலர், 42,855 சமையல் உதவியாளர் என மொத்தம் 1,28,130 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சத்துணவுப் பணியாளர்களின் பணி நேரம் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஆகும்.

சத்துணவுப் பணியாளர்கள் "பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு கால முறை ஊதியம் பின்வருமாறு:

வ. எண்	**பதவி**	**காலமுறை ஊதியம்**	**பெற்று வரும் குறைந்த பட்சம் – அதிக பட்சம் ஊதியம்**
1.	சத்துணவு அமைப்பாளர்	₹2500-5000 + தர ஊதியம் ₹500	₹7530 – ₹10,478
2.	சமையலர்	₹1300-3000 + தர ஊதியம் ₹300	₹4380 – ₹5,055
3.	சமையல் உதவியாளர்	₹950 – 2000 + தர ஊதியம் ₹200	₹3368 – ₹4,380

சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இதர சலுகைகள் பின்வருமாறு:

சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம்

ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியமாக முறையே ₹700/-, ₹600/-, மற்றும் ₹500/- என வழங்கப்பட்டது. ஆனால், 1-4-2013 முதல் அவர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம்

2016 ஆகஸ்ட் 10]

ஒரே சீராக ₹1000/- ஆக உயர்த்தப்பட்டது. இத்தொகை 1-2-2016 முதல் ₹1500/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்த தொகை

சத்துணவு அமைப்பாளர்களுக்கு ₹50,000/-, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ₹20,000/- என அவர்கள் ஓய்வு பெறும்பொழுது ஒட்டுமொத்த தொகையாக வழங்கப்பட்டு வந்ததை பிப்ரவரி 2016 முதல் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ₹60,000/-, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ₹25,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பண்டிகை முன்பணம்

ஒவ்வொரு வருடமும் சத்துணவுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக ₹5000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 10 தவணைகளில் அவர்களுடைய மாதச் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

பொங்கல் போனஸ்

சத்துணவுப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும், ஜனவரி மாதத்தில் பொங்கல் போனஸாக ₹1,000/- வழங்கப்படுகிறது.

மலைவாழ்படி மற்றும் குளிர்காலபடி

மலைப்பகுதிகளில் உள்ள சத்துணவுப் பணியாளர்களுக்கு மலைவாழ் படி மற்றும் குளிர்காலப் படி 2015 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. வருடம் முழுவதும் மலைவாழ் படி 20 சதவிகிதம் அடிப்படை ஊதியம் + தர ஊதியத்திலும் மற்றும் வருடத்தில் 4 மாதங்கள் குளிர்காலப்படி 5 சதவிகிதம் அடிப்படை ஊதியத்திலும் வழங்கப்படுகிறது.

சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்

மாதம் ஒன்றுக்கு ₹20/- வீதம் 148 தவணைகளில் ₹2,960/- பிடித்தம் செய்யப்பட்டு சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது மேற்படி தொகை மற்றும் அத்தொகைக்கான வட்டியுடன் அரசின் பங்கீடாக ₹10,000/- சேர்த்து சிறப்பு சேம நல நிதியாக வழங்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 10

சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் படி

சத்துணவு அமைப்பாளர்கள் கூடுதலாக சத்துணவு மையங்களை கண்காணிக்க அவர்களுக்கு ₹10/- கூடுதல் பொறுப்புப் படியாக வழங்கப்பட்டு வந்ததை, ஏப்ரல் 2015 ஆம் ஆண்டு முதல் ₹20/- ஆக நாளொன்றுக்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப நல நிதி

நிரந்தர பணியாளர்களைப் போல, சத்துணவுப் பணியாளர்களுக்கும் பணிக்காலத்தில் இறந்தால் அவர்களுக்கு ₹1.50 இலட்சம் வழங்கப்படுகிறது. இதற்காக அவர்களுடைய மாதச் சம்பளத்தில் இருந்து ₹30/- மாதச் சந்தாவாக பிடித்தம் செய்யப்பட்டது. இத்தொகை ₹3.00 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென ₹60/- வீதம் சந்தா தொகையாக மாதச் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

பணியிடையே காலமான சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உடனடி நிவாரணம்

பணியிலிருக்கும்போது இறக்கும் சத்துணவுப் பணியாளர்களது ஈமச்சடங்கிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ரூ.5000/ பிப்ரவரி 2016 முதல் ₹25,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை குடும்ப நல நிதி ₹3.00 இலட்சத்திலிருந்து சரிகட்டப்படும்.

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012-ன்படி சத்துணவுப் பணியாளர்களுக்கு (சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்) 1-7-2012 முதல் 30-6-2016 வரையிலான 4 ஆண்டு தொகுப்பு காலத்திற்கு ₹4.00 இலட்சம் வரை நிர்ணயித்து மாத சந்தாவாக ₹150/- வீதம் அவர்களுடைய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. மே 2015 முதல் ஆண்டு வருமானம் ₹72,000/-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு மாத சந்தாவான ₹150/- பிடிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் "புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டம் 2016" என்ற பெயரில் 1-7-2016 முதல் 4 ஆண்டு தொகுப்பு காலத்திற்கு விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 10]

பொது வருங்கால வைப்பு நிதி

சத்துணவுப் பணியாளர்களுக்கு 1-8-2015 முதல் பொது வருங்கால வைப்பு நிதி சந்தாவாக அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 12 சதவிகிதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அவர்களுக்கு 9 இலக்கங்களைக் கொண்ட வைப்பு நிதி கணக்கு எண் "சத்துணவு திட்டம்" என்ற பின் இணைப்புடன்கூடிய பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் அரசு தகவல் தொகுப்பு மையம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது

தற்செயல் விடுப்பு

சத்துணவுப் பணியாளர்களுக்கு வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

மகப்பேறு விடுப்பு

மே 2015 முதல் திருமணமான பெண் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதியத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

விருப்ப ஓய்வு

சத்துணவுப் பணியாளர்களை, அவர்களுக்கான ஓய்வூதியப் பலன்களுடன் மருத்துவ காரணங்களுக்காக தன் விருப்ப ஓய்வில் செல்ல ஏப்ரல் 2015 முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையிலான பணி நியமனம்

தகுதியுள்ள ஆண் மற்றும் பெண் சத்துணவு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதி தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் விண்ணப்பங்கள் அரசிற்கு அனுப்பப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினைத் தொடர்ந்து மூன்று அளவுருக்களில் நேர்மறையான மாற்றம் அதாவது பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை, மாணவர்கள் பள்ளி இடைநிற்றலை குறைத்து, முறையாக பள்ளிக்கு வருவதை உறுதி செய்துள்ளது. மேலும், முக்கியமாக கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களின்

ஊட்டச்சத்து நிலை மேம்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களின் கற்றல் திறன் அதிகரித்துள்ளது. அதன்மூலம் அவர்கள் வகுப்பறையில் அதிக கவனமுடன் கல்வி கற்க வழிவகை செய்துள்ளது. மேலும், சத்துணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் பாலின வேறுபாடுகள் களையப்பெற்று பெண் குழந்தைகளின் கல்வி, உணவு மற்றும் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக மாநில அரசால் 2016-2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹1,644.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம்–5

முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன்

5.1 மனிதனின் வாழ்நாள் அதிகரித்து வருவதால் மக்கள் தொகையில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதில் 80 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. எனவே, மூத்த குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்கள் பாதுகாப்பான, மதிப்பு மிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும், தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களது நலனுக்காக செயல்படுத்தி வருகிறது.

5.2 முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கிடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் என்றும், இத்திட்டம் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களது தார்மீக சமூகக் கடமைகளின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்திலும் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறந்த பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் குறைப்பதற்கு ஏதுவாக பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும் வசதியுடன் செயல்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 52 ஒருங்கிணைந்த வளாகங்களில் 1,262 குழந்தைகள் மற்றும் 1,185 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர்.

2015-2016 ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் செயல்படும் 52 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு செலவினமாக ₹658.04 இலட்சம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2016-2017 ஆம் நிதியாண்டில் ₹782.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.3 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர் மற்றும் தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட மற்றும் வசிப்பிடமற்ற முதியோர்களின் வாழ்வைப் பாதுகாக்கும் பொருட்டு மாநில அரசு, தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பெறும் முதியோர் இல்லங்களுக்கு பராமரிப்பு மானியம் அளித்து வருகிறது. இவ்வில்லங்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உறைவிடம், உடை, மருத்துவ உதவி, பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.

40 முதியோர்களைப் பராமரிக்கும் பொருட்டு ஒரு இல்லத்திற்கு ஆண்டொன்றிற்கு ₹2.00 இலட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது. 20 மாவட்டங்களில் செயல்படும் 22 முதியோர் இல்லங்களில் மொத்தம் 735 முதியோர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இத்திட்டத்திற்கென 2016-2017 ஆம் நிதி ஆண்டில் ₹64.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.4 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களை பராமரிப்பதற்கும், அவர்கள் நலன் காக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் உத்தரவாதமும், அங்கீகாரமும் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளவாறு,

[2016 ஆகஸ்ட் 10

சட்டரீதியான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 இம்மாநிலத்தில் 29-9-2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் பராமரிப்பு மற்றும் நல விதிகள் உருவாக்கப்பட்டு, 31-12-2009 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தனது வாரிசுதாரர்களிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரி பெற்றோர் மற்றும் மூத்தகுடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட தீர்ப்பாயம் ஒன்று இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. 81 தீர்ப்பாயங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின்கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால் தன்னுடைய குழந்தைகளிடமிருந்து அல்லது சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு 5-ன்கீழ் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தின்கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்களுக்கு 90 நாட்களுக்குள் தீர்வு காணப்படவேண்டும்.
- மூத்த குடிமக்களின் வாரிசுகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்த தவறினால் அபராதம் மற்றும் சிறைத்தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற்போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம்

2016 ஆகஸ்ட் 10]

அல்லது ஒரு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரை சிறைத் தண்டனை அளிக்கப்படும்.

- *பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ₹10,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.*
- *விசாரணை நிலுவையில் இருக்கும்பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் வாரிசுகள் அல்லது உறவினர்களுக்கு தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம்.*
- *மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறைத்தண்டனை அல்லது ₹5,000 வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டனையாக அளிக்கப்படும்.*

5.5 முதியோர் இல்லங்களுக்கான குறைந்தபட்ச அத்தியாவசிய தரம் நிர்ணயம்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச/ அத்தியாவசியமான தரம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5.6 சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடுதல்

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடம் உள்ள அனுபவம், அறிவு ஆகியவற்றை வெளிக்கொணரவும், முதியோர்களின் நலன் காக்க ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டும், தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் அன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட அளவிலான

அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மூத்த குடிமக்களுக்கு ஏற்ற உணவு பற்றிய கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்து கொள்பவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மூத்த குடிமக்களின் நலன் தொடர்பான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இவ்விழாவின்போது மூத்த குடிமக்களின் தேவைகள் மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதியோர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனையும் நடத்தப்படுகிறது.

இவ்விழாவின்போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரியும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும், இவ்விழாவில் முதியோர்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

2015-2016 ஆம் ஆண்டில், மாநில அளவில் சர்வதேச முதியோர் தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின் போது 90 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

2016-2017 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ₹5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7 முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக் குழுக்கள்

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007-ஐ மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்தும் செயல்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராகவும் கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டு உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று, மாவட்ட அளவில் ஒவ்வொரு

மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 2 மூத்த குடிமக்கள் உட்பட 4 அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடி மூத்த குடிமக்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆய்வு செய்கிறது.

அத்தியாயம்–6

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

தமிழக அரசு பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்கால சூழலுக்கேற்ப ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை மறுசீரமைப்பதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து சவால்களை திறம்பட கையாண்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஒரு மைய பகுதியாக விளங்கி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையில் தொடர்ந்து கவனிப்பு அளிப்பதற்கான ஒட்டுமொத்த வழிமுறைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு, "நிறைவான ஊட்டச்சத்து நிலையினை" எய்துவதில் முன்னோடி மாநிலமாக செயல்படுவதோடு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வரும் மாநிலங்களில் மிகச்சிறந்த மாநிலமாகவும் திகழ்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் 35.10 இலட்சம் பயனாளிகள் நேரடியாகவும் (ஊட்டச்சத்து) 40.45 இலட்சம் பயனாளிகள் சுகாதாரப் பணிகள், எடை எடுத்தல், ஆலோசனை பெறுதல் என்ற வகையில் மறைமுகமாவும், 434 குழந்தை வளர்ச்சித் திட்டங்களில் உள்ள 54,439 குழந்தை மையங்கள் (49,499 முதன்மை அங்கன்வாடி மையங்கள், 4,940 குறு மையங்கள்) வாயிலாக பயன்பெறுகின்றனர்.

[2016 ஆகஸ்ட் 10

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால், மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மார்ச் 2016 புள்ளி விவரங்களின்படி, திட்டத்தில் பயன்பெறும் 0-3 வயதுடைய 24.15 இலட்சம் இதர பயனாளிகள் உள்ளடக்கி மொத்த குழந்தைகளில் 87.70% (21.18 இலட்சம்) குழந்தைகள் இயல்பு நிலையிலும், 12.21% (2.95 இலட்சம்) குழந்தைகள் மிதமான எடை குறைவுடனும் 0.08% (1885) குழந்தைகள் மட்டும் கடுமையான எடை குறைவுடனும் (SUW) உள்ளனர்.

6.1 புதிய அங்கன்வாடி மையம் திறப்பதற்கான வழிமுறைகள்

- கிராம மற்றும் நகர திட்டப் பகுதிகளில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை விதிமுறைகள்
 - — முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு 400 முதல் 800 மக்கள் தொகையும்
 - — குறு அங்கன்வாடி மையத்திற்கு 150 முதல் 400 மக்கள் தொகையும்
- மலைப் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை விதிமுறைகள்
 - — முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு 300 முதல் 800 மக்கள் தொகையும்
 - — குறு அங்கன்வாடி மையத்திற்கு 150 முதல் 300 மக்கள் தொகையும் அளவுகோலாக பின்பற்றப்படுகிறது

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் 387 கிராமப்புறம் மற்றும் 47 நகர்ப்புறம் உள்ளடக்கி 434 திட்டங்களாக, 49,499 முதன்மை மையங்கள் மற்றும் 4,940 குறு மையங்கள் என 54,439 அங்கன்வாடி மையங்களின் வாயிலாக செயல்படுகிறது.

6.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் தொலைநோக்குப் பார்வை மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்:

i. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைத்தல்

2016 ஆகஸ்ட் 10]

ii. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு, குழந்தைநேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றல்

iii. ஆண்-பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்துதல்

6.3 குழும இயக்ககத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

12 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் (2012-2017) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல் திட்டம், மேலாண்மை மற்றும் நிறுவன சீரமைப்பு பணிகளைப் படிப்படியாக செயல்படுத்த மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, அங்கன்வாடி மையங்கள் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி அளிக்கும் முதல் நிலை இருப்பிடமாக இயங்கிட, "எழுச்சிமிகு முன் பருவ குழந்தை வளர்ச்சி மையமாக" மாற்றிட கூடுதல் மனிதவள ஆற்றலையும் அடிப்படை வசதிகளையும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில திட்டக் குழும வழிகாட்டுக்குழு, மாநில அளவிலான அதிகார திட்டக்குழு மற்றும் மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட குழுமம், மாநில மற்றும் மாவட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட சங்கம் அவற்றின் ஆட்சிக் குழு மற்றும் செயற்குழு ஆகியவற்றை மாநில அரசு அமைத்துள்ளது.

2016-2017 ஆம் ஆண்டு ₹1,207.37 கோடிக்கு ஆண்டு திட்ட செயலாக்க கருத்துரு (APIP) மாநில அதிகார திட்டக் குழுவின் ஒப்புதல் பெற்று மத்திய அரசிற்கு 7-3-2016 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டு தமிழகத்தின் நிதிப்பங்களிப்பு மட்டும் ₹553.78 கோடியாகும். அதில் ₹100.00 கோடி இணை உணவுக்காகவும், ₹453.78 கோடி அங்கன்வாடிப் பணியாளர்களுக்கான ஊதியம், பிற பணப்பயன், ஒட்டுமொத்தத் தொகை மற்றும் சிறப்பு ஓய்வூதியம் ஆகியவற்றிற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

2016-2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதி மதிப்பீடு பின்வருமாறு:

(₹ கோடியில்)

மொத்த திட்ட செலவினம்	மொத்த நிதி	மத்திய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	மாநிலத்தின் முழு பங்கு	மாநிலத்தின் மொத்த பங்களிப்பு
1761.75	1207.37	665.21	542.16	553.78	1095.94

2016-2017 ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் பங்கு 62% மற்றும் மத்திய அரசின் பங்கு 38%.

6.4 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

↓

மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

(குழும இயக்குநர்)/ குழந்தை வளர்ச்சி சங்கம்

↓

மாவட்ட திட்ட அலுவலகம் / குழந்தை வளர்ச்சி சங்கம்,

32 மாவட்டங்கள்

↓

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் – **434** திட்டங்கள்

(**387** ஊரகம், **47** நகரம்)

↓

அங்கன்வாடி மையங்கள் **54,439**

(முதன்மை மையங்கள்=**49,499** மற்றும் குறு மையங்கள் = **4,940**)

2016 *ஆகஸ்ட்* 10]

6.5 நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள்:

- *அனைத்து நிலைகளிலும் அத்தியாவசிய பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல்.*

 — *ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுத்தல், குழந்தைகள் வாழ்க்கையை நல்லமுறையில் துவங்க தேவையானவற்றை உறுதி செய்தல், மூன்று வயதிற்குட்பட்ட ஆரம்ப கால குழந்தைகளின் கவனிப்பு மற்றும் கற்கும் சூழ்நிலைக்கு சிறப்பு கவனம் அளித்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை குழும இயக்ககத்தின்கீழ் செயல்படுத்துதல்.*

- *அனைத்து நிலைகளிலும் செயல்திறனை அதிகரித்தல்.*

 — *திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சாதனைகளை எய்த அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு குழு செயல்பாட்டின் அடிப்படையில் பணிபுரிய பயிற்சிகள் அளித்தல்.*

- *துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல்.*

 — *தரமான நலப் பணிகள் மக்களைச் சென்றடைய சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய துறைகளுடனான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல் மற்றும் பலப்படுத்துதல்.*

- *சமுதாய விழிப்புணர்வையும், பங்களிப்பையும் அனைத்து நிலைகளிலும் மேம்படுத்துதல்.*

 — *பயனாளிகள் மற்றும் பொது மக்களிடையே குழந்தை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் அளிக்கப்படும் நான்கு அடிப்படை குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அதற்கான தன்னார்வ ஈடுபாட்டையும், சமுதாய ஆதரவையும் மேம்படுத்துதல்.*

- குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கான தகவல் தளம் மற்றும் அறிவுசார் தளத்தை அமைத்தல்.

 — ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மேலாண்மை தகவல் அமைப்பை பலப்படுத்துதல். அடிப்படை தகவல் அமைப்புக்காக தகவல் தொடர்புக்கான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல். தகவல்களைப் பரப்ப, பகிர்ந்து கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல், ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.

6.6 மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குழுமத்தின்கீழ் வழங்கப்படும் நலப் பணிகள்

அ. ஆரம்ப நிலை குழந்தைகள் கவனிப்பு, கல்வி மற்றும் வளர்ச்சி

- இணை உணவு வழங்கல்
- முன்பருவக் கல்வி அளித்தல்

ஆ. ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் கவனிப்பு

- பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்.
- மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையை சமுதாய அளவில் மேலாண்மை செய்தல்.

இ. சுகாதாரப் பணிகள்

- மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி வழங்குதலை உறுதி செய்தல்.
- மருத்துவப் பரிந்துரை செய்தல்

ஈ. சமுதாய பங்கேற்பு, விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் அளித்தல்.

6.7 இணை உணவு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் பயனாளிகளான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான

2016 ஆகஸ்ட் 10]

குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ராஜீவ்காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பயனடையும் வளரிளம் பெண்கள், ஜப்பானிய மூளை காய்ச்சல் பாதிப்புள்ள ஐந்து மாவட்டங்களில் உள்ள 37 மாதங்கள் முதல் 60 மாதங்கள் வரையுள்ள மிதமான / கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகள் ஆகியோருக்கு இணை உணவு (சத்து மாவாக) ஒரு வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையங்கள் வாயிலாக வழங்கப்படும் இணை உணவானது, அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு இவற்றிற்கு இடையே ஏற்படும் புரதச் சத்து குறைப்பாட்டினை சரிசெய்ய ஏதுவாகவுள்ளது.

6.7.1 இணை உணவில் அடங்கியுள்ள பொருட்கள் மற்றும் அதன் அளவு

வரிசை எண்	பொருட்கள்	கிராம்
1.	கோதுமை / சோளம் / கம்பு	52
2.	தூள் வெல்லம்	30
3.	கொண்டைக்கடலை	12
4.	முளைக்கட்டிய கேழ்வரகு	5
5.	தாதுக்கள் (ம) வைட்டமின் கலவை	1
	மொத்தம்	100

6.7.2 வார உணவு அட்டவணை

வயது	வழங்கப்படும் உணவு	இணை உணவு / சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம்	பயனாளி–களின் எண்ணிக்கை
6 மாதம் முதல் 1 வயதுடைய குழந்தைகள்	இணை உணவு	இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு `8.30 செலவில் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு நாளொன்றுக்கு 190கி/ நாளொன்றுக்கு `12.14 செலவில் வழங்கப்படுகிறது	3,57,807
1 முதல் 2 வயதுடைய குழந்தைகள்	இணை உணவு + வாரத்திற்கு ஒரு வேக வைக்கப்பட்ட முட்டை (புதன் கிழமை)	இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு `8.30 செலவில் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு நாளொன்றுக்கு 190கி/ நாளொன்றுக்கு `12.14 செலவில் வழங்கப்படுகிறது	6,97,234

2 முதல் 3 வயதுடைய குழந்தைகள்	இணை உணவு + சத்துணவு + 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு	இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு `8.30 செலவில் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு நாளொன்றுக்கு 190கி / நாளொன்றுக்கு `12.14 செலவில் + சத்துணவு (விதவிதமான	7,07,763
3 முதல் 5 வயதுடைய குழந்தைகள்	சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) + 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக்கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு	`4.34 செலவில் நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) வழங்கப்படுகிறது.	6,89,702

[2016 ஆகஸ்ட் 10

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	இணை உணவு	நாளொன்றுக்கு `10.22 செலவில் 160 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது	6,55,427
வளரிளம் பெண்கள்	இணை உணவு	நாளொன்றுக்கு `8.30 செலவில் 130 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது	4,01,885
ஓய்வூதியம் பெறும் முதியோர்கள்	சூடான சத்துணவு	நாளொன்றுக்கு 200 கிராம் வழங்கப்படுகிறது	127
		மொத்தம்	**35,09,945**

6.7.3 ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பாதிப்பு அதிகமான பகுதிகளில் உள்ள ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கே ஜப்பானிய மூளைக்காய்ச்சல்/கடுமையான மூளைக்காய்ச்சல் தாக்குதல் ஏற்படும். எனவே, மிகவும் அபாயகரமான பகுதிகளில் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது.

சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகம் மாநிலத்தில் கரூர், மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களை மிகவும் கவனம் தேவைப்படும் மாவட்டங்களாக கண்டறிந்துள்ளது. அம்மாவட்டங்களில் உள்ள 37 முதல் 60 மாதமுடைய மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 கிராம் வீதம் நாளொன்றுக்கு ₹5.11 செலவினத்தில் ஆண்டுக்கு 300 நாட்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் இணை உணவு (சத்துமாவு)

2016 ஆகஸ்ட் 10]

வழங்கப்பட்டு வருகிறது. ஐந்து மாவட்டங்களிலுள்ள 32,541 பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளார்கள்.

6.7.4 அங்கன்வாடி மையங்களில் விதவிதமான கலவை சாதம்

2 முதல் 5 வயதுடைய அங்கன்வாடி குழந்தைகளுக்கு அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்து தேவைகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் விதவிதமான சத்துணவு வகைகள் வழங்கும் திட்டம் 20-3-2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் அதனுடைய வரவேற்பினைத் தொடர்ந்து 15-8-2014 முதல் இத்திட்டம் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

6.7.5 அங்கன்வாடி மையங்களுக்கு பாத்திரங்கள் வழங்குதல்

கிழமை	**உணவு வகைகள்**
திங்கள்	தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை
செவ்வாய்	கலவை சாதம் + கருப்பு கொண்டைக்கடலை/பச்சைப் பயறு
புதன்	காய்கறி புலவு + வேகவைத்த முட்டை
வியாழன்	எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை
வெள்ளி	பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக்கிழங்கு
சனி	கலவை சாதம்
ஞாயிறு	உலர் உணவுப் பொருட்களாக (Dry Ration)

54,439 அங்கன்வாடி மையங்களுக்கும் பாத்திரங்கள் வழங்குவதற்கென 2014-2015 ஆம் ஆண்டு ₹9.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 8,57,609 எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள், 50,476 இண்டோலியம் கடாய்கள், 33,000 எவர்சில்வர் கரண்டிகள் மற்றும் 1,096 எவர்சில்வர் சேமிப்புக்கலன்கள் அங்கன்வாடி மையங்களுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

6.7.6 மின் கலவை இயந்திரங்கள் (மிக்சி) வழங்குதல்

2015-2016 ஆம் ஆண்டில் மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கலவை இயந்திரங்கள் (மிக்ஸி) வாங்கி வழங்க ₹2.17 கோடி நிதி ஒதுக்கீடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 20,558 கலவை இயந்திரங்கள் வாங்கி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.8 ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில், ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது சுகாதாரம், ஊட்டச்சத்து, விளையாட்டு மற்றும் கற்றல் ஆகியவற்றை பாதுகாப்பான மற்றும் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் சூழலை உள்ளடக்கியதாகும். இது முன்பருவக் கல்வி மேம்பாட்டுக்கு மிக முக்கிய அடித்தளம் அமைத்து வாழ்நாள் முழுவதுமான வளர்ச்சி மற்றும் கற்றலை மேம்படுத்தும்.

இத்திட்டத்தின்கீழ், அங்கன்வாடி மையம் எழுச்சிமிகு குழந்தைகள் மையமாக மாற்றப்பட்டு இனிமையான கற்றல் சூழலைத் தரக்கூடிய குழந்தை நேய மையமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் கல்வி அளித்தல், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கான கவனிப்பு, ஆரம்பகால தூண்டுதல் செயல்பாடுகள்/உரையாடுதல் போன்றவற்றை 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், 3-6 வயது குழந்தைகள் வளர்ச்சிக்கான முன் பருவக் கல்வியையும், 5-6 வயது குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்ல ஆயத்தப்படும் வகையில் முன்பருவக் கல்வியையும், திட்டமிட்ட அர்ப்பணிப்புடன் 4 மணி நேரத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

2016 ஆகஸ்ட் 10]

தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மூலம் புதிய முயற்சியாக, தேசிய முன்பருவக் கல்வி திட்ட கொள்கை 2013 அடிப்படையில், முன்பருவக் கல்விக்கான, குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற புதிய பாடத்திட்டமான "ஆடிப்பாடி விளையாடு பாப்பா" என்ற பாடமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பாடத் திட்டம் 11 மாதத்திற்கான செயல்பாடுகளை குழந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 12-வது மாதம் மீள்பார்வை (revision) ஒதுக்கப்பட்டுள்ளது.

6.8.1 முன்பருவக் கல்வி பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில், முன்பருவக் கல்வி சேவை மிக முக்கியமானதாகும். இது குழந்தையின் முழு வளர்ச்சியினை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இப்பயிற்சியானது, அங்கன்வாடி பணியாளர்களிடையே முன்பருவக் கல்வி பற்றிய கருத்து, கொள்கை மற்றும் முன்பருவக் கல்வி பாடத்திட்டத்தை சிறப்புற நடத்திட அவர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டு, குழந்தைகள் கற்கும் சூழல் வாய்ப்புகளை ஊக்குவிக்கும் திறன் மேம்படுத்தப்படுகிறது. இப்பயிற்சியானது, மூன்றடுக்கு முறையில் முறையே, மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில், ஆடிப்பாடி விளையாடு பாப்பா பாடத் திட்டத்தை சிறப்பாக குழந்தைகளுக்கு கற்பித்தல், குழந்தை வளர்ச்சி மதிப்பீடு அட்டைகள் மற்றும் செயல்பாட்டுப் புத்தக பயன்பாடுகள் குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டிற்கான திட்டச் செயலாக்கத்தில் இப்பயிற்சிக்கென ₹15.47 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

6.9 முன்பருவக் கல்விக்கான விளையாட்டு உபகரணங்கள்

ஒரு குழந்தை தனது வயதுக்கேற்ற திறனை வெளிப்படுத்த உரிய முன் பருவக் கல்வி விளையாட்டு உபகரணங்கள் மூலம் நிறம், வடிவம் போன்ற கூறுகள் மேம்படுத்திட வேண்டும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பின்பற்றப்படும் முறைசாரா முன்பருவக் கல்வித் திட்டத்தின்கீழ் குழந்தைகளின் சமூக, அறிவு, மனம், உடல் மற்றும் கற்பனைத்

திறன் வளர்ச்சி ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கு ஏற்ற கற்றல் சூழலை வழங்குவதற்காக ஒவ்வொரு முதன்மை அங்கன்வாடி மையத்திற்கும் ₹3,000 மதிப்பிலும், ஒவ்வொரு குறு அங்கன்வாடி மையத்திற்கு ₹1,500 மதிப்பிலும் முன்பருவ கல்வி உபகரணங்கள் 2014-2015 ஆண்டு வரையிலும் வழங்கப்பட்டு வந்தது. மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, 2015-2016 ஆம் ஆண்டில், ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சியின் செயல்பாட்டினை முன்பருவக் கல்வி உபகரணங்கள் என்ற தலைப்பின்கீழ் ₹15.59 கோடி செலவில் செயல்படுத்திடவும் மற்றும் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வாங்கி வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் முன்பருவக் கல்விக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும் மற்றும் ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி செயல்பாட்டிற்காகவும் 2016-2017 ஆம் ஆண்டு திட்ட செயலாக்கத்தில் ₹15.59 கோடி செலவினம் மேற்கொள்ளப்படும்.

6.10 அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள்

குழந்தைகளைக் கவரும் விதத்திலும், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு அனுப்பிட ஊக்குவிக்கும் வகையிலும், குழந்தைகளுக்கு ஒரு சீருடை ₹125 வீதம், இரண்டு இணை சீருடைகள் சென்னை, வேலூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் ₹9.30 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக 2015-2016 ஆம் ஆண்டில் 3,66,268 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினை நடப்பு நிதியாண்டில் 3,74,243 குழந்தைகள் பயன்பெறும் வகையில் ₹9.36 கோடி செலவில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.11 சுகாதாரப் பணிகள்

6.11.1 எடையைக் கண்காணித்தல்


ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், 0-5 வயதுடைய குழந்தைகளின் எடை கண்காணிக்கப்பட்டு மாதந்தோறும் இக்குழந்தைகளின் கண்டறியப்பட்ட எடை, உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த பதிவேடுகளிலும்

2016 ஆகஸ்ட் 10]

மற்றும் தாய் சேய் நல பாதுகாப்பு அட்டைகளிலும் பதிவு செய்யப்படுகிறது. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையானது பதிவேடுகளில் உள்ள வளர்ச்சிக் குறிப்பில் இருந்து அறியப்பட்டு ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஆண்டுகளில், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடு சதவிகிதம் இறங்கு முகமாக திகழ்கிறது. கடந்த ஓர் ஆண்டு புள்ளி விவரத்தின்படி, உலக சுகாதார நிறுவன நிர்ணய அளவுகோலின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டதில், ஏப்ரல் 2013-இல், 78.9% ஆக இருந்த 0-5 வயதான குழந்தைகளின் இயல்பு நிலை மார்ச் 2016-இல், 91.1% மேம்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 2013-இல் 21.0% ஆக இருந்த மிதமான எடைக்குறையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை மார்ச் 2016-இல் 8.9% ஆக குறைந்துள்ளது. கடும் எடைக்குறையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை சதவிகிதம் கடந்த ஏப்ரல் 2013-இல், 0.167% ஆக இருந்த நிலை மார்ச் 2016-இல், 0.050% ஆக குறைந்துள்ளது.


0–5 வயதான, இயல்பு நிலை குழந்தைகளின் சதவிகிதம் ஏப்ரல் 2013–இல், 78.9% லிருந்து மார்ச் 2016–இல், 91.1% ஆக உயர்ந்துள்ளது.



மூலம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் புள்ளி விவரம் மார்ச் 2016


[2016 ஆகஸ்ட் 10

மிதமான எடை குறைவுடைய குழந்தைகளின் சதவிகிதம் ஏப்ரல் **2013–இல், 21.0%** லிருந்து மார்ச் **2016–இல், 8.9%** ஆக குறைந்துள்ளது



மூலம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் புள்ளி விவரம் மார்ச் 2016

கடுமையான எடை குறைவுடைய குழந்தைகளின் எண்ணிக்கை ஏப்ரல் 2013–இல், 0.167% லிருந்து மார்ச் 2016–இல், 0.050% ஆக குறைந்துள்ளது.



மூலம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் புள்ளி விவரம் மார்ச் **2016**

2016 ஆகஸ்ட் 10]

குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை குறித்து மாவட்ட திட்ட அலுவலர்கள் அளிக்கும் மாதாந்திர புள்ளி விவரங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையின்கீழ் உள்ள கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்துதல் பிரிவு மூலம் சரிபார்க்கப்படுகிறது.

6.11.2 மருந்துப் பெட்டிகள் வழங்குதல்

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி, இரும்புச்சத்து மாத்திரை, வைட்டமின்-ஏ வழங்குதல், மருத்துவப் பரிந்துரை செய்தல் ஆகிய சுகாதாரச் செயல்பாடுகள் கவனமுடன் திட்டமிடப்பட்டு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மருந்துப்பெட்டியில், எளிதான முறையில் கையாளக்கூடிய காய்ச்சல், வயிற்றுப்போக்கு, தோல் தொற்று போன்ற பொதுவான நோய்களுக்கான மருந்துகள் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டிலும் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் ₹5.19 கோடி மதிப்பில் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் மருந்துப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2016-2017 ஆம் ஆண்டிற்கு அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கிட ₹5.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.12 வளர் இளம் பெண்களுக்கான திட்டங்கள்

6.12.1 கிஷோரி சக்தி யோஜனா

இத்திட்டம் 23 மாவட்டங்களை உள்ளடக்கிய 295 வட்டாரங்களில் 11 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா வளர் இளம் பெண்களின் வாழ்க்கைத்தரம், தொழிற்திறன் மற்றும் ஆளுமைத் திறனை மேம்படுத்துவதற்காகவும், தன்சுத்தம், சுகாதாரம், ஊட்டச்சத்து, சட்ட உரிமைகள், குடும்ப நலன் மற்றும் மன அழுத்த மேலாண்மை ஆகிய தகவல்கள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 16 முதல் 18 வயதான வளர் இளம் பெண்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் 4,380 வளர் இளம் பெண்கள் பயன்பெறும் வகையில் ஆடை வடிவமைப்பு, ஜர்தௌசி வேலைப்பாடு, செயற்கை ஆபரணங்கள் தயாரிப்பு, கோழி வளர்ப்பு, அலைபேசி பழுதுநீக்கச் சேவை,

[2016 ஆகஸ்ட் 10

அலங்கார மீன்கள் வளர்ப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் மின்பழுது நீக்கம் மற்றும் அடிப்படை மின்சார சேவைகள் போன்ற துறைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், அடிப்படை பயிற்சிக்கான செலவுத் தொகை, பயணப்படி தொகை, தங்கும் வசதி மற்றும் உணவிற்கான செலவுத் தொகை, ஆய்விற்கான செலவினம் போன்றவை இத்திட்டத் தொகையுடன் சேர்த்து, கூடுதலாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு வட்டாரத்திற்கு ₹1.10 இலட்சம் வீதம் 10 மாவட்டங்களில் உள்ள 146 வட்டாரங்களுக்கு மொத்தம் ₹1.60 கோடி 2015-2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் வருடத்திற்கான திட்ட செயலாக்கத்தில் ₹3.24 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

6.12.2 ராஜீவ்காந்தி வளர் இளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்லா)

வளர் இளம் பெண்களின் பல்வேறு பரிமாணங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் (2011-2012-ல்) அறிமுகப்படுத்தப்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 139 வட்டாரங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இணை உணவு வழங்குதல் மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகள் என இரண்டு பிரிவுகளின்கீழ் நலப்பணிகள் வழங்கப்படுகின்றன. அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட 11 முதல் 18 வயதான பள்ளி செல்லாத வளர் இளம் பெண்கள் மற்றும் 15 முதல் 18 வயதான இதர அனைத்து வளரிளம் பெண்களுக்கும் வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் வருடத்தில் 300 நாட்களுக்கு, தலா ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 130 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது. இணை உணவிற்கென 2015-2016 ஆம் ஆண்டிற்கு ₹77.92 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின்மூலம் 4.02 இலட்சம் வளர் இளம் பெண்கள் பயனடைந்துள்ளனர். வளர் இளம் பெண்களுக்கான இணை உணவு அல்லாத பிற பணிகளின்கீழ், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்குதல், வாழ்க்கைத் திறன் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல், வளரிளம்

2016 ஆகஸ்ட் 10]

பெண்களை கல்வி பயில ஊக்குவித்தல், ஆலோசனை வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற்பயிற்சி அளித்தல் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 16 முதல் 18 வயதுடைய வளர் இளம் பெண்கள் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், அழகுக்கலைப் பயிற்சி, வீட்டு உபயோகப்பொருட்கள் பழுதுநீக்கும் பயிற்சி, அடிப்படை கணினி பயிற்சி, தையற்பயிற்சி, அடிப்படை மின்சாரப் பணிகள் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி என பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் ஆண்டில் ஒரு திட்டத்திற்கு ₹1.90 இலட்சம் வீதம் ₹2.64 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டிற்கு, வளர் இளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் ₹98.26 கோடியும், இணை உணவு அல்லாத பிற பணிகளுக்கு ₹5.28 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

6.13 இந்திரா காந்தி மகப்பேறு நல உதவித் திட்டம்

2011-2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் முன்னோடித் திட்டமாக கடலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திரா காந்தி மகப்பேறு நல உதவித் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் வாயிலாக தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்துடன் இணைந்து கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நல உதவியாக ஒரு பயனாளிக்கு ₹4,000 வீதம் வழங்கப்பட்டு வந்தது.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013-ன்படி, 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு ₹6,000 வீதம் இரு தவணைகளாக நிதி உதவி வழங்க வேண்டும் என்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில், 43,198 தாய்மார்கள் முதல் தவணையும் 29,659 தாய்மார்கள் இரண்டாவது தவணையும் உதவி பெற்றுள்ளார்கள். இதற்காக, ₹23.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

6.14 அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மேம்படுத்துதல்

6.14.1 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

அங்கன்வாடி மையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறிய மற்றும் பெரிய பழுது நீக்கல், மின் வசதி, குழந்தை நேய கழிப்பிடம் கட்டுதல், புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டுதல் ஆகியவை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து தொடர் நடவடிக்கையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பேரூராட்சி துறை மற்றும் சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளின்மூலம் அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்களை படிப்படியாகக் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு ஒருங்கிணைந்து தொடர் நடவடிக்கையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 6,908 மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் ஒருங்கிணைப்புமூலம் ஒரு புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் தலா ₹7.00 இலட்சம் மதிப்பில் 5,000 அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.14.2 அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல்

அங்கன்வாடி மையங்களில் புகையில்லாத சுற்றுச் சூழலை உருவாக்குவதற்காகவும், சக்தியுடன்கூடிய சுகாதாரமான உணவினை வழங்குவதற்காகவும், அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்புடன்கூடிய அடுப்பு (ஒரு பர்னர்), சமையல் மேடை, அடுகலன் (பிரஷர் குக்கர்) ஆகியன வழங்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தமுள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் 47,446 அங்கன்வாடி மையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 6,993 மையங்களை நவீனப்படுத்தவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 10]

6.14.3 அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்துதல்

அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் வருகையை அதிகரிக்க கூடுதல் வசதிகள் அளித்து குழந்தையை ஈர்க்கும் பொருட்டு உகந்த சூழ்நிலையினை உருவாக்கிடும் வகையில் அங்கன்வாடி மையங்களின் தரத்தினை மேலும் உயர்த்தும் பொருட்டு 211 மையங்களில் கூடுதலாக ஓர் அறை கட்டுதல், குழந்தை நேய கழிப்பிடங்கள் கட்டுதல், தண்ணீர் தொட்டி அமைத்தல், கை கழுவும் தொட்டி அமைத்தல், வெளிப்புற விளையாட்டு கருவிகள் அமைத்தல், சமையறையில் பாத்திரம் கழுவும் தொட்டி அமைத்தல், காலணி அலமாரி, குடிநீர் வடிகட்டி, சாய்வு நாற்காலிகள், குழந்தைகளுக்கு புத்தகப்பை மற்றும் தண்ணீர் பாட்டில், குழந்தைகளுக்கு அடையாள அட்டை, மையங்களுக்கு வர்ணம் அடித்தல் மற்றும் சிறு பழுதுகளை பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்காக ஒரு மையத்திற்கு ₹1,00,000 செலவில் மொத்தம் ₹55.65 கோடி செலவில் 5,565 மையங்கள் 2014-2015 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

6.14.4 அங்கன்வாடி மையங்களில் மின் வசதி ஏற்படுத்துதல்

அங்கன்வாடி மையங்களில் வருகை புரியும் குழந்தைகளை கோடைக் காலங்களில் ஏற்படும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மையங்களுக்கு மின் இணைப்பு வழங்கி மின்விசிறி மற்றும் மின் விளக்கு போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் 35,678 அங்கன்வாடி மையங்கள் மின் வசதியுடன் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 18,761 அங்கன்வாடி மையங்களுக்கும் படிப்படியாக மின் வசதி ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.14.5 அங்கன்வாடி மையம் மற்றும் மழலையர் பராமரிப்பகம் தோற்றுவித்தல்

நகர்ப்புறங்களில் உள்ள பெற்றோர்கள் தங்களது குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளுக்காக பணிக்கு செல்லும் போது, அவர்களின் 5 வயது வரையுள்ள குழந்தைகளை பாதுகாப்பான இடத்தில் மாலை 6.00 மணி வரை பராமரிப்பதற்கென "மழலையர் பராமரிப்பகம்" 2014-2015 ஆம் ஆண்டில் தொடங்க ஆணையிடப்பட்டது. அதன்படி முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், திருநெல்வேலி, திருவள்ளூர்,

[2016 ஆகஸ்ட் 10

திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட 13 மாவட்டங்களில் நகர்ப்புறங்களில் செயல்படும் 211 மையங்களில் "மழலையர் பராமரிப்பகங்கள்" ₹2.31 கோடி செலவில் தொடங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 2,593 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

6.14.6 நெகிழ்வு நிதி

அங்கன்வாடி மையங்களில் ஏற்படும் எதிர்பாரா/அவசர செலவினத்திற்காக ஓர் ஆண்டிற்கு ஒரு மையத்திற்கு ₹1,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை அங்கன்வாடி பணியாளரின் வங்கி சேமிப்புக் கணக்கில் நேரடியாக மின்னணு பண பரிமாற்றம் மூலம் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2016-2017 ஆம் ஆண்டில் ₹5.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.15 பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தச் செய்வதிலும், அவர்களுடைய செயல்திறன்பாட்டின் தரத்தினை உறுதி செய்வதிலும், பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. சமுதாய வளர்ச்சியில் மக்களை ஒருங்கிணைத்து செல்லும் உத்திகளை திறமையாக கையாள தகுதியுள்ள பணியாளர்களால் மட்டும் இயலும் என்பதால் இத்தகைய திறனை வளர்ப்பது பயிற்சியின் தலையாய நோக்கமாகும். எனவே, தெளிவான அறிவும், செயல்திறனும் வளர்த்துக் கொள்ளத்தக்க வகையில் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்படுகிறது. குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளில் களப்பணியாளர்கள் இத்திட்டப் பயன்களை சமூகத்தின் கடைநிலைவரை கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றுவதோடு, சமூக மக்களிடையே நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் மனமாற்றங்களை ஏற்படுத்தும் முகவர்களாகக் கருதப்பட்டு, அனைத்து களப்பணியாளர்களுக்கும் இத்திட்டம் குறித்த தெளிவான அறிவு, திறன் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை அனைத்துக் களப்பணியாளர்களுக்கும்

2016 ஆகஸ்ட் 10]

வழங்கப்படுகிறது. இப்பயிற்சி முறை பலதரப்பினராலும் பாராட்டப்படும் சிறப்பான முறையாகும். இப்பயிற்சியானது திறன்மிக்கது, செலவு குறைவானது, பொருளாதார பயனுள்ளது. அதுமட்டுமின்றி பயிற்சியின் மதிப்பீடு, பயிற்சி அளிக்கப்படும் போதும், மேற்பார்வையாளர்களின் கள ஆய்வின் போதும் ஆய்வு செய்ய தேவையான வழிகாட்டுதலை அளிக்கிறது. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் களப்பணியாளர்களுக்கு பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்றுநர் பணிபுரிந்து வருகிறார்.

மாநில அளவில் இடைநிலை அளவில் மற்றும் திட்ட அளவில் பல்வகைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் விவரம்:

வ. எண்	பயிற்சியின் பெயர்	பயிற்சி நடைபெறும் இடம்	பயிற்சி பெறுபவர்கள்
1.	பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி	மாநில பயிற்சி மையம், தரமணி, சென்னை – 113	குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்
2.	பணி / புத்தறிவு மற்றும் புத்தாக்கப் பயிற்சி		வட்டார அளவில் உள்ள பயிற்றுநர்கள்
3.	பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி	இடைநிலை பயிற்சி மையம், இந்திய குழந்தைகள் நலச் சங்கம், சென்னை	மேற்பார்வையாளர்கள் (நிலை – 2)
4.	பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி	வட்டார அளவில்	அங்கன்வாடிப் பணியாளர்கள்
5.	பணி / புத்தறிவு மற்றும் புத்தாக்கப் பயிற்சி		அங்கன்வாடி உதவியாளர்கள்

[2016 ஆகஸ்ட் 10

மேற்கண்ட பயிற்சிகள் தவிர 'பிற பயிற்சி' என்கிற பிரிவின்கீழ் மாநில அளவில் தேவைக்கேற்ப அதிக கவனம் தேவைப்படும் இனங்களுக்கான புதிய / நவீன பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து, திட்டம் வடிவமைத்து பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு மன அழுத்தத்தைக் கையாளுதல் மற்றும் யோகா கற்பித்தல் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் செயலாற்றல் திறன் மிக்கவர்களாக மேம்படுத்தப்படுகிறார்கள்.

எனவே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பயிற்சி முக்கிய அடிப்படை அம்சமாக அமைகிறது. சமுதாயத்தில் குழந்தை பராமரிப்பு முறைகளை மேம்படுத்துவதற்கு பிறதுறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன்மூலம் திட்டத்தின் இலக்குகளை எளிதாக அடைய முடியும். இவ்வாறு இலக்குகளை அடைவது என்பது, களப்பணியாளர்களின் செயல்திறமையை பொறுத்தே அமைகிறது.

இதற்காக 2016-2017 ஆம் ஆண்டில் ₹12.39 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

6.16 தகவல், கல்வி, தொடர்பு மற்றும் விழிப்புணர்வுபணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் அளிக்கப்படும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள், திட்ட பயனாளிகளான, தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் சமுதாயத்தை சென்றடையவும், அவர்களிடையே திட்ட பணிகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பழக்க வழக்கங்களில் தேவையான மனமாற்றத்தை கொண்டு வரவும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

"சமுதாய வளைகாப்பு", "புதுமணத் தம்பதியினருக்கான பணியரங்கம்", "பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள் குறித்து தாய்மார்கள் மற்றும் குழந்தை பேணுவோருக்கான பணியரங்கம்", "வானொலியில் திட்டம் பற்றிய விளம்பரப்படுத்துதல்", போன்ற பல்வேறான தகவல் தொடர்புப் பணிகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டம் குறித்த தகவல்கள் மக்களையும் பணியாளர்களையும் சென்றடைய "சிட்டுக்குருவி சேதி தெரியுமா?" என்ற இதழ்

இருமாதங்களுக்கு ஒருமுறை அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி குறித்தான பல்வேறு தகவல் தொடர்பு கையேடுகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

"பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்" குறித்து பல்வேறான தகவல் தொடர்பு முனைப்பு இயக்கங்கள் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நடத்தப்பட உள்ளன.

2016-2017 ஆம் ஆண்டிற்கு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகளுக்காக ₹7.93 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

6.17 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை அமைப்புகள் அனைத்து நிலைகளிலும் திட்டமிடுதலுக்காகவும் மற்றும் உள்ளீடுகள், செயல்முறைகள், வெளியீடுகள் மற்றும் விளைவுகள் உள்ளடக்கிய மாநிலம் சார்ந்த சிறப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிறுவப்பட்டுள்ளது. திட்ட செயல்பாடுகள் குறித்த மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் தொகுதி அளவில் அங்கன்வாடி மையங்களில் மேற்பார்வையாளர்களாலும், வட்டார அளவில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலும், மாவட்ட அளவில் மாவட்ட திட்ட அலுவலகங்களிலும் மற்றும் மாநில அளவில் தலைமையிடத்திலும் தொகுக்கப்பட்டு அறிக்கைகள் பல்வேறு படிவங்களில் மத்திய மற்றும் மாநில அரசு மற்றும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட (Centralised) வடிவமைப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளை பின்பற்றி தேவையான பதிவேடுகள் அச்சிடப்பட்டு அங்கன்வாடி மைய பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.

434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பும் பொருட்டு ஒரு திட்டத்திற்கு ₹11,790 வீதம் ₹51.17 இலட்சம் செலவில் அகன்ற அலைவரிசை (Broadband) இணைய இணைப்புகள் ஏற்படுத்துவது குறித்து மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் 31-8-2015 அன்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. பாரத் சஞ்சார் நிறுவனம் மூலம் இணைய இணைப்புப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடைப்பட்ட காலத்தில் 434 வட்டார அலுவலகங்களில்

இணைய இணைப்புகள் பி.எஸ்.என்.எல். சிம்முடன்கூடிய தரவு அட்டை (Data Card) மூலம் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் திருத்திய தகவல் மேலாண்மை திட்டம் வலைதளம் மூலமாக முறைப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் புதிய விரைவான அறிக்கை அமைப்பு முழுமையாக செயல்படுத்தப்படுவதால் திட்ட செயல்பாடு, கண்காணிப்பு, தரம் மற்றும் உபயோகம் மேம்படுத்தப்படுவதுடன் அனைத்து நிலையிலும் பொறுப்புடன் பங்காற்றிட வகை செய்யப்படும்.

6.18 குழந்தைகள் குறித்து தகவல் தொகுப்பினை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல் முறை மென்பொருள்

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் 31-8-2015 அன்று சட்டப்பேரவையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஈரோடு மற்றும் கடலூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக ₹13.34 இலட்சம் செலவில் குழந்தைகள் குறித்த தகவல் தொகுப்பினை உருவாக்குதல் தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. அண்ணா பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்துடன் குழந்தைகள் குறித்து தகவல் தொகுப்பினை உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பான வலை பக்கம் (Web Portal) வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனம் மூலம் சர்வர் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டில் கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்துதல் பணிகளுக்காக ₹5.44 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

6.19 அங்கன்வாடி மையபணியாளர்களின் நலன்

தமிழகத்தில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்கள், குறு அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, மருத்துவப் படி மற்றும் ஆண்டொன்றிற்கு 3 சதவிகிதம் ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது ஒட்டுமொத்தத் தொகையாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹50,000-மும், அங்கன்வாடி

2016 ஆகஸ்ட் 10]

உதவியாளர்களுக்கு ₹20,000-மும் வழங்கப்பட்டு வந்தததை 1-2-2016 முதல் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹60,000 மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ₹25,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர், அங்கன்வாடி உதவியாளர் ஆகியோருக்கு சிறப்பு ஓய்வூதியமாக 1-4-2013 முதல் வழங்கப்பட்டு வந்த ₹1,000-ஐ 1-2-2016 முதல் ₹1,500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு இணை புடவைகள் சீருடையாக வழங்கப்படுகின்றன.

அனைத்து நிலைகளிலும் நெகிழ்வுத் தன்மையுடன் செயல்பட்டு குழந்தைகளின் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாயம் மற்றும் அரசியல் பங்களிப்புடன் அனைத்து நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் சென்றடையும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட குழும இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

அத்தியாயம்–7

சமூகப் பாதுகாப்பு

7.1 இந்திய அரசாங்கத்தால் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையில் குழந்தைகளுக்கு வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சிக்கான உரிமை மற்றும் பங்கேற்பு உரிமை ஆகியவை அடிப்படை உரிமைகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 குழந்தைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு நடைமுறைகள் மற்றும் பல்வேறு வகையான குழந்தைகள் இல்லங்கள் நிறுவுவதற்கு வழிவகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குழந்தையின் ஒட்டு மொத்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய, சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளதால், சமூகத்தில் குழந்தைகள் தற்போது பாதுகாப்பான சூழ்நிலையில் உள்ளனர்.

துயருறும் சூழலில் உள்ள சிறார்கள் மற்றும் பெண்களுக்கு சேவை புரிவதிலும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதிலும்

[2016 ஆகஸ்ட் 10

மற்ற மாநிலங்களைவிட முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, தங்குமிடமில்லாத மற்றும் தொலைந்துபோன குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1887 ஆம் ஆண்டில், சீர்திருத்தப் பள்ளி ஒன்று செங்கல்பட்டில் துவங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சிறார்களின் பராமரிப்பு, பாதுகாப்பிற்காக மற்றும் குழந்தைகளுக்கான நிறுவனங்களை நிருவகிப்பதற்காக 1920 ஆம் ஆண்டில், 'மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. இதன் மூலம், இந்தியாவிலேயே சிறார்களுக்கென தனிச் சட்டம் இயற்றிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

குழந்தைகளுக்கான, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 மற்றும் பெண்களுக்கான, ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 ஆகிய இரு முக்கிய சட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் வரும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களான வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் கூர்நோக்கு இல்லங்கள் ஆகியவை நேரடியாக அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சிறப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவை அரசால் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1956 ஆம் ஆண்டின், ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குழந்தைகளைத் திறம்படவும் சிறப்பாகவும் பாதுகாப்பதற்கான கூறுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினையும், இத்துறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

7.2 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோருக்காகச் செயற்திறனுள்ள சட்ட விதிகளை ஏற்படுத்தி செயல்படுத்துவதே 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பின்வரும் இரண்டு வகையான

2016 ஆகஸ்ட் 10]

குழந்தைகளுக்கு தனித் தனியான வழிவகைகளை இச்சட்டம் வகுத்துள்ளது:

1. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்.
2. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்.

7.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் இல்லாத, உற்றார் உறவினர் எவரும் இல்லாத, எந்தவொரு வாழ்வாதாரமே இல்லாத குழந்தைகள், தெருவோர குழந்தைகள், குழந்தை தொழிலாளர்கள், கொடுமைப்படுத்தப்பட்ட சுரண்டலுக்குள்ளான, எளிதில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய குழந்தைகள், இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பிரிவின்கீழ் அடங்குவர்.

7.3.1 குழந்தை நலக் குழுக்கள்

குழந்தை நலக் குழுக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றது. தமிழக அரசு, மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்களை நிறுவியுள்ளது.

இந்த குழுவிற்கு, 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஆகியோருக்கு உள்ள அதிகாரத்திற்கு ஒத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குழந்தை நலக் குழும நடைமுறைகள் ஒரு நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தை நேய சூழலுடன் நடத்தப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹490.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.3.2 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

குழந்தைப் பாராமரிப்பு நிறுவனங்களை செம்மையாக நிருவகிக்கவும், சிறந்த சேவையளிக்கவும் சமூக நல

இயக்குநரகத்தின்கீழ் இயங்கி வந்த 26 அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் 122 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்களையும் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. அதன் காரணமாக 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசு மூலமாகவும் 139 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரசின் நிதி பெற்று நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் இரண்டு குழந்தைகள் இல்லங்களும் மற்றும் மயிலாடுதுறையில் ஒரு இல்லமும், சிறப்பு பராமரிப்புத் தேவைப்படும் மன நலம் மற்றும் உடல் நலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை மற்றும் படுக்கை வசதியுடன்கூடிய உறைவிடம், போதுமான தண்ணீர் வசதி, மின் இணைப்பு வசதிகள் மற்றும் கழிப்பிட வசதி போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹5,196.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.3.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளி புகலிடங்கள்

ஆதரவற்ற/கைவிடப்பட்டவர்கள், பிச்சை எடுப்பவர்கள், சாலையோரத்தில் வசிப்பவர்கள், வேலை செய்யும் சிறார்கள், குப்பைப் பொறுக்குபவர்கள், நடைபாதைவாசிகள், சாலையோர விற்பனையாளர்கள், கழைக் கூத்தாடிகள், கைவிடப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், வீட்டை விட்டு வெளியேறியவர்கள், இடம் பெயர்ந்தவர்களின் குழந்தைகள் மற்றும் ஆபத்திற்குள்ளாகக்கூடிய பிற வகை சிறார்கள் போன்ற பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய தற்காலிக தங்குமிட வசதி வழங்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 14 திறந்தவெளிப் புகலிடங்கள் நகரங்களிலும், புறநகரங்களிலும் செயல்படுகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ₹2000/-வீதம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹265.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.4 சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று, பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணானச் செயல்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள், 'சட்டத்துக்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைகள்' என்ற பிரிவின்கீழ் அடங்குவர்.

7.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்காக தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவியுள்ளது.

இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியில் ஆர்வமுள்ள உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர்) ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவாகச் செயல்படுகிறது.

இளைஞர் நீதிக் குழும நடைமுறைகளும் குழந்தை நலக் குழும நடைமுறைகள் போன்றே ஒரு நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தைநேய சூழலுடன் நடத்தப்படுகிறது.

இக்குழுமங்கள், திங்கள் முதல் வெள்ளி வரை மாதத்திற்கு 20 அமர்வுகளுக்கு மிகைப்படாமல் கூடுகின்றன.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹254.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

7.4.2 கூர்நோக்கு இல்லங்கள்

இளைஞர் நீதிக் குழுமங்களின் முன் நிறுத்தப்படும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்களின் விசாரணையை எதிர்நோக்கி குழந்தைகளைத் தற்காலிகமாக தங்கவைப்பதற்கான இல்லங்களே கூர்நோக்கு இல்லங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் தற்போது அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் 7 கூர்நோக்கு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம் மருத்துவ வசதி மற்றும் முறைசாராக் கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன.

மேலும், இக்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் அவர்களை உன்னிப்பாக கண்காணிப்புச் செய்வதற்கு ஏதுவாகவும் முதற்கட்டமாக 6 அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹250.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.4.3 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

இளைஞர் நீதிக் குழுமத்தில் உரிய சட்ட விதிகளின்படி, விசாரணைக்குப்பின் குற்றம் உறுதி செய்யப்பட்ட சிறார்களின் மறுவாழ்விற்காக சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இச்சிறார்கள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்கலாம். சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் இயங்கி வருகின்றன. இவர்களது சுயசார்பிற்கான திறன்களை வளர்க்கவும் சமூகத்துடன் ஒன்றி வாழ்ந்திடும் பொருட்டு, இவர்களுக்கு, இவ்வில்லங்களில் கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணைக் கல்வி செயல்பாடுகள் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் உன்னிப்பாக கண்காணிக்கவும், அரசினர் சிறப்பு இல்லங்களுக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும், தடையில்லா மின்சேவை அளிக்க 100 KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் மின்னாக்கியும் வழங்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹190.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.4.4 அரசினர் பிற்காப்பு நிறுவனங்கள்

குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் மறுவாழ்விற்கான திட்டங்களை முடித்த பின், சிறார்களின் 18 வயது முடிவுற்ற பின்பு நிறுவன பராமரிப்புத் தேவைப்படின், அத்தகைய இளைஞர்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். பிற்காப்பு இல்லங்களில் பல்வேறு காரணங்களால் வீடேக முடியாத இளைஞர்கள் அல்லது கல்வியைத் தொடரும் குழந்தைகள் அல்லது பயிற்சியை எடுத்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இளைஞர்களுக்கான இரண்டு பிற்காப்பு நிறுவனங்கள் ஒன்று ஆத்தூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. பெண்களுக்காக வேலூரில் ஒரு பிற்காப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இது தவிர மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்காக தொழிற்பயிற்சியுடன்கூடிய புகலிடம் அரசு உதவியுடன் சென்னையில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹133.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.4.5 திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

குழந்தைகள் நலத் திட்டங்களைக் (அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்) கண்காணிக்க யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடு, அரசு மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்கள் அனைத்தையும் இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது. குழந்தைகள் நலத் திட்டங்களை காலமுறையாக ஆய்வு செய்து அறிக்கையினை வளர்ச்சிக்கான காரணிகளுடன் தெரிவிப்பது, இப்பிரிவின் கடமையாகும்.

[2016 ஆகஸ்ட் 10

7.4.6 அரசால் மேற்கொள்ளப்பட்ட பிறவகையிலான நடவடிக்கைகள்

7.4.6.1 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலகங்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

பல்வேறு குழந்தைகள் பாதுகாப்புச் சட்டங்கள்/திட்டங்கள் சீரிய முறையில் மாவட்டங்களில் செயல்படுத்தவும் குழந்தைகள் குறித்த ஆவணங்கள் மற்றும் அறிக்கையினை சமர்ப்பிக்கவும் ₹16.00 இலட்சம் செலவில் மாவட்டத்திற்கு தலா ஒரு மடிக்கணினி வீதம் 32 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்களின் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.4.6.2 குழந்தைப் பாராமரிப்பு நிறுவனங்களுக்கு ஊர்தி வழங்குதல்

ஈரோடு, இராணிப்பேட்டை, விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் காரைக்குடியில் செயல்பட்டு வரும் ஆண்களுக்கான அரசு குழந்தைகள் இல்லங்கள், சென்னை-10-ல் சிறுமியருக்காக செயல்படும் அரசு குழந்தைகள் இல்லம், சேலத்தில் செயல்படும் சிறுமியருக்கான அரசு கூர்நோக்கு இல்லம், கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் செயல்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான அரசு கூர்நோக்கு இல்லங்கள், செங்கல்பட்டில் செயல்படும் சிறுவர்களுக்கான சிறப்பு இல்லம் மற்றும் மதுரையில் செயல்படும் அரசு பிற்காப்பு நிறுவனம் ஆகிய இடங்களில் ₹61.00 இலட்சம் செலவில் 12 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

7.4.6.3 குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் பாதுகாப்பு வசதிகள் செம்மைப்படுத்துதல்

7.4.6.3.1 திருநெல்வேலி, அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் 3 இளைஞர் நீதிக் குழுமங்களில் காணொலி ஒளிக்காட்சி வசதி ஏற்படுத்துதல்

அரசு கூர்நோக்கு இல்லங்களிலிருந்து இல்லவாசிகளை அழைத்து செல்வதிலுள்ள பாதுகாப்புமின்மையைத் தவிர்க்கவும், பயணம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டு செலவினைச் சேமிக்கவும் மேலும் வழக்குகளில் தொடர்புடைய இல்லவாசிகளின் தனிப்பட்ட சொந்த வாழ்க்கையின் விவரங்களைப் பேணவும் திருநெல்வேலியிலுள்ள அரசு கூர்நோக்கு இல்லம் மற்றும் சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இளைஞர்

2016 ஆகஸ்ட் 10]

நீதிக் குழுமங்களில் காணொலி ஒளிக்காட்சி வசதிகளை ₹38.90 இலட்சம் செலவில் அரசு அமைத்துள்ளது.

7.4.6.3.2 குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களுக்கு கண்காணிப்பு கேமரா கருவிகள் வழங்குதல்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் இல்லங்களான சென்னை, இராணிப்பேட்டை, விழுப்புரம், தஞ்சாவூர், காரைக்குடி, மல்லிப்புதூர், தட்டப்பாறை, பஞ்சப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 9 இடங்களில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லங்களிலும், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்லங்களிலும், திருச்சி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசினர் மகளிர் காப்பகங்களிலும், வேலூரில் உள்ள அரசினர் வரவேற்பு இல்லம், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம் மற்றும் ஆடைகள் செய்யும் பயிற்சி நிறுவனம், வேலூர், ஆத்தூர் (செங்கல்பட்டு) மற்றும் மதுரையிலுள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகிய 21 இல்லங்களில் ₹32.00 இலட்சம் செலவில் கண்காணிப்பு கேமரா கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

7.4.6.4 கட்டமைப்பு வசதிகள்

மதுரையிலுள்ள சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கும் மேலும் அவ்வளாகத்திலுள்ள மையக் கட்டடத்தைப் புதுப்பித்து அலுவலகமாகவும் மற்றும் இளைஞர் நீதிக் குழும அலுவலகமாகவும் மாற்றுவதற்கு அரசால் ₹6.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.

7.4.6.5 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்

இளைஞர் நீதி அமைப்பில் உள்ள கட்டாயக் கடமைகளைச் செயல்படுத்துவதற்கும், முழுமையான சேவை எளிதாக சென்றடைய, மாவட்ட அளவிலான அமைப்பினை மேற்பார்வை மற்றும் கட்டுப்படுத்த அரசு 32 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் பணியிடங்களை முழு நேர அடிப்படையில் காலமுறை ஊதியத்தில் ஏற்படுத்தியுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

7.5 வள மையங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகளுக்கு சமூக உளவியல் ரீதியான உதவிகளும், வழிகாட்டுதல்களையும் வழங்குமிடமாக வள மையங்கள் இயங்குகின்றன. அரசு உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இவ்வள மையங்கள், இளைஞர் நீதிக் குழுமம், குழந்தை நலக் குழுக்கள் மற்றும் குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர் மூலம் பரிந்துரைக்கப்படும், குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு, ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் 18 மாவட்டங்களில் வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹7.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.6 கல்வி வசதிகள்

அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், குழந்தைகள் தன்னுரிமை மிக்கவர்களாக்க, அவர்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. மேல்படிப்பு படிப்பதற்கு விருப்பம் உள்ள குழந்தைகள் கல்வியைத் தொடர்வதற்காக வெளியிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

முறையான கல்வி வழங்குவதற்காக பெரும்பாலான குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்புப் பிரிவுகளில் முறைசாரா கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹4.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.7 நவீன தொழிற்பயிற்சி

துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் பயிற்சிபெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர் மூலம் தையல், மரவேலை மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற திறன் அடிப்படையிலான தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர தனியார் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் குறுகிய கால தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:

- ஹேண்டி மேன்-பிளம்பிங்/எலக்ட்ரிகல்/தச்சு
- வீடியோகிராபி/புகைப்படம் எடுத்தல்
- ஆடை தயாரித்தல்/எம்பிராய்டரி தையல்
- பேப்ரிக் பெயிண்டிங் / புத்தகம் கட்டுதல்
- கைவினைப் பொருட்கள் / கலைப் பொருட்கள் தயாரித்தல் /வண்ணம் தீட்டுதல்
- மென்பொம்மைகள்/காகிதப்பை/தட்டுகள் தயாரித்தல் / செயற்கை நகைகள் தயாரித்தல்/துணி மற்றும் சுவர்களில் வர்ணம் தீட்டுதல்
- கணினி/DTP பயிற்சி/உருப்படம் எடுத்தல்
- அழகுக்கலை பயிற்/மருதாணி இடுதல்
- உணவு பதப்படுத்தல்

2016-2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹31.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.8 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Child line) 1098

துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது அவ்வகையான குழந்தைகளை காண நேரிடும் நபர், உடனடி உதவி பெற 1996 ஆம் ஆண்டு சைல்ட் லைன் இந்தியா ப்வுண்டேசன் என்ற அமைப்பினால், (Childline India Foundation), துவங்கப்பட்ட ‘சைல்ட் லைன் - என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டத்தின்

மூலம் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். நாடு முழுவதும் இத்தொலைபேசி சேவைக்கான பொது எண்ணாக 'பத்து ஒன்பது எட்டு' (1098) உள்ளது. இச்சேவை, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இதற்கான நிதியுதவி இந்திய அரசினால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்கள் மீட்பு மற்றும் தலையீட்டுச் சேவைகளை அளித்து வருகின்றன.

தமிழ்நாட்டில், அரியலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைத் தவிர்த்து இத்தொலைபேசி சேவை அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

7.9 ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

குழந்தைப் பாதுகாப்பிற்காக மாநிலத்தில் இளைஞர் நீதி நிருவாகத்தினை சிறப்பாக மேம்படுத்துவதற்கு மைய அரசின் நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அரசு மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு ஏற்படுத்த ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் முனைந்துள்ளது.

குறிக்கோள்கள்

இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளின் நலனுக்காகப் பங்களித்தலையும், சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, சுரண்டல், புறக்கணித்தல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.

- இந்தியாவில் தற்போது நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2016 ஆகஸ்ட் 10]

- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தைப் பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்.
- அனைத்து பிரிவுகளுக்கிடையே எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்.

7.9.1 ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படும் அமைப்புகள்

ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் நிறுவன கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:

i மாநில குழந்தைப் பாதுகாப்புச் சங்கம்

ii மாவட்ட குழந்தைப் பாதுகாப்புச் சங்கங்கள்/அலகுகள்

iii மாநில தத்தெடுப்பு வள முகமை

iv சிறப்புத் தத்தெடுப்பு முகமைகள்

v இளஞ்சிறார்களுக்கான சிறப்புக் காவல் பிரிவு

அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சைல்ட் லைன் திட்டம், போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாயிலாக சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

[2016 ஆகஸ்ட் 10

2016-2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹2,016.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.9.2 அனைத்து குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களையும் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன்கீழ் பதிவு செய்தல்

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ் அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யபடாமலிருந்தால் சட்டப்படி அதற்கான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லங்களை பதிவு செய்வதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து இல்லங்களின் உண்மையான நிலை, அடிப்படை வசதிகள், போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு உதவிகரமாக உள்ளது.

மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து குழந்தைகளின் விவரங்களை பெற்று, குழந்தைப் பராமரிப்பு இல்லங்களிடையான சேவைகளை ஒருங்கிணைக்க இல்லங்களை பதிவு செய்தல் உதவுகிறது. மாநிலத்தில் செயல்படும் 1,467 குழந்தைப் பராமரிப்பு இல்லங்களில் இதுவரை 767 இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

7.10 குழந்தைகளின் பின்தொடர் முறைமை

காணாமல் போன குழந்தைகள், வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் கடத்தப்படும் குழந்தைகள், சுரண்டல்கள் மற்றும் பல்வேறு பாலியல்/உடல் ரீதியான கொடுமை மற்றும் மனித உரிமை மீறல் போன்ற சூழல்களுக்கு எளிதாக இலக்காகக் கூடியவர்கள் இவ்வகையான குழந்தைகளை முன் கூட்டியே கண்டறிந்து அவர்களை குடும்பத்துடன் சேர்ப்பதே அவர்களது வாழ்க்கையை மீண்டும் பெறுவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்குமான சிறந்த தலையீட்டு சேவையாகும்.

காணாமல் போன குழந்தைகளின் பின் தொடர் முறைமை என்ற தேசிய இணையத்தினை காணாமல் போன குழந்தைகளை கண்டுபிடிப்பதற்காக மத்திய அரசு தேசிய தகவல் மையம் (NIC) மூலம் அமைத்துள்ளது. மேற்படி தேசிய இணையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகளைக் கண்டறியவும் நிறுவனங்களிலுள்ள குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கவும் நேரலை தகவல் தொகுப்பு பயன்படுகிறது.

2016 ஆகஸ்ட் 10]

தமிழ்நாட்டில் "குழந்தை பின்தொடர் முறைமை" சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணினி இணைப்பின் மூலம் மாநிலத்தின் உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்தியதன் மூலமும், பங்களிப்பினருக்கும், பணியாளர்களுக்கும் காலமுறையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டதன் மூலமும் இது சாத்தியமாகியுள்ளது. காணாமல் போன குழந்தைகளின் பின்தொடர் முறைமையின்கீழ், தேசிய தகவல் தளத்தில் தகவல்களைப் பதிவு செய்வதற்கான மென்பொருள்களை உபயோகப்படுத்துதல் குறித்துப் பயிற்சித் திட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை வகுத்துப் பயிற்சி வழங்கியுள்ளது.

7.11 ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

7.11.1 ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன் நோக்கமும் குறிக்கோள்களும்

(i) *பெண்கள் மற்றும் சிறுமியர்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதைத் தடுத்தல்*

(ii) *ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துபவர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களை நீதியின் முன் நிறுத்துதல்.*

(iii) *பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்கள், சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.*

7.11.2 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள, சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை தமிழக அரசு நடத்தி வருகிறது.

ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட பெண்கள் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்

[2016 ஆகஸ்ட் 10

பல்வேறு பிரிவுகளின்கீழ், நீதிமன்ற ஆணையின்படி இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இங்கு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் அடிப்படை வசதிகளான பராமரிப்பு, மருத்துவ உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மீண்டும் சமுதாயத்தில் மதிப்புடன் வாழ வழி ஏற்படுத்த அவர்களின் விருப்பதிற்கேற்ப பல்வேறு தொழிற்பயிற்சிகள் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்களின் மாண்பைப் பாதுகாக்கவும், பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளை பாதுகாக்கவும் ஏதுவாக நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு பதில் காணொலி ஒளிக்காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள ஏதுவாக ₹20.00 இலட்சம் செலவில் மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும், சைதாப்பேட்டை முதன்மை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே, காணொலி ஒளிக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் வழக்குகள் விரைவில் தீர்வு செய்யப்படுகின்றன.

7.11.3 மீட்புப் புகலிடங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிருக்காக 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தால் வழக்குகள் முடிக்கப்படும் வரை, பாதிக்கப்பட்ட பெண்கள் தற்காலிகமாக இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இந்தப் புகலிடங்கள், பெண்கள் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்ல வளாகத்திலும், வேலூர், பிற்காப்பு நிறுவனத்திலும் இயங்கி வருகின்றன.

7.11.4 மணமாகாத தாய்மார்கள் இல்லம்

பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மணமாகாத தாய்மார்களின் நலனுக்காக சென்னை, மைலாப்பூர் அரசினர் மகளிர் காப்பகத்துடன் இணைக்கப்பட்ட, மணமாகாத தாய்மார்கள் இல்லம் இயங்கி வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அடைக்கலாபுரத்தில் ஒரு மணமாகாத தாய்மார்கள் இல்லம் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் செயல்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹323.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.12 மறுவாழ்வுக்கான திட்டங்கள்

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு மறுவாழ்வு நடவடிக்கைகளையும், நலத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. அத்தகைய ஒரு நடவடிக்கையாக, தமிழக அரசு, 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி' ஒன்றை இத்துறையின்கீழ் உருவாக்கியுள்ளது.

இல்லங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற செலவினங்களை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்கள் தொழில் தொடங்க ₹5,000 வரையிலான நிதியுதவி அல்லது தேவையான கருவிகள், மூலப்பொருட்கள் வாங்க ₹10,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தச்சு வேலை, நெசவு, புத்தகம் கட்டுதல், தோட்ட வேலை, கட்டட வேலை, தையல், பூ தையல், பாய் நெசவு, குழாய் வேலை போன்ற தொழிற் பயிற்சிகள் சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அதேபோன்று, கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்களிலிருந்து வெளியேறும் பெண்கள் மற்றும் சிறுமிகள் சுய தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

7.12.1 வணிக ரீதியிலான பாலியல் சுரண்டலுக்காக மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுத்துவதைத் தடுக்க மாநில அரசின் சிறப்பு முயற்சிகள்

கடத்தப்படுதல் மற்றும் வணிகரீதியிலான பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக தமிழக அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- *மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச்செயலரின் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

[2016 ஆகஸ்ட் 10

- ❖ மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவது தொடர்பான பிரச்சினைகளைக் கண்காணிக்க கிராம ஊராட்சி தலைவர் தலைமையில் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக இம்மூன்றடுக்கு திட்டம், தோற்றுவிக்கப்பட்டதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது.

- ❖ மேற்குறிப்பிட்ட குழுக்கள் மட்டுமல்லாது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட மேற்பார்வைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் / வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை மேற்பார்வையிடுதலை இக்குழு கவனிக்கும்.

- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யவும், சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும், அதற்காக செயல்படும் அமைப்புகளுக்கு புத்தாக்கப் பயிற்சி இத்துறையின் மூலம் அவ்வப்போது அரசு மற்றும் யூனிசெப் போன்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

7.12.2 எளிதில் வன்செயல்களில் பாதிக்கப்படும் பெண்களுக்கான திட்டங்கள் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி

கடத்தலிலிருந்து மீட்கப்படும் மகளிருக்கு அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மறுவாழ்விற்கு நிதியுதவியாக ₹10,000 வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை 209 பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

2016 ஆகஸ்ட் 10]

‘உஜ்ஜவாலா’ திட்டம்

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் சுரண்டலுக்காக கடத்தப்படுவதென்பது மனித உரிமைகளை மீறும் குற்றமாகும். கடத்தலுக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு மிகுதியாக உள்ள பகுதிகளில், கடத்தலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற்கண்ட பிரச்சினையை சமாளிக்க, இந்திய அரசு, ‘உஜ்ஜவாலா’ என்றொரு விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஆட்கடத்தலைத் தடுக்கவும், வணிகரீதியான பாலியல் சுரண்டலைத் தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வளித்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்கிறது. இந்திய அரசின் உதவியோடு, தமிழ்நாட்டில் இத்திட்டம், எட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

போதை தடுப்புத் திட்டம்

மத்திய அரசின் நிதியுதவியுடன், போதைத் தடுப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சுமார் 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் 26 மையங்கள், இந்திய அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் இயங்கி வருகின்றன.

7.13 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

மனித வள மேம்பாட்டிற்கான தேசிய திட்டங்களில் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு பிரதானமான இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதை 1974 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான தேசியகொள்கை அங்கீகரித்துள்ளது. இந்திய அரசானது ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையினை 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் ஏற்றுக்கொண்ட நிலையில், கடந்த 2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 9 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம், ஒவ்வொரு குழந்தையும்

[2016 ஆகஸ்ட் 10

குழந்தையாக இருப்பதற்குரிய உள்ளார்ந்த, உள்ளடக்கிய உரிமை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தையே வலியுறுத்துகிறது.

2003 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டில் தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டம் தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் உருவாக்கிட வழிவகை செய்கிறது. தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கடந்த 18-1-2013 முதல் தமிழகத்தில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் பின்வருமாறு:

அதிகாரங்கள்	**செயல்பாடுகள்**
இவ்வாணையம் உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம், 1908–ன்படி வழக்குகளை விசாரிப்பதற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் கொண்டதாகும்.	குழந்தைகள் தொடர்பான கீழ்க்காணும் சட்டங்களின் அமலாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் அ) குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005. ஆ) குழந்தை தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1986. இ) இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015. ஈ) குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006. உ) குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009. ஊ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012.

2016 *ஆகஸ்ட்* 10]

காவல் துறை மற்றும் பிற அரசுத் துறை அலுவலகங்களிலிருந்து குழந்தை உரிமை மீறல் தொடர்பான உரிய ஆவணங்களை கோரிப் பெறுதல்.	➢ குழந்தை உரிமை மீறல்கள்மீது விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட அரசுத் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்தல். ➢ குழந்தை உரிமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல். ➢ ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் குழந்தை உரிமை மீறல்கள் தொடர்பான புகார்கள் அடிப்படையில் மட்டுமின்றி குழந்தை உரிமை மீறலாகக் கருதப்படும் இனங்களில் ஆணையம் தானாக முன்வந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளல். ➢ குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்து அரசு/அரசுசாரா நிறுவனங்களின் அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல். ➢ குழந்தை நலன் சார்ந்த கொள்கைகளை வடிவமைத்தல்.
பாலியல் குற்றங்கள் மற்றும் பாலியல் சட்டம் 2012–ன்கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல்.	
உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உரிய நிவாரணம் மற்றும் உரிய மறுவாழ்வு நடவடிக்கை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்.	

குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009

தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009 (RTE Act) *பிரிவு 31-ன்படி, தமிழகத்தில் இச்சட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணித்து வருகிறது.*

மேலும், இவ்வாணையம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009-ன் பிரிவு-12(1C)-ன்படி, தனியார் மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில், சமூகத்தில் நலிந்து மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகளுக்கான 25% பள்ளிச் சேர்க்கையினை உறுதி செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 44-ன்படி, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது, தமிழகத்தில் இச்சட்டம் நடைமுறைப்படுத்துதலை கண்காணித்து வருகிறது.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 பிரிவு 109-ன்படி, இச்சட்டத்தின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும் அதிகாரம் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆணையத்தால் கையாளப்பட்ட வழக்குகள்

இவ்வாணையம் துவங்கப்பட்ட நாள் (18-1-2013) முதல் இந்நாள்வரை செய்திதாள் மற்றும் ஊடகங்கள், பொதுமக்கள்/ தொண்டு நிறுவனங்கள், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் இதர அமைப்புகள்மூலம் வரப்பெற்ற பல்வேறு குழந்தை உரிமைகள் மீறல்கள் தொடர்பான 757 வழக்குகளைக் கையாண்டு தீர்வு செய்துள்ளது. இவ்வாணையத்தின் மின்னஞ்சல் முகவரி scpcrtn@gmail.com மற்றும் இணையதள முகவரி www.scpcr.tn.gov.in

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு ₹48.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

7.14 குழந்தைப் பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தைப் பாதுகாப்பு என்பது பரந்த எல்லையைக் கொண்டதாகும். எனவே, குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலுள்ள பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. பல்வேறு துறைகளிலுள்ள குழந்தைகளுக்கான பலதரப்பட்ட சேவைகளை ஒருங்கிணைந்து செயல்படுத்த சமூகப் பாதுகாப்புத் துறை ஒரு பாலமாக செயல்படுகிறது.

சமூக நலம், கல்வி, தொழிலாளர் நலம், அனைவருக்கும் கல்வித் திட்டம் (SARVA SHIKSHA ABHIYAN), தேசிய குழந்தைத் தொழிலாளர் தடுப்புத் திட்டம், இரயில்வே காவல், வருவாய், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, மருத்துவம் மற்றும் சுகாதாரம், காவல், நீதி மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலம் ஆகிய துறைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பினை சமூகப் பாதுகாப்புத் துறை கொண்டுள்ளது.

குழந்தைகளுக்கான சேவைகள் வழங்கக்கூடிய பல்வேறு துறைகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வலிமையான மாவட்ட அளவிலான செயலமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு குழுக்களும் செயல்பாட்டில் உள்ளன. குழந்தைத் திருமணம், பாலியல் வன்கொடுமை, குழந்தை கடத்தல், பிச்சை எடுத்தல், சுரண்டல், குழந்தைத் தொழில் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தலிலிருந்து தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சமூகப் பாதுகாப்பு துறையால் நடத்தப்பட்டுள்ளன.

7.15 சமூகப் பாதுகாப்புத் துறைக்கான இணையதளம் மற்றும் மின்னஞ்சல்

இத்துறைக்கான இணையதள முகவரி www.socialdefence.tn.gov.in மற்றும் மின்னஞ்சல் முகவரி dsd.tn@nic.in.

[2016 ஆகஸ்ட் 10

அத்தியாயம்–8

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

__8.1__ தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைப் பாதுகாக்கும் பொருட்டு, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற மற்றும் ஏழை முதியோர், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயனடைந்து வருகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ₹1000/- தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

2015-2016 ஆம் ஆண்டில் ₹3962.81/- கோடி ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 31-3-2016 அன்று வரை 30.74 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரம்:

வ. எண்	திட்டத்தின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை 31–3–2016 வரை
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	13,59,010
2.	இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	58,355
3.	இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	5,58,073
4.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	2,07,422
5.	ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்	4,25,335

6.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் ஒய்வூதியத் திட்டம்	3,21,493
7.	ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	1,18,909
8.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	21,165
9.	இலங்கை அகதிகளுக்கான ஒய்வூதியத் திட்டங்கள்	4,461
	மொத்தம்	30,74,223

8.2 மத்திய அரசு கீழ்க்காணும் ஒய்வூதியத் திட்டங்களுக்கு பின்வருமாறு நிதி வழங்குகிறது:

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதிக்கான நிர்ணயம்	மத்திய அரசின் பங்களிப்பு
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	60 முதல் 79 வயது வரை	₹200
		80 வயது மற்றும் அதற்கு மேல்	₹500
2.	இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	18 முதல் 79 வயது வரை	₹300
3.	இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	40 முதல் 79 வயது வரை	₹300

பயனாளிகளின் நலனை கருத்திற்கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளைத் தளர்த்தி, வயது வந்த மகன்/மகள் இருந்தாலும் அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக்கோட்டிற்குகீழ் இருக்கும்பட்சத்தில் ஓய்வூதியம் பெறும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் அசையா சொத்தின் மதிப்பு ₹5,000/-மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு, தற்பொழுது ₹50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறானாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையினை நீக்கியும், ஊனத்தின் விழுக்காட்டினை 60-லிருந்து 40 விழுக்காடாக குறைத்தும் அரசு உத்தரவிட்டுள்ளது.

தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

வ. எண்	**திட்டத்தின் பெயர்**	**தகுதிக்கான நிர்ணயம்**
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும். ➢ 60 வயது அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.
2.	இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும். ➢ 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ விதவையாக இருத்தல் வேண்டும்.

3.	இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும். ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ ஊனத்தின் விழுக்காடு 80 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதிக்கான நிர்ணயம்
1.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ ஊனத்தின் விழுக்காடு 40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். ➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
2.	ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்	➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ விதவையாக இருத்தல் வேண்டும். ➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

3.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம்	➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ➢ 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். ➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
4.	ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ சட்டப் பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். ➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
5.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ➢ 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். ➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். ➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

2016 ஆகஸ்ட் 10]

31-3-2016 அன்று மொத்தமுள்ள 30.74 இலட்சம் பயனாளிகளில் 23.46 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் வழியாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் வழியாகவும், ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம்பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது:

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

8.3 விபத்து நிவாரணத் திட்டம்

44 வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின்மூலம் மரணமடையும்போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ₹15,000/-லிருந்து ₹20,000/- ஆக 31 டிசம்பர் 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

8.4 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ₹10,000/-த்திலிருந்து ₹20,000/-ஆக 31-12-2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

பிற்சேர்க்கை

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு–2016–2017

மானியக் கோரிக்கை எண்45

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ₹451231.84 இலட்சம். இதில் திட்ட பணிகளுக்கு மட்டும் ₹428150.05 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு				
		(ரூபாய் இலட்சத்தில்)		
கணக்குத் தலைப்பு		திட்டத்தில் சேராதது	திட்டம்	மொத்தம்
வருவாய் பகுதி				
2059	பொதுப் பணிகள்	268.75	-	268.75
2225	சமூக நல இயக்ககம்	31.13	-	31.13
2235	சமூகப் பாதுகாப்பு இயக்ககம்	2372.02	6736.39	9108.41
2235	சமூக நல இயக்ககம்	9605.14	85484.26	95089.40
2235	ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம்	5736.86	-	5736.86

2236	தலைமைச் செயலகம்	17.81	-	17.81
2236	சமூக நல இயக்ககம்	4637.54	159814.35	164451.89
2236	ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம்	-	176115.01	176115.01
2251	தலைமைச் செயலகம்	412.52	-	412.52
2551	சமூக நல இயக்ககம்	-	0.01	0.01
வருவாய் பகுதி மொத்தம்		**23081.77**	**428150.02**	**451231.79**
மூலதனப் பகுதி				
4235	சமூக நல இயக்ககம்	-	-	-
4235	சமூகப் பாதுகாப்பு இயக்ககம்	-	0.02	0.02
4236	சமூக நல இயக்ககம்	-	0.01	0.01
மூலதனப் பகுதி மொத்தம்		-	**-**	**0.03**
7610	அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள்	0.02	-	0.02
கடன் பகுதி மொத்தம்		**0.02**	**-**	**0.02**
பெரு மொத்தம்		**23081.79**	**428150.05**	**451231.84**

[2016 ஆகஸ்ட் 10

பெரு மொத்தம்:

வருவாய் பகுதி	:	₹	*451231.79* இலட்சம்
மூலதனப் பகுதி	:	₹	*0.03* இலட்சம்
கடன் பகுதி	:	₹	*0.02* இலட்சம்
மொத்தம்	:	₹	*451231.84* இலட்சம்
			அல்லது
		₹	*4512.32* கோடி

2016-2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் *41*-ன்கீழ் ₹*3949.97* கோடி சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு II

(846 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

முன்னுரை

சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகளின் நலனையும் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் அவர்கள் பெறக்கூடிய வகையில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு இந்த சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகள் ஏனையோருடன் சமமான பங்குதாரர்களாக உள்ள ஒரு புதிய சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்ற உன்னதமான கருத்தைக்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த கனவு நனவாகும் வண்ணம், மாநில அரசு ஒரு புதிய மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்வுக்கான இயக்குநரகத்தை 1993-ல் உருவாக்கியது. மேலும், அரசு மாற்றுத் திறனாளிகளுக்கென அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு மாநிலக் கொள்கைத் திட்டத்தினை 1994-ல் உருவாக்கியது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாட்டில் 2.68 கோடி மாற்றுத் திறனாளிகள் 2.21 சதவிகிதம் உள்ளனர். இதில் தமிழ்நாட்டில் 11.79 இலட்சம் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகள் நலன் பற்றிய சட்டங்கள் மற்றும் கோட்பாடுகள்

ஒவ்வொரு மனிதனும், அவருக்குரிய அடிப்படை உரிமைகளை எவ்வித பாகுபாடும் இன்றி அனுபவிக்கலாம் என்ற அடிப்படையில் தான் மனித உரிமை கோட்பாடு அமையப் பெற்றுள்ளது. இந்த உரிமைகள், சமுதாயத்தில் ஒரு கணிசமான அங்கமாக விளங்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அளிக்கப்படுவதை உறுதி செய்யவும், பாதுகாக்கவும் அவ்வுரிமைகளை எவ்வகையில் மேம்படுத்த முடியுமோ அதைச் செய்வது இன்றியமையாததாகிறது.

[2016 ஆகஸ்ட் 10

மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்க, ஊனமுற்றோருக்கான உரிமைகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம் 1995, மனவளர்ச்சி பாதிப்படைந்தோர், ஆட்டிஸம், மூளை முடக்குவாதம், பல்வகை ஊனங்கள் ஆகியவற்றால் பாதிப்பிற்குட்பட்டவர்களுக்கான தேசிய அறக்கட்டளை சட்டம் 1999, இந்திய மறுவாழ்வு சட்டம் 1995, மனநலம் சட்டம் 1987 போன்ற சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

3. ஊனத்திற்கான சான்று வழங்குதல்

மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் குறைபாட்டிற்கும் வயதிற்கும் ஏற்ப பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்படுகின்றன. இதனைப் பெறுவதற்கு தேவையான அடையாள அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) விதிகள் 2002-ல் உருவாக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் அடிப்படையில் அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மையங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள், ஊனத்திற்கான சான்றிதழ் வழங்கும் வகையில் வழிமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

ஊனத்தின் தன்மைக்கேற்ப சான்றிதழ் வழங்கும் மருத்துவ அதிகாரக் குழு மற்றும் மருத்துவர்கள் விவரம் கீழ்க்காணுமாறு:-

வ. எண்	ஊனத்தின் தன்மை	ஊனத்திற்கான சான்று வழங்கும் "மருத்துவ அதிகாரக் குழு"	ஊனத்திற்கான சான்று வழங்கும் மருத்துவர்
1.	கை, கால் ஊனமுற்றோர், உறுப்புகள் துண்டிக்கப் பட்டோர் அல்லது முழுமையான நிரந்தர கை, கால் செயலின்மை	அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் மருத்துவமனைகள்/ நிறுவனங்கள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள்	அரசு/உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் மருத்துவமனைகள்/ நிறுவனங்கள்/ ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் ஏதேனும் ஒரு மருத்துவர்

2016 ஆகஸ்ட் 10]

2.	ஒன்றுக்கு மேற்பட்ட ஊனம்	மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் நிறுவனங்கள் நடத்தும் சிறப்பு மருத்துவர் மற்றும் பரிசோதனை வசதிகள் அடங்கிய மாவட்ட மருத்துவமனைகள், பிற மருத்துவமனைகள்	மூன்று மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழுவில் ஒரு மருத்துவர், சம்பந்தப்பட்ட ஊனத்தின் சிறப்பு மருத்துவராக இருக்க வேண்டும்.
3.	மேலே வரிசை எண் 1 மற்றும் 2–ல் குறிப்பிடாத ஊனங்கள்	மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ அரசு நிறுவனங்கள்/உள்ளூர் மருத்துவமனைகள்	கீழே இதற்கென அரசு நிர்ணயித்துள்ள சிறப்பு மருத்துவர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சிறப்பு மருத்துவர்

மேலே வரிசை எண் 3-ல் குறிப்பிட்டுள்ள ஊனங்களுக்கான சான்றிதழை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் சிறப்பு மருத்துவர் விவரம் பின்வருமாறு:—

வ.எண்	ஊனத்தின் வகை	சிறப்பு மருத்துவர்
1	மூளை முடக்குவாதம்	இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு அல்லது எலும்பியல் மருத்துவர் அல்லது குழந்தை நரம்பியல் மருத்துவர் அல்லது மனநல மருத்துவர்
2	காது கேளாமை	காது, மூக்கு, தொண்டை நிபுணர்
3	தொழுநோய் பாதித்து குணமடைந்த நிலை	இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு அல்லது எலும்பியல் மருத்துவர் அல்லது தோல் மருத்துவர்

வ.எண்	ஊனத்தின் வகை	சிறப்பு மருத்துவர்
4	கை, கால் பாதிப்பு கை கால் துண்டிக்கப்பட்டவர் அல்லது முழுமையான நிரந்தர கை, கால் செயலின்மை	இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு அல்லது எலும்பியல் மருத்துவர்
5	மனநலம் பாதிப்பு	மனநல மருத்துவர்
6	மனவளர்ச்சிக் குறைவு	12 வயதிற்குட்பட்ட மனவளர்ச்சி <u>குன்றியோர்:</u> குழந்தை நல மருத்துவர், குழந்தை நல நரம்பியல் மருத்துவர், மனநல மருத்துவர் 12 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி <u>குன்றியோர்:</u> மனநல மருத்துவர்
7	பார்வைக் குறைபாடு/ பார்வையின்மை	கண் மருத்துவர்
8	புற உலக சிந்தனையற்ற நிலை	<u>மருத்துவக்குழு</u> 1. உளவியல் நிபுணர் / மறுவாழ்வு உளவியல் நிபுணர் (Clinical Psychologist / Rehabilitation Psychologist) 2. மன நல மருத்துவர் (Psychiatrist) 3. குழந்தைகள் நல மருத்துவர்/பொது மருத்துவர்/A Paediatrician or General Physician தேவைக்கேற்ப

2016 ஆகஸ்ட் 10]

4. தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவுப் புத்தகம் வழங்குதல்

40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஊனமுடைய மாற்றுத் திறனாளிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தினை அணுகி பதிவு செய்துகொள்ளலாம். இதனை சரிபார்த்து, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவுப் புத்தகம் ஆகியவற்றை வழங்குவார். இதுவரையில் 11,49,352 (30-6-2016 வரை) ஊனத்தின் தன்மைக்கென சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் முதலியன மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது மொத்தம் உள்ள ஊனமுற்றோர் சதவீதத்தில் 97.5 சதவீதம் ஆகும். தமிழ்நாடு இவ்வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஊனமுற்றோர் சான்றிதழ்கள் வழங்குவதில் நமது நாட்டிலுள்ள பெரிய மாநிலங்களில் முதன்மை இடத்தில் உள்ளது.

5. மாற்றுத் திறனாளிகளுக்காக சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் பதிவு செய்தல்

(அ) மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறை சட்டம், 1973-ன்படி, தமிழகத்தில் செயல்படும் மாற்றுத்திறன் கொண்ட மாணவ, மாணவியருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரால் வழங்கப்படுகிறது. இதுவரை 415 சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல்

மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-ன்படி, மாற்றுத் திறனாளிகளுக்காக சேவை புரியும் எந்த ஒரு நிறுவனமும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழினைப் பெறவேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மட்டுமே, பதிவுச் சான்றிதழை வழங்கும், புதுப்பிக்கும் மற்றும்

திரும்பப்பெறும் அதிகாரம் படைத்தவர் ஆவார். இதுவரை 156 மாற்றுத் திறனாளிகளுக்கான நிறுவனங்களுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

(இ) மனநல மறுவாழ்வு மையங்கள் பதிவு

தமிழ்நாடு மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு விதிகள் 2002-ன் அடிப்படையில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனநல மறுவாழ்வு மையங்கள், முறைப்படுத்தப்படுகிறது. இவ்விதிகளின்படி, இம்மையங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும். இவ்விதிகளை அமுல்படுத்துவதால், அனுமதியற்ற மையங்கள் செயல்படுவது தடுக்கப்படுவதோடு, அனுமதிபெற்ற மையங்களை வரன்முறைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் சாத்தியமாகிறது.

6. ஆரம்ப நிலையில் குறைகளைத் தடுத்தல்

பெருவாரியான ஊனத்தின் குறைகளை, ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன்மூலம் தடுக்கலாம் என மருத்துவத் துறை வல்லுநர்கள் கருதுகின்றனர். குழந்தை பிறப்பிற்கு முன்பும் பின்பும் மேற்கொள்ள வேண்டிய உடல்நலப் பாதுகாப்பு குறிப்புகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் ஊனத்தினைத் தடுக்கலாம். மேலும் இயன்முறை மருத்துவம், மருத்துவ ஆலோசனை, சிகிச்சை, பயிற்சி மற்றும் உதவி உபகரணங்கள் வழங்குதல் போன்றவற்றின் மூலமும் பெருவாரியாக ஊனத்தினை தடுக்கவும், சிகிச்சை மேற்கொள்ளவும் தேவையான மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற ஏழை மக்களுக்கும் இச்சேவை சென்றடைய நடமாடும் சிகிச்சை பிரிவினையும் அரசு துவக்கியுள்ளது.

7. செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையில் கண்டறியும் மையம்

பிறந்த குழந்தைகளிடம் செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறிந்து அவர்களுக்கு காதொலி கருவிகள் வழங்குவதோடு, அக்குழந்தைகளுக்கு ஆரம்பநிலை பயிற்சிகள் வழங்கப்படுகிறது. செவித்திறன் பரிசோதனை மையங்கள் 28 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட மையங்களில் தோராயமாக 6,000 மழலையர்/ இளங்குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர்.

2016 ஆகஸ்ட் 10]

8. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

மாற்றுத் திறனாளி குழந்தைகள் ஆரம்ப நிலை பயிற்சிமூலம் ஒருங்கிணைந்த கல்வியினை பெறும் வகையில், இயல்பான நிலையில் வாழ்வில் குழந்தைப் பருவத்தில் பெறக்கூடிய வளர்ச்சி அனுபவத்தினை இழக்கும் அபாயத்தினை தவிர்க்கலாம். இதனைக் கருத்தில்கொண்டு, தமிழக அரசு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மாவட்ட அளவில் ஏற்படுத்தியுள்ளது. மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் மற்றும் அவர்களுடன் வரும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆகியோர் அவர்கள் வீடுகளில் இருந்து ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு வந்து திரும்பிச் செல்ல அவர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. இந்த ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களின் மதிப்பூதியம் மாதம் ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

(அ) செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

செவித்திறன் பாதிக்கப்பட்ட மழலையர் மற்றும் இளஞ்சிறார்களுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம்மூலம், செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பேச்சு, மொழி வளர்ச்சி மற்றும் அறியும் திறமை ஆகியவற்றை பெறும் அளவிற்கு பயிற்சி அளிக்கும் நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2½ வயதிற்கு குறைவான வயதுடைய செவித்திறன் மட்டும் பாதிக்கப்பட்டு, கூடுதல் ஊனம் ஏதும் இல்லாத குழந்தைகள் இம்மையங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். செவித்திறன் பாதிக்கப்பட்ட மழலையர் மற்றும் இளங்குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களில், குழந்தைகள் 6 வயதை அடையும் முன்னரே பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி பெற்று பள்ளிகளில் சேருவதற்கு ஆயத்தப்படுத்துகிறது. இம்மையங்கள் 29 மாவட்டங்களில் தொடங்கப்பட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிருவகிக்கப்படுகின்றன. பெற்றோரில் ஒருவர் குழந்தையுடன் மையத்திற்கு வந்து பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும். 0-3 வயதிற்குட்பட்ட 699 செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மையங்களில் பயனடைந்துள்ளனர். ஆண்டுதோறும், இம்மையங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களின்

அறிவுத்திறனை மேம்படுத்தவும் மற்றும் திறமையை வளர்க்கவும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.87.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்/ பாதுகாவலர் மற்றும் குடும்பத்தினரைப் பயிற்றுவித்து, அதன்மூலம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இயக்கம், அன்றாடச் செயல்கள் சமூகத்துடன் ஒட்டுறவாடுதல் மற்றும் பிற திறன்களை வளர்ப்பதே இம்மையங்களின் நோக்கமாகும். 6 வயதிற்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் 31 மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகிறது. இம்மையங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1539 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இம்மையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

2016–2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.212.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) பார்வை குறைபாடுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப கால பயிற்சி மையம்

கண்பார்வையற்ற குழந்தைகளுக்கான ஆரம்ப கால பயிற்சி மையங்கள் 7 மாவட்டங்களில் செயல்படுகின்றன. திருச்சி, கோயம்புத்தூர், கடலூர், சென்னை, சேலம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இம்மையங்கள் தொண்டு நிறுவனங்களின்கீழ் செயல்படுகின்றன. 6 வயதிற்குக்கீழ் உள்ள 125 பார்வையற்ற குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

2016–2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 28.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

(ஈ) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம், திருச்சி

மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென்று ஆரம்பநிலை பயிற்சி மையம் திருச்சி மாவட்டத்தில் தொண்டு நிறுவனத்தின்கீழ் செயல்படுகிறது. தசைப் பயிற்சியாளர், தொழில்முறை பயிற்சியாளர், பேச்சுப் பயிற்சியாளர் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் ஆகிய பல்துறை நிபுணர்கள் கொண்ட குழுவின்மூலம் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மழலை தூண்டுதல் பயிற்சியும், 0-6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குறித்த காலத்திற்குள் தூண்டுதல் பயிற்சியும் அளிக்கின்றனர். இம்மையத்தில் 50 மூளை முடக்குவாத குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.7.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) புற உலக சிந்தனையற்ற குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி

மன இறுக்கம் அல்லது புற உலக சிந்தனை அற்றவர்களுக்கு தனித்துவம் வாய்ந்த பயிற்சி தேவைப்படுகிறது. இவர்களுக்கு இம்மையத்தில் ஆரம்ப நிலைப் பயிற்சிமூலம் சமூக தூண்டுதல்கள், பிரதிபலிப்பு திறன், மொழி, அறிவை புரிந்துகொள்ளும் திறன், பயன்படுத்தும் திறன் முறையான விளையாட்டுத்திறன் மற்றும் சமூகப் பயிற்சி இவை அனைத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. முன்னோடித் திட்டமாக திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இந்த ஆரம்ப பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. மொத்தம் 40 குழந்தைகள் இம்மையங்களில் பயிற்சி பெறுகிறார்கள்.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) ஆரம்ப பயிற்சி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் சத்துணவு வழங்குதல்

ஒவ்வொரு ஆரம்ப பயிற்சி மையங்களிலும் அருகிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும்

அங்கன்வாடி மையங்களில் இருந்து குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் சத்துணவு வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையங்களுக்கு இணை உணவு வழங்கும் தொண்டு நிறுவனங்களுக்கு வாகனப்படி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 68 ஆரம்ப பயிற்சி மையங்களில் பயிலும் மாற்றுத் திறனுடைய 2500 குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் சத்துணவு வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. மாநில வள மற்றும் பயிற்சி மையம், சென்னை

அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சிறப்புச் சேவைகள் மற்றும் அனைத்துத் தகவல்களும் ஒரே இடத்தில் வழங்கும் நோக்கத்தோடு சென்னையில் மாநில வள மற்றும் பயிற்சி மையம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஊனத்திற்கான சான்றிதழ்கள் மட்டுமல்லாது மாற்றுத்திறனாளிகளுக்கு இரயில் பயணச் சலுகை, அரசு தேர்வுகளில் விலக்கு பெற சான்று மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உடன் ஒருவருடன் பயணம் செய்வதற்கான 75 சதவீத பயணக் கட்டணச் சலுகை ஆகியவை இம்மையத்தில் வழங்கப்படுகிறது. செவித்திறன் பாதிக்கப்பட்ட, மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட, புற உலகச் சிந்தனையற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் புலன் சார்ந்த ஒருங்கிணைப்பு மையம் ஆகியவையும் இப்பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 0-5 வயது உள்ள மாற்றுத்திறனுள்ள குழந்தைகள் இம்மையத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். பல்வேறு வகையான பயிற்சி வகுப்புகளும் இம்மையத்தில் நடத்தப்படுகின்றன.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.27.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. மண்டல மாநில வள மற்றும் பயிற்சி மையம், திருச்சி

தென் மாவட்டங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் தேவைகளின் நலனில் கருத்தில்கொண்டு, மண்டல மாநில வள

2016 ஆகஸ்ட் 10]

மற்றும் பயிற்சி மையம், திருச்சியில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையம் திருச்சி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படும். இம்மையத்தின் மூலம் ஊனத்திற்கான சான்று மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது. புற உலகச் சிந்தனையற்ற மற்றும் பல்வகை ஊனத்திற்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மற்றும் பல்வகை ஊனம் புலன் சார்ந்த ஒருங்கிணைப்பு மையம் ஆகியவையும் இப்பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான பகல் நேர பராமரிப்பு மையம் மூலம் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள்

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவ உதவிகள் வழங்க தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 32 மாவட்டங்களிலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 50 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவர். 1385 மனநலம் பாதிக்கப்பட்ட நபர்கள் இத்திட்டத்தின்கீழ் மறுவாழ்வு பெறுகின்றனர்.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.286.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. சிறப்புப் பள்ளி

மாற்றுத்திறனாளி மாணவர்களுடைய பிரத்தியேக தேவைகளை மனதில் கொண்டு தமிழக அரசு சிறப்புப்பள்ளிகளை நிறுவியது. மாநிலம் முழுவதிலும் 77 அரசு மற்றும் அரசுப் உதவிபெறும் சிறப்பு பள்ளிகள் உள்ளன. இதில் 23 அரசுப் பள்ளிகளில் 10 பார்வையற்றோருக்காகவும் 11 காது கேளாத வாய்

பேசாதவர்களுக்கும், 1 கடும் கை, கால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், 1 மனவளர்ச்சி குன்றியோருக்குமாக பள்ளிகள் உள்ளன. 54 அரசு உதவி பெறும் பள்ளிகள் அரசு சாரா நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

இந்த 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் 5 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அதில் 3 பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளிகள். அவை பூவிருந்தவல்லி (ஆண்கள்), திருச்சி (பெண்கள்) மற்றும் தஞ்சாவூர் (இருபாலரும்) ஆகும். மேலும் 2 பள்ளிகள் காது கேளாத வாய் பேச இயலாதவர்களுக்கு தருமபுரி மற்றும் தஞ்சாவூரில் உள்ளன.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக உணவும், உறைவிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விளையாட்டு உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள், சூரிய ஒளிமூலம் வெந்நீர் பெறும் சாதனம், சலவை இயந்திரங்களும் இந்தப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வருடத்திற்கு ஒரு முறை கல்விச் சுற்றுலா மூலம் வெளியில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு மாநில அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 2012-2013-ம் கல்வியாண்டியிலிருந்து உணவூட்டு மானியம் மாதம் ஒன்றிற்கு ரூ.450/- லிருந்து ரூ.650/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2015-2016-லிருந்து தினமும் வீட்டிற்குச் செல்லும் மாணவர்களுக்கு மற்ற மாணவர்களுக்கு இணையாக மதிய உணவு வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.333.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. கல்வி உதவித்தொகை மற்றும் வாசிப்பாளர் உதவித்தொகை

அ. கல்வி உதவித்தொகை

கல்வி உதவித்தொகையானது கல்வி நிலைக்கேற்றவாறு சிறப்புப்பள்ளி மாணவர்கள் தங்களுடைய உயர் கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வழங்கப்படுகிறது. 2013-2014-லிருந்து கல்வி உதவித்தொகையை அரசு இருமடங்காக உயர்த்தியுள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

வ. எண்	வகுப்பு	உதவித்தொகை ஒரு மாணவருக்கு ஒரு வருடத்திற்கு
1.	1 முதல் 5 வரை	ரூ. 1000 /–
2.	6 முதல் 8 வரை	ரூ. 3000 /–
3.	9 முதல் 12 வரை	ரூ. 4000 /–
4.	இளங்கலை பட்டப்படிப்பு	ரூ. 6000 /–
5.	முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி	ரூ. 7000 /–

2016-2017 ஆம் ஆண்டிற்கு இந்தத் திட்டத்திற்கு ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ. வாசிப்பாளர் உதவித்தொகை

பார்வையற்ற மாணவர்களுக்கு உதவும் வகையில் 9 ஆம் வகுப்பு முதல் முதுகலை பட்ட படிப்பு வரை வாசிப்பாளர் உதவித்தொகையை அரசு வழங்கி வருகிறது. 2013-2014 ஆம் ஆண்டில் இந்தத் தொகையானது கீழ்க்கண்டவாறு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

வ. எண்	வகுப்பு	வாசிப்பாளர் உதவித்தொகை ஒரு மாணவருக்கு ஒரு வருடத்திற்கு
1.	9 முதல் 12 வரை	ரூ. 3000 /–
2.	இளங்கலை பட்டப்படிப்பு	ரூ. 5000 /–
3.	முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி	ரூ. 6000 /–

2016-2017 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூ.51.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

14. தேர்வு எழுதுபவர்களுக்கான உதவித்தொகை

பார்வையற்ற மாணவர்களுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தேர்வு எழுதுபவர்களுக்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொகையானது ரூ.250/-லிருந்து ரூ.300/-ஆக உயர்த்தப்பட்டது. ஏறத்தாழ 500 பார்வையற்ற மாணவர்கள் கீழ்க்கண்ட 6 பள்ளிகளில் பயில்பவர்கள் பயனடைகின்றனர்:

1. அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி.
2. அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
4. சிறுமலர் பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை.
5. புனித லூயிஸ் பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை.
6. இந்திய பார்வையற்றோருக்கான சங்கம் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

2016-2017 ஆம் ஆண்டில் இந்த திட்டத்திற்காக ரூ.32.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சீருடை வழங்குதல்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கப்படுகின்றன. 2012–2013 ஆம் கல்வியாண்டில் 2 இணை சீருடைகளை 4 இணை சீருடைகளாக உயர்த்தி வழங்கப்படுகிறது, 1382 மாணவர்கள் 2015–2016 ஆம் கல்வியாண்டில் பயன் அடைந்துள்ளனர். தவிர இலவச பாடப்புத்தகங்களும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டில் சீருடைக்காக ரூ.13.96 இலட்சம், மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்காக 0.95 இலட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. பார்வையற்ற மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக DVD கல்வி உபகரணங்கள் வழங்குதல்

பூவிருந்தவல்லி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மூன்று பார்வையற்ற மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வளரும் கல்வியின் தேவைக்கேற்றவாறு மாணவர்களுக்கு உதவும் வகையில் DVD (Head Phones) தலைக்கருவி போன்ற கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. 2015-2016 ஆம் கல்வியாண்டில் 108 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

2016-2017 ஆம் கல்வியாண்டில் ரூ.7.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. இலவச மடிக்கணினி

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் 1506 பார்வையற்ற மற்றும் செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்கு கடந்த இரண்டாண்டுகளில் இலவச மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளன.

18. இடைநிற்றலைத் தவிர்க்கும்பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை

இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்து முதல் பன்னிரெண்டாம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

2015-2016 ஆம் வருடத்தில் 1273 மாணவர்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

வ. எண்	வகுப்பு	ஊக்கத்தொகை ஒரு வருடத்திற்கு
1.	10 ஆம் வகுப்பு	ரூ.1,500/–
2.	11 ஆம் வகுப்பு	ரூ.1,500/–
3.	12 ஆம் வகுப்பு	ரூ.2,000/–

[2016 ஆகஸ்ட் 10

2016-2017 ஆம் வருடத்தில் இந்தத் திட்டத்திற்காக ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசுத்தொகை

அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாத, வாய் பேசாத மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் முதல் இடங்களைப் பெற்றவர்களுக்கான ரொக்கப் பரிசு உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, உயர் கல்வியைத் தொடர ரொக்கப் பணமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

மாநில அளவில் தர வரிசை	பார்வையற்றவர்கள்		காது கேளாத வாய் பேசாதவர்கள்	
	10 ஆம் வகுப்பு	12 ஆம் வகுப்பு	10 ஆம் வகுப்பு	12 ஆம் வகுப்பு
முதலிடம்	ரூ.25,000	ரூ.50,000	ரூ.25,000	ரூ.50,000
இரண்டாமிடம்	ரூ.20,000	ரூ.30,000	ரூ.20,000	ரூ.30,000
மூன்றாமிடம்	ரூ.15,000	ரூ.20,000	ரூ.15,000	ரூ.20,000
மாவட்ட அளவில் தர வரிசை	பார்வையற்றவர்கள்		காது கேளாத வாய் பேசாதவர்கள்	
	10 ஆம் வகுப்பு	12 ஆம் வகுப்பு	10 ஆம் வகுப்பு	12 ஆம் வகுப்பு
முதலிடம்	ரூ.6,000	ரூ.12,000	ரூ.6,000	ரூ.12,000
இரண்டாமிடம்	ரூ.4,500	ரூ.7,500	ரூ.4,500	ரூ.7,500
மூன்றாமிடம்	ரூ.3,000	ரூ.4,500	ரூ.3,000	ரூ.4,500

2016 ஆகஸ்ட் 10]

உயர் கல்விக்கான உதவித் தொகை	பார்வையற்றவர்கள்		காது கேளாத வாய் பேசாதவர்கள்	
உயர்கல்வி தொடர	ரூ.1,500	ரூ.3,000	--	--
பாடபுத் தகங்கள் வாங்க	ரூ.3,000	ரூ.4,000	ரூ.1,000	ரூ.3,000
விடுதிச் செலவினம்	ரூ.2,000	ரூ.3,000	ரூ.1,000	ரூ.1,000

2015-2016 ஆம் வருடத்திற்கு ரூ.87.75 இலட்சம் (பார்வையற்றவர்களுக்கு ரூ.58.72 இலட்சம், காது கேளாத வாய் பேசாதவர்களுக்கு ரூ.29.03 இலட்சங்களும்) செலவு செய்யப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில் ரூ.87.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. காது கேளாத, வாய் பேசாதவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு

சென்னை, மாநிலக் கல்லூரியில் காது கேளாத, வாய் பேசாத மாணவர்களுக்காக மட்டும் பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் 15 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இது காது கேளாத, வாய் பேசாத மாற்றுத் திறனாளிகள் தங்களுடைய பட்டப்படிப்பை மேற்கொண்டு தொடருவதற்கு உதவி செய்கிறது.

2016-2017-ல் இந்தத் திட்டத்திற்காக ரூ.4.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. சட்டப்படிப்பு பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை

சட்டப்படிப்பு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.3,000/- வீதம் நிதியுதவி வழக்கறிஞர் சங்கத்தில் (Bar Council) தங்களது பெயரை பதிவு செய்வதற்கும், சட்டப் புத்தகங்கள்

வாங்குவதற்கும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் 15 சட்டப் பட்டதாரிகள் இந்தத் திட்டத்தினால் பயனடைகின்றனர்.

2016-2017 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூ.0.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22. செவித்திறன் மற்றும் பார்வை குறையுடையோருக்கான அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் உள்ள சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மாணியம்

பார்வையற்ற மற்றும் வாய்பேசாத காதுகேளாத மாணவர்கள் பயிலும் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.10,000/- வீதம் பன்னிரெண்டு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் கல்வியாண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூ. 176.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. பயிற்சித் திட்டங்கள்

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான திறமைகளை ஊக்குவிக்கும் விதமாக கீழ்க்கண்ட பயிற்சிகள் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன:

(அ) மாற்றுத் திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்க புகைப்படப் பயிற்சி

பல்லூடகப் பயிற்சி பெற்ற நபர்கள் பொழுதுபோக்கு நிறுவனங்களில், குறிப்பாக தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் விளம்பரத் துறை போன்றவற்றில் அதிகம் தேவைப்படுகின்றனர். அதன்படி இப்பயிற்சி பெற ஆர்வமுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம்மூலம் பயிற்சி அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. கை/கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சென்னையில் உள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் வட்டார அலுவலகத்தில் ஒரு மாத

பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்க புகைப்பட பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி பெறும் ஒவ்வொரு நபருக்கும் உதவித் தொகையாக ரூ.1000/- வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி கட்டணம் மற்றும் விடுதி கட்டணமாக ரூ.12,500/- பயிற்சி அளிக்கும் நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்றது பயிற்சி முடிந்தவுடன் மாற்றுத் திறனாளிகள் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். 2015-2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 200 மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.21.00 இலட்சம் செலவிடப்பட்டது.

(ஆ) செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு பொருத்துநர் பயிற்சி

காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத் திறனாளிகளுக்கு கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் செயல்படும் சிறப்புப் பயிற்சி பிரிவில் பொருத்துநர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கான கால அளவு இரண்டு ஆண்டுகள். தற்போது 21 மாற்றுத்திறனாளிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.43.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. இட ஒதுக்கீட்டின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்துதல்

அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு காலிப் பணியிடங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டினை அமல்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தலைமைச் செயலாளர் தலைமையில் அரசுச் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழு, அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படுகின்றதா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கும். தலைமைச் செயலாளர் தலைமையில் 20-7-2016 அன்று ஆய்வுகூட்டம் நடத்தப்பட்டது. இது தொடர்பாக முறையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 10

மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட காலிப் பணியிடங்களில், பணியிடம் நிரப்பும் வருடத்தில் மாற்றுத் திறனாளிகள் இல்லாத பட்சத்தில், அப்பணியிடங்களை மூன்று ஆண்டுகளுக்கு முன் கொணர ஆணையிடப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-ல் வலியுறுத்தியுள்ளவாறு மாநில அரசு துறைகளில், தொகுதி "ஏ'' மற்றும் "பி'' பிரிவுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது அரசாணை (நிலை) எண்.13, நாள் 2-3-2016. தொகுதி 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகளில் 263 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை (நிலை) எண் 10, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 4-3-2014-ன்படி, பல்வேறு அரசு துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 1928 பணியிடங்கள் பின்னடைவு பணியிடங்களாகக் கண்டறியப்பட்டு நிரப்பப்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது. நாளது வரையில் பெரும்பான்மையான பின்னடைவு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

25. சிறு தொழில்கள் மற்றும் பெட்டிக்கடைகள்

மாற்றுத் திறனாளிகள் பொருளாதார நிலை மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி மாற்றுத்திறனாளிகள் சுயமாக தொழில் செய்து தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் சுய வேலைவாய்ப்பு வங்கிக்கடன் பெற ஊக்குவிக்கப்படுகிறது. வங்கிகளால் அனுமதிக்கப்படும் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.10,000/- இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக மாற்றுத்திறனளிகளுக்கு வழங்கப்படும்.

2015-2016 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1200 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.1.20 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 10]

26. பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித்தரும் நோக்கில், பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டிய 5 விழுக்காடு பங்குத் தொகைக்கான நிதியினை, மாநில அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் நிதியாண்டில் 22 பயனாளிகள் ரூ.5.00 இலட்சம் செலவில் பயன் பெற்றுள்ளனர்.

2016-2017-ம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் சுய தொழில் திட்டம்

மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுய தொழில் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும்பொருட்டு மாநில அரசு வட்டியில்லா கடன் பெறும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்மூலம் சுய வேலைவாய்ப்புக் கடன் வழங்க தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியினை செயல்படுத்தும் நிறுவனமாக மத்திய அரசு நியமித்துள்ளது.

கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கூட்டுறவு வங்கிகள் மூலம் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு கடன் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் கடன் தொகைககான வட்டி முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. 2015-2016 ஆம் நிதியாண்டின் இத்திட்டத்திற்கு ரூ.19.18 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5100 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

28. மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான நிவாரணத்தொகை

வேலைவாய்ப்பற்றோருக்கான நிவாரணத்தொகை பெற 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகள் தகுதியுள்ளவர்கள் ஆவர். மாநில அரசு மாற்றுத் திறனாளிகளின் கல்வித் தகுதியினைப் பொறுத்து, கீழ்க்கண்டவாறு நிவாரணத் தொகையினை வழங்கி வருகிறது:

வ.எண்	கல்வித்தகுதி	மாதம் ஒன்றிற்கான நிவாரணத்தொகை
1.	பத்தாம் வகுப்பு வரை	ரூ.600/–
2.	மேல்நிலை வகுப்பு	ரூ. 750/–
3.	பட்டதாரிகள் / முதுநிலைப் பட்டதாரிகள்	ரூ.1000/–

இத்திட்டத்தில் பயன்பெற மாற்றுத் திறனாளிகள் வேலை வாய்ப்பகத்தில் குறைந்தபட்சம் ஓராண்டாவது பதிவு செய்து, காத்திருப்பவராக இருக்க வேண்டும். 2015-2016 ஆம் ஆண்டில் 22,904 மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் ரூ.20.87 கோடி செலவிடப்பட்டது.

2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.1107.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

29. மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள்

மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார நிலையை உயர்த்திடவும், தேவையின் அடிப்படையிலும் அவர்களுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. உடல் இயக்கக் குறைபாடுடையோருக்கும் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 1961 மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் ரூ. 72.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.72.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

30. சமூக பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை மனவளர்ச்சி குன்றியோர்கள், கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் தசைச்சிதைவு மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 10]

(அ) மனவளர்ச்சி குன்றியோர்கள், கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை

மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.1500/- வீதம் மாதம் தோறும் கீழ்க்காணும் விவரப்படி வழங்கப்படுகின்றன:

வ எண்	மாற்றுத் திறனாளியன் வகை	ஊனத்தின் சதவீதம்	வருமான வரம்பு	பயனாளிகள்
1.	மனவளர்ச்சி குன்றியவர்கள்	45% மற்றும் அதற்கு மேல்	இல்லை	110692
2.	கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள்	75% மற்றும் அதற்கு மேல்	இல்லை	15756
3.	தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்	40% மற்றும் அதற்கு மேல்	இல்லை	2163

கருவூலம் மூலம் உதவித்தொகை பயனாளிகளுக்கு அவர்களுடைய வங்கி கணக்கிற்கே அனுப்பப்படுகிறது.

2012–2013 ஆம் ஆண்டு முதல் மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் பயன் பெற ஊனத்தின் சதவீதம் 60% இருந்து 45% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் நிதியாண்டு முதல் மாதாந்திர உதவித் தொகையினை ரூ.1000/-லிருந்து ரூ.1500/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.22760.64 இலட்சம் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் ரூ.403.98 இலட்சம் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் பராமரிப்பு உதவித் தொகைக்கான நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2012 டிசம்பர் முதல், மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் பராமரிப்பு உதவித் தொகை

வழங்கப்பட்டு வருகிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். 2014-2015 ஆம் நிதியாண்டு முதல் கருவூலம் மூலமாக மின்னணு பட்டுவாடா முறையில் (ECS) உதவித்தொகை நேரடியாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு அனுப்பப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.600.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

31. ஓய்வூதியத் திட்டம்

மாற்றுத்திறனாளிகளின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் கீழ்க்கண்ட மாத ஓய்வூதியத் திட்டங்கள் வருவாய்த் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது:

1. இந்திராகாந்தி மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம்

2. மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

அரசாணை (நிலை) எண் 27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (ச.ந.6(1)) துறை, நாள் 22-3-2016-இன் தற்போதைய ஆணை வாயிலாக கீழ்க்கண்ட வாறான நிபந்தனைகள் தளர்வு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியத் திட்டங்களில் இடம் பெற்றிருந்த "ஆதரவற்றோர்" எனும் வார்த்தை நீக்கம் செய்யப்பட்டது:

2. ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட 60 சதவீதம் மற்றும் அதற்கு மேல் ஊனத்தால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் எனும் நிபந்தனை 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் என தளர்வு செய்யப்பட்டது. இத்திட்டங்களின்மூலம் 2015-2016 ஆம் நிதியாண்டில் 265777 மாற்றுத்திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.324.15 கோடி செலவிடப்பட்டது.

2016 ஆகஸ்ட் 10]

32. மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் மையம்

மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் மையம் மாநில வள மற்றும் பயிற்சி மைய வளாகம், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், கே.கே.நகர், சென்னை-78 என்ற முகவரியில் திங்கள் முதல் சனிக் கிழமை வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்கி வருகிறது. (அரசு விடுமுறை நாட்கள் தவிர) மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மத்திய மற்றும் மாநில அரசு மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்த விவரம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, உதவி உபகரணங்கள், பயணச் சலுகைகள், பராமரிப்பு உதவித் தொகை திட்டம், அனைத்து வகையான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள், ஆரம்ப நிலையில் கண்டறியும் மையம், சிறப்புப் பள்ளிகள் விவரம், கல்வி, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் தொண்டு நிறுவனங்களின் தகவல்கள் இலவசமாக இத்தகவல் மையத்தின்மூலம் வழங்கப்படுகிறது. தகவல் மையத்தின் இலவச அழைப்பு எண் 1800 425 0111.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33. உதவி உபகரணங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு உடல்ரீதியான குறைகளுக்காக மறுவாழ்வு அளிக்கும் வகையில் நவீன உதவி உபகரணங்களை வழங்கி, சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடன் தன்னிச்சையாக செயல்பட அரசு உதவி வருகிறது. இத்தகைய உதவி உபகரணங்கள் ஊனத்தால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து அவர்கள் கல்வி வளர்ச்சிக்கும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவுவதுடன், சமுதாயத்தில் இவர்கள் ஒருங்கிணைந்து வாழவும் உதவுகிறது. மாற்றுத்திறனாளிகள் கல்வியில் மேம்பாடு, பொருளாதாரத்தில் சுய வளர்ச்சிப் பெற்று சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ வழிவகை செய்ய இவை பெரிதும் உதவுகின்றன.

34 (I) மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள்

மாற்றுத் திறனாளிகளுக்கு கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள் அவர்களின் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

1. மூன்று சக்கர சைக்கிள்கள்
2. சக்கர நாற்காலிகள்
3. கருப்பு கண்ணாடிகள்
4. மடக்கு ஊன்றுகோல்கள்
5. பிரெய்லி கை கடிகாரங்கள்
6. காதொலிக் கருவிகள்
7. சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன்கள்
8. கால் தாங்கிகள்
9. தோள்பட்டை தாங்கிகள் மற்றும்
10. செயற்கை அவயங்கள்.

கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்கள் போன்ற உதவி உபகரணங்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் உள்ள முடநீக்கு பிரிவில், பணிபுரியும் முடநீக்கு வல்லுநர்கள் மற்றும் தோல் பணியாளர்களால் தேவைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு பொருத்தப்படுகின்றன.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

II. நவீன உபகரணங்கள்

அ. நவீன செயற்கை அவயம்

ஆ. ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள்

இ. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்

ஈ. காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக்கருவி

உ. மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்

2016 ஆகஸ்ட் 10]

ஊ. பார்வைத்திறன் குறைபாடுடைய கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier)

எ. முதுகுத் தண்டுவடத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்

(அ) மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர், சுய தொழில் புரிபவர் மற்றும் பணிக்கு செல்பவர்களுக்கு நவீன செயற்கை அவயம் வழங்குதல்

மாற்றுத் திறனாளிகள் சுயமாக நடமாட ஏதுவாக, நவீன செயற்கை அவயங்கள் (கால் முட்டிக்கு கீழ்/கால் முட்டிக்கு மேல்) இலவசமாக வழங்கப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 142 மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெற்றுள்ளனர்.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.116.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள்

ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள், பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் 2015-16 ஆம் நிதியாண்டில் 1,500 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.8.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

(இ) இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்

இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கும், பணிக்குச் செல்பவர்களுக்கும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இவை மாற்றுத்திறனாளிகள் எளிதில் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்வதற்கு பெரிதும் உதவியாக உள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

2015–2016 ஆம் நிதியாண்டில் 1,083 இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் ரூ.636.00 இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள்

செவித்திறன் குறைபாடுடைய 6 ஆம் வகுப்பிலிருந்து கல்லூரிவரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. 2014-2015 ஆம் ஆண்டு முதல் காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் பணிக்கு செல்வோருக்கும், சுயதொழில் புரிபவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

2015-2016 ஆம் நிதியாண்டில் 3460 செவித்திறன் பாதிக்கப்பட்ட நபர்கள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுவர்.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) மூளை முடக்குவாதத்தால் (Cerebral palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்

மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் சிறப்பு தேவைகளை கருத்தில் கொண்டு பிரத்தியேகமாக சிறப்பு சக்கர நாற்காலிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.26.39 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 473 பயனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.36.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு உருப்பெருக்கி

பார்வைக் குறைபாடுள்ள மாணவ மாணவியருக்கு அவர்கள் பாடங்களை சுயமாக படிப்பதற்காக, 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து உருப்பெருக்கிகள் (Magnifier) வழங்கப்பட்டு வருகின்றன. குறைபார்வையுள்ள 138 மாணவர்களுக்கு 2015-16 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.9.52 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2016-17 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.8.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) முதுகுத் தண்டுவடத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்

முதுகுத் தண்டுவடத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் 2015-2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பயனாளிகளின் வசதியையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிபடுத்தும் வகையில், நாற்காலிகளின் இருக்கைகள் மென்மையானதாகவும், அவர்களுடைய கால்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும் வசதிகளுடனும் உருவாக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் நிதியாண்டில் மொத்தம் 960 பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் ரூ.1.92 கோடி செலவில் வழங்கப்பட உள்ளன.

35. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் பயணச் சலுகை

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் போக்குவரத்து கழகப் பேருந்துகளில், பயணச் சலுகைகள் வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள், அவர்கள் இருப்பிடத்திலிருந்து 100 கி.மீ. வரை கட்டணம் ஏதுமின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். ஏனைய மாற்றுத்திறனாளிகளுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு கல்வி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

நிலையங்கள், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம் மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்றுவர இச்சலுகை வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கை, கால் பாதிக்கப்பட்டோரும், அரசு விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் வருடத்திற்கு ஒரு முறை பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

மனவளர்ச்சி குன்றியவர்கள், துணையாளர் ஒருவருடன் பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் மாநிலத்தின் எந்தவொரு இடத்திற்கும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் குளிர்சாதன வசதியுள்ள பேருந்தினைத் தவிர்த்து, பிற வகைப் பேருந்துகள் அனைத்திலும் எத்தனை முறை வேண்டுமானாலும் 75% பேருந்து கட்டணச் சலுகையுடன் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளருடன் செல்ல அனுமதியும், துணையாளருடன் சேர்த்து 75% பேருந்துக் கட்டணச் சலுகையில் பயணம் செய்யவும் அனுமதிக்கப்படுகின்றனர். எவ்விதக் கட்டணமுமின்றி அனைத்து வகை மாற்றுத் திறனுடைய குழந்தைகளும் துணையாளர் ஒருவருடன் தங்கள் இருப்பிடத்திலிருந்து, ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் முன்பருவப் பள்ளிகளுக்கு சென்று திரும்ப சலுகை வழங்கப்படுகிறது. 2015-2016 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.61.00 கோடி செலவு செய்யப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

36. திருமண நிதி உதவித் திட்டம்

மாற்றுத் திறனாளியைத் திருமணம் செய்து கொள்ளும் நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திருமண உதவித் தொகையாக ரூ.25,000/-ம் மற்றும் மணப்பெண்ணிற்கு “திருமாங்கல்யம்” செய்வதற்காக 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பல்வேறு வகையான திருமண நிதியுதவித் திட்டங்களின் விவரம் கீழ்வருமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	பட்டம் / பட்டயம் பெற்றவர்கள்	பட்டம் / பட்டயம் பெறாதவர்கள்
1.	பார்வையற்றவரை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி	நிதியுதவி ரூ.25,000/–	நிதியுதவி ரூ.12,500/–
		தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/–	தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/–
		தங்க நாணயம் 4 கிராம்	தங்க நாணயம் 4 கிராம்
2.	கை,கால் பாதிக்கப்பட்டோரை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி	நிதியுதவி ரூ.25,000/–	நிதியுதவி ரூ.12,500/–
		தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/–	தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/–
		தங்க நாணயம் 4 கிராம்	தங்க நாணயம் 4 கிராம்
3.	காது கேளாத, வாய் பேசாதோரை திருமணம் செய்யும் சாதாரண நபருக்கான நிதியுதவி	நிதியுதவி ரூ.25,000/–	நிதியுதவி ரூ.12,500/–
		தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/– தங்க நாணயம் 4 கிராம்	தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/– தங்க நாணயம் 4 கிராம்
4.	மாற்றுத் திறனாளியை திருமணம் செய்யும் மாற்றுத் திறனாளிக்கான நிதியுதவி	நிதியுதவி ரூ.25,000/–	நிதியுதவி ரூ.12,500/–
		தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/–	தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/–
		தங்க நாணயம் 4 கிராம்	தங்க நாணயம் 4 கிராம்

[2016 ஆகஸ்ட் 10

இத்திட்டத்தின்கீழ் பயனடைய இலக்கு ஏதுமில்லை. எனவே, திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த அனைவருக்கும் விடுபடாமல் நிதியுதவி கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் நிதியாண்டில் மொத்தம் 858 பயனாளிகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.330.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

37. மீட்புத் திட்டம்

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தினரால் துரதிர்ஷ்டவசமாக கைவிடப்பட்டு கவனிக்கப்படாமல் சாலைகள் மற்றும் இதர பொது இடங்களில் சுற்றித்திரிபவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனை / மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டம் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் 445 மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மனநல காப்பகம்/மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.7.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

38. தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு மையங்கள்

தசைச் சிதைவு நோய், தனிப்பண்பாக தசைகள் படிப்படியாக பலவீனமடைந்து, பாதிக்கப்பட்டவர்களின் இயக்கம் முழுமையாக பழுதடைந்துவிடும். இந்நோய்க்கு தொடர் மருத்துவ சிகிச்சையுடன், இயன்முறை சிகிச்சை மற்றும் துணைச் சேவைகளும் அவசியமாகும். தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி, இயன்முறை சிகிச்சை மற்றும் வழிகாட்டுதல் வழங்குவதற்காக சென்னை, வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் பகல் நேர பராமரிப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பகல் நேர பராமரிப்பு மையங்கள் அரசு உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.92.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

39. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் 6,32,587 மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்களாக இதுவரையில் பதிவு செய்துள்ளனர்.

10 வயதிற்கு மேற்பட்ட அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் நல வாரியத்தில் உறுப்பினராகும் தகுதியுடையவராவர்.

மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின்மூலம் கீழ்க்குறிப்பிட்ட சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:-

1.	தனி நபர் விபத்து நிவாரணம்		
	இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு:		
	(அ)	இறப்பு	ரூ. 1,00,000/–
	(ஆ)	கை அல்லது கால் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு	ரூ.1,00,000/–
	(இ)	ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு	ரூ. 50,000/–
	(ஈ)	நிரந்தரம், மொத்த ஊனம் (‘ஆ’ அல்லது ‘இ’ தவிர்த்து)	ரூ. 25,000/–
2.	மாற்றுத் திறனாளி நபருக்கான இறுதிச் சடங்கிற்கு		ரூ. 2,000/–
3.	மாற்றுத் திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு		ரூ. 15,000/–
4.	மாற்றுத் திறனாளியின் மகன் அல்லது மகள் கல்வி பயில உதவித் தொகை		

	(அ)	(i)	விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு	ரூ. 1,000/–
		(ii)	விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாக பயின்று, தேறிய மகன் அல்லது மகளுக்கு	ரூ. 1,000/–
	(ஆ)	(i)	விண்ணப்பதாரரின் +1 வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகளுக்கு	ரூ. 1,000/–
	(இ)	(i)	விண்ணப்பதாரரின் +2 அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு	ரூ. 1,500/–
		(ii)	விண்ணப்பதாரரின் +2 தேர்வு அல்லது அதற்கு சமமாகப் பயின்று தேறிய மகன் அல்லது மகளுக்கு	ரூ. 1,500/–
	(ஈ)	(i)	விண்ணப்பதாரரின் முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்	ரூ. 1,500/–
		(ii)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால்	ரூ. 1,750/–
		(iii)	விண்ணப்பதாரரின் முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்	ரூ. 2,000/–
		(iv)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப்படித்தால்	ரூ. 3,000/–
	(உ)	(i)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் சட்டம் /பொறியியல் / மருத்துவம் /கால்நடை அறிவியல் /இதர தொழிற்கல்விப் படிப்புகள் (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்).	ரூ.2,000/–

		(ii)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால்	ரூ.4,000/–
		(iii)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்கல்வி, பட்ட மேற்படிப்பு படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்	ரூ. 4,000/–
		(iv)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப்படித்தால்	ரூ. 6,000/–
	(ஊ)	(i)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்குகளில் படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்	ரூ. 1,000/–
		(ii)	விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால்	ரூ.1,200/–
5.	திருமண உதவித் தொகை (விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் திருமண உதவித் தொகை) கணவன் அல்லது மனைவி இருவரும் விண்ணப்பித்தாலும் ஒருவருக்கு மட்டுமே இவ்வுதவி வழங்கப்படும்.			ரூ.2,000/–
6.	வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவம் அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கு நிதியுதவி			
	1. மகப்பேறு			ரூ.6,000/–
	2. கருச்சிதைவு			ரூ. 3,000/–
	3. கருக்கலைப்பு			ரூ.3,000/–
7.	மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி			ரூ. 500/–

[2016 ஆகஸ்ட் 10

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்ட செயலாக்கத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

40. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்காக அரசு 10 மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவ உதவியும், மறுவாழ்வு அளிப்பதற்காகவும் இந்த இல்லங்கள் தொடங்கப்பட்டன. கீழ்க்காணும் இடங்களில் இவ்வில்லங்கள் செயல்படுகின்றன:

வ. எண்	அரசு மறுவாழ்வு இல்லங்கள்
1.	பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம்.
2.	உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம்.
3.	பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
4.	புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5.	மணையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
6.	யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
7.	மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம்.
8.	செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
9.	தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.
10.	விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம்.

ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சம் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்களுக்கு தங்குமிடம் அளிக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மருத்துவரீதியாக இந்நோயினை உறுதி செய்த பின்னர், ஒருவர் தானாகவே இவ்வில்லங்களில் சேர்ந்து கொள்ளலாம். குற்றவியல் நீதிமன்ற நடுவரால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட, பொது இடங்களில் பிச்சை எடுக்கும்

தொழுநோய் பிச்சைக்காரர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயாளிகள் அவர்களது குடும்பத்தாருடன் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். குணமடைந்த நிலை அல்லது ஒழுங்கு நடவடிக்கையின் அடிப்படையில் இல்லத்திலிருந்து இல்லவாசிகள் விடுவிக்கப்படுகிறார்கள்.

இல்லவாசிகளுக்கு உணவும், உறைவிடமும், உடையும், மருத்துவ வசதியும், நூலகம், விளையாட்டு கருவிகள், இசைக்கருவிகள் மற்றும் தொலைக்காட்சி ஆகிய பொழுதுபோக்கு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடல் திறனுடைய இல்லவாசிகளுக்கு பாய் நெய்தல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணி தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளில், பெரியவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.42/-ம், சிறார்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.37/-ம் உணவுக்காகச் செலவிடப்படுகிறது. தீபாவளி, பொங்கல், குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்த நாள், தொழுநோய் எதிர்ப்பு நாள் மற்றும் ஆண்டு விழா ஆகிய சிறப்பு நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளில் இரண்டு இணை ஆடைகள் விநியோகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மைக்ரோ செல்லுலார் இரப்பர் காலணிகள் மற்றும் பாய்கள் வழங்கப்படுகிறது. தட்டு மற்றும் டம்ளர்கள் ஐந்தாண்டுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்றாண்டுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகிறது. 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்களும் குறிப்பேடுகளும் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள மருத்துவ அலுவலரால் இல்லவாசிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட பொருட்களுக்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

[2016 ஆகஸ்ட் 10

வ. எண்	பொருட்கள்	ஆண்டிற்கு செலவின ஒதுக்கீடு
1.	சிறப்பு வகை காலணிகள் மற்றும் செயற்கை அவயங்கள் (தேவைப்படும் இல்லவாசிகளுக்கு)	ரூ.1,000/–
2.	மூக்கு கண்ணாடி வாங்குதல்	ரூ.5,000/–
3.	பல் துலக்கிகள் மற்றும் பற்பொடி	ரூ.2,500/–
4.	விளையாட்டு சாதனங்கள்	ரூ.1,200/–
5.	இசைக் கருவிகள்	ரூ.400/–

மேலும், அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகள், மரணமடைந்தால் அவர்களது ஈமச்சடங்கு நடத்துவதற்காக ரூ.2,000/- வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1035.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

41. மன வளர்ச்சி குன்றிய வயது வந்தோருக்கான இல்லங்கள்

மனவளர்ச்சி குன்றிய நபர்கள் பெரும்பான்மையாக அவர்களின் அன்றாட செயல்பாடுகளுக்காக பிறரைச் சார்ந்தே உள்ளனர். குறிப்பாக அவர்களின் பெற்றோர்களையே அவர்கள் சார்ந்து இருக்கின்றனர். எனவே இவர்களில் குடும்பத்தினரின் கவனிப்பு கிடைக்கப் பெறாதவர்களுக்கு பராமரிப்பு மற்றும் மாற்று ஏற்பாடுகளை செய்து வழங்குவது அவசியமாகிறது.

வயது வந்த மனவளர்ச்சி குன்றியவர்களின் முழுமையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கத்தில் அரசு 42 இல்லங்களை (7 இல்லங்கள் ஆண்/பெண் இருபாலருக்கும், 16 இல்லங்கள் ஆண்களுக்கும், 19 இல்லங்கள் பெண்களுக்கும்) தொண்டு நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் நிறுவி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 1640 மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த இல்லங்களில் தங்கியுள்ள உள்ளுரைவாளர்களுக்கு உணவு, உறைவிட வசதி மட்டுமல்லாது பொழுதுபோக்கு அம்சங்கள், பயிற்சி,

2016 ஆகஸ்ட் 10]

சிகிச்சை, மருத்துவ உதவிகள் மற்றும் சுய சார்புத் திறனை மேம்படுத்தும் வகையிலான தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

2016–2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்ட செயலாக்கத்திற்காக ரூ.322.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

42. மன வளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களைப் பராமரிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி

மனவளர்ச்சி குறைபாடுடைய குழந்தைகளுக்கு பாதுகாப்பு, தங்கும் வசதி மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்காக அரசோடு இணைந்து பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கான உணவூட்டு மானியம், வாடகை மானியம் மற்றும் புதிய கட்டடம் கட்ட / கட்டட விரிவாக்கம் செய்ய மானியம் முதலான நிதியுதவி இத்திட்டத்தை செயல்படுத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசால் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனங்கள் குழந்தைகளுக்கு உணவு, தங்கும் வசதி, பாதுகாப்பு ஆகியவற்றுடன் சிறப்புக் கல்வி மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி ஆகியவற்றை வழங்குகின்றன.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.361.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

43. தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலம் தேனி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள்

தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மூன்று பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையங்களின் மூலம் 90 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த மறுவாழ்வு உதவிகள் வழங்கிடும் வகையில் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இம்மையங்களில் உள்ள குழந்தைகளின் உணவூட்ட செலவினம் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் ஆகியவற்றை அரசு வழங்கி வருகிறது. 2015-2016 ஆம் நிதியாண்டில் இதற்காக ரூ.11.64 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1164 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

44. மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் (தசைப்பயிற்சியாளர்/ தொழில் முறை பயிற்சியாளர்/பேச்சுப் பயிற்சியாளர்) ஊதிய மானியம்

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் மனவளர்ச்சி குறையுடைய குழந்தைகளின் முழு வளர்ச்சியை மையப்படுத்தி அவர்களுக்கு சிறப்பு கல்வி மற்றும் சிறப்பு பயிற்சி அளிக்கும் வகையில் அதிக எண்ணிக்கையில் சிறப்பாசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் (இயன்முறை பயிற்சியாளர்/தொழில்முறை பயிற்சியாளர்/பேச்சுப் பயிற்சியாளர்) பணியமர்த்தப்படுகின்றனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு அரசால் மாதம் ரூ.10,000/- ஊதிய மானியமாக வழங்கப்படுகிறது.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.720.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

45. அரசு இரவலர்கள் முகாம், மேல்பாக்கம்

இரவல் எடுப்பதைத் தடுக்கவும், அவர்களை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தி அவர்களை சிறந்த குடிமக்களாக மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் இரவலர்களுக்கான அரசு முகாம், மேல்பாக்கத்தில் 1-3-1954 அன்று 950 பயனாளிகளுக்காக (ஆண்கள்770+பெண்கள்180) தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டில், மதராஸ் பிச்சை எடுப்பதை தடுக்கும் சட்டம், 1945-ன்படி, தண்டனை வழங்கப்பட்ட இரவலர்கள் நீதிமன்ற ஆணைப்படி தண்டனைக்காலத்தில் அனுமதிக்கப்பட்டு தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உணவும், உறைவிடமும், உடை மற்றும் மருத்துவ வசதியும், அளிக்கப்படுவதோடு இல்லவாசிகள் இல்லத்தை விட்டு செல்லும்போது வேலைவாய்ப்பு பெறும் வகையில் நெசவு, தச்சுவேலை, மண்பாண்டத் தொழில், தையல் ஆகிய கைத்தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.79.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

46. மாற்றுத் திறனாளிகளுக்கு தடையில்லா உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல்

மாற்றுத் திறனாளிகளுக்கான தடையற்ற சூழலை ஏற்படுத்துவதற்கான தொடர் முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது.

இரண்டு தளங்களுக்கு மேல் கட்டப்படும் கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக, சாய்தளங்கள், மின்தூக்கி, சிறப்பு பிரத்யேக கழிவறை மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதிகளை ஏற்படுத்துவதை அரசாணை எண்21. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1-2-2013 வாயிலாகக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பார்வையற்ற பாதசாரிகள் எளிதில் சாலையை கடந்து செல்வதற்கு ஏதுவாக, 150 சாலை சந்திப்புகளிலுள்ள சிக்னல்களில் "ஒலி எழுப்பும் சமிக்ஞைகள்" பொருத்துவதற்காக ரூ. 75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பேருந்து நிறுத்தத்திற்கு வரும் பேருந்துகளை அடையாளம் காணுதலுக்கு உதவியாக ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில், நவீன தொழில் நுட்பத்துடன்கூடிய "ஒலி எழுப்பி எச்சரிக்கை செய்யும் உபகரணங்கள்" விரைவில் சென்னை மாநகரில் 75 பேருந்து வழித்தடங்களில் அறிமுகப்படுத்தபட உள்ளது.

47. கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதிமூலம் சமூக நல செயல்பாடுகள்

2015-2016 ஆம் நிதியாண்டில் கூட்டாண்மை சமூகப் பொறுப்பின்கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான சமூக நலத் திட்டங்களின் செயலாக்கத்திற்கான நிதி பல்வேறு மாநில நிறுவனங்களிடமிருந்து பெற்றிடுவதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக ரூ.1.09 கோடி பெறப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கிடுதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல் பணிகளுக்காக மேற்படி நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

[2016 ஆகஸ்ட் 10

48. மாநில விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத் திறனாளிகளுக்காக அரும் பணியாற்றி வரும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, சுதந்திர தினத்தன்று பின்வரும் மாநில விருதுகளை அரசு வழங்கி பெருமைப் படுத்துகிறது:

வ.எண்	விருதின் பெயர்	விருதின் விவரம்
1.	அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தனியார் தொழிலதிபர் விருது.	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
2.	சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரியும் சிறந்த நிறுவனம்)	10 கிராம் தங்கப் பதக்கம் ரூ.50,000/– ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்
3.	சிறந்த சமூகப் பணியாளர் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு அரும்பணியாற்றியமைக்காக)	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
4.	சிறந்த மருத்துவர் விருது	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
5.	சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் மற்றும் ரூ.25,000/– ரொக்கப் பரிசு
6.	அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்

2016 ஆகஸ்ட் 10]

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

49. அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம்

அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 3 ஆம் தேதி, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி மாநில அரசினால் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் அவர்களுடைய மதிப்பு, திறமைகள் பற்றிய விழிப்புணர்வினையும், அவர்களது சிறப்பு தேவையையும் சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. அன்றைய தினம் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் நாளை முன்னிட்டு, மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்காக மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 5000 மாற்றுத் திறனாளி குழந்தைகள் கலந்து கொள்கின்றனர். பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் மற்றவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. அன்றைய தினம் மாற்றுத் திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறந்த சேவையைப் பாராட்டி சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த நிறுவனம், சிறந்த நடத்துநர் மற்றும் ஓட்டுநர் ஆகியோருக்கு மாநில விருதுகள் கீழ் கண்டவாறு வழங்கப்படுகின்றன:

வ.எண்	விருதின் பெயர்	விருதின் விவரம்
1.	வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த நிறுவனம்	10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்.
2.	சிறந்த பணியாளர்/ சிறந்த சுய தொழில் புரிபவர் விருது (5 பிரிவுகள்)	10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்.
3.	சிறந்த ஆசிரியர் விருது (5பிரிவுகள்)	10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்.

4.	சிறந்த நிறுவன விருது	10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்.
5.	சிறந்த ஓட்டுநர் விருது	10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்.
6.	சிறந்த நடத்துனர் விருது	10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்.

அரசு/அரசு நிறுவனங்களில் பணி புரியும் மாற்றுத் திறனாளிகள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை கொண்டாடுவதற்காக சிறப்பு தற்செயல் விடுப்பும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

50. நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 16-6-2015 அன்று நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்கள், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலனுக்காக துவங்கப்பட்டது. அரசு இத்திட்டத்திற்காக ரூ.4.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தியாவிலேயே முதல் முறையாக மாற்றுத் திறனாளி குழந்தைகளின் இருப்பிடத்திற்கே மறுவாழ்வுப் பணிகள் சென்றடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடமாடும் சிகிச்சைப் பிரிவுமூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்

1. ஆரம்ப காலத்தில் ஊனத்தைக் கண்டறிதல்.
2. தசைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி மற்றும் திறன் சிகிச்சை அளித்தல்.
3. உதவி உபகரணங்கள், முன் தொழிற்பயிற்சி மற்றும் சிறப்புக் கல்வி ஆகியவற்றின் தேவைகளை மதிப்பீடு செய்தல்.

குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இரு அறைகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஓட்டுநர் அறையுடன்

கீழ்க்காணும் வசதியுடன்கூடிய தனி அறையும் அமைக்கப்பட்டுள்ளன.

1. சிகிச்சை அறை 10" x 6" அளவில் வடிவமைக்கப்பட்டு இதில் இயன் முறை சிகிச்சை, தொழிற் சிகிச்சை, பேச்சுப் பயிற்சி, பிறந்த குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பரிசோதனை மற்றும் உதவி உபகரணங்களின் தேவையினை மதிப்பீடு செய்யும் பணி ஆகியவை மேற்கொள்ளும் வசதிகள் உள்ளன:

2. பல்வேறு குறைபாடுள்ள குழந்தைகளுக்கான விளையாட்டு முறை சிகிச்சை வசதி உள்ளது.

3. இயன்முறை சிகிச்சை மேற்கொள்ளுவதற்கான மேசை வசதி உள்ளது.

32 மாவட்டங்களிலும் 6 வயதிற்குட்பட்ட 14476 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைய கண்டறியப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களின் முன்பயணத் திட்ட ஒப்புதலின்படி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இவ்வாகனங்கள் சென்று, பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

2016-2017 ஆம்ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.97.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

51. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம்

விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் வகையில் அரசு நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தில் அனைத்து மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் வருமான உச்ச வரம்பின்றி பயன்பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தமிழ்நாட்டில் வசிப்பவராகவும், மற்றும் குடும்பத்தில் எவரேனும் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயனாளி செலுத்த வேண்டிய பிரிமியம் தவணைத் தொகையினையும் அரசே காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தி வருகிறது. ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக ரூ. 1.00 இலட்சமும், சிறப்பு மருத்துவ சிகிச்சையான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, ஒன்றுக்கு மேற்பட்ட இருதய வால்வு அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சை

[2016 ஆகஸ்ட் 10

இனங்களுக்கு ரூ. 1.50 இலட்சம் வரையிலும் மருத்துவ உதவிகள் பெறலாம்.

முடிவுரை

மாற்றுத் திறனாளிகளுக்கு அனைத்து வகையிலும் சமவாய்ப்பு வழங்கும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுடைய பரவலான வளர்ச்சியை நோக்கி அரசினுடைய திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவற்றை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.